Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காசியில் கோயில்கள்

(காசி காண்டம்)

லலிதா.வி

க்ருஷ்ணவேணீ ஹரிராம்

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அமரர் டி.கே.
சாம்பசிவன்
(1923 - 1993)

அமரர் பாரதி
சாம்பசிவன்
(1935 - 2004)

அமரர் டி.கே.சாம்பசிவன் மற்றும் அமரர் பாரதி சாம்பசிவன் அவர்கள் எங்களது மதிக்கப்பட்ட பெற்றோர்கள் ஆவர். அவர்கள் சென்னையில் வாழ்ந்த திகழ்ந்த ஆன்மீக சிந்தனை உடையவர்களும், கடவுள் பக்தர்களும் ஆவர்.

எங்களது பெற்றோர்கள் பல முறை புனித காசி மாநகரத்திற்கு சென்று பல்வேறு கோவில்களில் தரிசனம் செய்தவர். இந்த புனித நூலில் கூறப்பட்டுள்ள **காசி காண்டம்** என்ற புனித கிரந்தத்தை சம்ஸ்க்ருதம் மொழியில் இருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்ச்சி செய்வதில் உறுதுணையாக இருந்த **அமரர் ஜெகதாம்பாள்**, எங்களது தாய் அமரர் பாரதி அவர்களின் மூத்த சகோதரி என்று கூறுவதில் நாங்கள் பெருமை படுகிறோம்.

எங்கள் பெற்றோர்களின் ஞாபகார்த்தமாக புனித காசி மாநகரத்தில் இருக்கும் கோவில்களை பற்றி ஆராய்ச்சி செய்து எழுப்பட்டுள்ள **காசியில் கோவில்கள்** என்ற புனித நூலின் இந்த பதிப்பை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம். சென்னையில் மட்டுமல்லாமல் தமிழகமெங்கும் வசிக்கும் தமிழ் அன்பர்களுக்கு இந்த புனித நூல் உபயோகமாக இருக்கும் என்று எண்ணுகிறோம்.

சுகுமார், சென்னை

முரளி, சென்னை

சாந்தி, ஆஸ்திரேலியா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சமர்ப்பணம்

இந்துக்களுக்கு காசி ஒரு புண்ய க்ஷேத்ரம் என்பது எல்லாவரும் அறிந்ததே. எல்லா இந்துக்களும் குறிப்பாக தமிழ் அன்பர்கள் தன் வாழ்கையில் ஒரு முறையாவது காசிக்கு செல்ல வேண்டும் என்று ஆவல் கொண்டுள்ளனர்.

காசியை பற்றியம் அங்குள்ள பல கோவில்கள், புண்ய தீர்த்தங்களை பற்றியும் விவரங்கள் காசி காண்டத்திலும் மற்றும் லிங்க புராணத்திலும் கூறி உள்ளன. மேல் கூறிய விவரங்களை தொகுத்து "காசியில் கோவில்கள்" என்று புத்தகமாக நூலாசிரியர் திருமதி வி. லலிதா மற்றும் அவர்களின் கணவர் திரு P.S. வெங்கட்ரமணன் வெளியிட்டு வருகின்றனர். இந்த புத்தகம் தமிழ் நாட்டில் வசிக்கும் பக்தர்களுக்கு இலவசமாக வழங்குகின்றனர், இந்த தம்பதியினர்.

திரு P.S. வெங்கட்ரமணன் மற்றும் அவர் வாழ்கை துணைவி நூலாசிரியர் லலிதா அவர்களும் தன்னலமற்ற சேவையுடனும், மிகுந்த அர்பணிப்புடனும் காசி யாத்திரையில் வரும் பக்தர்களுக்கு பல வித உதவிகளை செய்து சிறந்ததொரு வழி காட்டியாக இருந்து வருகின்றனர்.

இந்திய தேசத்தில் வசிக்கும் பல பக்தர்களும் மற்றும் அயல் நாட்டில் வசிக்கும் இந்திய அன்பர்களும் "காசியில் கோவில்கள்" என்ற புத்தகத்தின் இந்த பதிப்பை வெளியிட முன் வந்துள்ளார்கள். இவர் அனைவரும் நூலாசிரியர் திருமதி வி. லலிதா மற்றும் அவர்களின் கணவர் திரு P.S. வெங்கட்ரமணன் அவர்களின் நண்பர்கள் ஆவர்.

புராதனமும், புனிதத்துவமான இந்த காசி தலத்தின் பல்வேறு அம்சங்கள், காசியில் செய்ய வேண்டிய சடங்குகள், காசியில் உள்ள கோவில்கள் இவற்றை இந்த புத்தகம் சிறப்பித்து கூறுகிறது. திரு P.S. வெங்கட்ரமணன் மற்றும் திருமதி லலிதா அவர்களால் மீண்டும் மீண்டும் இந்த புத்தகம் வெளியிடப்பட்டு காசி யாத்ரிகர்களுக்கு நல்லதொரு வழிகாட்டியாக உள்ளது. இந்த நல்ல உள்ளங்களுக்கு எல்லா வளமும், எல்லா நலமும் கிட்ட எல்லாம் வல்ல காசி விஸ்வநாத பெருமானை வேண்டுகிறோம்.

நன்றியுடன்

இந்திய நாட்டிலும் மற்றும்

அயல் நாட்டிலும் வசிக்கும் அன்பர்கள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இந்திய நாட்டில் வசிக்கும் பக்தர்கள்

வ எண்	பக்தரின் பெயர்	வசிக்கும் இடம்
01	திரு/திருமதி செந்தில்	மயிலாடுதுறை
02	ராஜ்குமார்	பெங்களூரு
03	நிதின் கந்தி	நவி மும்பை
04	தீபிகா மங்கினா	விஷாக்கப்பட்டினம்
05	கிருஷ்ணசாமி	மதுரை
06	சிதம்பரம்	மும்பை
07	நிலேஷ் கமெர்க்கர்	மும்பை
08	மல்லிகார்ஜுன குடாலே	மும்பை
09	நீரஜ் அகர்வாலா	காசி
10	மஹாதேவ் ஹாண்ட்லூம் ஹவுஸ்	காசி
11	அஜய் சிங்க்	காசி

அயல் நாட்டில் வசிக்கும் பக்தர்கள்

வ எண்	பக்தரின் பெயர்	வசிக்கும் இடம்
01	திரு/திருமதி ஜெயந்த்	அமெரிக்கா
02	சந்தன் மல்லேஷ்	அமெரிக்கா
03	ரஜினி கோடேடி	அமெரிக்கா
04	ஷில்பா படேல்	அமெரிக்கா
05	வாக்தேவி	அமெரிக்கா
06	ஷரத் பிடரி	அமெரிக்கா
07	சிரிஷா	குவைத்
08	பிரகாஷ் கோபாலகிருஷ்ணன்	துபாய்
09	அருள் முருகன்	துபாய்
10	வீர ராகவன்	சீனா
11	ராஜா	இங்கிலாந்து

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யூ ட்யூப் (YOU TUBE) காணொளிகள்



யூ ட்யூப் (YOU TUBE) தயாரிப்பாளர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இந்த புனிதப்பணி கீழ்க்கண்ட பக்தர்களுக்கு அற்பணிக்கப்படுகிறது

1978 வரை மும்பை அந்தேரி ஸ்ரீ ராம் நகரிலும், 1996 வரை காசியில் அவர் இறைவன் திருவடியை அடையும் வரையிலும் வாழ்ந்தவர். இவர் ஸ்ரீ பீ.எஸ்.வெங்கடரமணன் அவர்களின் தந்தையும் நூலாசிரியர் ஸ்ரீமதி லலிதா வீ. அவர்களின் மாமனாரும் ஆவார்.

அமரர் பீ.கே.சிவசுப்பிரமணியன்

அமரர் ஏ.எஸ்.நாராயண் மும்பை கோரேகான் பகுதியை சேர்ந்தவர். இவர் நூலாசிரியர் லலிதாவின் தந்தை ஆவார்.

அமரர் ஏ.எஸ்.நாராயண்

அமரர் காவேரி நாராயண் மும்பை கோரேகான் பகுதியை சேர்ந்தவர். இவர் நூலாசிரியர் லலிதாவின் தாயார் ஆவார்.

அமரர் காவேரி நாராயண்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆசிரியர்களைப் பற்றி......

ஸ்ரீமதி வி.லலிதா, மும்பையைச் சேர்ந்த ஸ்ரீமதி காவேரி ஸ்ரீ ஏ.எஸ். நாராயணன் ஆகியோரின் மகளும், ஸ்ரீ பி.எஸ்.வேங்கடராமன் அவருடைய மனைவியும் ஆவார். இந்தப் புத்தகம் ஸமர்ப்பிக்கப்பட்டுள்ள ஸ்ரீமதீ ஜகதாம்பாள் பி.கே.சிவஸுப்ரஹ்மண்யன் ஆகியோரின் மருமகள் ஆவார்.

ஸ்ரீமதி வி.லலிதா வணிகவியல் பட்டதாரி ஆவார். மும்பை, தமிழ்நாடு, கேரளா போன்ற பல பகுதிகளிலிருந்தும் காசி யாத்திரை மேற்கொள்ளும் அன்பர்களுக்கு உதவியிருக்கிறார்.

அவரது மாமியார் ஸ்ரீமதி ஜகதம்பாள், காசி கண்டத்தைத் தமிழில் மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டதால், காசி கண்டத்தில் உள்ளபடி காசியில் உள்ள கோயில்களைப் பற்றி அறிய ஸ்ரீமதி லலிதா ஆர்வம் கொண்டார். அவற்றைப் பற்றி விரிவாகப் புத்தகம் எழுத வேண்டும் என்ற ஆசையும் அவருக்கு எழுந்தது. காசியில் உள்ள 350க்கும் அதிகமான கோயில்களை, தம் கணவருடனும், குடும்ப நண்பர்களுடனும் தரிசனம் செய்து, இப்புத்தகத்திற்கு வேண்டிய தகவல்களைத் திரட்டியிருக்கிறார்.

ஸ்ரீமதி க்ருஷ்ணவேணீ ஹரிராம் வேதியியல்துறையில் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற்றவர். வேதநெறி மாத இதழின் ஆசிரியராகவும், ஸ்ரீபுவநேச்வரீ விஜயம் என்ற மாத இதழின் துணை ஆசிரியராகவும் பணியாற்றி வருகிறார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முகவுரை

இந்நூலில் காசி காண்டத்தில் உள்ளபடி, காசியில் உள்ள கோயில்களைப் பற்றி விபரங்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. கோயில்களின் சிறப்பு, சரியான இருப்பிடம், வழிபாட்டு முறைகள், கோயில் அர்ச்சகரின் பெயர் மற்றும் தொலைபேசி எண் கொடுக்கப்பட்டுள்ளது.

எளிய முறையில், தேவையான தகவல்களுடன் இந்த நூல் தொகுக்கப்பட்டுள்ளது, அன்பர்களிடமிருந்து ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. நூலைப் படித்து, காசியில் உள்ள கோயில்களுக்குச் சென்று தரிசனம் செய்து, இறையருள் பெறுமாறு பேரன்புடன் வேண்டுகிறோம்.

கோயிலின் இருப்பிடமும், செல்வதற்குரிய வழியும் மாறாதபோதிலும், கோயில் திறந்திருக்கும் நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை. அர்ச்சகர்களின் தொலைபேசி எண்களும் சிறிது காலத்திற்குப் பிறகு மாறக் கூடும். தெரியாமல் நிகழ்ந்த தவறுகள் ஏதேனும் இருப்பின், அவற்றை அன்பர்கள் தெரிவிக்கலாம். எனினும், சரியான தகவல்களைக் கொடுப்பதற்கு முழு முயற்சியை மேற்கொண்டுள்ளோம்.

Lalitha V
G-1, Block - 1, Varuna Enclave,
S-2/636, Club Road, Secrole, Varanasi
Phone - (0)9839061178

Krishnaveni Hariram
Sri Bhuvaneshwari Avadhuta Vidya Pitham,
East 7th street,
Pudukkottai - 622 001

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பொருளடக்கம்

வட்டாரத்தின் வாரியாக குறியீட்டு	16
காசி கண்டம் – ஒரு சிறிய முகவுரை	20
தென்னிந்தியர்களால் மேற்கொள்ளப்படும் காசி யாத்திரை	26
தோஷங்களும், வழிபட வேண்டிய தெய்வங்களும்	27
முக்கிய தினங்கள்	28
காசியில் உள்ள பல்வேறு பீடங்கள்	30
காசியில் உள்ள பன்னிரு ஜ்யோதிர் லிங்கங்கள்	31
கங்கையின் பெருமை	32
காசி கண்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, காசியில் தற்போதும் அன்பர்கள் தரிசிக்கக்கூடிய தீர்த்த கட்டங்கள்	35

காசியில் உள்ள ஸ்ரீவிநாயகர் வழிபடு தலங்கள்

அபயவிநாயகர்	53
அர்க் விநாயகர்	54
ஆஷா விநாயகர்	54
அவிமுக்த விநாயகர்	55
பீம்சண்டி விநாயகர்	55
சதுர்தண்ட விநாயகர்	55
சிந்தாமணி விநாயகர்	56
சித்ரகண்ட விநாயகர்	56
தண்ட்ஹஸ்த் விநாயகர்	57

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தேஹ்லி விநாயகர்	57
துண்டி விநாயகர்	58
துர்க விநாயகர்	59
துர்முக விநாயகர்	59
த்வார விநாயகர்	60
த்விமுக விநாயகர்	60
ஏகதந்த விநாயகர்	61
கஜகர்ண விநாயகர்	61
கஜ விநாயகர்	62
கணநாத விநாயகர்	62
ஞான விநாயகர்	62
ஹேரம்ப விநாயகர்	63
ஜ்யேஷ்ட விநாயகர்	64
கால விநாயகர்	64
காலிப்ரிய விநாயகர்	65
கர்வ விநாயகர்	65
கூனி டக்ஷி விநாயகர்	66
கூஷ்மாண்ட விநாயகர்	66
கூட்தண்ட் விநாயகர்	67
க்ஷிப்ரப்ரஸாத விநாயகர்	67
லம்போதர விநாயகர்	68
மங்கள விநாயகர்	68
மணிகர்ணிக விநாயகர்	69
மித்ர விநாயகர்	69
மோத விநாயகர்	70

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மோதகப்ரிய விநாயகர்	70
முண்ட விநாயகர்	71
நாகேச விநாயகர்	72
பாஸ்பாணி விநாயகர்	72
பஞ்சாஸ்ய விநாயகர்	73
பிச்சாண்டில் விநாயகர்	74
ப்ரமோத விநாயகர்	74
ப்ரணவ விநாயகர்	74
ராஜபுத்ர விநாயகர்	75
சூல்கண்ட் விநாயகர்	76
ச்ருஷ்டி விநாயகர்	76
ஸித்தி விநாயகர்	76
ஸிங் துண்ட் விநாயகர்	77
ஸ்தூல்தண்ட் விநாயகர்	77
ஸுமுக விநாயகர்	78
த்ரிமுக விநாயகர்	78
உத்தண்ட் முண்ட் விநாயகர்	79
உத்தண்ட் விநாயகர்	79
வக்ரதுண்ட விநாயகர்	80
வரத விநாயகர்	80
விக்னராஜ விநாயகர்	81
விகடத்வஜ விநாயகர்	81
யக்ஷ விநாயகர்	82

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காசியில் ஸ்ரீ ஆதித்யர் (ஸூர்யன்) வழிபாட்டுத் தலங்கள்

அருண ஆதித்யர்	85
த்ரௌபத ஆதித்யர்	87
கங்கா ஆதித்யர்	87
கேசவ ஆதித்யர்	88
காகோல்க் ஆதித்யர்	89
லோலார்க் ஆதித்யர்	92
மயூக் ஆதித்யர்	93
ஸாம்ப ஆதித்யர்	94
உத்தரார்க் ஆதித்யர்	96
விமல ஆதித்யர்	97
வ்ருத்த ஆதித்யர்	98
யம ஆதித்யர்	99

காசி நகரில் உள்ள முக்கியமான சிவன் கோயில்கள்

ஆத்மவீரேச்வரர்	101
தர்மேச்வரர்	103
கேதாரேச்வரர்	105
க்ருத்திவாஸேச்வரர்	107
ம்ருத்யுஞ்ஜய மஹாதேவ்	110
ஓங்காரேச்வரர்	111
விச்வேச்வரர் (விச்வநாதர்)	113
வ்ருத்தகாலேச்வரர்	116

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கோள்களால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட சிவன் கோயில்கள்

கபஸ்தீச்வரர்	117
சந்த்ரேச்வரர்	118
மங்கலேச்வரர்	120
புதேச்வரர்	121
ப்ருஹஸ்பதீச்வரர்	122
சுக்ரேச்வரர்	123
சனீச்வரர்	124
நக்ஷத்ரேச்வரர்	126

ரிஷிகளால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட சிவன் கோயில்கள்

அகஸ்த்யேச்வரர்	127
அங்கீரயேச்வரர்	128
புலஹேச்வரர்	128
புலஸ்தீச்வரர்	129
வசிஷ்டேச்வரர்	129
வாமதேவேச்வரர்	130
வ்யாஸேச்வரர்	131

சிவகணங்களால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கங்கள்

பார பூதேச்வரர்	132
கிராதேச்வரர்	132
க்ஷேமேச்வரர்	133
குக்குடேச்வரர்	134

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

லைங்லீச்வரர் 135
பஞ்சாக்ஷேச்வரர் 135
பிங்கலேச்வரர் 136
தில பர்ணேச்வரர் 137

காசி காண்டம் அத்யாயம் 69ல் குறிப்பிடப்பட்டுள்ள சிவன் கோயில்கள்

அமரேச்வரர் 138
பீமேச்வரர் 139
பூர்புவஸ்ஸுவ லிங்கம் 139
ஈசானேச்வரர் 140
ஹரேச்வரர் 141
ஜடீச்வரர் (பாடலேச்வரர்) 141
கோடீச்வரர் (கோடி லிங்கம்) 142
நீலகண்டேச்வரர் 143
ருத்ரேச்வரர் 143
ஸஹஸ்ராக்ஷேச்வரர் 144
சூல் டங்கேச்வரர் 145
ஸூக்ஷ்மேச்வரர் 146
த்ரயம்ப்கேச்வரர் 147
த்ரிபுராந்தகேச்வரர் 147
த்ரிபுரேச்வரர் 148
விமலேச்வரர் 149
வ்ருஷேச்வரர் 149

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Ṣri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காசி காண்டத்தின் 94ஆவது அத்யாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிவன் கோயில்கள்

அமிர்தேச்வரர் 150

ஜ்யோதிரூபேச்வரர் 151

கருணேச்வரர் 152

மோக்ஷ த்வாரேச்வரர் 153

ஸ்வர்க த்வாரேச்வரர் 153

காசி காண்டத்தின் 97வது அத்யாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிவன் கோயில்கள்

ஆபஸ்தம்பேச்வரர் 154

ஆஷாதேச்வரர் 154

அவதூதேச்வரர் 155

பத்ரேச்வரர் 156

பூதேச்வரர் 156

சக்ரேச்வரர் 157

சதுர்முகேச்வரர் 158

தக்ஷேச்வரர் 158

தந்வந்தரேச்வரர் 159

த்வாரேச்வரர் 160

கணேச்வரர் (ராமேச்வரர்) 160

கௌதமேச்வரர் 161

கோப்ரக்ஷேச்வரர் 162

ஹஸ்திபாலேச்வரர் 162

ஜம்புகேச்வரர் 163

ஜனகேச்வரர் 163

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஜராஸந்தேச்வரர்	164
ஜ்வர ஹரேச்வரர்	165
கச்சேஸ்வரர்	166
கஹோலேச்வரர்	166
காலேச்வரர்	167
கர்தமேச்வரர்	168
கரவீரேச்வரர்	168
கூஷ்மாண்டேச்வரர்	169
க்ருஷ்ணேச்வரர்	169
மதாலேச்வரர்	170
மஹாகாலேச்வரர்	171
மஹாலக்ஷ்மீச்வரர்	171
மஹாஸித்தேச்வரர்	172
மால்தீச்வரர்	172
ம்ருத்யுஞ்ஜயேச்வரர்	173
முசுகுந்தேச்வரர்	174
நல கூபேச்வரர்	175
நிகும்பேச்வரர்	175
பஞ்சகங்கேச்வரர்	176
பவனேச்வரர்	177
பித்ரேச்வரர்	177
ப்ரஹ்லாதேச்வரர்	178
ஸமுத்ரேச்வரர்	178
ஸித்தேச்வரர்	179

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஷட்காலேச்வரர்	179
உப சாந்தேச்வரர்	180
வருண ஸங்கமேச்வரர்	181
வேதேச்வரர்	182
விபண்டேச்வரர்	182
வித்யேச்வரர்	183
விசாலாக்ஷேச்வரர்	184
யாஜ்ஞுவல்கீச்வரர்	184

காசி காண்டத்தின் 100ஆவது அத்யாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிவன் கோயில்கள்

ஆதி வராஹேச்வரர்	185
அக்னித்ருவேச்வரர்	186
ஹரிகேசேச்வரர்	186
ஹட்கேச்வரர்	187
ஹிரண்யகர்பேச்வரர்	188
கச்யபேச்வரர்	188
மத்யமேச்வரர்	189
நாகேச்வரர்	190
பார்வதேச்வரர்	191
ஸோமேச்வரர்	192
ஸ்வரலீனேச்வரர்	192

பிற சிவன் கோயில்கள்

ஆதி மஹாதேவர்	193
அக்னீச்வரர்	194
அச்விநிகுமாரேச்வரர்	196

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அவிமுக்தேச்வரர்	197
பால்மீகேச்வரர்	198
பாகீரதேச்வரர்	199
ப்ரஹ்மேச்வரர்	200
சண்டீச்வரர்	201
சித்ரங்கதேச்வரர்	202
தண்டபாணி	203
தசாச்வமேதேச்வரர்	205
த்ருவேச்வரர்	206
திவோதாஸேச்வரர்	209
கங்கேச்வரர்	212
கருடேச்வரர்	213
ஞானேச்வரர்	213
ஹரிசந்த்ரேச்வரர்	214
ஜய்கீஷேச்வரர்	215
ஜ்யேஷ்டேச்வரர்	216
காமேச்வரர்	217
கந்துகேச்வரர்	219
கபர்தீச்வரர்	220
கார்கோடக நாகேச்வரர்	221
குபேரேச்வரர்	222
மார்கண்டேச்வரர்	225
நர்மதேச்வரர்	226
பஞ்ச க்ரோஷா கோயில்	227

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பார்வதீச்வரர் 229

பசுபதீச்வரர் 230

பிதா மஹேச்வரர் 231

ப்ரயாகேச்வரர் 232

ரத்னேச்வரர் 233

ஸதீச்வரர் 234

சைலேச்வரர் 236

ச்ருதீச்வரர் 237

ஸித்தி அஷ்டகேச்வரர் 238

த்ரிலோசனேச்வரர் 239

த்ரிஸந்த்யேச்வரர் 240

வருணேச்வரர் 241

வாஸுகீச்வரர் 243

விச்வகர்மேச்வரர் 244

வ்யாக்ரேச்வரர் 246

காசியில் உள்ள தேவி கோயில்கள்

நவதுர்கா கோயில்கள்

சைலபுத்ரீ 249

ப்ரஹ்மசாரிணீ 250

சித்ரகண்டா 250

துர்காதேவி 251

ஸ்கந்த மாதா 253

காத்யாயனி 254

காலராத்ரீ 256

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அன்னபூர்ணா தேவி 256
ஸித்தேச்வரீ 257

நவகௌரீ கோயில்கள்

முகநிர்மாலிகா கௌரி 258
ஜ்யேஷ்ட கௌரி 259
ஸௌபாக்ய கௌரி 260
ச்ருங்கார கௌரி 261
விசாலாக்ஷீ கௌரி 261
லலிதா கௌரி 262
பவானி கௌரி 263
மங்கள கௌரி 264
மஹாலக்ஷ்மீ கௌரி 265

பிற தேவி கோயில்கள்

பந்தி தேவி 266
சாமுண்டா 267
சண்டீ தேவி 267
சர்ம முண்டா 268
ஹயகண்டி 269
காமாக்யா 270
மணிகர்ணிகா தேவி 271
ஸங்கட தேவி 272
ஸித்த லக்ஷ்மீ 273
த்ரைலோக்ய ஸுந்தரி 273
த்ரிபுரா பைரவி 274
வாராஹி 275

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விந்த்யா	276
விச்வபுஜ கௌரி	277

காசியில் உள்ள விஷ்ணு கோயில்கள்

பிந்து மாதவர்	279	நர நாராயணர்	288
ஆதி கேசவர்	281	நாரத கேசவர்	289
ஆதித்ய கேசவர்	282	ப்ரசண்ட நரஸிம்ஹர்	289
அதியுக்ர நரஸிம்ஹர்	282	ப்ரஹ்லாத கேசவர்	290
பீஷ்ம கேசவர்	283	ப்ரயாக மாதவர்	290
ப்ருகு கேசவர்	283	ச்வேத மாதவர்	292
கங்கா கேசவர்	284	தாம்ர மாதவர்	292
கோபி கோவிந்தர்	284	த்ரிபுவன கேசவர்	293
ஞான கேசவர்	285	த்ரிவிக்ரமர்	294
ஞான மாதவர்	286	வைகுண்ட மாதவர்	294
ஹயக்ரீவ கேசவர்	286	வாமன கேசவர்	295
கோலாஹல நரஸிம்ஹர்	287	வீர மாதவர்	295
லக்ஷ்மீ நரஸிம்ஹர்	287	விதர நரஸிம்ஹர்	296
மஹாபல நரஸிம்ஹர்	288	விடங்க நரஸிம்ஹர்	297
		யக்ஞ வராஹர்	297

காசியில் உள்ள பைரவர் கோயில்கள்

அஸிடங்க் பைரவர்	299
பீஷன் (பூத) பைரவர்	299
சண்ட பைரவர்	300
கால பைரவர்	300
கபால பைரவர்	302
க்ரோதன் பைரவர்	302
ருரு பைரவர்	303
ஸம்ஹார பைரவர்	303
உன்மத்த பைரவர்	304
கங்கையில் அஸ்தியைக் கரைப்பதன் முக்கியத்துவம்	305

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வட்டாரத்தின் வாரியாக குறியீட்டு

அஸி, லோலார்க், துர்கா குண்ட்

மஹாஸித்தேச்வரர் (172) அர்க் விநாயகர் (54) பிரசண்ட நரஸிம்ஹர் (289)
அமரேச்வரர் (138) கர்தமேச்வரர் (168) ஹயக்ரீவ கேசவர் (286)
ஹயக்ரீவ யோகினி (286) சாமுண்டா (267) சர்மமுண்டா (268)
மஹாமுண்டா (268) லோலார்க் ஆதித்யர் (92) த்வாரேச்வரர் (160)
குக்குடேச்வரர் (134) தில பர்ணேச்வரர் (137) துர்காதேவி (251)
சண்டபைரவர் (300) துர்க விநாயகர் (59) சுவட்தண்ட் விநாயகர் (67)
தில பர்ணேச்வரர் (137)

கேதார் காட், பாண்டே ஹவேலி

ருரு பைரவர் (303) கேதாரேச்சுவரர் (105) விடங்க நரஸிம்ஹர் (297)
சித்ரங்கதேச்வரர் (202) சித்ரக்ரீவா தேவி (203) க்ஷேமேச்வரர் (133)
லம்போதர விநாயகர் (68) விபண்டேச்வரர் (182) தில பண்டேச்வரர் (183)

காமாச்சா, சிக்ரா, லக்ஷ்மி குண்ட், சூரஜ்குண்ட், நய் சரக்

காமாக்யா (270) க்ரோதன் பைரவர் (302) க்ருஷ்ணேச்வரர் (169)
கஹோலேச்வரர் (166) த்ரிபுராந்த கேச்வரர் (147) த்விமுக விநாயகர் (60)
மஹாலக்ஷ்மி கௌரி (265) சிக்ககண்டி, மயூரி தேவி (266) உக்ரேச்வரர் (266)
சுனிடக்ஷ் விநாயகர் (66) கரவீரேச்வரர் (168) மஹாலக்ஷ்மீச்வரர் (171)
ஸாம்ப ஆதித்யர் (94) ஸூரஜ் குண்டம் (கிணறு) (95) த்ருவேச்வரர் (206)
சதுர்தண்ட விநாயகர் (55) ஹயகண்டி (269)

பிதர் குண்ட், பிசாச் மோசன், மல்தஹியா லோஹா

பித்ரேசவரர் (177) சக்ஷிப்ரப்ரஸாத விநாயகர் (67) கபர்தீஸ்வரர் (220)
பஞ்சாஸ்ய விநாயகர் (73) பிங்கலச்வரர் (136) ஹேரம்ப விநாயகர் (63)
பால்மீகேச்வரர் (198)

ஈச்வர் கங்கி, தூப் சண்டி, ஜயத்புரா

அக்னித்ருவேச்வரர் (186) சிந்தாமணி விநாயகர் (56) ஜய்கீஷேச்வரர் குகை (215)
ஸூக்ஷ்மேச்வரர் (146) விகட்த்வாஜ விநாயகர் (81) விக்னராஜ விநாயகர் (81)
ஜ்வர ஹரேச்வரர் (165) ஸித்தேச்வரர் (179) ஸ்கந்த மாதா (253)
கார்கோடக நாகேச்வரர் (221)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



விமல் தீர்த்தம்

ஸப்தரிஷி ஆர்த்தி
(காசி விஸ்வநாதர்)



கங்கை ஆர்த்தி



மங்கள ஆர்த்தி
(காசி விஸ்வநாதர்)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சந்திர கூபம்

காலோதக் கூபம்



லோலார்க் குண்டம்



கார்கோடக வாபி
(நாக கூபம்)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காசிப்புரா, பூத்பைரவர், ராஜா தர்வாஜா, லோஹாத்யா

ஜ்யேஷ்ட விநாயகர் (64)	ஜ்யேஷ்டேச்வரர் (216)	ஜ்யேஷ்ட கௌரி (259)
ஜய்கீஷேச்வரர் (215)	பீஷன் (பூத்) பைரவர் (299)	பூர்புவஸ்ஸிவலிங்கம் (139)
கஹோலேச்வரர் (166)	கந்து கேச்வரர் (219)	பவனேச்வரர் (177)
வ்யாக ரேச்வரர் (246)	வ்யாஸேச்வரர் (131)	ஆஷா தேச்வரர் (154)
கஜ விநாயகர் (62)	பாரபூதேச்வரர் (132)	ஹட்கேச்வரர் (187)
கிராதேச்வரர் (132)	வக்ரதுண்ட விநாயகர் (80)	தந்த் ஹஸ்த் விநாயகர் (57)
ஸித்தி அஷ்டகேச்வரர் (238)	ஜம்புகேச்வரர் (163)	

மைதாகின், ம்ருத்யுஞ்ஜய மஹாதேவ் (தாரா நகர்)

வ்ருஷேச்வரர் (149)	மத்ய மேச்வரர் (189)	ஆபஸ்தம்பேச்வரர் (154)
தக்ஷேச்வரர் (158)	மஹா காலேச்வரர் (171)	மால்தீச்வரர் (172)
ம்ருத்யுஞ்ஜய மஹாதேவ் (110)	வருத்த காலேச்வரர் (116)	ஜனகேச்வரர் (163)
ரத்னேச்வரர் (233)	ஸதீச்வரர் (234)	ச்ருதீச்வரர் (237)
க்ருத்திவாஸேச்வரர் (107)		

த்ரிலோசன் காட், ப்ரகலாத காட், மச்சோதரி

ஆதி மஹா தேவர் (193)	பார்வதீச்வரர் (229)	மோதகப்ரிய விநாயகர் (70)
த்ரிலோசனேஸ்வரர் (239)	பால்மீகேச்வரர் (198)	அருண ஆதித்யர் (85)
உத்தண்ட முண்ட் விநாயகர் (79)	த்ரிவிக்ரமர் (294)	பாதோதக தீர்த்தம் (35)
வாமன கேசவர் (295)	பில்பிலா தீர்த்தம் (47)	விமலேச்வரர் (149)
ஹிரண்ய கர்பேச்வரர் (188)	ப்ரணவ விநாயகர் (74)	காமேச்வரர் (217)
காகோல்க் ஆதித்யர் (89)	மஹாபல நரஸிம்ஹர் (288)	நர்மதேச்வரர் (226)
பஞ்சாக்ஷேச்வரர் (135)	கோப்ரக்ஷேச்வரர் (162)	முகநிர்மாலிகா கௌரி (258)
ஸம்ஹார பைரவர் (303)	கோபி கோவிந்தர் (284)	ஸ்வரலீனேச்வரர் (192)
யக்ஞ வராஹர் (297)	வரத விநாயகர் (80)	ப்ரஹ்லாதேச்வரர் (178)
ப்ரஹ்லாத கேசவர் (290)	நாரத கேசவர் (289)	பிச்சாண்டில் விநாயகர் (74)
விதர நரஸிம்ஹர் (296)	லக்ஷ்மீ நரஸிம்ஹர் (287)	ஓம் காரேச்வரர் (111)
அகாரேச்வரர், மகாரேச்வரர் (113)		

ராஜ்காட், வருணா சங்கமம்

கர்வ விநாயகர் (65)	ராஜபுத்ர விநாயகர் (75)	சதுர்முகேச்வரர் (158)
ஹரேச்வரர் (141)	நக்ஷத்ரேச்வரர் (126)	வருண ஸங்கமேச்வரர் (181)
வேதேச்வரர் (182)	கேசவ ஆதித்யர் (88)	ஆதி கேசவர் (281)
ஞானகேசவர் (285)	ஆதித்ய கேசவர் (282)	வருண ஸங்கமம் (46)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அலைப்பூர்

சைலபுத்ரீ (249)	சைலேச்வரர் (236)	ஸஹஸ்ராக்ஷேச்வரர் (144)
கபால பைரவர் (302)	உத்தரார்க் ஆதித்யர் (96)	பக்ரியா குண்ட் (97)

பைரோநாத், பஞ்ச கங்கா

கால பைரவர் (300)	காலேச்வரர் (167)	பங்ச கங்கேச்வரர் (176)
நல கூபேச்வரர் (175)	ப்ரஹமேச்வரர் (200)	ப்ரஹ்மசாரிணீ (250)
பஞ்சகங்கா தீர்த்தம் (37)	பிந்து மாதவர் (279)	கபஸ்தீச்வரர் (117)
மயூக் ஆதித்யர் (93)	மங்கள விநாயகர் (68)	மங்கள கௌரி (264)

அக்னீஸ்வரர்காட் (கணேஷ் காட்), சிந்தியா காட் ஸங்கட தேவி, சித்தேஸ்வரி

கால விநாயகர் (64)	நாகேச்வரர் (190)	நாகேச விநாயகர் (72)
அக்னீச்வரர் (194)	பத்ரேச்வரர் (156)	உப சாந்தேச்வரர் (180)
அச்வினி குமாரேச்வரர் (196)	விந்தியா (276)	ஸங்கட தேவி (272)
ஹரிசந்த் ரேச்வரர் (214)	க்ருஷ்ணேச்வரர் (169)	யாஜ்ஞவல்கீச்வரர் (184)
வசிஷ்டேச்வரர் (129)	வாமதேவேச்வரர் (130)	பார்வதேச்வரர் (191)
வைகுண்டமாதவர் (294)	வீரமாதவர் (295)	மணிகர்ணிகா தேவி (271)
ஆத்மவீரேச்வரர் (101)	மங்களேச்வரர் (120)	புதேச்வரர் (121)
விச்வகர்மேச்வரர் (244)	காத்யாயணி (254)	மித்ர விநாயகர் (69)
ப்ரஹஸ்பதீச்வரர் (122)	வாஸுகீச்வரர் (243)	யம ஆதித்யா (99)
ஸித்தேச்வரீ (257)	சந்த்ரேச்வரர் (118)	த்ரைலோக்ய ஸுந்தரி (273)
பஞ்ச க்ரோஷா கோயில் (227)		

மணிகர்ணிகா, ப்ராமணாள், நீலகண்ட்

அமர்தேச்வரர் (150)	அமிர்தேச்வரி தேவி (151)	நீலகண்டேச்வரர் (143)
மணிகர்ணிகை தீர்த்தம் (42)	மணிகர்ணிக விநாயகர் (69)	சக்ரபுஷ்கரணி (43)
ஸித்த லக்ஷ்மி (273)	ஸித்தி விநாயகர் (76)	ஜ்யோதிரூபேச்வரர் (151)
வருணேச்வரர் (241)	அதியுக்ர நரசிம்மர் (282)	கோலாஹல நரஸிம்ஹர் (287)
புலஹேஸ்வரர் (128)	புலஸ்தீச்வரர் (129)	த்வார விநாயகர் (60)
ஸ்வர்க த்வாரேச்வரர் (153)	கூஷ்மாண்டேச்வரர் (169)	பாகீரதேச்வரர் (199)

சௌக், கௌவா கல்லி, பன்ஸ்பதக்

சித்ர கண்டா (250)	சித்ரகண்ட விநாயகர் (56)	ஷட்காலேச்வரர் (179)
பசுபதீச்வரர் (230)	அவதூதேச்சரர் (155)	கங்கேச்வரர் (212)
லங்லீச்வரர் (135)	ஞான விநாயகர் (62)	ஸௌபாக்ய கௌரி (260)
ஈசானேச்வரர் (140)	கஜகர்ண விநாயகர் (61)	ஸமுத்ரேசவரர் (178)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அன்னபூர்ணா, விச்வேச்வரர், ஞானவாபி, நேபாளி கப்ரா

காளிப்ரிய விநாயகர் (65)	கோபீஸ்வரர் (142)	யக்ஷ விநாயகர் (82)
துண்டி விநாயகர் (58)	அன்னபூர்ணா தேவி (256)	பவானி கௌரி (263)
குபேரேச்வரர் (222)	சக்ரேச்வரர் (157)	அக்ஷய வடம் (87)
த்ரௌபத் ஆதித்யர் (87)	ஞான மாதவர் (286)	சனீச்வரர் (124)
நிகும்பேச்வரர் (175)	விச்வேச்வரர் (விச்வநாதர்) (113)	அவிமுக்தேச்வரர் (197)
தண்டபாணி (203)	கணநாத விநாயகர் (62)	மார்கண்டேச்வரர் (225)
ச்ருங்கார கௌரி (261)	அவிமுக்த விநாயகர் (55)	ஸுமுக விநாயகர் (78)
துர்முக விநாயகர் (59)	மோத விநாயகர் (70)	பீமேச்வரர் (139)
ப்ரமோத விநாயகர் (74)	மதாலேச்வரர் (170)	காலராத்ரீ (256)
ச்ருஷ்டி விநாயகர் (76)	சுக்ரேச்வரர் (123)	கச்சேஸ்வரர் (166)

லாஹோரி தோலா

ஞானேச்வரர் (213)	கருணேச்வரர் (152)	மோக்ஷத்வாரேசவரர் (153)
த்ரிஸந்த்யேச்வரர் (240)		

மன்மந்திர்காட், மீர்காட், லலிதா காட், த்ரிபுரா பைரவி

வாராஹி (275)	கணேச்வரர் (ராமேச்வரர்) (160)	ஸோமேச்வரர் (192)
ஸ்தூல் தண்ட் விநாயகர் (77)	விசாலாக்ஷீ கௌரி (261)	விசாலாக்ஷேச்வரர் (184)
தர்மேச்வரர் (103)	தர்மகூப் (கிணறு) (104)	விச்வபுஜ கௌரி (277)
வ்ருத்த ஆதித்யர் (98)	ச்வேத மாதவர் (292)	ஜராஸந்தேச்வரர் (164)
லலிதா கௌரி (262)	கங்கா கேசவர் (284)	கங்கா ஆதித்யர் (87)
த்ரிபுரா பைரவி (274)	த்ரிபுரேச்வரர் (148)	ருத்ரேச்வரர் (143)

தசாத்வமேத்

தசாத்வமேத் (40)	தசாத்வமேதேச்வரர் (205)	ஆதி வராஹேச்வரர் (185)
ப்ரயாக மாதவர் (290)	சூல்டங்கேச்வரர் (145)	அபயவிநாயகர் (53)
பூதேச்வரர் (156)	ப்ரயாகேச்வரர் (232)	பண்டிதேவி (266)
த்ரிபுவன கேசவர் (293)	சிங் துண்ட் விநாயகர் (77)	

கோடோவ்லியா, ஜங்கம்பாடி

கௌதமேச்வரர் (161)	முசுகுந்தேச்வரர் (174)	த்ரயம் பகேச்வரர் (147)
அங்கீரயேச்வரர் (128)	கச்ய பேச்வரர் (188)	அகஸ்த்யேச்வரர் (127)
கருடேச்வரர் (213)	ஜடீச்வரர் (பாடலேச்வரர்) (141)	ஏகதந்த விநாயகர் (61)
ஹரிகேசேச்வரர் (186)	விமல ஆதித்யர் (97)	

சதர் பஜார் (கண்டோன்மெண்ட் பகுதி)

சண்டீச்வரர் (201)	சண்டீ தேவி (267)	முண்ட விநாயகர் (71)
பாஸ்பாணி விநாயகர் (72)	பாஸ்பாணி சக்தி (73)	

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காசி கண்டம் - ஒரு சிறிய முகவுரை

புராணங்கள் பதினெட்டு. அவை - 1.ப்ரஹ்ம புராணம் 2.பத்ம புராணம் 3. விஷ்ணு புராணம். 4. சிவ புராணம். 5. பாகவத புராணம். 6.நாரத புராணம். 7. மார்க்கண்டேய புராணம். 8. அக்னி புராணம். 9. பவிஷ்ய புராணம் 10. ப்ரஹ்ம வைவர்த புராணம். 11. லிங்க புராணம் 12. வராஹ புராணம் 13. **ஸ்கந்த புராணம்** 14. வாமன புராணம் 15. கூர்ம புராணம் 16. மத்ஸ்ய புராணம் 17. கருட புராணம் 18. ப்ரஹ்மாண்ட புராணம்.

இவற்றுள் மிகப் பெரியதும் முக்கியமானதுமாக இருப்பது ஸ்கந்த புராணமே ஆகும். சிவபெருமானின் மகனான முருகப் பெருமானே ஸ்கந்தப் பெருமான்.

ஸ்கந்த புராணத்தில் ஏழு காண்டங்கள் (பிரிவுகள்) இருக்கின்றன. 1. மஹேச்வர காண்டம். 2.வைஷ்ணவ காண்டம். 3.ப்ரஹ்ம காண்டம். 4. **காசி கண்டம்**. 5. அவந்தி க்ஷேத்ர காண்டம். 6. நாகர காண்டம். 7. ப்ரபாஸ காண்டம்.

இவற்றுள் காசி காண்டம், காசியைப் பற்றிப் பல முக்கியமான தகவல்களைக் கூறுகிறது. ஸ்கந்த புராணத்தில் 82,000 ச்லோகங்களுக்கு மேல் இருக்கின்றன. காசி காண்டத்தினுள் 13,000 ச்லோகங்களுக்கு மேல் இருக்கின்றன. ஸத்ய யுகத்தில், முருகப் பெருமான் அகஸ்த்ய முனிவருக்கு இதனை உபதேசித்தவையே காசி காண்டமாக உள்ளது. பிறகு, த்வாபர யுகத்தில் வேத வ்யாஸரால் கூறப்பட்டது. வேதங்களும், புராணங்களும் குரு சிஷ்யருக்கு உபதேசித்து, வழிவழியாகக் காப்பாற்றப்பட்டு வருகின்றன.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காசி காண்டம் ஸத்ய யுகத்தில் தோன்றியிருக்கக் கூடும். ஓரிடத்தில் மஹாவிஷ்ணு ஸத்ய யுகத்தில் தாம் ஆதி மாதவராக வழிபடப்பட்டதாகக் கூறுகிறார். மேலும், ஆனந்த மாதவராக த்ரேதா யுகத்திலும், ஸ்ரீமாதவராக த்வாபர யுகத்திலும், கலி யுகத்தில் பிந்து மாதவராகவும் அழைத்து வழிபடப்படுவதாகக் கூறுகிறார்.

காசி காண்டம் இயற்றப்பட்ட காலம் குறித்து, சரித்திர ரீதியான ஆதாரங்கள் இல்லை. பண்டித குபேர் நாத் சுகுல் அவர்கள் தமது நூலில் (Varanasi Down the Ages), 14 வது நூற்றாண்டிற்குப் பின்னரே, காசி காண்டம் ஒரு ஆதார நூலாக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

பகவான் வேத வ்யாஸரால் இயற்றப்பட்ட பதினெட்டு புராணங்களில் ஒன்றாகவும் காசி காண்டத்தை உள்ளடக்கிய ஸ்கந்த புராணம் திகழ்கிறது.

காசி காண்டத்தைப் பற்றி வேத வ்யாஸர் பின்வருமாறு வர்ணிக்கிறார் : ஒரு முறை நாரத மஹரிஷி விந்த்ய மலைச் சாரலுக்கு வந்தார். விந்த்யாசல மலை அவரை மிகுந்த மரியாதையுடன் வரவேற்றது. கிளம்பும் தருணம் வந்ததும், நாரத முனிவர் நீண்ட பெருமூச்செறிந்தார். அவரது கவலைக்குக் காரணம் யாது என்று விந்த்ய மலை வினவியபோது, விந்த்ய மலையின் எதிரியாகிய மேரு மலை சிறந்து விளங்குவது குறித்துத் தாம் கவலைப்படுவதாகக் கூறினார்.

இதனைக் கேட்டு மிகுந்த தாழ்வு மனப்பான்மை உடைய விந்த்ய மலை பின்வருமாறு சிந்திக்கத் தொடங்கியது : என்னை விட மேரு மலையே சிறப்பு வாய்ந்ததாக இருப்பதால்தான் ஸூர்ய பகவான் கூட அதனையே வலம் வருகிறார். நானும் மேரு மலையை விட அதிகமாக உயர்ந்துவிட்டால், ஸூர்ய பகவான் என்னையும் வலம் வருவார். நான் மேரு மலையை விடச் சிறந்தவன் என்று எல்லோருக்கும் நிரூபிக்கிறேன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இவ்வாறு எண்ணிய விந்த்ய மலை வேகமாக வளரத் தொடங்கியது. சிறிது நேரத்தில் அதன் சிகரங்கள் கண்ணுக்கு எட்டாத உயரத்திற்குச் சென்றுவிட்டன. இந்த அதிசய நிகழ்வால் பூமி ஸ்தம்பித்தது. ஸூர்ய பகவானும் செய்வதறியாது நின்றார். இதன் விளைவாக, பூமியின் ஒரு பகுதி உயிரினங்கள் வாழ்வதற்குத் தகுதியற்ற அளவில் மிகுந்த வெப்பமுடையதாகவும், மற்றொரு பகுதி மிகுந்த குளிர்ச்சியுடையதாகவும் ஆயிற்று. இதனால் பூமியில் உயிர் வாழ்க்கை ஸ்தம்பித்தது.

இதனைக் கண்டு கலக்கமுற்ற தேவர்கள் ப்ரஹ்ம தேவரிடம் ஓடினர். ப்ரஹ்ம தேவர் காசிக்குச் சென்று அகஸ்த்ய முனிவரைச் சந்திக்குமாறு கூறினார். காசிக்குச் செல்லும் வாய்ப்பு கிடைத்ததால் மகிழ்ந்த தேவர்கள் காசியை அடைந்து மணிகர்ணிகை கட்டத்தில் நீராடினர். பிறகு, விச்வநாதர் கோயிலுக்குச் சென்று விச்வநாதரை வழிபட்டனர். அதன்பின், அகஸ்த்ய முனிவரின் குடிலுக்கு வந்தனர். அங்கு அவர் தாமே ஒரு சிவலிங்கத்தை ஏற்படுத்தி வழிபட்டு வந்தார். அங்கு முனிவரின் இளம் சீடர்கள் பலர் இருந்தனர். பரஸ்பரம் வணங்கிய பிறகு, தேவர்கள் வந்த காரணத்தை அகஸ்த்ய முனிவர் கேட்டறிந்தார்.

விந்த்ய மலையின் உயரத்தைக் குறைக்க அகஸ்த்ய முனிவர் ஆணையிடுகிறார்

தேவர்களிடமிருந்து விஷயத்தைக் கேட்டறிந்த அகஸ்த்ய முனிவர், இப்பிறவியில் தாம் இனிமேல் காசிக்கு வந்து வழிபட முடியாது என்பது தெரிந்தும், தேவர்களுக்கு உதவுவதற்காக விந்த்யமலைக்குக் கிளம்ப ஆயத்தமானார். கிளம்பும் முன்னர் பைரவரிடம் அனுமதி வேண்டினார். பிறகு, விந்த்யமலை ஸூர்யனின் பாதையை மறைத்த இடத்திற்குத் தம் மனைவி லோபமுத்ராவுடன் வந்தார்.

அகஸ்த்ய முனிவர் தன்னைக் கோபத்தோடு முறைப்பதைக் கண்ட விந்த்ய மலை பயந்துபோய், தன் உயரத்தைக் குறைத்துக்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கொண்டது. எந்த முயற்சியும் செய்யாமலேயே விந்த்ய மலை அடங்கிவிட்டதை எண்ணி மகிழ்ந்தார் அகஸ்த்ய முனிவர். ஆனால் அவர் அந்த இடத்தை விட்டு நகர்ந்தால், உடனே விந்த்ய மலை மீண்டும் வளரக் கூடும் என்பதையும் அறிந்திருந்தார். விந்த்ய மலை ஸுர்யனின் பாதையை மறைக்காமல் இருப்பதற்காக ஒரு திட்டம் தீட்டினார். தாம் யாத்திரை சென்று திரும்பும் வரை காத்திருக்குமாறு விந்த்ய மலையிடம் கூறினார். சிறிது காலத்தில் வந்துவிடுவார் என எண்ணி விந்த்ய மலையும் காத்திருந்தது. எப்படியோ தாம் அகஸ்த்ய முனிவரின் கோபத்திலிருந்து தப்பித்தோம் என்று நினைத்தது அது. இல்லையென்றால், தம்மை இல்லாமல் செய்துவிடுவார் அகஸ்த்ய முனிவர் என்பது விந்த்ய மலைக்குத் தெரியும். ஒருவாறாக, ஸுர்யன் தனது இயல்பான பாதையில் பயணிக்கத் தொடங்கினார். உலகம் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியது.

காசியை விட்டுப் பிரிந்து வந்ததால், மிகுந்த துயரத்தில் இருந்தார் அகஸ்த்ய முனிவர். அவரால் மறுபடி காசிக்குச் செல்ல முடியாது என்பதையும் அறிந்திருந்தார். யாத்திரையில் அவர் கோல்ஹாபூர் சென்று மஹாலக்ஷ்மியைத் தரிசித்தார். "இந்தப் பிறவியிலேயே தாம் காசிக்குச் செல்வதற்கு வழி உள்ளதா?" என்று அகஸ்த்ய முனிவர் கேட்க, அதற்கு மஹாலக்ஷ்மீ, "வருகின்ற பத்தொன்பதாவது த்வாபரத்தில் உன் எண்ணம் ஈடேறும். நீ வ்யாஸராகப் பிறந்து புராணங்களை இயற்றுவாய், வேதங்களை வகுத்துக் கொடுப்பாய்" என்று கூறினாள். மேலும், "அருகில் உள்ள ஸ்ரீசைலத்தில்தான் கார்த்திகேயர் வீற்றிருக்கிறார். அவரிடம் சென்று காசியின் மஹிமைகளை நீ அறிந்துகொள்ளலாம்" என்றும் கூறினாள்.

அகஸ்த்ய முனிவர் தம் மனைவி லோபமுத்ரையுடன், ஸ்ரீசைலத்திற்குச் சென்றார். அந்த மலையைச் சுட்டிக் காட்டி, "இந்த மலையைக் காண்பவர்களுக்கு மறுபிறவி இல்லை" என்று கூறினார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இதைக் கேட்டு ஆச்சர்யமடைந்த லோபமுத்ரை, "இந்த மலையைத் தரிசித்த மாத்திரத்தில் முக்தி கிடைக்கும் என்றால், ஏன் காசிக்குச் செல்ல வேண்டும் என்று ஏங்குகிறீர்கள்?" என்று கேட்டாள். பூமியில் முக்தியளிக்கக்கூடிய ஆற்றல் படைத்த புனிதத் தலங்கள் பல இருப்பதை அகஸ்த்ய முனிவர் அவளுக்குக் கூறினார். அவற்றுள் ஒன்று ப்ரயாகை. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு புருஷார்த்தங்களையும் தர வல்லது ப்ரயாகை. அது தவிர, நைமிசாரண்யம், குருக்ஷேத்திரம், கங்காத்வாரம், அவந்தி, அயோத்யா, மதுரா, த்வாரகா, பதரிகாச்ரமம், புருஷோத்தம க்ஷேத்திரம் முதலிய க்ஷேத்திரங்களும் முக்தி அளிக்கக்கூடியவையே. ஆனால் காசி இவற்றைக் காட்டிலும் சிறந்தது, ஈடு இணையற்றது.

காசியின் சிறப்பைக் கார்த்திகேயர் எடுத்துரைக்கிறார்

அகஸ்த்ய முனிவரும், லோபமுத்ரையும் ஸ்ரீசைல மலையை வலம் வந்து, லோஹித மலையில் வீற்றிருந்த கார்த்திகேயரைத் தரிசித்தனர். பல்வேறு வேத மந்த்ரங்களைப் பாடி அவரைத் துதித்தனர். அவருடைய பக்திக்கு இரங்கிய கார்த்திகேய பெருமான் அவர்களிடம் பின்வருமாறு கூறலானார் : – "நான் நினைத்தால் நினைத்த இடத்திற்குச் செல்லும் ஆற்றல் படைத்தவன். ஆனால் காசிக்குச் செல்வதற்காக இங்கு கடும் தவம் செய்து கொண்டிருக்கிறேன். இதிலிருந்தே காசியின் பெருமையை அறிந்துகொள்ளலாம். இன்று வரை காசிக்குச் செல்லும் முயற்சியில் நான் வெற்றி பெறவில்லை என்பதே உண்மை. வெறும் தவம் செய்வதால், காசிக்குச் சென்றுவிடலாம் என்று ஒருவர் நினைத்தால் அது தவறு. மஹாதேவரின் அருளின்றி காசிக்கு ஒருவர் செல்லவே முடியாது. புண்ணியத்தினால் காசியை அடைந்தவர்கள், ஒருபோதும் காசியை விட்டுத் திரும்பி வரக் கூடாது. உயிருடன் உள்ள காலம் வரையிலும் காசியில்தான் கழிக்க வேண்டும். ஓ அகஸ்த்யரே! காசியில் வசிக்கும் வாய்ப்பு பெற்ற நீர் மிகுந்த பாக்கியசாலி! காசியில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வாழ்ந்ததால், உம்முடைய உடலே புனிதம் நிறைந்ததாகிவிட்டது. அதனைத் தொடுவதற்கு அனுமதியுங்கள்." இவ்வாறு கூறிய கார்த்திகேயர் காசியின் மண்ணைத் தொடுவதுபோன்ற உணர்ச்சியுடன் அகஸ்த்ய முனிவரின் உடலின் பல்வேறு பாகங்களைத் தொட்டார்.

காசியின் பல்வேறு அம்சங்களைப் பற்றியும், காசியில் உள்ள கோயில்கள் தோன்றிய வரலாற்றையும் காசி காண்டம் விரிவாக எடுத்துக் கூறுகிறது.

யூ ட்யூப் (YOU TUBE) காணொளிகள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தென்னிந்தியர்களால் மேற்கொள்ளப்படும் காசி யாத்திரை

ஹிந்துக்கள் வாழ்வில் ஒருமுறையாவது காசிக்கு யாத்திரை செல்வதை மிக முக்கியமாகக் கருதுகின்றனர். இந்த யாத்திரையில் அலாஹாபாத், காசி, கயை ஆகிய மூன்று இடங்களிலும் சடங்குகளைச் செய்கின்றனர்.

காசியில் பொதுவாகச் செய்யப்படும் சடங்குகள்

1. மஹா ப்ராயச்சித்தம்
2. மஹா ஸங்கல்பம்
3. மணிகர்ணிகா ஸ்நானம்
4. பஞ்ச கங்கா பிண்டம்
5. கங்கா பூஜை/தம்பதி பூஜை
6. விச்வநாத அபிஷேகம்
7. அன்னபூர்ணா/விசாலாக்ஷி அர்ச்சனை
8. கால பைரவ ஸமாராதனை
9. கபீர் நகர் காலனிக்குச் செல்லும் வழியில், துர்கா கோயிலுக்கு எதிர்புறம் அமைந்துள்ள பஞ்ச கௌடி மட கோயிலில் வழிபடுதல்.

பொதுவாக, இதற்கு 2-3 நாட்கள் ஆகும். மூன்று நாட்கள் போதுமானதாக இருக்கும், இரண்டு நாட்கள் எனில் சில சடங்குகளைச் சுருக்கமாகச் செய்ய வேண்டியிருக்கும். மணிகர்ணிகா ஸ்நானம், பஞ்சகங்கா பிண்டம் முதலியவற்றின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ள, இந்நூலில் அதுபற்றிக் கொடுக்கப்பட்டுள்ள பகுதிகளைப் பார்க்கவும். கோயில்களைப் பற்றி அறிய, குறிப்பிட்ட கோயில் பற்றி அமைந்துள்ள பகுதியைப் பார்க்கவும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



ஸுர்யன்	– கபஸ்தீச்வரர், அனைத்து ஆதித்யர்கள்
சந்த்ரன்	– சந்த்ரேச்வரர்
செவ்வாய்	– மங்கலேச்வரர்
செவ்வாய் தோஷத்தினால் ஏற்படும் முன்கோபம் அகல	– காமேச்வரர்
புதன்	– புதேச்வரர்
குரு	– ப்ருஹஸ்பதீச்வரர்
சுக்ரன்	– சுக்ரேச்வரர்
சனி	– சனீச்வரர்

பிற வேண்டுதல்கள்

தொழுநோய், தோல் சம்பந்தமான நோய்கள் நீங்க	– ஸாம்ப ஆதித்யர், லோலார்க்
திருமணத் தடை அகல	– மங்கல கௌரீ, முக நிர்மாலிகா
செல்வமும், வளமும் பெற	– மஹாலக்ஷ்மீ கௌரீ
மனோபலம் பெற	– த்ரிபுரா பைரவீ, சந்த்ரேச்வரர்
கல்வியில் சிறக்க	– மஹாஸித்தேச்வரர், வித்யேச்வரர்
ஜ்வரம் அகல	– ஜ்வர ஹரேச்வரர், ஜராஸந்தேச்வரர்
போட்டிகளில் வெற்றி பெற	– வாராஹீ
கால ஸர்ப்ப தோஷம் அகல	–நாகேச்வரர்,வாஸுகீச்வரர், கார்கோடகர்
அகால மரண பயம் நீங்க	– ம்ருத்யுஞ்ஜய், அம்ருதேச்வரர்
முன்கோபங்கள் அகல	– கபர்தீச்வரர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முக்கிய தினங்கள்

சரியான ஆங்கில தேதிகளை அறிய, பஞ்சாங்கத்தைப் பார்க்கவும்.

சைத்ர சுக்ல ப்ரதிபாத் – நவமி வரை	நவ கௌரிகள்
சைத்ர சுக்ல த்ருதீயை	விச்வபுஜ கௌரீ
சைத்ர சுக்ல அஷ்டமீ	பவாநீ (அன்னபூர்ணா),
	108 ப்ரதக்ஷிணம்
சைத்ர சுக்ல த்ரயோதசீ	காமேச்வரர்
சைத்ர சுக்ல சதுர்தசீ	பசுபதேச்வரர்
சைத்ர பூர்ணிமா	க்ருத்தி வாஸேச்வரர், சந்த்ரேச்வரர், கேதாரேச்வரர்
வைசாக சுக்ல த்ருதீயை	த்ரிலோசன், பிப்பிலாத தீர்த்தம், பாதோதகம்
(அக்ஷய த்ருதீயை)	வாமன கேசவர் (மதுஸூதன்)
வைசாக சுக்ல சதுர்தசீ	ஓங்காரேச்வரர், அனைத்து ந்ருஸிம்ஹர் கோயில்களும்
ஜ்யேஷ்ட சுக்ல அஷ்டமீ	ஜ்யேஷ்ட கௌரீ
ஜ்யேஷ்ட சுக்ல தசமீ+ஹஸ்த+	புதன்கிழமை கங்கா பூஜை
ஜ்யேஷ்ட சுக்ல சதுர்தசீ	ஜ்யேஷ்டேச்வரர்,ஜ்யேஷ்ட விநாயகர்
ஆஷாட சுக்ல சதுர்தசீ+திங்கள்+ அநுஷம்	ஜயகீஷ் குகை, ஜயகீசேச்வரர்
ஆஷாட பூர்ணிமா	ஆஷாதேச்வரர்
ச்ரவண் (முழு மாதமும்) அனைத்து சிவன் கோயில்கள்	
ச்ரவண சுக்ல பஞ்சமீ	வாஸுகீச்வரர், கார்கோடக நாகர், நாகேச்வரர்
ச்ரவண சுக்ல சதுர்தசீ	ஆதி மஹாதேவர்
பத்ரபாத் சுக்ல த்ருதீயை	மங்கள கௌரீ
பத்ரபாத் சுக்ல சதுர்த்தீ	துண்டி ராஜ்
பத்ரபாத் சுக்ல ஷஷ்டீ	லோலார்க்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பத்ரபாத் சுக்ல அஷ்டமீ	மஹாலக்ஷ்மீ (ஸோரஹியா மேளா - 16 நாட்கள்)
அச்வின் சுக்ல ப்ரதிபாத் - நவமீ	விச்வபுஜ கௌரீ
கார்த்திகை (முழு மாதமும்)	பஞ்ச கங்கா, பிந்து மாதவர், அனைத்து கேசவர்களும்
கார்த்திக சுக்ல அஷ்டமீ	தர்மேச்வரர்
கார்த்திக சுக்ர ஏகாதசீ	
(ப்ரபோதினீ ஏகாதசீ)	பஞ்ச கங்கா, பிந்து மாதவர்
கார்த்திக சுக்ல சதுர்தசீ	விச்வேச்வரர்
மார்கசீர்ஷ சுக்ல ஷஷ்டீ	மால்தீச்வரர், லோலார்க்
மார்க சுக்ல ஏகாதசீ - பூர்ணிமா	பாதோதக், வருண ஸங்கமம், ஆதி கேசவர்
மார்க சுக்ல சதுர்தசீ	பிசாச் மோசன், கபர்தீச்வரர், கோபி கோவிந்த்
பௌஷ் ஸப்தமீ/ஷஷ்டீ+ஞாயிறு	உத்தரார்க் ஆதித்யர்
பௌஷ் ஞாயிறு தோறும்	நர நாராயணர், அனைத்து ஆதித்யர்களும்
மாக சுக்ல ஸப்தமீ	லோலார்க், ஸாம்ப ஆதித்யர்
மாக சுக்ல ஸப்தமீ+ ஞாயிறு	கேசவ ஆதித்யர்
மாக சுக்ல சதுர்த்தீ	விநாயகர்
மாக மாதம்	ப்ரயாக தீர்த்த ஸ்நானம் (தசாச்வமேத்)
ஷஷ்டி/ ஸப்தமீ+ஞாயிறு	ஆதித்யர், கபஸ்தீச்வரர்
ஏகாதசி	விஷ்ணு கோயில்கள்
ப்ரதோஷம்	சிவன் கோயில்கள்
ப்ரதோஷம் + சனிக்கிழமை	காமேச்வரர்
திங்கள்+சந்த்ர க்ரஹணம்	கங்கா ஸ்நானம்
ஞாயிறு + ஸுர்ய க்ரஹணம்	கங்கா ஸ்நானம்
பூர்வ பத்ரபாத் + பூர்ணிமா	பத்ரேச்வரர்
சரத்நவராத்ரீ (செப்/அக்டோபர் மாதங்கள்)	நவ துர்கைகள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காசியில் உள்ள பல்வேறு பீடங்கள்

காசி காண்டத்தின் 79 வது அத்யாயம், காசியில் உள்ள பல்வேறு பீடங்களையும், சக்தி பீடங்களையும் பற்றிக் கூறுகின்றது. காசியில் உள்ள ஆற்றல் வாய்ந்த சக்தி பீடங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

விரஜ பீடம்	த்ரிலோசன்
மஹா பீடம்	ஆதி மஹாதேவர்
ஆதி கேசவ பீடம்	ஆதி கேசவர்
மங்கள பீடம்	மங்கள கௌரீ கோயில் பகுதி & பிந்து மாதவர் கோயில் பகுதி
பஞ்ச முத்ரா மஹா பீடம்	ஆத்ம வீரேச்வரர், காத்யாயனி தேவீ, ஸங்கட தேவீ
ஸித்தேச்வரீ பீடம்	ஸித்தேச்வரீ தேவீ, சந்த்ரேச்வரர்
மஹாலக்ஷ்மீ பீடம்	மஹாலக்ஷ்மீ குண்டம், லக்ஷ்மீ குண்டம் பகுதி
தர்ம பீடம்	தர்மேச்வரர், விச்வபுஜ கௌரீ, விசாலாக்ஷி கௌரீ மற்றுமுள்ள கோயில்கள்
இவை தவிர, காசியில் உள்ள பண்டிதர்கள் சில இடங்களைப் பீடங்களாகக் குறிப்பிடுகின்றனர்.	
பீஷ்ம சண்டீ பீடம்	சண்டீ தேவீ, சதர் பஜார்
துர்கா பீடம்	துர்கா தேவீ & அங்குள்ள பிற தெய்வங்களும்
காளீ பீடம்	காலராத்ரீ கோயில்
காமாக்யா பீடம்	காமாக்யா (காமாக்ஷீ) கோயில்
க்ருத்தி வாஸ பீடம்	க்ருத்தி வாஸேச்வரர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



காசியில்
ஜ்யோதிர்லிங்கங்களாக வழிபடப்படும்
கோயில்கள்

ஸோம்நாத் ஸௌராஷ்ட்ரா	ஸோமேச்வரர், மன்மந்திர் காட்
மல்லிகார்ஜுனர் ஸ்ரீசைலம்	த்ரிபுராந்தகேச்வரர், ஸிக்ரா
மஹாகாலேச்வரர் உஜ்ஜயின்	மஹாகாலேச்வரர், தாராநகர்
ஓங்காரேச்வரர் (இந்தூர் அருகில்)	ஓங்காரேச்வரர், மச்சோதரீ பின்புறம்
பைஜ்நாத், பார்லி (மஹாராஷ்ட்ரர)/பீஹார்	பைஜ்நாதேச்வரர், காமச்சா
பீமாசங்கரர், நாஸிக்-பூனா சாலை	பீஷ்மேச்வரர், காசி கார்வத் கோயில்
ராமேச்வரர் (தமிழ்நாடு)	கணேச்வரர் (ராமேச்வரர்), மன்மந்திர் காட்
நாகேச்வரர் (மஹாராஷ்ட்ரா/த்வாரகா)	நாகேச்வரர், போன்ஸ்லா காட்
விச்வேச்வரர் (வாராணஸி)	விச்வேச்வரர் (வாராணஸி)
த்ரயம்பகேச்வரர் (நாஸிக்)	த்ரயம்பகேச்வரர், கோடவ்லியா
கேதாரேச்வரர், உத்தர்கண்ட்	கேதாரேச்வரர், கேதார் காட்
க்ருஷ்ணேச்வரர் (எல்லோரா, மஹாராஷ்ட்ரா)	க்ருஷ்ணேச்வரர், காமாக்யா தேவி கோயில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கங்கையின் பெருமை

ஸ்கந்த புராணத்தில் அமைந்துள்ள காசி காண்டம் (27, 28, 29 அத்யாயங்கள்) கங்கையின் பெருமையைப் பல அத்யாயங்களில் விவரிக்கின்றது.

ப்ராஹ்மண சாபத்தால் துன்பப்பட்ட ராஜா பகீரதன், கடும்தவம் இயற்றி, கங்காதேவியைப் பூலோகத்திற்குக் கொண்டுவந்தான். சிவபெருமான், பார்வதி தேவி, மஹாவிஷ்ணு ஆகியோர் காசியில் காட்சி கொடுத்தனர். மஹாவிஷ்ணு தம்முடைய ஸுதர்சன சக்கரத்தால் ஓர் பெரிய குளத்தை வெட்டி, அதைத் தம் தெய்வீக வியர்வையால் நிரப்பினார். இந்தத் தீர்த்தம் சக்ரபுஷ்கரணி தீர்த்தம் என்று வழங்கப்படுகின்றது. சிவபெருமான் காதுகளில் அணிந்திருந்த குழைகள் இந்தத் தீர்த்தத்தில் விழுந்து, இதனை மேலும் புனிதப்படுத்தியது. (மணி என்றால் ஆபரணம், கர்ணிகா என்றால் காது). காசியில் கங்கை ஓடத் துவங்கியவுடன் இந்த அவிமுக்த க்ஷேத்திரம் மேலும் புனிதத்தை அடைந்தது.

உலகில் உள்ள அனைத்துத் தீர்த்தங்களின் புனிதத்தையும் உள்ளடக்கியது கங்கை நீர். ஒரு முறை நீராடுவதாலேயே, உலகில் உள்ள எல்லா தீர்த்தங்களிலும் நீராடிய பலனை ஒருவன் பெறுகிறான். ஒருவர் எங்கு, எந்த நதியில் நீராடினாலும், கங்கா கங்கா என்று கூறினால் கங்கையில் நீராடிய பலனைப் பெறுகிறான்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கங்கையில் நீராடுவதால் தெரிந்தோ தெரியாமலோ ஒருவர் செய்த அனைத்து பாவங்களும் அழிகின்றன. நடக்கும்போதும், அமரும்போதும், உண்ணும்போதும், உறங்கும்போதும், ப்ரார்த்தனை செய்யும்போதும் கங்கையை நினைப்பவன் அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான். கங்கையில் நீராடி, பித்ரு காரியங்களைச் செய்வதால், முன்னோர்கள் மகிழ்கிறார்கள். அவர்கள் பலகாலம் த்ருப்தியடைகிறார்கள். ஒரு சிவலிங்கத்தைப் பூஜித்தால், உலகையே பூஜித்த பலன் கிடைக்கும், அதுபோல கங்கையில் நீராடினால் உலகில் உள்ள அனைத்துத் தீர்த்தங்களிலும் நீராடிய பலன் கிடைக்கும். கங்கையில் நீராடி, சிவலிங்கத்தைப் பூஜிப்பவர்கள், வ்ரதம், தானம், தவம் முதலிய அனைத்து ஆன்மிக ஸாதனைகளின் பலன்களைப் பெறுகின்றனர். விரும்பியோ விரும்பாமலோ ஒருவர் நெருப்பைத் தொட்டால், அது சுட்டுவிடும். அதுபோல விரும்பியோ விரும்பாமலோ ஒருவர் கங்கையில் நீராடினால் அவரது பாவங்கள் அழிந்துவிடும்.

கங்கைக்குச் சென்று நீராட வேறு ஒருவருக்கு வழிகாட்டுவதால், கங்கையில் நீராடிய பலன் கிடைக்கும். கங்கையில் ஒருமுறை நீராடுவதால் ஒருவர் அச்வமேத யாகம் செய்த பலனைப் பெறுகிறார். கங்கையில் ஒரு மாதம் நீராடினால், அவர் இந்த்ர லோகம் செல்கிறார். ஒரு வருடம் கங்கையில் நீராடினால் விஷ்ணுலோகமாகிய வைகுண்டத்தில் வசிக்கும் புண்ணியம் பெறுகிறார். வாழ்நாள் முழுவதும் கங்கையில் நீராடினால் அவர் மோக்ஷத்தை அடைகிறார். கங்கையில் நீராட ஒருவர் நல்லநேரம் பார்க்க வேண்டிய அவசியமில்லை.

ஒருவர் கங்கையில் நீராடி, சிவலிங்கத்திற்குப் பூஜை செய்தால், அவர் தமது நரகத்தில் இருக்கக் கூடிய முன்னோர்களுக்குக்கூட மிகுந்த ஸேவை புரிந்தவர் ஆகிறார். அந்த முன்னோர்கள் ஸ்வர்க்கத்தை அடைகின்றனர்.

கங்கைக்கரையில் செய்யப்படும் தானம் அதிக மடங்கு பலன் அளிக்கக் கூடியதாகும். கங்கைக்கரையில் மாட்டையும் கன்றையும் தானம் அளிப்பவர் ஸ்வர்க்கத்தை அடைகிறார். மேலும், அவர் வாழும் காலத்தில் தன தான்யத்திற்கு ஒரு குறைவும் இருக்காது. கங்கைக்கரையில் ஒரு சிறிதளவு ஸ்வர்ணத்தைப் பிராஹ்மணருக்குத் தானம் செய்தவர்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சென்றவிடமெல்லாம் சிறப்பை அடைவர். தென்னிந்தியர்களால் மேற்கொள்ளப்படும் காசி யாத்திரையில் நிறைவாகச் செய்யப்படுவது கங்கா பூஜை மற்றும் தம்பதி பூஜையாகும். கங்கைக்குப் பூஜைசெய்து, காசியில் வசிக்கும் ஒரு தம்பதிக்கும் பூஜை செய்கிறார்கள். அந்தத் தம்பதிக்குச் சிறிதளவு தங்கத்தையும் அளிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

கங்கையில் நீராடுவதால் ஒருவரது சகலவிதமான பாவங்களும் அழிகின்றன. வைசாகம், ச்ரவணம், கார்த்திகை ஆகிய மாதங்களில் நீராடுவதால் பன்மடங்கு பலன் அளிக்கும். அமாவாஸ்யை அன்று நீராடுவது மிகுந்த புண்ணியம் அளிக்கும். சங்க்ராந்தி புண்ய தினத்தன்று நீராடுவதால் ஆயிரம் மடங்கு புண்ணியம் கிடைக்கும். (ஒவ்வொரு ராசியிலும் ஸூர்யன் நுழையும்போது, அது ஒரு ஸங்க்ராந்தி ஆகும். ஸூர்யன் மகர ராசியில் நுழையும் மகர ஸங்க்ராந்தி மிக முக்கியமான நாளாகும்). ஸூர்ய அல்லது சந்த்ர க்ரஹணத்தின்போது நீராடுவதால் ஒரு லக்ஷம் மடங்கு புண்ணியம் கிடைக்கும்.

காசி காண்டத்தின் 28ஆவது அத்யாயத்தில், சிவபெருமான் மஹாவிஷ்ணுவிடம் கங்கையின் சிறப்புகளை விவரிக்கிறார். கங்கைக்கரையில் எள் கொண்டு பித்ருக்களுக்குத் தர்ப்பணம், ச்ராத்தம் முதலிய காரியங்களைச் செய்தால், பித்ருக்கள் ஸ்வர்கத்தை அடைகின்றனர். சடங்கில் பயன்படுத்தப்படும் எள் விதைகளின் எண்ணிக்கைக்கேற்ப, அத்தனை வருடங்கள் அவர்கள் ஸ்வர்கத்தில் இருக்கின்றனர். பலவிதமான பாபங்களால் முன்னோர்கள் கும்பி பாகம், ரௌரவம், தமிஸ்ரம் முதலிய நரகங்களில் துன்புற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் மேற்கூறியபடி கங்கைக்கரையில் பித்ரு காரியங்களைச் செய்வதால், அவர்கள் நரகத்திலிருந்து விடுபட்டு ஸ்வர்கத்தை நோக்கிப் பயணிக்கின்றனர்.

தூய்மையான கங்கை நதியானவள், காசியில் உத்தரவாஹினியாக வடக்கு நோக்கி பாய்பவளாக மேலும் புனிதத்தை அடைகிறாள். மிகுந்த வேகத்துடன் காசியில் நுழைந்த கங்கைக்கு முன்னர் சிவபெருமான் தமது திரிசூலத்தை எறிந்தார். அதனால் கங்கையின் வேகம் குறைந்தது. தான் எப்பொழுதும் காசியில் வசிப்பதாகக் கங்கை சிவபெருமானுக்கு உறுதியளித்தாள். கங்கையில் வருடம் முழுவதும் நீர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருக்கும், உலர்ந்து போவதில்லை.

காசியில் இறக்கும் மனிதன் மோக்ஷத்தை அடைகிறான். வேறு இடங்களில் இறந்து, அவனது உடல் கங்கையில் எரியூட்டப்பட்டாலும் மோக்ஷத்தை அடைகிறான். ஒரு மனிதன் எங்கோ இறந்து, அவனது உடலும் எரிக்கப்பட்டாலும், அந்த உடலின் சாம்பலும் எலும்பும் கங்கையில் கரைக்கப்பட்டால் அவன் ஸ்வர்கத்தை அடைகிறான்.

காசியை விட்டு வெகுதூரத்தில் வசிப்பவர், கங்கா ஸ்நான பலனைப் பெற கங்கா ஸஹஸ்ரநாமத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

தென்னிந்தியாவிலிருந்து வரும் யாத்ரீகர்கள் காசியில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் தங்குகின்றனர். மணிகர்ணிகாவில் மத்யான வேளையில் ஸ்நானம் செய்தல், அஸி, தசாச்வமேத், மணிகர்ணிகா, பஞ்சகங்கா, வருண் முதலிய ஐந்து கட்டங்களில் பிண்ட தானம் செய்தல் முதலியவற்றைச் செய்கிறார்கள். சிலர் ஒரு கட்டத்தில் நீராடிவிட்டு மற்ற கட்டங்களில் நீரைப் பிரோக்ஷணம் செய்துகொள்கிறார்கள். ஆனால் எல்லா கட்டங்களிலும், பக்தி ச்ரத்தையுடன் நீராட வேண்டும், மணிகர்ணிகையில் மத்யானம் நீராட வேண்டும் என்று நூலாசிரியர்கள் பணிவோடு வேண்டுகிறார்கள். பித்ரு காரியங்களைச் செய்யும்போது, அன்பர்கள் தங்கள் பெற்றோர்களையும், மூதாதையர்களையும் நினைக்க வேண்டும்.

மேலே கொடுக்கப்பட்டுள்ளது கங்கை நதி பற்றிய ஒரு சிறிய அறிமுகமே. கங்கையின் புனிதத்தைக் காசி காண்டத்தில் உள்ளபடி மொழிபெயர்த்தால், அது 40 பக்கங்களைத் தாண்டிவிடும்.

காசி கண்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, காசியில் தற்போதும் அன்பர்கள் தரிசிக்கக்கூடிய தீர்த்த கட்டங்கள்

பாதோதக தீர்த்தம்

சிவபெருமான் காசியில் கலகத்தை ஏற்படுத்துவதற்காக 64யோகினிகளை அனுப்பினார். அவர்கள் திரும்பி வராததால், ஸூர்ய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பகவானையும், ப்ரஹ்ம தேவரையும், விநாயகரையும் அனுப்பினார். அவர்களும் திரும்பி வராத காரணத்தால், மஹாவிஷ்ணுவை அனுப்பினார். (பார்க்க : திவோதாஸேச்வரர்). சிவபெருமானிடமிருந்து அத்தகைய தெய்வீகக் கட்டளையைப் பெற்ற மஹாவிஷ்ணு மகிழ்ச்சியடைந்தவராக, மஹாலக்ஷ்மியுடன் கருட வாஹனத்தில் ஏறி காசியை நோக்கிப் பயணித்தார். காசிக்குச் செல்வதற்கு நல்ல நேரம் பார்க்க வேண்டிய அவசியமில்லை. நல்ல காரியத்திற்கு அனைத்துமே நல்ல நேரம்தான்.

காசி நகரை அடைந்து, கண்கள் விரித்து காசியின் அழகைப் பருகினார் மஹாவிஷ்ணு. வருண நதியும், கங்கையும் ஸங்கமிக்கும் இடத்திற்குச் சென்று கை கால்களைக் கழுவிக் கொண்டார்.

மஹாவிஷ்ணு கால்களைக் கழுவிக்கொண்ட இடமே பாதோதக தீர்த்தம் என்று வழங்கப்படுகிறது. ஸ்கந்த புராணம், காசி காண்டத்தின் 58வது அத்யாயம், பாதோதக தீர்த்தத்தில் நீராடுபவர்கள் இந்தப் பிறவியையும் சேர்த்து ஏழு பிறவிகளில் செய்த பாவங்களும் அகலும் என்று கூறுகிறது.

இங்கு ச்ராத்தம் முதலிய கர்மாக்களைச் செய்வதால், 21 தலைமுறை பித்ருக்களுக்கு நன்மை ஏற்படுகிறது. காசியில் உள்ள பாதோதக தீர்த்தத்தில் செய்யப்படும் ச்ராத்த கர்மாவானது, கயையில் செய்யப்படுவதற்கு நிகரானது. பாதோதக தீர்த்தத்தில் நீராடி, பாதோதக நீரைப் பருகி, இந்த நீரைப் பிறருக்கு வழங்குபவன் மஹாவிஷ்ணுவின் பேரருளுக்குப் பாத்திரமாவான். அவன் நரகத்தை அடையவே மாட்டான். சரணாமிர்தமாகிய பாதோதக தீர்த்தத்தின் நீரைப் பருகுபவர், மறுபிறவி குறித்துப் பயப்படத் தேவையில்லை.

அன்பர்கள் சங்கில் பாதோதக தீர்த்தத்தை நிரப்பி, இறைவனுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும் என்று காசி காண்டம் கூறுகிறது. அப்படிச் செய்த அன்பர்கள் அகால மரணத்தைக் குறித்துப் பயப்படத் தேவையில்லை. மேலும், அவர்களுடைய நற்செயல்களுக்காக அவர்கள் நினைக்கப்படுவர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தற்போது பாதோதக தீர்த்தம் நதி வடிவிலோ, ஓடை வடிவிலோ கூட இல்லை. த்ரிலோசனேச்வரர் கோயிலினுள் பாதோதக கூபம் (கிணறு) உள்ளது. கிணற்றுக்கு அருகில் ஒரு அடி பம்பும் உள்ளது. இந்த நீர் மிகத் தூய்மையாக உள்ளது.

காசி காண்டம் பல யுகங்களுக்கு முன்னால் எழுதப்பட்டது. அந்த சமயத்தில் வருண நதி மிகப் பெரிய பரப்பளவில் ஓடிக் கொண்டிருக்கக்கூடும். தற்போது த்ரிலோசனேச்வரருக்குத் தொலைவே, சிறு ஓடை வடிவில்தான் வருண் நதி உள்ளது.

த்ரிலோசனேச்வரர் கோயிலுக்கு வரும் அன்பர்கள் பாதோதக தீர்த்தத்தை மிகுந்த பயபக்தியுடன் பருகுகின்றனர். அக்ஷய த்ருதியை அன்று, மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து, சரணாமிர்தமாகிய இந்த பாதோதக தீர்த்தத்தைப் பருகிச் செல்கின்றனர்.

பஞ்ச கங்கா (பஞ்ச நத தீர்த்தம்)

முன்னொரு காலத்தில் ப்ருகு வம்சத்தில் வேதசிரர் என்ற பெயருடைய கற்றறிந்த முனிவர் ஒருவர் இருந்தார். அவர் தவம் செய்து கொண்டிருந்தபோது, அவர் முன் ஒரு சுசி என்ற பெயருடைய அப்ஸரஸ் தோன்றினாள். அவளைக் கண்டதும், முனிவரின் உடலில் மாற்றங்கள் நிகழத் தொடங்கின.

முனிவர் தன்னைச் சபித்துவிடப் போகிறாரே என்று அந்தக் கன்னிகை பயந்தாள். தன்னை மன்னித்துவிடும்படி வேண்டினாள். ஆனால் முனிவரின் தெய்வீக ஆற்றலால், சரீர தொடர்பு இல்லாமலேயே அவள் கருவுற்றாள். தக்க காலத்தில், ஓர் அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். முனிவரின் ஆச்ரமத்தில் குழந்தையை விட்டுவிட்டுத் தன் இருப்பிடம் சென்றாள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பெண் குழந்தையைக் கண்டு மகிழ்ந்த முனிவர் அவளுக்குத் தூத்பாபா என்று பெயரிட்டார். மிகுந்த அன்போடும், அக்கறையோடும் அவளை வளர்த்து வந்தார்.

அவளுக்கு எட்டு வயது ஆனவுடன் அவளுக்குப் பொருத்தமான துணையைத் தேடத் தொடங்கினார். இதுபற்றி அவர் தூத்பாபாவிடம் பேசினார். அவள் தன் மனதிற்கு உகந்தரையே திருமணம் செய்துகொள்ள விரும்புவதாகத் தெரிவித்தாள். தன்னை மணக்கக்கூடியவர் எல்லோராலும் மதிக்கப்படுபவராக, எல்லா நற்குணங்களும் நிரம்பியவராக, தன்னை நன்கு பார்த்துக் கொள்ளக்கூடியவராக இருக்க வேண்டும் என்று கூறினாள்.

இதனைக் கேட்டதும் முனிவர், அப்படியென்றால் அதற்கு இறைவனைக் குறித்துக் கடுமையாகத் தவம் செய்ய வேண்டும் என்று கூறினார். தூத்பாபா அதன்படியே பல நாட்கள் உணவின்றி கடுமையாகத் தவம் செய்து வந்தாள். மிகுந்த தாகத்தின்போது ஒரு துளி நீரை மட்டுமே பருகினாள். கடுமையான குளிர்காலத்திலும் அவள் தவத்தைத் தொடர்ந்தாள். (காசி கண்டத்தின் 59 வது அத்யாயம் அவளது தவத்தின் வீர்யத்தை விளக்குகிறது).

இறுதியாக, ப்ரஹ்ம தேவர் அவளுக்குக் காட்சி கொடுத்து, எல்லா நலன்களுடனும் அவளை வாழ்த்தினார். அவள் மிகப் புனிதமானவளாக இருப்பதாகவும், உலகிலுள்ள மூன்றரை கோடி புனித தீர்த்தங்களும் அவளது உடலில் மயிர்க்கால்களில் இருப்பதாகவும் கூறினார். உலகிலுள்ள அனைத்து புனித தீர்த்தங்களிலும் மிகப் புனிதமானவளாக தூத்பாபா போற்றப்படுவாள் என்றும் கூறினார்.

தனது ப்ரார்த்தனைகளை முடித்த பிறகு, முனிவரின் ஆச்ரமத்திற்குத் திரும்பினாள் தூத்பாபா. ஒரு நாள் நந்தவனத்தில் விளையாடிக் கொண்டிருந்த அவளைக் கண்டு, அவளது அழகில் மயங்கி, தர்மராஜர் அவளை மணக்க விரும்பினார். தூத்பாபா அவளது தந்தையிடம் பேசும்படி கூறினாள். ஆனால் தர்மராஜாவின் எண்ணம் வேறுமாதிரி இருந்தது. இருவருக்குமிடையே வாக்குவாதம் மூண்டது. தர்மராஜா தூத்பாபாவை ஒரு சிலையாகப் போகும்படி சபித்தார். பதிலுக்குத் தூத்பாபாவும் தர்ம நதம் என்ற பெயரில் ஒரு ஆண் நதியாகத் தர்மராஜா ஆக சபித்தாள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தூத்பாபா குடிலுக்குள் சென்று, தன் தந்தையிடம் நடந்ததைக் கூறினாள். தன் தெய்விக ஆற்றலால் அனைத்தையும் அறிந்த முனிவர் அவளை ஓர் உலோகச் சிலையாக மாற்றினார். உரிய காலத்தில் உலோகச சிலை உருகி நதியாகிவிடும் என்றும், அவளுக்குக் கணவனாக இருக்கக்கூடிய தகுதிகள் அனைத்தும் தர்மராஜாவிடம் இருக்கின்றன என்றும், இவள் நதியான பிறகு, தர்ம நதத்தைச் சேர்ந்துவிடுவாள் என்றும் கூறினார்.

சிலையாக இருந்த தூத்பாபா உருகி, அந்தப் பெயருடனேயே ஒரு நதியாக உருவெடுத்தாள். ப்ரஹ்மதேவரிடம் வரம் பெற்றதால், அவள் புனிதமானவளாக விளங்கினாள். தூத்பாபா, தர்மநதத்துடன் இணைந்த இடத்தில், ஸூர்ய பகவான் மயூக் ஆதித்யர் என்ற பெயருடன் கடுமையாகத் தவம் செய்து வந்தார். அவருடைய கிரணத்தின் ஒளி தாங்க முடியாத வெப்பத்தை உருவாக்கியது. அவரது வியர்வையே, கிரணா நதி என்ற பெயரில் ஒரு நதியாக ஓடியது.

கங்கா, யமுனா, ஸரஸ்வதி நதிகளின் புனித ஸங்கமம் நிகழ்ந்த இடத்தில் கிரணா நதி தூத்பாபாவுடன் இணைந்தது. கங்கா, யமுனா, ஸரஸ்வதி, தூத்பாபா, கிரணா ஆகிய ஐந்து நதிகளும் சேர்ந்து பஞ்சநத தீர்த்தம் என்றும் பின்னாளில் பஞ்சகங்கா என்றும் அழைக்கப்படுகிறது.

பஞ்சகங்கை கட்டத்தில் நீராடுவது மிகச் சிறப்பு வாய்ந்தது. இதில் ஒரு முறை நீராடுவது, ப்ரயாகையில் மாக மாதம் முழுவதும் நீராடுவதற்கு ஸமம்.

பஞ்சகங்காவில் நீராடி, தன் முன்னோர்களுக்கு ச்ராத்த கர்மாக்களைச் செய்பவன், பித்ருக்களுக்கு மிகச் சிறந்த நன்மையைச் செய்தவன் ஆகிறான். அவன் மோக்ஷம் அடைகிறான். அவன் தெரிந்தோ, தெரியாமலோ செய்த அனைத்துப் பாவங்களும் நீங்கிவிடுகின்றன. பஞ்சகங்கையில் ச்ராத்தத்தைச் செய்யும்போது, எத்தனை எள் கங்கையில் போடப்படுகிறதோ அத்தனை ஆண்டுகள் பித்ருக்கள் மகிழ்ச்சியாக இருப்பர். (பிண்ட தானத்தில் 50 எள் விதைகள் கங்கையில் போடப்பட்டால், அவரது முன்னோர் 50 ஆண்டுகள் மகிழ்ச்சியாக இருப்பர்).

பஞ்சகங்கையில் ஒருமுறை நீராடுவதால், ராஜஸூய யாகம், அச்வமேத யாகம் முதலிய பெரிய யாகங்கள் செய்த பலன் கிடைக்கும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பஞ்சகங்கையில் நீராடுவதால் ஏற்படும் பலன்களைக் காசி காண்டம் விவரிக்கிறது. வேறு இடங்களில் பல காலம் செய்த தவத்தின் பயனை, கார்த்திகை மாதத்தில் பஞ்சகங்கையில் ஒருமுறை நீராடுவதால் பெறலாம்.

கார்த்திகை மாதம் முழுவதும், ஹிந்துக்கள் கூடையில் விளக்குகளை வைத்து, அந்தக் கூடைகளை மூங்கில் கழி மேல் கட்டி விடுகிறார்கள். மாலை நேரத்தில் கட்டங்கள் அனைத்திலும் இதனால் ஒளிவெள்ளமாகக் காட்சி அளிக்கும். இது காண வேண்டிய காட்சியாகும்.

பஞ்சகங்கையில் நீராட, கார்த்திகை மாத பௌர்ணமீ மிக விசேஷமான நாளாகும். கார்த்திகை மாதம் முழுவதும், ஸூர்யோதயத்திற்கு முன்பும், ஸூர்யோதயத்தின்போதும் ஏராளமான பக்தர்கள் பஞ்சகங்கையில் நீராடுகின்றனர். இந்த நேரத்தில் தேவர்களும் பஞ்சகங்கையில் நீராடுவதாக ஐதீகம்.

தசாச்வமேத்

சிவபெருமான் மந்தராசலத்தில் வீற்றிருந்தார். திவோதாஸ் என்ற பண்பும், பக்தியும் நிறைந்த மன்னன் ஒருவன் காசியை ஆண்டு வந்தான். அவனுடைய அரசாட்சியில் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருந்தனர்; நாட்டில் வளம் ஓங்கியிருந்தது. அரசனுக்கு ப்ரஹ்மதேவனுடன் ஓர் உடன்படிக்கை இருந்தது; அவன் அரசாளும் காலம் வரை தேவர்களும் மற்றவர்களும் காசியிலிருந்து விலகியிருக்க வேண்டும்; காசிக்கு எந்தத் தொந்தரவும் தரக்கூடாது என்பதே அது.

ப்ரஹ்மதேவன் இதற்கு ஒப்புக்கொண்டார். ஆனால் ஒரு நிபந்தனை : அரசன் திவோதாஸ் தன்னை மிகச் சிறந்த ஆட்சியாளனாக நிரூபிக்க வேண்டும்; காசியில் வசிப்பவர்களும், காசிக்கு வருபவர்களும் தங்களது ஆன்மிக ஸாதனைகளைச் சிறந்தமுறையில் மேற்கொள்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதே அது. அரசன் இந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டு சிறந்தமுறையில் அரசாட்சி புரிந்துவந்தான்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சிவபெருமான் வெகு காலமாகக் காசிக்கு வராமல் இருந்தார். திருவிளையாடலாகக் அரசன் திவோதாஸை குற்றம் இழைக்கும்படி செய்தார். ஏதேனும் இடைஞ்சல் ஏற்படுத்துவதற்காக அறுபத்து நான்கு யோகினிகளை அங்கு அனுப்பினார். அவர்கள் ஸ்வர்க்கபுரியாகக் காட்சியளித்த காசி மாநகரின் அழகிலும், அமைதியான சூழ்நிலையிலும் கவரப்பட்டு, அங்கேயே தங்கிவிட முடிவுசெய்து அங்கேயே இருந்துவிட்டனர்.

அரசன் திவோதாஸின் ஆட்சியில் கலகத்தை ஏற்படுத்துவதற்காக, சிவபெருமான் ப்ரஹ்மதேவரைக் காசிக்கு அனுப்பினார். (பார்க்க : திவோதாசேச்வரர்). ப்ரஹ்மதேவர் ஒரு வயதான அந்தணர் வடிவில் காசிக்கு வந்து மன்னனைச் சந்தித்தார். மன்னன் மிகுந்த மரியாதையோடு அவரை வரவேற்று, அவருக்குத் தான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டான். தாம் அச்வமேத யாகம் செய்த விரும்புவதாகவும், அதற்குரிய பொருட்களையும், ஏற்பாடுகளையும் செய்து தரும்படி ப்ரஹ்மதேவர் கேட்டார். மன்னன் திவோதாஸின் பேராதரவுடன், ப்ரஹ்மதேவர் ஒன்றல்ல, பத்து அச்வமேத யாகங்கள் செய்தார். அதனால் எழுந்த புகையால் வானமே நீல நிறத்தில் காட்சியளித்தது. இன்றுவரை வானம் நீலமாக இருப்பதற்கு இதுவே காரணம் என்று மக்கள் கூறுவர்.

இந்த யாகங்கள் நடைபெற்ற இடத்திற்குத் தசாச்வமேத தீர்த்தம் (கட்டம்) என்று பெயர். ப்ரஹ்மதேவர் வருவதற்கு முன்னர் இந்த இடத்திற்கு ருத்ர ஸரோவரம் என்று பெயர். தற்போது தசாச்வமேத கட்டம் என்று அழைக்கப்படுகிறது. ப்ரஹ்மதேவர் தசாச்வமேதேச்வரர் என்ற பெயரிலும், ப்ரஹ்மேச்வரர் என்ற பெயரில் லிங்கங்களை ஸ்தாபித்து வழிபட்டு வந்தார்.

தசாச்வமேத கட்டத்தில் நீராடி, செய்யப்படும் ஜபம், தானம், ஹோமம், வேத பாராயணம், பூஜை, தர்ப்பணம் முதலிய அனைத்து மிக அதிக பலன்களைக் கொடுக்கும். தசாச்வமேத கட்டத்தில் செய்யப்படும் அன்னதானம் பல மடங்கு பலனைத் தரும் என்று காசி காண்டம் குறிப்பிடுகிறது. தென்னிந்தியாவைச் சேர்ந்த ட்ரஸ்ட் ஒன்று நாள்தோறும் இங்கு அன்னதானம் செய்து வருகிறது.

ஆடி மாதத்தில் அமாவாஸ்யைக்கு அடுத்துள்ள ப்ரதமை அன்று தசாச்வமேத கட்டத்தில் நீராடி, தசாச்வமேதேச்வரரை வழிபடும் அன்பர்கள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுபடுவர். தசாச்வமேத கட்டத்தில் நீராடி, தசாச்வமேதேச்வரரை வழிபடுபவர்கள் தெரிந்தோ தெரியாமலோ செய்த அனைத்துப் பாவங்களினின்றும் விடுபடுகின்றனர்.

ஆடி மாதத்தில் அமாவாஸ்யைக்கு அடுத்துள்ள ப்ரதமை முதல் அந்த பக்ஷம் முடியும்வரை இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, தசாச்வமேதேச்வரரை வழிபட வேண்டும் என்று காசி காண்டம் கூறுகிறது. தசாச்வமேதத்தில் நீராடும் அன்பர்கள் அச்வமேத யாகம் செய்த பலனைப் பெறுவர்.

டி. வி மற்றும் வீடியோக்களில் குடைகளுடன் கூடிய காசியின் நதிக்கரை காட்டப்படுகிறது. அது தசாச்வமேத கட்டமே ஆகும். தற்போது நாள்தோறும் கங்கைக்கு இரவு 7.15 மணிக்குப் பண்டிதர்களால் தீபாராதனை செய்யப்படுகறது. 45 நிமிடங்கள் நடைபெறும் இந்த ஆரத்தியில் திரளான அன்பர்கள் கலந்து கொள்கின்றனர். இதனைப் படகில் இருந்தபடி காணலாம். ஆரத்தியின்போது அந்த இடத்தில் தெய்வீக சூழ்நிலை நிலவுகிறது.

மணிகர்ணிகை

காசி காண்டத்தின் 26வது அத்யாயம் மஹா ப்ரளயத்தை வர்ணிக்கிறது. எங்கும் இருள் சூழ்ந்திருக்கிறது. திசையே தெரியவில்லை. அனைத்தும் அழிந்துவிட்டன. அழுவதற்கோ, பேசுவதற்கோ, கேட்பதற்கோ எவரும் இல்லை.

அந்த நேரத்தில் பரப்ரஹ்மம் இருந்தது. சிவபெருமான், பராசக்தியுடன் தோன்றினார். சிவபெருமான் தன்னைப் புருஷராகவும், தேவியை ரூபீ ஸ்த்ரீயாகவும் வெளிப்படுத்திக்கொண்டார். பஞ்ச க்ரோஷ பகுதி மட்டுமே அப்போது எஞ்சியிருந்தது. (க்ரோஷா என்பது சுமார் இரண்டு மைல் தூரத்தைக் குறிக்கும்). பத்து மைல் விட்டத்தில் பஞ்ச க்ரோஷ பகுதி அமைந்திருந்தது.

மஹாப்ரளயத்தின்போதும், சிவபெருமானும் பார்வதியும் இந்த (பஞ்ச க்ரோஷ க்ஷேத்திரத்தை) இடத்தை விட்டு அகலவில்லை. அதனால் இந்த இடம் அவிமுக்த க்ஷேத்திரம் என்று அழைக்கப்படுகிறது. இந்தப்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பகுதியில் வாழும் எல்லோரும் மகிழ்ச்சியாக வாழ்வர், எனவே இதற்கு ஆனந்த வனம் என்று பெயர்.

சிவபெருமான் தமது இடப்பக்கத்தில் மெதுவாகப் பார்த்தார். அங்கு ஓர் அழகிய ஆண்மகன் தோன்றினான். அவன் உத்தமமான புருஷனாக இருந்ததால், புருஷோத்தமன் எனப்பட்டான். புருஷோத்தமனே மஹாவிஷ்ணு ஆவார். சிவபெருமானும், மஹாவிஷ்ணுவும் ஆனந்த வனத்திற்குள் நுழைந்தனர். உடனே மஹாவிஷ்ணு தவம் செய்யத் தொடங்கினார்.

தன்னுடைய ஸுதர்சன சக்கரத்தால் பெரிய குளம் ஒன்றை வெட்டி, அதனைத் தன் தெய்வீக வியர்வையால் நிறைத்தார். அந்தக் குண்டம் சக்ரபுஷ்கரிணி தீர்த்தம் என்று வழங்கப்படுகிறது. மஹாவிஷ்ணு கடுந்தவம் இயற்றி, சிவபெருமான் அவருக்கு இரங்கினார். மஹாவிஷ்ணுவை வரம் ஒன்று கேட்கும்படிக் கூறினார் சிவபெருமான். தன்னுடைய வேண்டுதல்களைக் கேட்க, சிவபெருமானும் பார்வதிதேவியும் எப்போதும் இருக்க வேண்டும் என்றார் மஹாவிஷ்ணு. சிவபெருமான் காதுகளில் அணிந்திருந்த ஆபரணம் ஒன்று அந்தக் குளத்திற்குள் விழுந்தது. அதன்பிறகு, அந்தக் குளம் மணிகர்ணிகா என்று அழைக்கப்பட்டது.

மேலும் அந்தப் பகுதி முழுவதும் தெய்வீக ஒளி நிறைந்து ஒளிவீசிக் கொண்டிருப்பதால், அந்த இடத்திற்குக் காசீ என்று பெயர் வழங்கப்பட வேண்டும் என்றும் மஹாவிஷ்ணு கூறினார்.

உலகில் உள்ள அனைத்துப் புனித தீர்த்தங்களிலும் நீராடினால் கிடைக்கும் புண்ணியம் மணிகர்ணிகையில் ஒரு முறை நீராடினாலே கிடைக்கும். மணிகர்ணிகையில் பக்தியுடன் நீராடும் அன்பர் நிச்சயமாக மோக்ஷத்தை அடைவார், இதில் ஐயமில்லை.

மணிகர்ணிகையில் நீராடி, தன் முன்னோர்களுக்குரிய கடன்களைச் செய்து இறைவனை வழிபடுபவர்கள், பல யாகங்கள் செய்த பலனைப் பெறுவர்.

காசி காண்டத்தின் 61 வது அத்யாயத்தில் காசியில் உள்ள பல்வேறு தீர்த்தங்களைப் பற்றி மஹாவிஷ்ணு விவரித்துக் கூறுகிறார். அனைத்து புண்ணிய தீர்த்தங்களும், மணிகர்ணிகையில் நீராட மத்தியான வேளைகளில் வருகின்றன. பாவங்களைப் போக்கக் கூடிய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆற்றல் வாய்ந்த புண்ணிய தீர்த்தங்களில் தலைசிறந்தது மணிகர்ணிகை. மற்ற தீர்த்தங்கள் அனைத்தும் மணிகர்ணிகையிலிருந்தே தம் சக்தியைப் பெறுகின்றன.

சிவபெருமானும், பார்வதி தேவியுமே மத்தியான ஸ்நானத்திற்கு மணிகர்ணிகைக்கு வருகின்றனர். இதே நேரத்தில் வைகுண்டத்திலிருந்து மஹாவிஷ்ணுவும், மஹாலக்ஷ்மியும் இங்கு நீராட வருகின்றனர். மத்தியான ஸ்நானத்திற்கு ப்ரஹ்ம தேவரும் வருவதாக மஹாவிஷ்ணு கூறுகிறார். மணிகர்ணிகையில் மத்தியான ஸ்நானம் என்பது தென்னிந்தியர்கள் மேற்கொள்ளும் காசி யாத்திரையில் ஒரு முக்கியமான அம்சமாகும்.

இந்த்ரனும், மற்ற தேவர்களும், வாஸுகீ முதலிய ஸர்ப்ப ராஜாக்களும் மத்தியான ஸ்நானத்திற்கு மணிகர்ணிகை தீர்த்தத்திற்கு வருகின்றனர்.

பிறவிடங்களில் பத்தாயிரம் முறை காயத்ரீ ஜபம் செய்தால் கிடைக்கும் புண்ணியம், இங்கு ஒரு முறை காயத்ரீ மந்த்ரத்தைச் சொல்வதாலேயே கிடைத்துவிடுகிறது. வாழ்நாள் முழுவதும் ஒருவர் அக்னி ஹோத்ரம் செய்வதால் கிடைக்கும் பயன், மணிகர்ணிகையில் ஒரு ஆஹுதியுடன் ஹோமம் செய்வதாலேயே கிடைத்துவிடுகிறது.

மஹாவிஷ்ணு மணிகர்ணிகை க்ஷேத்திரத்தின் எல்லைகளைக் கூறுகிறார். தெற்கில் கங்கா கேசவர் (தற்போது லலிதா காட்) வரையிலும், வடக்கில் ஹரிச்சந்த்ர மண்டபம் வரையிலும் (ஸங்கட காட் அருகில்), கிழக்கில் கங்கை நதி வரையிலும், மேற்கில் (ப்ராஹ்மணாள் சௌராஹா - க்ராஸ் ரோடு) ஸ்வர்க த்வாரீ வரையிலும் இதன் எல்லை உள்ளது. மணிகர்ணிகையில் நீராடி, மணிகர்ணிகேச்வரரை வழிபடுபவர்கள், மீண்டும் கருப்பைக் குழிக்குள் விழ மாட்டார்கள். அவர்களுக்கு மறுபிறவி இல்லை என்று மஹாவிஷ்ணு கூறுகிறார்.

தற்போது மணிகர்ணிகா கட்டம் ஒரு மயானமாகவே உள்ளது. படகில் சிறிது தூரம் வடக்கே (பஞ்ச கங்கா நோக்கி) சென்றால் சக்ரபுஷ்கரிணி குண்டத்தை அடையலாம். மணிகர்ணிகையின் எல்லை விரிந்திருப்பதால், அன்பர்கள் சக்ரபுஷ்கரிணி குண்டத்திற்கு அருகில் உள்ள நதிக்கரையில் நீராடுகின்றனர். இந்தக் குண்டத்திற்கு அருகில் மாவட்ட

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆட்சித்துறையினரால் ஏற்படுத்தப்பட்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. அது சக்ரபுஷ்கரிணி தீர்த்தத்திற்கும் மஹாவிஷ்ணுவிற்கும் உள்ள தொடர்பைக் கூறுகிறது. காசி கண்டத்தின் 33 வது அத்யாயம், ராஜா ஹரிச்சந்த்ரன் ஸத்யத்தைக் காப்பாற்றுவதற்காக தன்னை விற்ற இடம் இதுவே என்று கூறுகிறது.

அஸி ஸங்கம்

புனித நகரின் தென் பகுதியில் அஸி கங்கா ஸங்கமம் அமைந்துள்ளது. முன்னொரு காலத்தில் நதியாக இருந்த அஸி, தற்போது ஒரு சிறிய ஓடையாக உள்ளது.

காசி ஒரு முக்தி க்ஷேத்திரம் என்று காசி கண்டத்தின் 30 வது அத்யாயம் கூறுகிறது. காசியில் மக்கள் புண்ணிய காரியங்களில் ஈடுபட்டு வந்ததை யமன், இந்த்ரன், அக்னி ஆகியோர் பார்த்தனர். அவர்கள் காசிக்கு எல்லையை வகுத்தனர். அஸத்யத்தை அழிக்கவும், தீய எண்ணங்கள் நுழையாதிருக்கவும் அந்தத் தேவர்கள் அஸி நதியைப் படைத்தனர்.

காசி காண்டத்தின் 46வது அத்யாயத்தின்படி, அஸி கங்கா ஸங்கமத்தில் பித்ரு கடன்களைச் செய்பவர் தன் முன்னோர்களுக்கு மிகச் சிறந்த நன்மையைச் செய்தவர் ஆகிறார். அஸி கங்கா ஸங்கமத்தில் நீராடுவதால், எல்லாப் புனித தீர்த்தங்களிலும் நீராடிய பலன் கிடைக்கும்.

அஸி கங்கா ஸங்கமத்தைப் பற்றிக் காசி கண்டத்தின் பல அத்யாயங்களில் கூறப்பட்டுள்ளது. லோலார்க் அஸி கங்கா ஸங்கமத்திற்கு அருகில் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், தற்போது லோலார்க் சற்று தள்ளியே உள்ளது. முற்காலத்தில் அஸி கங்கா ஸங்கமம் மிகவும் பரந்து விரிந்த பரப்பில் இருந்திருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது.

பொதுவாகவே இரண்டு நதிகள் ஸங்கமிக்கும் இடம் புனிதமானதாகக் கருதப்படுகிறது. வருணும், அஸியும் ஸங்கமிப்பதால்தான் வாராணஸி என்ற பெயரே தோன்றியது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தற்போது அஸி காட் ஒரு பரந்த இடத்தில் அமைந்துள்ளது. பார்ப்பதற்கு இந்த இடம் மிக அழகாக இருக்கிறது. பல அன்பர்கள் இந்த இடத்திற்கு வருகின்றனர். இந்த இடத்தில் மட்டுமே கங்கைக்கு மிக அருகில் கார் முதலிய வாகனங்களில் செல்ல முடியும். வண்டிகளை நிறுத்துவதற்கும் இங்கு நிறைய இடம் உள்ளது.

அஸி கங்கா ஸங்கம பகுதி, துளஸி கட்டத்தையும் கடந்து பரந்த இடத்தில் அமைந்துள்ளது. (அஸி, தசாச்வமேத், மணிகர்ணிகா, பஞ்ச கங்கா, வருணா) ஆகிய நதிகளில் பஞ்ச கட்ட பிண்டம் போடும் தென்னிந்தியர்கள் அஸி கங்கா ஸங்கம பகுதிக்குள் அமைந்துள்ள துளசி கட்டத்தில் நீராடுகின்றனர். சிறிது தூரம் சென்று அவர்கள் அஸி கட்டத்திலும் நீராடலாம்.

அஸி கட்டத்திலும் நடைபெறும் கங்கா ஆரத்தி கண்களுக்கு விருந்தாகும்.

வருண ஸங்கமம்

காசி கண்டத்தின் 30வது அத்யாயம், காசியை முக்தி க்ஷேத்திரம் என்று கூறுகிறது. காசியில் மக்கள் புண்ணிய காரியங்களில் ஈடுபட்டு வந்ததை யமன், இந்த்ரன், அக்னி ஆகியோர் பார்த்தனர். அவர்கள் காசிக்கு எல்லையை வகுத்தனர். அஸத்யத்தை அழிக்கவும், தீய எண்ணங்கள் நுழையாதிருக்கவும் அந்தத் தேவர்கள் அஸி நதியைப் படைத்தனர். காசியின் மற்றொரு எல்லையில் வருண நதியையும் படைத்தனர்.

சிவபெருமானின் ஆணைப்படி, காசிக்கு வந்த மஹாவிஷ்ணு கண்குளிரக் காசியின் அழகைக் கண்டார். வருணனும், கங்கையும் ஸங்கமிக்கும் இடத்தில் தம் கை கால்களை கழுவிக் கொண்டார்.

மஹாவிஷ்ணு தம் பாதங்களைக் கழுவிய இடமே பாதோதக தீர்த்தம் என்று வழங்கப்படுகிறது. காசி கண்டத்தின் 58வது அத்யாயத்தின்படி, பாதோதக தீர்த்தத்தில் நீராடுவதால் இந்தப் பிறவியையும் சேர்த்து, ஏழு பிறவிகளில் செய்த பாவங்களும் நீங்குகின்றன.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காசி கண்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் நடந்த காலத்தில் (ஸத்ய யுகத்தில்) தற்போதுள்ள த்ரிலோசன் வரை வருண நதி இருந்திருக்க வேண்டும். தற்போது வருண ஸங்கம பாதோதக தீர்த்தம், த்ரிலோசனேச்வரர் கோயிலினுள் ஒரு கிணற்றில் உள்ளது.

காசி காண்டம், பல இடங்களில் வருண நதியின் சிறப்பைக் கூறியிருக்கிறது. வருண கங்கா ஸங்கமத்தில் நீராடி, வருண ஸங்கமேச்வரரை வழிபடுபவர்கள் வாழ்வில் அனைத்து வளங்களும் பெறுவர்.

பஞ்ச கட்ட பிண்டம் எனப்படும் சடங்கைச் செய்யும் தென்னிந்தியர்கள் வருண நதிக்கு வருகின்றனர். அவர்கள் ஐந்தாவதாகப் பிண்டம் போடுவது த்ரிலோசன கட்டத்தில் ஆகும். வருண நதி த்ரிலோசன் வரை நீண்டிருக்க வேண்டும் என்று இதிலிருந்து தெரிகிறது.

அன்பர்கள் வருண கங்கா ஸங்கமம் வரை படகில் செல்லலாம். வழியில் ஆதி கேசவரையும், பிற தெய்வங்களையும் வழிபடலாம்.

பிப்பில தீர்த்தம்

காசி காண்டம், பலவிடங்களில் பிப்பில தீர்த்தம் என்ற முக்கியமான தீர்த்தத்தைப் பற்றிக் கூறுகிறது. காசி கண்ட நாட்களில், இந்தத் தீர்த்தம் மிகப் பெரிதாக இருந்திருக்கக் கூடும். தற்போது இது ஒரு கிணறாகவே இருக்கிறது. பிப்பில கூபம் (கிணறு) த்ரிலோசனேச்வரர் கோயிலுக்கு அருகில் உள்ளது. நூலாசிரியர்கள் அக்ஷய த்ருதியை அன்று இங்கு சென்று, மக்கள் கூட்டத்திற்கிடையே இந்தத் தீர்த்தத்திலிருந்து நீரெடுத்து நீராடினர் என்பது குறிப்பிடத் தக்கது.

அக்ஷய த்ருதியை அன்று பிப்பில தீர்த்தத்தில் நீராடி, த்ரிலோசனேச்வரரையும், மதுஸூதன் (வாம கேசவரையும்) வழிபடுவது மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இந்தப் பாக்கியம் நூலாசிரியர்களுக்குக் கிடைத்தது.

மற்ற நாட்களில் ஒரு மணி நேரம் மட்டுமே இந்த இடம் திறந்திருக்கிறது, மற்ற நேரங்களில் மூடப்பட்டிருக்கிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விமல தீர்த்தம்

விமல தீர்த்தம் ஒரு முக்கியமான தீர்த்தமாகும். அதைப் பற்றிய விவரங்கள் கபர்தீச்வரரைப் பற்றிய பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது அது பிசாச் மோசன் தலப் என்று வழங்கப்படுகிறது. வாராணஸியில் உள்ள பெரிய தீர்த்தம் இதுவே ஆகும். அன்பர்கள் விசேஷ நாட்களில் இந்தக் குளத்தில் நீராடுகின்றனர்.

லோலார்க் குண்டம்

லோலார்க் ஆதித்யர் வீற்றிருக்கும் லோலார்க் குண்டத்தை மிகவும் சிறப்பித்துச் சொல்கிறது காசி காண்டம். (அத்யாயம் 46).

எல்லாத் தீர்த்தங்களிலும், சிறப்பு வாய்ந்தது லோலார்க் குண்டம். லோலார்க் குண்டத்தில் நீராடி, பூஜைகள் முதலிய செய்வதால் அன்பர்களுக்கு மிகுந்த நன்மை உண்டாகும்.

மார்கசீர்ஷ மாதம் சுக்ல பக்ஷ ஷஷ்டி அல்லது ஞாயிற்றுக்கிழமையுடன் கூடிய ஸப்தமீ மற்றும் மாக மாத சுக்ல பக்ஷ ஸப்தமீ (ரத ஸப்தமீ) இங்கு வழிபட வேண்டிய விசேஷ நாட்களாகும்.

பொதுவாக, அன்பர்கள் இந்தக் குளத்தில் நீராடுவதில்லை. விசேஷ நாட்களில் மட்டும் பெருந்திரளான மக்கள் நீராடுகின்றனர்.

அன்பர்கள் இந்தக் குண்டத்திற்கு வந்து லோலார்க் ஆதித்யரை வழிபடுகின்றனர். இந்த குண்டத்திற்குச் செல்ல மூன்று இடங்களிலிருந்து படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நான்காவது பக்கத்தில், இது கிணறு போன்ற வடிவம் உடையதாக இருக்கிறது.

காசிக்கு வரும் அன்பர்கள், இங்கிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ள துர்கா தேவி தரிசனத்துடன் இதனையும் இணைத்துக் கொள்கின்றனர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



அர்க விநாயகர்

துர்க விநாயகர்



க்ஷணி தாக்ஷ விநாயகர்

வக்ர துண்ட விநாயகர்
(படா கணேஷ்)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



ஆதி மஹாதேவ்

ஆஸாடேஸ்வரர்



அக்னி துருவேஸ்வரர்



அம்ருதேஸ்வரர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஞான வாபீ

காசி கண்டத்தின்படி, ஈசானன் என்ற பெயருடைய திக்பாலன் ஒருவன் காசிக்கு வந்து, தன்னுடைய த்ரிசூலத்தால் ஒரு கிணறு வெட்டினான். அதுவே ஞான வாபி என்று அழைக்கப்படுகிறது. பிறகு, அவன் சிவ பெருமானை வழிபடத் தொடங்கினான். இந்தக் கிணற்றில் உள்ள நீர் அன்பர்களுக்கு ஞானத்தை வழங்க வல்லது. விச்வநாதர் கோயிலுக்குச் செல்லும் வழியில், ஞான வாபி மசூதிக்குப் பக்கத்தில் இந்தக் கிணறு அமைந்துள்ளது.

காசி கண்டத்தின் 33 & 34 அத்யாயங்கள் ஞான வாபி கிணற்றில் உள்ள நீரின் சக்தியை விளக்குகின்றன. கலாவதி என்ற பெயருடைய ஒரு இளவரசியிடம் காசியின் வரைபடம் ஒன்று அளிக்கப்பட்டது. அவள் ஞான வாபி இருந்த இடத்தைத் தொட்டவுடன் அவளுக்கு முற்பிறவி நினைவுகள் தோன்றின.

பல இடங்களில் ஞான வாபி நீரின் சிறப்பைக் காசி காண்டம் எடுத்துரைக்கிறது. ஞான வாபியில் நீராடி, ச்ராத்த காரியங்களைச் செய்வதால், முன்னோர்கள் மகிழ்கின்றனர். அவர்கள் நரகத்தில் வறுபட்டுக் கொண்டிருந்தாலும், அவர்கள் ஸ்வர்கத்தை அடைவர்.

தற்போதுள்ள கடும் காவல்துறை கண்காணிப்பால், வெகு நேரம் ஞான வாபிக்கு அருகில் இருப்பது ஸாத்தியமில்லை. அன்பர்கள் ஞான வாபியைத் தரிசித்து, நீரை ப்ரோக்ஷணம் செய்து கொள்ளலாம், அல்லது ப்ரஸாதமாகக் கருதி அருந்தலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



ஸ்ரீதுர்க விநாயகர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சிவபெருமான் மந்தராசலத்தில் வீற்றிருந்தார். திவோதாஸ் என்ற பண்பும் பக்தியும் நிறைந்த மன்னன் ஒருவன் காசியை ஆண்டு வந்தான். அவனுடைய அரசாட்சியில் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருந்தனர்; நாட்டில் வளம் ஓங்கியிருந்தது. அரசனுக்கு ப்ரஹ்மதேவனுடன் ஓர் உடன்படிக்கை இருந்தது : அவன் அரசாளும் காலம் வரை தேவர்களும் மற்றவர்களும் காசியிலிருந்து விலகியிருக்க வேண்டும்; காசிக்கு எந்தத் தொந்தரவும் தரக்கூடாது என்பதே அது.

ப்ரஹ்மதேவன் இதற்கு ஒப்புக்கொண்டார். ஆனால் ஒரு நிபந்தனை : அரசன் திவோதாஸ் தன்னை மிகச் சிறந்த ஆட்சியாளனாக நிரூபிக்க வேண்டும்; காசியில் வசிப்பவர்களும், காசிக்கு வருபவர்களும் தங்களது ஆன்மிக ஸாதனைகளைச் சிறந்தமுறையில் மேற்கொள்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதே அது. அரசன் இந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டு சிறந்தமுறையில் அரசாட்சி புரிந்துவந்தான்.

சிவபெருமான் வெகு காலமாகக் காசிக்கு வராமல் இருந்தார். திருவிளையாடலாக அரசன் திவோதாஸைக் குற்றம் இழைக்கும்படி செய்தார். ஏதேனும் இடைஞ்சல் ஏற்படுத்துவதற்காக

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அறுபத்து நான்கு யோகினிகளை அங்கு அனுப்பினார். அவர்கள் ஸ்வர்க்கபுரியாகக் காட்சியளித்த காசி மாநகரின் அழகிலும், அமைதியான சூழ்நிலையிலும் கவரப்பட்டு, அங்கேயே தங்கிவிட முடிவுசெய்து அங்கேயே இருந்துவிட்டனர்.

யோகினிகள் திரும்பி வராததை அறிந்த சிவபெருமான், காசியில் ஏதேனும் கலகத்தை ஏற்படுத்துவதற்காக ஸூர்ய பகவானை அங்கு அனுப்பினார். ஸூர்ய பகவான் காசிக்கு வந்து, அங்கு ஜோதிடராக, பண்டிதராக, மத போதகராக, வணிகராக, ப்ரஹ்மணராக பல்வேறு வடிவங்கள் எடுத்துக் கொண்டார். அவரால் காசியிலோ, அரசன் திவோதாஸின் அரசாட்சியிலோ எந்தவிதமான குறைபாட்டையும் காண முடியவில்லை. ஸூர்ய தேவனும் காசி மாநகரின் அழகினால் கவரப்பட்டார். சிவபெருமான் தனக்கு இட்ட பணியை முடிக்காமல் மந்தராசலத்திற்குச் சென்றால், சிவபெருமான் கோபித்துக் கொள்வார் என்றும் அவர் நினைத்தார்.

கடைசியில், ஸூர்ய தேவன் காசியிலேயே தங்கிவிட முடிவுசெய்தார். அவர் பின்வருமாறு தமக்குள் சொல்லிக் கொண்டார்: சிவபெருமானுக்குக் கீழ்ப்படியாமல் இருப்பது பாவமாகும். ஆனால், காசியில் இருந்து ஆன்மிக ஸாதனைகளைப் பழகுவதன் மூலம் அந்த பாவங்களிலிருந்து விடுபட முடியும். இவ்வாறு கருதிய ஸூர்ய பகவான், பன்னிரெண்டு ரூபங்கள் எடுத்துக் கொண்டு, காசியின் பல்வேறு இடங்களில் தம்மை இருத்திக் கொண்டார்.

சிவபெருமான் தம்முடைய சிவகணங்களை அனுப்பினார். அவர்களும் காசியில் அழகில் மயங்கி அங்கேயே தங்கிவிட்டனர். கடைசியில், சிவபெருமான் தம்முடைய மகனான விநாயகப் பெருமானை, காசியில், அரசன் திவோதாஸின் ஆட்சியில் ஏதேனும் கலகத்தை உருவாக்க வேண்டும் என்று விசேஷமாகச் சொல்லி அனுப்பினார்.

விநாயகப் பெருமான், காசியை அடைந்து ஓர் வயதான ஜோதிடர் வடிவம் எடுத்துக் கொண்டார். அவர் மக்களுக்குச் சில கனவுகள் தோன்றச் செய்து, அவர்களைக் காலையில் சந்தித்து, கனவின் பலன்களைக் கூறத் தொடங்கி, மக்களைத் தம் பக்கம் இழுக்கத் தொடங்கினார். அவர்களது ஜாதகத்தில் உள்ள க்ரஹ நிலைகளைக் கூறி, அவர்களைப் பயமுறுத்தினார். மக்கள் காசியை விட்டுப் பயந்து ஓடும்படி செய்தார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கால க்ரமத்தில், அரசனுடைய அரண்மனைக்குள் புகுந்து, அந்தப்புரத்தில் இருந்த பெண்களிடத்தில் தம்முடைய செல்வாக்கை நிலைநாட்டினார். நாட்கள் செல்லச் செல்ல, அரசியின் நன்மதிப்பைப் பெற்றார். அரசி, வயதான ஜோதிடரைப் பற்றி அரசனிடம் தெரிவித்து, அரசன் அவருக்கு மரியாதை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டாள். அரசனுடைய அனுமதி பெற்று, ஜோதிடருக்குச் சொல்லி அனுப்பினாள்.

அரசன் மிகப் பணிவுடன் ஜோதிடரை வரவேற்றான். ஜோதிட வடிவத்தில் இருந்த விநாயகப் பெருமானும் மரபுப்படி அரசனை வாழ்த்தினார். அரசன் வருங்காலத்தைப் பற்றிக் கூறுமாறு கேட்டான். மிகுந்த யோசனைக்குப் பிறகு, அரசனைப் பற்றியும், அரசாட்சியைப் பற்றியும் பல்வேறு விஷயங்களை ஜோதிடர் கூறினார். அன்றிலிருந்து பதினெட்டாவது நாள் ஓர் அந்தணர் வந்து, ஓர் முக்கியமான அறிவுரை வழங்குவார், அதனை அரசன் கண்டிப்பாகக் கடைப்பிடித்தாக வேண்டும் என்று கூறிவிட்டு, ஜோதிடர் அங்கிருந்து விடைபெற்றுக் கொண்டார்.

விநாயகப் பெருமான் தம்முடைய தந்தையின் எண்ணத்தைப் பூர்த்திசெய்து, காசியில் பல்வேறு வடிவங்களில் எழுந்தருளினார்.

அபய விநாயகர்

புனிதமான கங்கைக் கரையில் வீற்றிருக்கும் ஸ்ரீஅபய விநாயகர், தன்னை வழிபடும் அன்பர்களின் சகலவிதமான பயங்களையும் அடியோடு நீக்குகிறார்.

இருப்பிடம்

D – 17/111, சூல்டங்கேச்வரர் கோயில் உள்ளே, தசாச்வமேத காட் என்ற இடத்தில் அமைந்துள்ளது. இந்த இடம் வரை அன்பர்கள் சைக்கிள் ரிக்ஷாவில் செல்ல முடியும். அல்லது, படகில் தசாச்வமேத கட்டம் வரை சென்று, படிகள் ஏறி அங்கு செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீலக்ஷ்மி சங்கர் திவாரி கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அர்க் விநாயகர்

அஸியும் கங்கையும் ஸங்கமிக்கும் இடத்திற்கு அருகில் அர்க் விநாயகர் கோயில் அமைந்துள்ளது. ஞாயிற்றுக்கிழமைகளில் விசேஷ பூஜைகள் நடைபெறுகின்றன.

அர்க் விநாயகர் கோயிலின் இருப்பிடம்

லோலார்க் குண்ட்டிற்கு அருகே 2/17 என்ற முகவரியில் அமைந்துள்ளது. கங்கை நதியை நோக்கிச் செல்லும் பாதையில் லோலார்க் குண்ட்டைக் கடந்து செல்ல வேண்டும். லோலார்க் குண்ட் வரை ரிக்ஷாவில் செல்ல முடியும்.

வழிபாட்டு முறைகள்

இது ஒரு தனியான கோயிலாக இருப்பதால், குறிப்பிட்ட வழிபாடுகள் எதுவும் நடைபெறுவதில்லை. பக்தர்களே வழிபடுகிறார்கள். கோயிலுக்கென்று தனியாக அர்ச்சகர் எவரும் இல்லை.

ஆஷா விநாயகர்

அன்பர்களின் விருப்பங்களை நிறைவேற்றுபவர் ஸ்ரீஆஷா விநாயகர்.

இருப்பிடம்

D - 3/71, மிர் காட், பாரே ஹநுமான் கோயில் என்ற முகவரியில் அமைந்துள்ளது. தசாச்வமேத் விச்வநாத் சந்து வரை ரிக்ஷாவில் சென்று, அன்பர்கள் அங்கிருந்து ப்ரஸித்தி பெற்ற கோயிலான விசாலாக்ஷி கௌரி கோயில் வழியாக நடந்துசென்று இவ்விடத்தை அடையலாம். அல்லது மிர் காட் வரை படகில் சென்று, படிகள் ஏறி இவ்விடத்தை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 7.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் 9.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அவிமுக்த விநாயகர்

காசி கண்டத்தின்படி, அவிமுக்த க்ஷேத்ரமாகிய காசியில் வசிக்கும் அன்பர்களின் வாழ்விலுள்ள அனைத்துத் துன்பங்களையும் போக்குபவர் ஸ்ரீஅவிமுக்த விநாயகர் ஆவார்.

இருப்பிடம்

ஆதியில் இருந்த ஸ்ரீஅவிமுக்த விநாயகரின் விக்ரஹம் தற்போது இல்லை என்று சிலர் கருதுகிறார்கள். இரண்டு இடங்களில் ஸ்ரீஅவிமுக்த விநாயகர் வீற்றிருக்கிறார்.

ஞானவாபி மஸ்ஜித் சுற்றிலும், விச்வநாதர் கோயிலின் உட்புறத்தில், கௌரி மற்றும் விஷ்ணுவின் பின்புறத்திலும் வீற்றிருக்கிறார்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

பீம்சண்டி விநாயகர்

பீம்சண்டி விநாயகரை வழிபடுவதால் பக்தர்களின் மனதில் உள்ள அனைத்து பயங்களும் அகலும்.

கோயிலின் இருப்பிடம்

வாரணாஸிக்கு வெளியே பஞ்ச்கோசி செல்லும் பாதையில் அமைந்துள்ளது.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. பக்தர்கள் தாங்களே பூஜைசெய்து வழிபடலாம்.

சதுர் தண்ட் விநாயகர்

கூனிடக்ஷ் விநாயகருக்கு வடக்கே ஸ்ரீசதுர்தண்ட் விநாயகர் வீற்றிருக்கிறார். இந்த விநாயகரைத் தரிசித்த மாத்திரத்தில் அன்பர்கள் வாழ்வில் தோன்றும் இடர்கள் அழியும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருப்பிடம்

D - 49/10, சநாதன் தர்ம் பள்ளி, நய் சரக் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை ரிக்ஷாவில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

சிந்தாமணி விநாயகர்

ஹேரம்ப விநாயகருக்குத் தெற்கே ஸ்ரீசிந்தாமணி விநாயகர் வீற்றிருக்கிறார். ஸ்ரீசிந்தாமணி விநாயகரை வழிபடுவதால், அன்பர்கள் தாங்கள் வேண்டும் நல்வரங்களைப் பெற்று மகிழ்வர்.

இருப்பிடம்

K 56/42. ஈச்வர் கங்கி தலப் கிழக்கே, பாபு பஜார் என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை சைக்கிள் ரிக்ஷாவில் செல்ல முடியும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

சித்ர கண்ட விநாயகர்

மேற்குப் புறத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீசித்ர கண்ட விநாயகர் தீய சக்திகளிடமிருந்து காசியை காக்கிறார்.

இருப்பிடம்

C/K23/34, சித்ர கண்ட தேவி என்ற முகவரியில் அமைந்துள்ளது.

அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து செல்லலாம். சௌக் பகுதியில் யுகோ பேங்க் கிற்கு எதிர்புறமுள்ள சந்தில் அமைந்துள்ளது. சந்நிதி நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் கம்பிக்கதவுகள் வழியாகத தரிசனம் செய்யலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தந்த் ஹஸ்த் விநாயகர்

விக்ன ராஜ விநாயகருக்குத் தெற்குப் பகுதியில் ஸ்ரீதந்த் ஹஸ்த் விநாயகர் வீற்றிருக்கிறார். ஸ்ரீதந்த் ஹஸ்த் விநாயகர் தீயோரிடமிருந்து காசி க்ஷேத்ரத்தைப் பாதுகாத்து, நல்லோருக்குப் பேரருள் புரிகிறார்.

இருப்பிடம்

K - 58/101. லோஹட்டியா, பாரா கணேஷ் கோயில் உட்புறம் என்ற முகவரியில் அமைந்திருக்கிறது. அன்பர்கள் லோஹட்டியா வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

பெருவாரியான மக்களால் வழிபடப்படும் இக்கோயில் தனியாக உள்ள ஒன்றாகும். காலை 4.45 மணி முதல் இரவு 10.30 மணி வரை கோயில் திறந்திருக்கிறது. காலை 4.45 மணிக்கு மங்கள ஆரத்தி, காலை 10.30 மணிக்கு போக் வழிபாடு, இரவு 10.30 மணிக்கு சயன ஆரத்தி ஆகிய வழிபாடுகள் நடைபெறுகின்றன. புதன்கிழமைகளில் இரவு 11.30 மணிக்கு விசேஷ ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீஸுபாஷ் சந்த்ர திவாரி கோயிலின் அர்ச்சகர்களில் ஒருவராவர். விசேஷ வழிபாடுகள் செய்ய (0) 9415446300 என்ற எண்ணில் அவரைத் தொடர்புகொள்ளலாம்.

தேஹ்லி விநாயகர்

காசி கண்டத்தின்படி, தேஹ்லி விநாயகர் காசிநகரின் எல்லையில் அல்லது நுழைவாயிலில் வீற்றிருக்கிறார். (தேஹ்லி என்றால் ஹிந்தி மொழியில் வாயில் என்று பொருள்). வழிபடும் பக்தர்களின் தடைகளையெல்லாம் நீக்குபவர் ஸ்ரீதேஹ்லி விநாயகர்.

கோயிலின் இருப்பிடம்

வாரணாஸியின் மையப்பகுதியிலிருந்து இருபது கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒரு கிராமத்தில் தேஹ்லி விநாயகர் கோயில் அமைந்துள்ளது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள்முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் தாங்களே சென்று வழிபடலாம்.

துண்டி விநாயகர்

விநாயகர் வழி ஏற்படுத்தியவுடன், சிவபெருமான் காசி மாநகருக்குள் நுழைந்தார். சிவபெருமான், அவருடைய ஸாதனைக்காக விநாயகப் பெருமானைப் புகழ்ந்தார். அந்த விநாயகர் துண்டி விநாயகர் எனப்பட்டார். விச்வநாதரைத் தரிசிக்க வரும் பக்தர்கள் அனைவரும் துண்டி விநாயகரின் ஸந்நிதியைக் கடந்துதான் போக வேண்டும். நுழைவாயிலில் இருக்கும் துண்டி விநாயகரை வழிபட்டுச் செல்வது மரபு. அதிகாலை துண்டி விநாயகரை வழிபடுவோரின் தடைகள் தவிடுபொடியாகின்றன. துண்டி விநாயகரின் நாமத்தை முழுமையான பக்தியோடு ஜபம் செய்யும் அன்பர் பலவிதமான அருளுக்குப் பாத்திரமாகி, மகிழ்ச்சியாக வாழ்வார்.

செவ்வாய்கிழமைகள்தோறும் துண்டி விநாயகரை வழிபடுதல் சிறப்பு. சதுர்த்தியுடன் கூடிய செவ்வாய்கிழமைகள் இன்னும் விசேஷமானவை. மாசி மாதத்தில் அமாவாஸ்யைக்குப் பிறகு வரும் சதுர்த்தி (சுக்ல சதுர்த்தி) அன்று துண்டி விநாயகரை வழிபடுவோர், விசேஷமான இறையருளுக்குப் பாத்திரமாவர். (ஸ்கந்த புராணம், காசி காண்டம், அத்யாயம் 57)

காசியில் எழுந்தருளியுள்ள விநாயகப் பெருமானின் பல்வேறு வடிவங்கள் பற்றி சிவபெருமான் கூறத் தொடங்கினார்.

துண்டி விநாயகர் ஆலயத்தின் இருப்பிடம்

அந்நபூர்ணா விச்வேச்வரர் ஆலய நுழைவாயிலில் துண்டி விநாயகர் ஸந்நிதி அமைந்துள்ளது. இங்கு செல்வதற்கு விச்வேச்வரர் கோயிலுக்குச் செல்லும் வழியைப் பார்க்கவும்.

வழிபாட்டு முறைகள்

இவ்விடத்தில் விநாயகப் பெருமானின் பெரிய மூர்த்தி உள்ளது. இருபத்து நான்கு மணிநேரமும், திறந்திருக்கிறது. அன்பர்கள் இங்கு, மலர்கள், அருகம்புல், இனிப்புகள் முதலியவற்றை ஸமர்ப்பிக்கலாம். காவல்துறையினரின்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சோதனைகள் அதிகம் இருப்பதால், கூட்டம் குறைவாக உள்ள அதிகாலை நேரத்தில் துண்டி விநாயகரை தரிசித்தல் நலம்.

துர்க் விநாயகர்

அர்க் விநாயகருக்குச் சற்றே தெற்கில் சென்றால் துர்க் விநாயகர் கோயிலை அடையலாம். துர்க் விநாயகர் வழிபடும் அன்பர்களின் துயரங்களை நீக்கும் ஆற்றல் படைத்தவர்.

துர்க் விநாயகர் கோயிலின் இருப்பிடம்

துர்க்கா குண்ட்டிற்குப் பின்புறம் 27/1 என்ற முகவரியில் அமைந்துள்ளது. துர்க் விநாயகர் ஒரு தனிப்பட்ட கோயிலாக இருக்கிறது. இரண்டு புறமும் வாயில்களில் இருக்கின்றன. அவற்றின் மூலம் ஏராளமான அன்பர்கள் நாள்தோறும் துர்க் விநாயகரை வழிபடுகின்றனர். அன்பர்கள் இந்த இடத்தை சைக்கிள் ரிக்ஷாவின் மூலம் அடையலாம். துர்க்கா குண்ட் ஓர் ப்ரஸித்த பெற்ற இடமாக இருப்பதால், இந்த இடத்தைக் கண்டுபிடிப்பது எளிது.

வழிபாட்டு முறைகள்

கோயில் திறந்திருக்கும் நேரங்கள் : காலை 5.00 முதல் மதியம் 12.00 மணி; மாலை 4.00 முதல் இரவு 10.00 பத்து மணி வரை. அதிகாலை 5.00 மணிக்கு மங்கள ஆரத்தியும், போக் நண்பகல் 12.00 மணிக்கும்; ஸந்த்யா ஆரத்தி இரவு 7.00 மணிக்கும்; சயன ஆரத்தி இரவு 10.00 மணிக்கும் நடைபெறுகிறது. ஆரத்தி நேரங்களில் திரளான அன்பர்கள் கலந்துகொள்கின்றனர். ஒரு செயலைத் தொடங்கும் முன் துர்க் விநாயகரை வழிபட்டால் வெற்றி நிச்சயம் என்பது தீவிர பக்தர்களின் நம்பிக்கை.

கோயில் அர்ச்சகர்கள்

ஸ்ரீஸந்தோஷ் மித்ரா கோயிலின் ஒரு அர்ச்சகராவார். சிறப்பு வழிபாடுகள் செய்ய அவரை அணுகலாம். அவரது செல் எண். (0) 9616585856

துர்முக விநாயகர்

C/K34/60 என்ற எண்ணில், மேற்குறிப்பிட்ட பகுதியில் ஸ்ரீதுர்முக விநாயகர் கோயில் இருக்கிறது. காசி கர்வட் கோயிலிலிருந்து

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸரஸ்வதி படக் செல்லும் வழியில் இடதுபுறத்தில் மா ராமா சில்க் ஃபாக்டரி என்றோர் கடை உள்ளது. இந்தக் கடைக்கு அருகிலுள்ள வீட்டில் ஸ்ரீதுர்முக விநாயகர் வீற்றிருக்கிறார்.

அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

த்வார விநாயகர்

காசி கண்டத்தின்படி ஸ்ரீத்வார விநாயகர் தீய சக்திகளிடமிருந்து காசியை காப்பாற்றுகிறார்.

இருப்பிடம்

ஸ்வர்க்கத்வாரேச்வரருக்கு (ப்ராஹ்மணாள் சௌராஹா) அருகில் ஜாவ் விநாயகருக்கு அருகில் உள்ள படிக்கட்டில் வீற்றிருக்கிறார்.

அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

த்வி முக் விநாயகர்

க்ஷிப்ர ப்ரஸாத விநாயகருக்குக் கிழக்குப்புறத்தில் த்வி முக் விநாயகர் வீற்றிருக்கிறார். முன்புறம் போலவே இந்த விநாயகரின் பின்புறமும் மிகுந்த அழகுடன் காட்சியளிக்கிறது. இந்த விநாயகரை வழிபடுவதால், வாழ்வில் சகலவிதமான வளங்களும் பெருகும்.

இருப்பிடம்

D - 51/90, ஸாம்ப ஆதித்யாவிற்கு மேற்கில், ஸூரஜ் குண்ட் என்ற முகவரியில் கோயிலின் உள்ளே அமைந்துள்ளது. அன்பர்கள் ஸூரஜ் குண்ட் வரை ரிக்ஷாவில் செல்லலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

ஏக தந்த விநாயகர்

கூட் தண்ட விநாயகருக்கு வடக்கே ஏகதந்த விநாயகர் கோயில் அமைந்துள்ளது. அவர் (ஆனந்த வனம்) காசியைத் தீய சக்திகளிடமிருந்து காக்கிறார்.

இருப்பிடம்

D - 32/102 புஷ்ப தண்டேச்வர், பெங்காலி தோலா, வாராணஸி என்ற முகவரியில் அமைந்துள்ளது.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

கஜ கர்ண விநாயகர்

வடக்கே வீற்றிருக்கும் ஸ்ரீகஜ கர்ண விநாயகர், அன்பர்கள் வாழ்வில் அனைத்து வளங்களையும், இன்பங்களையும் அருள்கிறார்.

இருப்பிடம்

C/K37/43, கோட்வால்புரா, ஈசானேச்வரர் என்ற முகவரியில் அமைந்துள்ளது. கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு மால் கட்டிடத்தின் உள்ளே அமைந்துள்ளது. அவ்விடத்தில் தீபக் சினிமா என்றொரு திரையரங்கம் முன்பு இருந்தது. மால் உரிமையாளர்கள் அன்பர்கள் சென்று வழிபட அனுமதி அளிக்கிறார்கள். அன்பர்கள் தீபக் சினிமா (மால்) வரை ரிக்ஷாவில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கஜ விநாயகர்

தண்ட் ஹஸ்த் விநாயகருக்குத் தெற்குப்புறத்தில் ஸ்ரீகஜ விநாயகர் வீற்றிருக்கிறார். உண்மையான பக்தியுடன் இந்த விநாயகரை வழிபடும் அன்பர்கள் ஒரு யானையை வாங்கும் அளவிற்குச் செல்வம் உடையவர்களாகத் திகழ்வர். (மிகுந்த செல்வமுடையவர்களாக இருப்பர் என்பது கருத்து).

இருப்பிடம்

C/K 54/44, ராஜ தர்வாஜா, பர பூதேச்வரர் கோயில் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து செல்லலாம்.

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

கணநாத விநாயகர்

37/1, துண்டி ராஜ் கல்லி, (விச்வநாதர் கோயில் அருகில்) ஸ்ரீகணநாத விநாயகர் வீற்றிருக்கிறார்.

துண்டி ராஜ் விநாயகர் சந்நிதிக்கு முன்பு இடதுபுறம் திரும்பிச் சென்றால் ஞானவாபிக்குச் செல்லும் வழியில் சிறிது தூரம் நடந்தால், விஜய் ஜுவல்லர்ஸ் என்ற புகழ்பெற்ற கடை உள்ளது. இந்தக் கடைக்கு வெளிப்புறத்தில் ஸ்ரீகணநாத விநாயகர் வீற்றிருக்கிறார்.

அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

ஞான விநாயகர்

காசி காண்டத்தின்படி, ஸ்ரீஞான விநாயகர் தீய சக்திகளிடமிருந்து காசியைக் காக்கிறார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருப்பிடம்

28/4, லங்க்லிச்வரர் கோயில், கோவா கல்லி சௌராஹா என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து கத்ரி மெடிக்கல் ஹால் வழியாக நடந்து செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 8.00 மணி முதல் 10.00 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீஜெய் ப்ரகாஷ் பாண்டே கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய அவரை (0)9918379713 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

ஹேரம்ப விநாயகர்

முண்ட விநாயகருக்குத் தென்கிழக்கில் ஸ்ரீஹேரம்ப விநாயகர் அமைந்துள்ளார். ஸ்ரீஹேரம்ப விநாயகர் அன்பர்களின் நல்ல மனோரதங்களை நிறைவேற்றுகின்ற ஆற்றல் படைத்தவர்.

இருப்பிடம்

C 21/14 மல்தஹியா என்ற இடத்தில் அமைந்துள்ளது. கோயிலின் புராதன இருப்பிடத்தில் வணிக வளாகம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. அதன் இரண்டாவது மாடியில் ஒரு சிறிய கோயில் கட்டப்பட்டுள்ளது.

வழிபாட்டு முறைகள்

காலை 8.00 மணி முதல் நன்பகல் 12.00 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீதுளஸி என்பவர் கோயிலின் அர்ச்சகர் ஆவார். அவரைத் தொடர்புகொள்ள வேண்டிய எண். (0)9919689016.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஜ்யேஷ்ட விநாயகர்

சிவபெருமானுக்கு அனைத்து விநாயகர்களும் மகன்களே ஆவர். அவர்களுள் மூத்தவர் ஸ்ரீஜ்யேஷ்ட விநாயகர். (காசி காண்டம், அத்யாயம் 57). ஸ்ரீசிந்தாமணி விநாயகருக்குத் தென்கிழக்குப் பகுதியில் ஸ்ரீஜ்யேஷ்ட விநாயகர் வீற்றிருக்கிறார். ஜ்யேஷ்ட மாதத்தில், அமாவாஸ்யைக்குப் பிறகு வரும் சதுர்த்தி மிக முக்கியமான நாளாகக் கருதப்படுகிறது. அன்று செய்யப்படும் பூஜைகள் அபரிமிதமான பலன்களை அளிக்கின்றன.

இருப்பிடம்

K - 62/144, ஸப்த் ஸாகர் மொஹல்லா, ஜ்யேஷ்டேச்வரர் லிங்கம் அருகில் என்ற முகவரியில் அமைந்துள்ளது. மைதாகின் என்ற ப்ரஸித்தி பெற்ற இடத்திலிருந்து அருகில் உள்ளது. அன்பர்கள், ஆட்டோ, சைக்கிள் ரிக்ஷா அல்லது காரில் கூட மைதாகின் என்ற இடத்தை அடைய முடியும். மைதாகின் என்ற இடத்திலிருந்து நடந்து செல்வது உத்தமம். இதற்கு அருகிலுள்ள மற்றொரு ப்ரஸித்தி பெற்ற இடம் காசி தேவி கோயில்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.30 மணி முதல் நன்பகல் 12.30 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயில் திறந்திருக்கும் நேரம் மாற்றத்திற்கு உட்பட்டது. அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க, கோயில் திறக்கப்படும்.

கால விநாயகர்

பிச்சாண்டில் விநாயகருக்குத் தெற்குப் புறத்தில் ஸ்ரீகால விநாயகர் வீற்றிருக்கிறார். இந்த விநாயகரை வழிபடும் அன்பர்களுக்கு அகால மரணத்தைக் குறித்த பயம் நீங்குகிறது.

இருப்பிடம்

K - 24/10, ராம் காட் படிக்கட்டில், அரச மரத்தடியில் ஸ்ரீகால விநாயகர் ஸந்நிதி இருக்கிறது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து செல்லலாம். அல்லது படகில் ராம் காட்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வரை சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்று இந்த இடத்தை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

காளிப்ரிய விநாயகர்

சிங்க் துண்ட் விநாயகருக்கு வடக்குப்புறத்தில் ஸ்ரீகாளிப்ரிய விநாயகர் வீற்றிருக்கிறார். தம்மைச் சரணடைந்த காசிவாழ் அன்பர்களின் எதிரிகளுக்குத் துன்பம் கொடுக்கக்கூடியவர் இந்த விநாயகர்.

இருப்பிடம்

D - 10/50, ஸாக்ஷி விநாயகர் பின்புறம், மனப்ரகாமேச்வரர் கோயில் என்ற முகவரியில் அமைந்திருக்கிறது. அன்பர்கள் தசாச்வமேத் விச்வநாத் சந்து வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் தாங்களே பூஜைகள் செய்து வழிபடலாம்.

கர்வ விநாயகர்

கங்கையும், வருண் நதியும் சங்கமிக்கும் இடத்திற்கு அருகில் ஸ்ரீகர்வ விநாயகர் வீற்றிருந்து, தம்மை உள்ளன்புடன் தொழும் அன்பர்களுக்கு அருள் பாலிக்கிறார்.

கோயிலின் இருப்பிடம்

ராஜ்காட் கோட்டையின் உள்ளே, ஆதி கேசவர் கோயிலுக்கு அருகிலுள்ள ஒரு வீட்டில் கர்வ விநாயகர் வீற்றிருக்கிறார். அன்பர்கள் இந்த இடம் வரை ஆட்டோ ரிக்ஷா அல்லது சைக்கிள் ரிக்ஷாவில் செல்லலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஜ்யேஷ்ட விநாயகர்

சிவபெருமானுக்கு அனைத்து விநாயகர்களும் மகன்களே ஆவர். அவர்களுள் மூத்தவர் ஸ்ரீஜ்யேஷ்ட விநாயகர். (காசி காண்டம், அத்யாயம் 57). ஸ்ரீசிந்தாமணி விநாயகருக்குத் தென்கிழக்குப் பகுதியில் ஸ்ரீஜ்யேஷ்ட விநாயகர் வீற்றிருக்கிறார். ஜ்யேஷ்ட மாதத்தில், அமாவாஸ்யைக்குப் பிறகு வரும் சதுர்த்தி மிக முக்கியமான நாளாகக் கருதப்படுகிறது. அன்று செய்யப்படும் பூஜைகள் அபரிமிதமான பலன்களை அளிக்கின்றன.

இருப்பிடம்

K - 62/144, ஸப்த் ஸாகர் மொஹல்லா, ஜ்யேஷ்டேச்வரர் லிங்கம் அருகில் என்ற முகவரியில் அமைந்துள்ளது. மைதாகின் என்ற ப்ரஸித்தி பெற்ற இடத்திலிருந்து அருகில் உள்ளது. அன்பர்கள், ஆட்டோ, சைக்கிள் ரிக்ஷா அல்லது காரில் கூட மைதாகின் என்ற இடத்தை அடைய முடியும். மைதாகின் என்ற இடத்திலிருந்து நடந்து செல்வது உத்தமம். இதற்கு அருகிலுள்ள மற்றொரு ப்ரஸித்தி பெற்ற இடம் காசி தேவி கோயில்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.30 மணி முதல் நன்பகல் 12.30 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயில் திறந்திருக்கும் நேரம் மாற்றத்திற்கு உட்பட்டது. அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க, கோயில் திறக்கப்படும்.

கால விநாயகர்

பிச்சாண்டில் விநாயகருக்குத் தெற்குப் புறத்தில் ஸ்ரீகால விநாயகர் வீற்றிருக்கிறார். இந்த விநாயகரை வழிபடும் அன்பர்களுக்கு அகால மரணத்தைக் குறித்த பயம் நீங்குகிறது.

இருப்பிடம்

K - 24/10, ராம் காட் படிக்கட்டில், அரச மரத்தடியில் ஸ்ரீகால் விநாயகர் ஸந்நிதி இருக்கிறது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து செல்லலாம். அல்லது படகில் ராம் காட்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வரை சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்று இந்த இடத்தை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

காளிப்ரிய விநாயகர்

சிங்க் துண்ட் விநாயகருக்கு வடக்குப்புறத்தில் ஸ்ரீகாளிப்ரிய விநாயகர் வீற்றிருக்கிறார். தம்மைச் சரணடைந்த காசிவாழ் அன்பர்களின் எதிரிகளுக்குத் துன்பம் கொடுக்கக்கூடியவர் இந்த விநாயகர்.

இருப்பிடம்

D - 10/50, ஸாக்ஷி விநாயகர் பின்புறம், மனப்ரகாமேச்வரர் கோயில் என்ற முகவரியில் அமைந்திருக்கிறது. அன்பர்கள் தசாச்வமேத் விச்வநாத் சந்து வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் தாங்களே பூஜைகள் செய்து வழிபடலாம்.

கர்வ விநாயகர்

கங்கையும், வருண் நதியும் சங்கமிக்கும் இடத்திற்கு அருகில் ஸ்ரீகர்வ விநாயகர் வீற்றிருந்து, தம்மை உள்ளன்புடன் தொழும் அன்பர்களுக்கு அருள் பாலிக்கிறார்.

கோயிலின் இருப்பிடம்

ராஜ்காட் கோட்டையின் உள்ளே, ஆதி கேசவர் கோயிலுக்கு அருகிலுள்ள ஒரு வீட்டில் கர்வ விநாயகர் வீற்றிருக்கிறார். அன்பர்கள் இந்த இடம் வரை ஆட்டோ ரிக்ஷா அல்லது சைக்கிள் ரிக்ஷாவில் செல்லலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள்முழுவதும் திறந்திருக்கிறது. காலை 7.30 மணிக்கும், மாலை 7.00 மணிக்கும் ஆரத்தி நடைபெறுகிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் தாங்களே சென்று வழிபடலாம். கோயில் கதவு மூடியிருந்தாலும், அன்பர்கள் கம்பிக்கதவு வழியாகத் தரிசனம் செய்யலாம்.

கூனிடக்க்ஷ் விநாயகர்

டி -52/38 என்ற முகவரியில் பழைய லக்ஷ்மி கோயில் வளாகத்துள், லக்ஷ்மி குண்ட் பகுதியில், மஹாலக்ஷ்மி கௌரி கோயில் அருகே அமைந்துள்ளது,

அன்பர்கள் லக்சா ரோடு வழியாக ரிக்ஷாவில் செல்லலாம்.

இந்த விநாயகர் காசியை தீயோரிடமிருந்து காப்பாற்றுகிறார்,

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள்முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் தாங்களே சென்று வழிபடலாம்.

கூஷ்மாண்ட விநாயகர்

தேஹ்லி விநாயகர் கோயிலுக்குக் கிழக்குப்புறத்தில் கூஷ்மாண்ட விநாயகர் கோயில் அமைந்துள்ளது. கூஷ்மாண்ட விநாயகரை வழிபடுவதால், அன்பர்கள் சகல வளங்களையும் பெற்று மகிழ்வர்.

இருப்பிடம்

கூஷ்மாண்ட விநாயகர் கோயில், முற்காலத்தில் கிராமமாகக் கருதப்பட்டதும், தற்போது நகரின் பகுதியாவே பூல்வாரியா என்ற இடத்தில் அமைந்துள்ளது.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள்முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் தாங்களே சென்று வழிபடலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கூட் தண்ட் விநாயகர்

காசிக்கு மேற்குப் புறத்தில் வீற்றிருக்கும் கூட் தண்ட் விநாயகர் பக்தர்களின் கடினமான இடைஞ்சல்களையும் நீக்கி, காசியைக் காப்பாற்றுபவர்.

இருப்பிடம்

B - 3/335, கிநா ராம் ஆச்ரமம், க்ரிம் குண்ட், சிவாலா, வாராணஸி என்ற முகவரியில் இக்கோயில் அமைந்துள்ளது.

அன்பர்கள் இந்த இடம் வரை ஆட்டோ ரிக்ஷா அல்லது சைக்கிள் ரிக்ஷாவில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கூட் தண்ட விநாயகர் கோயில் அமைந்துள்ள ஆச்மரமமானது, காலை 5.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையிலும், பின்னர் மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. கோடைக்காலத்திலும், குளிர்காலத்திலும் திறந்திருக்கும் நேரம் மாறுபடும். அர்ச்சகர் என்று குறிப்பிட்ட எந்த நபரும் இல்லை, அன்பர்கள் தாங்களே பூஜை செய்து வழிபடலாம்.

க்ஷிப்ர ப்ரஸாத விநாயகர்

பஞ்சமுக விநாயகருக்குக் கிழக்கே ஸ்ரீக்ஷிப்ர ப்ரஸாத விநாயகர் வீற்றிருக்கிறார். தன்னை வழிபடும் அன்பர்களுக்கு சகலவிதமான வெற்றிகளையும் அருள்பவர் ஸ்ரீக்ஷிப்ர ப்ரஸாத விநாயகர்.

இருப்பிடம்

C - 18/47, பிதர் குண்டம், பித்ரேச்வரர் கோயில் என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் பிசாச்மோசன் வழியாக ரிக்ஷாவில் இவ்விடத்தை அடையலாம். பிதர் குண்டம் ஒரு ப்ரஸித்திபெற்ற இடமாகும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

லம்போதர விநாயகர்

கங்கைக்கு மேற்குப் புறத்தில், அர்க் விநாயகர் கோயிலுக்கு வடக்கே லம்போதர விநாயகர் கோயில் இருக்கிறது. லம்போதர விநாயகர் அன்பர்களுக்குச் சக்தியை அருளி, அவர்களது தடைகளை நீக்குகிறார்.

இருப்பிடம்

B 7/206, கேதார் காட் சாலையில் இந்த கோயில் அமைந்துள்ளது. பொதுவாக, அந்தப் பகுதியில் உள்ள மக்களால் இக்கோயில் சிந்தாமணி கணேஷ் கோயில் ஆக அறியப்படுகிறது. மிகப் பெரிய விக்ரஹத்துடன் கூடிய முழுமையான கோயில் இது.

அன்பர்கள் இந்த இடம் வரை ஆட்டோ ரிக்ஷா அல்லது சைக்கிள் ரிக்ஷாவில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் 10.00 மணி வரை மற்றும் மாலை 6.30 மணி முதல் 8.00 மணி வரையும் திறந்திருக்கிறது. இருப்பினும் கம்பிக்கதவுகள் வழியாக நாள் முழுவதும் தரிசனம் செய்யலாம். காலை 8.30 மணிக்கும், மாலை 7.30 மணிக்கும் ஆரத்தி நடைபெறுகிறது. சங்கட ஹர சதுர்த்தி அன்று விசேஷமாக பூஜைகள் நடக்கும். அன்பர்கள் தாங்களே இந்த விநாயகரைப் பூஜை செய்து வழிபடலாம். பல அன்பர்கள் கேதார் கட்டத்தில் குளித்த பிறகு, கணேச ஸஹஸ்ரநாமம் முதலிய ஸ்தோத்ரங்களை பாராயணம் செய்து, இந்த விநாயகரை வழிபடுவது வழக்கம்.

மங்கள விநாயகர்

வடக்குப்புறத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீமங்கள விநாயகர் காசியைத் தீய சக்திகளிடமிருந்து பாதுகாத்து, அன்பர்களுக்கு அருள்புரிகிறார்.

இருப்பிடம்

K 24/34. மங்கள கௌரி கோயில். பால காட் என்ற பகுதியில் அமைந்துள்ளது. அன்பர்கள் பைரோநாத் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அல்லது பால காட்/பஞ்சகங்கா காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச்சென்று அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரையிலும், மாலை 3.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. மாலை வேளைகளில் ஆரத்தி நடைபெறுகிறது. விசேஷ பூஜைகள் நடத்த கோயில் அர்ச்சகரை அணுகவும்.

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீமனோஜ் குமார் பாண்டே என்பவர் கோயிலின் தலைமை அர்ச்சகராவார். அவரது செல் எண். (0)9305645502. மற்றொரு அர்ச்சகர் ஸ்ரீஉமேஷ் குமார் சர்மா. அவரது செல் எண். (0)9450284728.

மணிகர்ணிகா விநாயகர்

ஸ்ரீமணிகர்ணிகா விநாயகர் அன்பர்களின் இடர்கள் அனைத்தையும் நீக்கக் கூடியவர். மணிகர்ணிகா சகலவிதமான இடர்களையும் நீக்கக் கூடியது என்று காசி காண்டத்தில் கூறப்பட்டுள்ளது.

இருப்பிடம்

மணிகர்ணிகா கட்டத்தில், சடுவா பாபா ஆச்ரமத்திற்கு அருகில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து செல்லலாம். அல்லது, மணிகர்ணிகா கட்டம் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்று அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

ஸ்ரீமித்ர விநாயகர்

யம தீர்த்தத்திற்கு வடக்குப் புறத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீமித்ர விநாயகர், அன்பர்களுக்கு வெற்றிகளையும் வளங்களையும் வாரி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழங்குகிறார்.

இருப்பிடம்

7/158, சிந்தியா காட் (புகழ்பெற்ற ஆத்ம வீரேச்வரர் கோயில் உட்புறம்) என்ற இடத்தில் அமைந்துள்ளது. சிந்தியா காட் வரை படகில் சென்று, அங்கிருந்து கோயிலை அடையலாம். அல்லது, சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து சந்துகளின் வழியாக நடந்து சென்று அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் 11.30 மணி வரையிலும், மதியம் 12.30 மணி முதல் இரவு 9.30 மணி வரையிலும் திறந்திருக்கிறது. இரவு 7.00 மணி முதல் 8.30 மணி வரை விசேஷ ஆரத்தி நடைபெறுகிறது. விசேஷ பூஜைகள் நடத்த, கோயிலின் அர்ச்சகரை முன்னரே தொடர்பு கொள்வது நல்லது.

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீ முன் முன் குரு கோயிலின் அர்ச்சகர் ஆவார். விசேஷ பூஜைகள் செய்ய 9792820159 என்ற எண்ணில் அவரை தொடர்பு கொள்ளலாம்.

மோத விநாயகர்

31/12, காசி கர்வட் கோயில், நைபலி கப்ரா என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் என்ற இடம் வரை ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து நடந்து சென்று அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

மோதக ப்ரிய விநாயகர்

த்ரிலோசன் தீர்த்தத்தில், ப்ரணவ விநாயகருக்குத் தெற்குப் பகுதியில் மோதக ப்ரிய விநாயகர் வீற்றிருக்கிறார். இந்த விநாயகரை வழிபடுவதால், அன்பர்கள் வாழ்வில் வெற்றி மேல் வெற்றி கிட்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருப்பிடம்

A - 3/92 ஆதி மஹாதேவ் கோயில், த்ரிலோசன் என்ற இடத்தில் அமைந்துள்ளது. இந்த இடத்தை ப்ரஹ்லாத் காட் சௌராஹா வரை ஆட்டோ அல்லது சைக்கிள் ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று அடைய முடியும். அல்லது, த்ரிலோசன் காட் வரையில் படகில் சென்று, படிகள் ஏறிச் சென்று வழிபடலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை கோயில் திறந்திருக்கிறது. காலை 5.00 மணிக்கு மங்கள ஆரத்தியும், 6.30 மணிக்கு ச்ருங்கரும், 7.00 மணிக்கு ஆரத்தியும் நடைபெறுகிறது. கோயில் இரவு 9.00 மணி வரை திறந்திருக்கிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீகிரீஷ் சந்த் மெஹ்ரோத்ரா கோயிலின் அர்ச்சகராவார்.

முண்ட விநாயகர்

உத்தண்ட் விநாயகருக்கு தென்கிழக்குப் பகுதியில் முண்ட விநாயகர் கோயில் உள்ளது. முண்ட விநாயகரின் உடல் முழுவதும் பூமிக்கு அடியில் உள்ளது. தலைப்பகுதி மட்டுமே வெளியில் தெரிகிறது. இந்த விநாயகர் ஸர்வவல்லமை படைத்தவர்.

இருப்பிடம்

சண்டி கோயிலுக்கு அருகில் உள்ள ஸதர் பஜார் பகுதியில் இந்தக் கோயில் அமைந்துள்ளது. தேவியின் திருவுருவங்களுக்கு அருகில் இந்த விநாயகரின் திருவுருவம் ப்ரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. தலை மட்டுமே வெளியில் தெரியும்படி, மற்ற பகுதிகள் துணியால் மறைக்கப்பட்டுள்ளன.

வழிபாட்டு முறைகள்

காலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை கோயில் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் இக்கோயிலில் வழிபடலாம். இக்கோயில் ஓர் சக்திபீடம் என்பது உள்ளூர்வாசிகளின் நம்பிக்கை.

கோயிலின் அர்ச்சகர்கள்

பண்டித் மங்கள ப்ரஸாத் சௌபே இக்கோயிலின்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அர்ச்சகராவார். சிறப்பு வழிபாடுகள் செய்ய அவரை (0) 9794233442 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம்.

நாகேஷ் விநாயகர்

உத்தண்ட் முண்ட் விநாயகருக்குத் தெற்குப் புறத்தில் ஸ்ரீநாகேஷ் விநாயகர் வீற்றிருக்கிறார். ஸ்ரீநாகேஷ் விநாயகரை வழிபடுவதால், அன்பர்கள் வாழ்வில் வளம் பெருகும்.

இருப்பிடம்

C/K 1/21, படனி தோலா, போசலா காட், வாராணஸி என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து ஸங்கட தேவி கோயில் (ப்ரஸித்தி பெற்ற இடம்) வழியாக இவ்விடத்தை அடையலாம். அல்லது, போசலா காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறி செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 7.00 மணி முதல் 9.00 மணி வரையிலும், மாலை 7.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. இந்த நேரத்திற்குள், அன்பர்கள் தங்கள் விருப்பம் போல் வழிபடலாம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீசஞ்ஜய் மஹாராஜ் கோயிலின் அர்ச்சகராவார். அவரது செல் எண் (0)9307701997.

பாஸ் பாணி விநாயகர்

காசிக்கு வடக்குப் பகுதியில் பாஸ் பாணி விநாயகர் வீற்றிருக்கிறார். இவர் அன்பர்களின் தடைகளை நீக்கி நல்வாழ்வை அருள்பவர்.

கோயிலின் இருப்பிடம்

பாஸ் பாணி விநாயகர் கோயில் ஸதர் பஜாரில் அமைந்துள்ளது. கண்டொன்மெண்ட் பகுதியில், ராடிஸன், ஐடியல் டவர்ஸ், ஹோட்டல் க்ளார்க்ஸ், ஜே.ஹெச்.வி மால் முதலிய பெரிய ஹோட்டல்களைக் கடந்து மேலும் சென்றால், கரியப்ப மார்க் என்ற

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பகுதியை அடையலாம். அங்கு வலதுபுறத்தில் பீஷ்ம சண்டீ தேவி கோயில் என்றொரு பலகை இருக்கும். வலப்புறம் திரும்பாமல், அதே சாலையில் நேரே சென்றால் சாலையின் வலப்புறம் பாஸ் பாணி விநாயகர் கோயில் இருக்கிறது. கோயில் இருப்பதைக் குறிக்கும் கற்பலகை ஒன்றும் அங்கு இருக்கிறது.

இதே கோயிலில் பாஸ் பாணி சக்தி ஸந்நிதியும் அமைந்துள்ளது. அம்பிகையினால் தோற்றுவிக்கப்பட்ட சக்திகளுள் ஒருத்தி பாஸ் பாணி சக்தி என காசி காண்டம் (அத்யாயம் 72) கூறுகிறது. மேலும் விவரங்களுக்கு, அன்பர்கள் த்ரிபுரா பைரவீ பற்றிய குறிப்புகள் உள்ள பகுதியைப் பார்க்கவும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள்முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் தாங்களே சென்று வழிபடலாம்.

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீநான்ஹே சௌபே, ஸ்ரீஸுஜித் குமார் பாண்டே ஆகியோர் கோயில் வளாகத்தில் உள்ளனர். விசேஷ பூஜைகள் செய்ய அவர்களை அணுகலாம். அவர்களது செல் எண் (0) 9451022548

பஞ்சாஸ்ய விநாயகர்

கூஷ்மாண்ட விநாயகருக்குக் கிழக்குப் பகுதியில் பஞ்சாஸ்ய விநாயகர் வீற்றிருக்கிறார். காசி காண்டம் இவரை பஞ்சமுக விநாயகர் என்று விவரிக்கிறது. இந்த விநாயகர் மேற்குப் புறத்திலிருந்து காசியைப் பாதுகாத்து வருகிறார்.

இருப்பிடம்

C - 21/40, பிசாச்மோசன் என்ற இடத்தில் அமைந்திருக்கிறது.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

கோயிலின் அர்ச்சகர்

விசேஷ பூஜைகள் செய்ய பிசாச்மோசன் தீர்த்தத்தின் அருகிலுள்ள ஸ்ரீகமலேஷ் திவாரி என்பரை (0)9918989066 என்ற

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எண்ணில் அணுகலாம்.

பிச்சண்டில் விநாயகர்

ஸ்ரீவரத விநாயகருக்கு வடகிழக்கில் ஸ்ரீபிச்சண்டில் விநாயகர் வீற்றிருக்கிறார். இவர் இரவும், பகலும் காசியைப் பாதுகாத்து, அன்பர்களின் வாழ்வில் வெற்றிகளை அருள்கிறார்.

இருப்பிடம்

A - 10/80, வட வ்ருக்ஷம், ப்ரஹ்லாத் கட்டம் என்ற இடத்தில் அமைந்திருக்கிறது. சௌராஹா வழியாக ப்ரஹ்லாத் காட் வரை அன்பர்கள் ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து செல்லலாம். அல்லது படகில் சென்று, படிகள் ஏறிச்சென்று தரிசிக்கலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

ப்ரமோத விநாயகர்

இருப்பிடம்

C/K31/16 நைபலி கப்ரா என்ற இடத்தில் அமைந்துள்ளது. காசி கர்வட் கோயிலுக்கு அருகில் இரண்டு லஸ்ஸி கடைகள் இருக்கின்றன. அவற்றில் ஒரு கடையினுள்ளே ஸ்ரீப்ரமோத விநாயகர் வீற்றிருக்கிறார். அன்பர்கள் சௌக் என்ற இடம் வரை ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து நடந்து சென்று அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

ப்ரணவ விநாயகர்

ராஜபுத்ர விநாயகருக்கு சிறிது அருகாமையில் ப்ரணவ விநாயகர் வீற்றிருக்கிறார். ப்ரணவ விநாயகரை நாள்தோறும் வழிபடும் அன்பர்களுக்கு சுவர்க்கத்தில் இடமுண்டு.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருப்பிடம்

த்ரிலோசன் காட் படிகளில் ஹிரண்ய கர்பேச்வரர் கோயிலில் ப்ரணவ விநாயகர் வீற்றிருக்கிறார். இந்த இடத்தைப் படகில் அடைவது சுலபம். சாலை வழியாகச் சென்றால், மச்சோதரி என்ற இடத்தைக் கடந்து பிர்லா மருத்துவமனை வரை சென்று, அங்கிருந்து வலதுபுறம் திரும்பி, நடந்து செல்ல வேண்டும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரையிலும், பின் 4.00 மணி முதல் 9.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது.

கோயிலின் அர்ச்சகர்கள்

கோயிலின் அர்ச்சகர் ஸ்ரீசந்த்ர கேசவ ஓஜா (சானியா மஹராஜ்) கோயிலுக்கு அருகில் வசிக்கிறார். விசேஷ பூஜைகள் நடத்த, (0)9026940818 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

ராஜபுத்ர விநாயகர்

கர்வ விநாயகருக்கு வடகிழக்குப் பகுதியில் ராஜபுத்ர விநாயகர் கோயில் அமைந்துள்ளது. ராஜபுத்ர விநாயகரை வழிபடுவதால், தனது ராஜ்ஜியத்தை இழந்த மன்னனும் மீண்டும் அரசாட்சி பெறுவான். இந்தக் காலத்தில், வாழ்வில் உயர்பதவி அடைய முயலும் அன்பர்களுக்கு இது பொருந்தும்.

இருப்பிடம்

ராஜபுத்ர விநாயகர் கோயில் A - 37/48 ராஜ்காட் சாலையில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை ரிக்ஷா, சைக்கிள் ரிக்ஷா அல்லது காரில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் 7.00 மணி வரையிலும், மாலை 7.00 மணி முதல் 8.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது. அன்பர்கள் நாள் முழுவதும் கம்பிக்கதவுகள் வழியாக ஸ்ரீராஜபுத்ர விநாயகரை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழிபடலாம்.

சால் கண்ட் விநாயகர்

பீம் சண்ட் விநாயகருக்கு வடக்கே வீற்றிருக்கும் சால் கண்ட் விநாயகர் காசியை ரக்ஷிக்கிறார். இந்த விநாயகரை வழிபடுவதால், வாழ்வில் மகிழ்ச்சி பொங்கும்.

இருப்பிடம்

வாராணசியின் மேற்கு எல்லையில் அமைந்துள்ள மாண்டுவாதி என்ற குளத்திற்கு அருகில் அமைந்துள்ளது.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள்முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் தாங்களே சென்று வழிபடலாம்.

ச்ருஷ்டி விநாயகர்

ஸ்ரீச்ருஷ்டி விநாயகர் தென்திசையில் வீற்றிருந்து அருள்புரிகிறார்.

இருப்பிடம்

D - 8/3, காலிகா கல்லி என்ற இடத்தில் அமைந்திருக்கிறது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம். சுக்ரேச்வரருக்கு நேர் எதிரே சுவற்றில் ஓர் சிறிய விக்ரஹ வடிவில் ஸ்ரீச்ருஷ்டி விநாயகர் வீற்றிருக்கிறார்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

ஸித்தி விநாயகர்

காசியில் உள்ள பக்தர்களைக் காப்பதற்காக ஸ்ரீஸித்தி விநாயகர், யம தீர்த்தத்திற்கு அருகில், கிழக்கு நோக்கி வீற்றிருக்கிறார். ஸித்தி விநாயகர் அன்பர்கள் வேண்டுவதை அருள்பவர்.

இருப்பிடம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸித்தி விநாயகர் கோயில் மணிகர்ணிகா குண்டத்திற்கு அருகிலுள்ள படிக்கட்டுக்களில் 9/1 என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்றுவிட்டு, அங்கிருந்து நடந்து இந்தக் கோயிலுக்குச் செல்லலாம். அல்லது, மணிகர்ணிகா காட் வரை படகில் சென்று, படிகள் ஏறி, இவ்விடத்தை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள்முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் தாங்களே சென்று வழிபடலாம்.

சிங் துண்ட் விநாயகர்

ஏக தந்த விநாயகருக்கு வடக்கே ஸ்ரீசிங் துண்ட் விநாயகர் வீற்றிருக்கிறார். தன்னை வழிபடும் அன்பர்கள் தெரிந்தோ தெரியாமலோ செய்த அனைத்து பாவங்களையும் அழிக்கக் கூடியவர் ஸ்ரீசிங் துண்ட் விநாயகர்.

இருப்பிடம்

D - 33/66, காலிஸ்புரா, தசாச்வமேத் அருகில் என்ற முகவரியில் அமைந்துள்ளது.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

ஸ்தூல் தண்ட் விநாயகர்

கங்கைக்கரையில், ஸ்ரீஅபய விநாயகருக்கு வடக்கே ஸ்ரீஸ்தூல் தண்ட் விநாயகர் வீற்றிருக்கிறார். இந்த விநாயகர், அன்பர்களுக்கு ஸித்தியை அருள்கிறார்.

இருப்பிடம்

D - 16/34. மன்மந்திர் (சோமேச்வர் அருகில்) என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் தசாச்வமேத் வரை ரிக்ஷாவில் சென்று, பின் அங்கிருந்து நடந்து செல்லலாம். அல்லது, மன்மந்திர் கட்டம் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் செல்லலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

ஸுமுக விநாயகர்

C/K 35/7, மோடி கடியா வீடு என்ற இடத்தில் அமைந்துள்ளது. காசி கர்வட் கோயிலிலிருந்து ஸரஸ்வதி படக் செல்லும் வழியில் இடதுபுறத்தில் மா ராமா சில்க் ஃபாக்டரி என்றோர் கடை உள்ளது. இந்தக் கடைக்கு அருகிலுள்ள வீட்டில் ஸ்ரீதுர்முக விநாயகர் வீற்றிருக்கிறார். இன்னும் சிறிது தூரம் சென்றால், ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவிற்கு முன்னர் வலதுபுறத்தில் ஓர் சிறிய சந்து இருக்கிறது. அதனுள் வலது புறமுள்ள ஓர் வீட்டில் ஸ்ரீஸுமுக விநாயகர் வீற்றிருக்கிறார். அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

த்ரிமுக் விநாயகர்

சால் கண்ட விநாயகருக்கு வடக்கே வீற்றிருக்கும் த்ரிமுக் விநாயகர், அனைத்துவிதமான பயங்களையும் நாசம் செய்யக் கூடியவர். த்ரிமுக் விநாயகரின் முதல் முகம் குரங்கு வடிவிலும், இரண்டாவது முகம் சிங்க வடிவிலும், மூன்றாவது முகம் யானை வடிவிலும் அமைந்துள்ளது.

இருப்பிடம்

D - 50/94 சிக்ரா, த்ரிபுராந்தகேச்வர் என்ற இடத்தில் அமைந்துள்ளது. இவ்விடத்திற்குச் செல்லும் வழியறிய, த்ரிபுராந்தகேச்வரர் பற்றிய தகவல்கள் உள்ள பக்கத்தைப் பார்க்கவும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உத்தண்ட் முண்ட் விநாயகர்

மோதக ப்ரிய விநாயகருக்குத் தெற்கில், பில்பில தீர்த்தத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீஉத்தண்ட் முண்ட் விநாயகர் அன்பர்களுக்கு அனைத்துவிதமான வளங்களையும் அருள்கிறார். காசி காண்டத்தில் மிகவும் முக்கியமாகச் சொல்லப்படும் பில்பில தீர்த்தம் தற்போது ஒரு கிணறு வடிவில் உள்ளது.

இருப்பிடம்

A - 2/80, த்ரிலோசன் கோயில் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து சிறிது தூரம் நடந்து சென்று ஸந்நிதியை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 11.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலை 5.30 மணிக்கு மங்கள ஆரத்தியும், இரவு 11.00 மணிக்கு சயன ஆரத்தியும் நடைபெறுகின்றன.

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீ லல்லு பாண்டே கோயிலின் அர்ச்சகர். விசேஷ பூஜைகள் செய்ய 9307967228 என்ற எண்ணில் அவரை தொடர்பு கொள்ளலாம்.

உத்தண்ட் விநாயகர்

தேஹ்லி விநாயகர் கோயிலின் மேற்குப்பகுதியில் உத்தண்ட் விநாயகர் கோயில் இருக்கிறது. இந்த விநாயகர் அன்பர்களின் வாழ்வில் தோன்றும் மிகப் பெரிய தடைகளையும் தகர்த்தெரியக் கூடிய ஆற்றல் படைத்தவர்.

இருப்பிடம்

வாரணாஸியின் மையப்பகுதியிலிருந்து இருபது கிலோமீட்டர் தொலைவில் உள்ள ராமேச்வருக்கு அருகிலுள்ள ஓர் க்ராமத்தில் உத்தண்ட் விநாயகர் கோயில் அமைந்துள்ளது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள்முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் தாங்களே சென்று வழிபடலாம்.

வக்ரதுண்ட விநாயகர்

காசிக்கு வடக்குப்புறத்தில் ஸ்ரீவக்ரதுண்ட விநாயகர் வீற்றிருக்கிறார். அன்பர்களைப் பாவங்களிலிருந்து விடுவித்து, மகிழ்ச்சியாக வாழ வரமளிப்பவர் ஸ்ரீவக்ரதுண்ட விநாயகர்.

இருப்பிடம்

K - 58/101, லோஹாட்டியா பாரா கணேஷ்ஜி என்ற இடத்தில் அமைந்துள்ளது. இந்த விநாயகருக்குப் பாரா கணேஷ் என்றும் ஒரு பெயர் உண்டு. அன்பர்கள் லோஹாட்டியா வரை ஆட்டோ ரிக்ஷா அல்லது சைக்கிள் ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து நடந்துசென்று கோயிலை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

இது தனியாக உள்ள, பரவலாக அன்பர்களால் வழிபடப்படுகின்ற ஒரு கோயில். காலை 4.45 மணி முதல் இரவு 10.30 மணி வரை கோயில் திறந்திருக்கிறது. அதிகாலை 4.45 மணிக்கு மங்கள ஆரத்தியும், காலை 10.30 மணிக்கு போக் வழிபாடும், இரவு 10.30 மணிக்கு சயன ஆரத்தியும் நடைபெறுகின்றன. புதன்கிழமைகளில் இரவு 11.30 மணிக்கு விசேஷ ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீஸுபாஷ் சந்த்ர திவாரி கோயிலின் அர்ச்சகர்களில் ஒருவராவார். விசேஷ வழிபாடுகள் நடத்த (0)9415446300 என்ற எண்ணில் அவரைத் தொடர்புகொள்ளலாம்.

வரத விநாயகர்

ராஜபுத்ர விநாயகருக்கு வடகிழக்கு திசையில் ஸ்ரீவரத விநாயகர் வீற்றிருக்கிறார். அன்பர்களுக்கு வரங்களை அருள்பவர் ஸ்ரீவரத விநாயகர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



கேசவ ஆதித்யர்

காகோல்க் ஆதித்யர்

லோலார்க் ஆதித்யர்

மயூக் ஆதித்யர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அமரேஸ்வரர்

ஆத்ம வீரேஸ்வரர்

பால்மீகேஸ்வரர்

ப்ருஹஸ்பதீஸ்வரர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருப்பிடம்

A - 13/19, நயா மஹாதேவ் காளி மந்திர், ப்ரஹ்லாத் காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் ப்ரஹ்லாத் காட் சௌராஹா வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

விக்ன ராஜ விநாயகர்

ஸித்தியை அடைய விரும்புவோர் ஸ்ரீவிக்ன ராஜ விநாயகரை வழிபடுதல் நலம். ஸித்தி என்றால் அபரிமிதமான ஆற்றல்கள், வெற்றி அல்லது வளம் என்று பொருள் கொள்ளலாம். வெற்றி அல்லது வளம் என்றே பொருள் கொள்தல் நலம்.

இருப்பிடம்

J - 12/32, சித்ரகூட் தலப் என்ற இடத்தில் அமைந்துள்ளது. ராமலீலா ஊர்வலம் புறப்படும் இடமான ராமலீலா மைதானம் என்று சொன்னால் எளிதில் புரியும்.

அன்பர்கள் ராம் கடோரா என்ற இடத்திற்குச் சென்று, அங்கிருந்து தூப் சண்டி கோயிலுக்கு (தூமாவதி தேவி கோயில்) செல்ல வேண்டும். அங்கிருந்து ராம் லீலா மைதானம் அருகில் இருக்கிறது.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் இரவு 11.30 மணி வரையிலும், பின் மாலை 4.00 மணி முதல் 9.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது. வழிபடும் இடம் ஒரு தனியாருக்குச் சொந்தமான வீட்டினுள் இருக்கிறது. நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை.

விகட த்வஜ விநாயகர்

பாஸ்பாணி விநாயகருக்குத் தெற்குப்பகுதியில் விகட த்வஜ விநாயகர் வீற்றிருக்கிறார். (காசி காண்டம் விகட தண்ட விநாயகர் என்று குறிப்பிடுகிறது). இவ்விநாயகரை வழிபடுவதால் அன்பர்கள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வாழ்வில் உயர்நிலை அடைவது உறுதி.

இருப்பிடம்

தூமாவதி தேவி கோயிலில் தூப் சண்டி என்ற இடத்தில் இந்த விநாயகர் ஸந்நிதி அமைந்துள்ளது. தூமாவதி தேவிக்குப் பின்னால், ஹனுமார் விக்ரஹத்திற்கு அருகில், விகட த்வஜ விநாயகர் வீற்றிருக்கிறார்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் மதியம் 1.30 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீமுன்னா லால் கோஸ்வாமி கோயிலின் அர்ச்சகராவார். சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்த, (0)9616884959 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீயக்ஷ விநாயகர்

வடகிழக்கு திசையில் வீற்றிருக்கும் ஸ்ரீயக்ஷ விநாயகர், அன்பர்களின் வாழ்வில் தோன்றும் தடைகளை நீக்கி, வாழ்வை எளிதாக்குகிறார்.

இருப்பிடம்

C/K37/29, ருத்ர ப்ராயக், கோட்வால்புரா என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்துசென்று இந்த இடத்தை அடையலாம். ஸந்நிதி ஓர் வீட்டினுள் அமைந்துள்ளது. வழிபடுவதால், வீட்டிலுள்ளோருக்கு அசௌகர்யங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீமயூக் ஆதித்யர்

யூ ட்யூப் (YOU TUBE) காணொளிகள்



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காசியில் உள்ள ஆதித்யர் கோயில்கள்

சிவபெருமான் மந்தராசலத்தில் வீற்றிருந்தார். திவோதாஸ் என்ற பண்பும், பக்தியும் நிறைந்த மன்னன் ஒருவன் காசியை ஆண்டு வந்தான். அவனுடைய அரசாட்சியில் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருந்தனர்; நாட்டில் வளம் ஓங்கியிருந்தது. அரசனுக்கு ப்ரஹ்மதேவனுடன் ஓர் உடன்படிக்கை இருந்தது : அவன் அரசாளும் காலம் வரை தேவர்களும் மற்றவர்களும் காசியிலிருந்து விலகியிருக்க வேண்டும்; காசிக்கு எந்த தொந்தரவும் தரக்கூடாது என்பதே அது.

ப்ரஹ்மதேவன் இதற்கு ஒப்புக்கொண்டார். ஆனால் ஒரு நிபந்தனை : அரசன் திவோதாஸ் தன்னை மிகச் சிறந்த ஆட்சியாளனாக நிரூபிக்க வேண்டும்; காசியில் வசிப்பவர்களும், காசிக்கு வருபவர்களும் தங்களது ஆன்மிக ஸாதனைகளைச் சிறந்தமுறையில் மேற்கொள்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதே அது. அரசன் இந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டு சிறந்தமுறையில் அரசாட்சி புரிந்துவந்தான்.

சிவபெருமான் வெகு காலமாக காசிக்கு வராமல் இருந்தார். திருவிளையாடலாக அரசன் திவோதாஸை குற்றம் இழைக்கும்படி செய்தார். ஏதேனும் இடைஞ்சல் ஏற்படுத்துவதற்காக அறுபத்து நான்கு யோகினிகளை அங்கு அனுப்பினார். அவர்கள் ஸ்வர்க்கபுரியாகக் காட்சியளித்த காசி மாநகரின் அழகிலும், அமைதியான சூழ்நிலையிலும் கவரப்பட்டு, அங்கேயே தங்கிவிட முடிவுசெய்து அங்கேயே இருந்துவிட்டனர்.

யோகினிகள் திரும்பி வராததை அறிந்த சிவபெருமான், காசியில் ஏதேனும் கலகத்தை ஏற்படுத்துவதற்காக ஸூர்ய பகவானை அங்கு அனுப்பினார். ஸூர்ய பகவான் காசிக்கு வந்து, அங்கு ஜோதிடராக, பண்டிதராக, மத போதகராக, வணிகராக, ப்ரஹ்மணராகப் பல்வேறு வடிவங்கள் எடுத்துக் கொண்டார். அவரால் காசியிலோ, அரசன் திவோதாஸின் அரசாட்சியிலோ எந்தவிதமான குறைபாட்டையும் காண முடியவில்லை. ஸூர்ய தேவனும் காசி மாநகரின் அழகினால் கவரப்பட்டார். சிவபெருமான் தனக்கு இட்ட பணியை முடிக்காமல் மந்தராசலத்திற்குச் சென்றால், சிவபெருமான் கோபித்துக் கொள்வார் என்றும் அவர் நினைத்தார்.

கடைசியில், ஸூர்ய தேவன் காசியிலேயே தங்கிவிட முடிவுசெய்தார். அவர் பின்வருமாறு தமக்குள் சொல்லிக் கொண்டார்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

– சிவபெருமானுக்கு கீழ்ப்படியாமல் இருப்பது பாவமாகும். ஆனால், காசியில் இருந்து ஆன்மிக ஸாதனைகளைப் பழகுவதன் மூலம் அந்தப் பாவங்களிலிருந்து விடுபட முடியும். இவ்வாறு கருதிய ஸூர்ய பகவான், பன்னிரெண்டு ரூபங்கள் எடுத்துக் கொண்டு, காசியின் பல்வேறு இடங்களில் தம்மை இருத்திக் கொண்டார்.

அருண ஆதித்யர்

கந்தபெருமான் அகஸ்த்ய முனிவரிடம் வினதா என்பவளுக்கு நேர்ந்த சோதனைகளையும், முன்னொரு காலத்தில் அவள் அடிமையாக இருந்ததையும் கூறிக் கொண்டிருந்தார். வினதா மிகுந்த பக்தியுடன் இருந்தும், அவளுக்கு ஏன் இத்தனை துன்பங்கள் நேர்ந்தன என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ள அகஸ்த்ய முனிவர் ஆர்வமாக இருந்தார்.

கந்தபெருமான் விவரிக்கத் தொடங்கினார் : காச்யப முனிவருக்கு இருந்த பல மனைவியருள் இருவர் கத்ரு மற்றும் வினதா ஆவர். கத்ருவிற்கு நூறு பாம்புகள் பிறந்தன. வினதைக்கு ஓர் ஆந்தை, கருடன் மற்றும் ஒரு பாம்பு ஆகிய மூன்று குழந்தைகள் பிறந்தன. ஆந்தை பிறந்ததும், அது பறவைகளுக்கு அரசனாக இருந்தது, ஆனால் மற்ற பறவைகள் அதனைத் தலைவனாக ஏற்க மறுத்து, அவமதித்தன. இன்று வரை பறவைகளுக்குத் தலைவன் இல்லை.

வினதாவிற்கு ஆந்தை பிறந்த பிறகு, மற்ற இரண்டு குழந்தைகளும் முட்டை வடிவிலேயே இருந்தன. முட்டைகள் குஞ்சுபொறிக்க வினதா காத்திருந்தாள். ஆனால் அவை முட்டைகளாகவே இருந்தன. அவளுடைய முதல் குழந்தை உதாஸீனப்படுத்தப்படுவதை அவளால் தாங்க முடியவில்லை. ஆகையால், மகன் பிறக்க வேண்டும் என்ற ஆவலில் அவள் ஓர் முட்டையை உடைத்து, குஞ்சை வெளிவரச் செய்ய முயன்றாள். முட்டைக்குள் அரைகுறையாக வளர்ந்த நிலையில் (கால்கள் சரிவர வளராத நிலையில்) ஓர் குழந்தை இருந்தது.

இந்த குறைபிரசவ குழந்தையே அருணன் என்று அழைக்கப்படுகிறார். (காசி காண்டம், அத்யாயம் 51). தன்னுடைய தாயின் பொறுமையில்லாத தன்மையால் தாம் குறையுடைய அங்கங்களுடன் விளங்குவதைக் கண்டு அவர் வெகுண்டார். அருணன் தன்னுடைய தாய் வினதா, கத்ருவிற்கு அடிமையாகப் போகட்டும் என்று சாபமிட்டார். தன்னிடம் கெஞ்சிய அன்னையிடம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இரக்கம் கொண்டார். அடுத்த முட்டையை உடைப்பதில் அவசரம் வேண்டாம் என்று அன்னைக்கு அறிவுறுத்தினார். அந்தக் குழந்தையே அவளை அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கும் என்றும் கூறினார்.

இவ்வாறு கூறிய அருணன், தன்னுடைய அங்கக் குறைபாட்டை நீக்கிக்கொள்ள விழைந்தார். அவர் காசிக்கு வந்து ஸூர்ய பகவானைக் குறித்துத் தவமியற்றினார். அவருடைய தவத்தினால் மனம் மகிழ்ந்த ஸூர்ய பகவான், தன்னுடைய சாரதியாக அருணனை ஏற்றுக் கொண்டார். தம்மை அருண ஆதித்யர் வடிவில் வழிபடும் அன்பர்களுக்குத் துயரம் என்றால் என்னவென்றே தெரியாது, வறுமை அவர்களை விட்டு வெகுதொலைவில் இருக்கும் என்றும் ஸூர்ய நாராயணர் கூறியருளினார்.

காசி காண்டத்தின்படி, அருண ஆதித்யரை வழிபடும் அன்பர்கள் நோய்வாய்ப்பட மாட்டார்கள். அவர்கள் வாழ்வில் இடர்களே தோன்றாது. அவர்களுக்குக் கஷ்டம் என்றால் என்னவென்றே தெரியாது. (இன்பமாக வாழ்வார்கள் என்பது கருத்து).

இருப்பிடம்

ஏ 2/80, த்ரிலோசனேச்வரர் கோயில், த்ரிலோசன் காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. மச்சோதரியைக் கடந்து பிர்லா ஹாஸ்பிடல் வரை ரிக்ஷா அல்லது ஆட்டோ ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து செல்லலாம். அல்லது த்ரிலோசன் காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.30 மணி முதல் பிற்பகல் 12.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 11.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலை 5.30 மணிக்கு மங்கள ஆரத்தியும், இரவு 11.00 மணிக்கு சயன ஆரத்தியும் நடைபெறுகின்றன. விசேஷ பூஜைகள் செய்ய அர்ச்சகரை முன்பே தொடர்பு கொள்ளுதல் நலம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீ லல்லு பாண்டே கோயிலின் அர்ச்சகர். விசேஷ பூஜைகள் செய்ய 9307967228 என்ற எண்ணில் அவரை தொடர்பு கொள்ளலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

த்ரௌபத் ஆதித்யர்

பாண்டவர்கள் வனவாசம் இருந்தபோது, தனது பதிகளின் நிலையை எண்ணி, த்ரௌபதி மிகவும் வருந்தினாள். அவள் காசிக்கு வந்து ஸுர்ய பகவானிடம் உள்ளமுருகி ப்ரார்த்தனை செய்தாள். அவளது வேண்டுதலுக்கு இரங்கிய ஸுர்ய பகவான் அவளுக்குக் காட்சி கொடுத்தார். அவளுக்கு அள்ள அள்ள குறையாத அக்ஷய பாத்திரத்தைக் கொடுத்தார். அதைக் கொண்டு எத்தனை விருந்தினர்களுக்கு வேண்டுமானாலும் உணவிட முடியும். அனைவருக்கும் உணவிட்ட பிறகு, அவள் கடைசியாகத்தான் உணவு உட்கொள்ள வேண்டும்.

தமக்கு சிவபெருமான் அளித்த வரத்தைப் பற்றியும் ஸுர்ய பகவான் த்ரௌபதியிடம் கூறினார். விச்வேசரிடம் வழிபட காசிக்கு வரும் எவரும் முதலில் ஸுர்ய பகவானை வழிபட்டால் அவர்களுக்குத் துயரங்கள் எல்லாம் விலகிவிடும் என்பதே அது. தம்மிடம் உண்மையாக பக்தி செலுத்தி வழிபடும் அன்பர்கள் பசியினால் துன்புறமாட்டார்கள். (காசி கண்டம், அத்யாயம் 49)

இங்கு வீற்றிருக்கும் ஆதித்யருக்கு த்ரௌபதி ஆதித்யர் என்று பெயர்.

இருப்பிடம்

C/K35/21, அக்ஷய வடம், விச்வேச்வரர் கோயில் அருகில் என்ற முகவரியில் அமைந்துள்ளது.

காசி கண்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நகுலேச்வரரும் இங்கு வீற்றிருக்கிறார்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் தாங்களே வழிபடலாம்.

கங்கா ஆதித்யர்

புனிதமான கங்கை நதியை வழிபடுவதற்கு ஒரு குறிப்பிட்ட இடத்தை ஸுர்ய பகவான் தேர்ந்தெடுத்ததாகக் கூறப்படுகிறது.

ஸுர்ய பகவான் இன்றும் கூட அந்த இடத்தில் இருந்துகொண்டு, கங்கையைத் துதித்துக் கொண்டும், பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டும் இருக்கிறார் என்று கூறப்படுகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கங்கையின் படித்துறையில் (கட்டத்தில்) உள்ள ஸூர்ய பகவானுக்கு கங்கா ஆதித்யர் என்று பெயர்.

கங்கா ஆதித்யரை வழிபடும் அன்பர்கள் எவ்வித துயரத்தையும் அடைய மாட்டார்கள். அவர்கள் ஒருவராலும் ஏமாற்றப்பட மாட்டார்கள். (காசி காண்டம், அத்யாயம் 51)

இருப்பிடம்

1/68, நேபாளி மந்திருக்குக் கீழ், லலிதா காட் என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் தசாச்வமேத் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து செல்லலாம். இந்த இடத்தை அடைய சந்துகள் வழியாக நடப்பதை விட, கட்டங்கள் வழியாக (கரை வழியாக) நடப்பது எளிது. இதற்கு அருகிலுள்ள இடம் டெட்ஸிகா புல் என்ற இடமாகும். நேபாளி பசுபதிநாத் கோயிலுக்கு கீழே கங்கா ஆதித்யரை தரிசிக்கலாம்.

வழிபாட்டு முறைகள்

அன்பர்கள் நாள் முழுவதும் எப்பொழுது வேண்டுமானாலும் சென்று வழிபடலாம்.

கேசவ ஆதித்யர்

ஒருமுறை ஸூர்ய பகவான் ஆகாயத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தபோது, ஆதிகேசவர் (மஹாவிஷ்ணு) ஒரு சிவலிங்கத்தைப் பூஜித்துக் கொண்டிருந்ததைப் பார்த்தார். பூமிக்கு வந்த ஆதித்யர், ஆதிகேசவரின் பூஜை முடியும்வரை காத்திருந்து, பின் ஆர்வத்துடன் ஒரு கேள்வியைக் கேட்டார்.

உலகம் முழுவதும் மஹாவிஷ்ணுவை அந்தராத்மாவாக வழிபடும்போது, மஹாவிஷ்ணு ஏன் சிவபெருமானை வழிபட வேண்டும் என்பதே ஸூர்ய பகவானின் கேள்வி. காசி க்ஷேத்திரத்தில் சிவபெருமானே முழுமுதற்கடவுள், அவரே வணங்கத்தக்கவர் என்று பதிலளித்தார் மஹாவிஷ்ணு.

காசியில் செய்யப்படும் லிங்க பூஜையின் சிறப்பை விவரித்து, சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்து, அந்த தீர்த்தத்தைப் பருகுபவன் அனைத்து புனித தீர்த்தங்களிலும் நீராடிய பலனைப் பெறுகிறான் என்றும் மஹாவிஷ்ணு கூறியிருக்கிறார். காசியில் சிவபெருமானை லிங்க வடிவில் வழிபடும்படி ஸூர்ய பகவானுக்கு அறிவுறுத்தினார் மஹாவிஷ்ணு.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இந்தப் புனிதமான ஞானத்தை அருளிய ஆதிகேசவரைத் தம் குருவாகப் பாவித்த ஸுர்ய ஆதித்யர், இவ்விடத்தில் கேசவ ஆதித்யர் என்று அழைக்கப்படுகிறார்.

காசி காண்டத்தின்படி, பாதோதக தீர்த்தத்தில் (கிணறு) நீராடி கேசவ ஆதித்யரை வழிபடுபவர்கள் அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுபடுவர். மாக மாதம் (ஜனவரி 21 - பிப்ரவரி 20) வளர்பிறை அல்லது தேய்பிறை ஸப்தமி அன்று இங்கு நீராடுவது சிறப்பு. அதிலும் ஞாயிற்றுக்கிழமையும் அதனோடு சேர்ந்தால் மேலும் சிறப்பு. அந்த நாட்களில் பாதோதக தீர்த்தத்தில் நீராடி, கேசவ ஆதித்யரை வழிபட வேண்டும்.

இருப்பிடம்

ஏ 37/51, ஆதி கேசவர் கோயில், ராஜ்காட் கோட்டை என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை கார், ரிக்ஷா அல்லது ஆட்டோ ரிக்ஷாவில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை, மாலை 4.00 மணி முதல் 10.00 மணி வரை கோயில் திறந்திருக்கிறது. கோயில் திறந்திருக்கும் நேரம் மாற்றத்திற்கு உட்பட்டது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீ சி.பி.த்ரிபாதி கோயிலின் பொறுப்பாளராக இருக்கிறார். பல தலைமுறைகளாக அவரது குடும்பத்தினரே கோயில் பொறுப்பில் இருந்து வருகின்றனர். விசேஷ பூஜைகள் செய்ய (0)9305177440 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

காகோல்க் ஆதித்யர்

காச்யப முனிவருக்கு இருந்த பல மனைவியருள் இருவர் கத்ரு மற்றும் வினதா ஆவர். கத்ருவிற்குப் பாம்புகள் குழந்தைகளாகப் பிறந்தன. வினதா கருடன் என்ற பெரிய பறவையைப் பெற்றெடுத்தாள்.

இரு சகோதரிகளும் விளையாட்டில் ஈடுபாடு உடையவர்களாக இருந்தனர். கத்ரு வஞ்சனை மிகுந்தவள், வினதா அப்பாவியாக இருந்தாள். ஒருமுறை தீய எண்ணத்துடன் கத்ரு வினதாவைப் புதிர் போட்டி ஒன்றில் விளையாட அழைத்தாள். விளையாட்டில் தோற்பவர் ஜெயிப்பவருக்கு அடிமையாக இருக்க வேண்டும் என்பதே நிபந்தனை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வினதா ஒத்துக்கொண்டாள். ஸூர்ய பகவானின் தேரை இழுத்துச் செல்லும் குதிரைகளுள் ஒன்றாகிய உச்சைச்ரவஸ் என்ற குதிரையின் நிறம் என்ன என்பதே போட்டிக்கான கேள்வி. அதன் நிறம் வெள்ளை என்பது உலகறிந்த விஷயம். வினதாவும் சரியான விடையைக் கூறிவிட்டாள்.

ஆனால் கத்ரு மனதில் வேறொரு திட்டம் வைத்திருந்தாள். அவளது தூண்டுதலின் பேரில், அவளுடைய குழந்தைகள் (பாம்புகள்) உச்சைச்ரவஸ் என்ற குதிரையின் வாலில் சுற்றிக் கொண்டு விஷத்தைக் கக்கத் தொடங்கினர். அதனால் குதிரையின் நிறம் சாம்பல் கலந்த கருப்பாக மாறிவிட்டது. வினதா தோற்றுவிட்டதால், கத்ருவிற்கும் அவளுடைய மகன்களுக்கும் அடிமையாக இருக்க நேர்ந்தது. அவர்களால் மிகவும் துன்புறுத்தப்பட்ட வினதாவின் நிலை கண்டு, அவளது மகனான கருடன் வருந்தினார்.

கருடன், கத்ருவின் மகன்களிடம் தன்னுடைய தாயை விடுவித்துவிடும்படி வேண்டினார். அமிர்தத்தைக் கொண்டு வந்தால், தாயை விடுவிப்பதாக அவர்கள் கூறினர். இது மிகக் கடினமான வேலை என்பது கருடனுக்குத் தெரியும். ஏனென்றால் தேவர்கள் அமிர்தத்தைக் கண்ணும் கருத்துமாகக் காத்து வந்தனர். ஆனால் பொறுப்புணர்வு மிக்க மகனாக தேவலோகத்திற்குக் கிளம்பினார். இடையே அவர் மஹாவிஷ்ணுவிடம் சண்டை போட நேர்ந்தது. கருடன் தம் தாய் மீது வைத்திருந்த பக்தியைக் கண்டு மனம் இரங்கிய மஹாவிஷ்ணு அவரைத் தம்முடைய வாஹனமாக ஏற்றுக் கொண்டார்.

கருடன் தனது தாயை விடுவிப்பதற்காக அமிர்தத்தைப் பாம்புகளிடம் எடுத்துச் செல்ல அனுமதி அளித்த மஹாவிஷ்ணு, அவர்கள் அமிர்தத்தைக் குடித்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் எச்சரித்தார். அமிர்தத்துடன் கருடன் பாம்புக் குழந்தைகளிடம் சென்றார். ஒப்பந்தப்படி, வினதாவை விடுவித்தனர். அமிர்தம் மிகவும் புனிதமானது. எனவே அதனை அருந்தும் முன்னர் நீராடி தூய்மை பெறுவது அவசியம் என்று கருடன் கூறினார். அதன்படி, அமிர்த கலசத்தை ஒரு தர்பாஸனத்தின் மீது வைத்துவிட்டு, பாம்புகள் நீராடச் சென்றன. அமிர்தம் பாம்புகளிடம் இருப்பது முறையல்ல என்பதால் அவர்கள் இல்லாத நேரத்தில் மஹாவிஷ்ணு வந்து அமிர்தத்தை எடுத்துச் சென்றுவிட்டார்.

நீராடிவிட்டுத் திரும்பி வந்த பாம்புகள் அமிர்த கலசத்தைக் காணாமல் திகைத்தன. ஒரு சொட்டு அமிர்தமாவது கிடைக்கட்டும் என்ற எண்ணத்தில் ஆஸனத்தை நக்கின. கூர்மையாக இருந்த தர்ப்பை அவற்றின் நாக்கைக் கிழித்துவிட்டது. தமக்கு உரிமையில்லாததைப் பெற

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நினைத்ததால் இன்று வரை பாம்புகளின் நாக்கு இருகூறாகப் பிளந்தே காணப்படுகிறது. இன்றும்கூட, நமக்கு உரிமையானதை அடையவே நாம் ஆசைப்பட வேண்டும் என்று பெரியோர்கள் அறிவுறுத்துகின்றனர்.

பிறகு, தான் ஏதோ பாபம் செய்திருப்பதால்தான் அடிமையாக இருக்க நேரிட்டது என்று வினதா தன் மகன் கருடனிடம் கூறினாள். அவள் காசிக்குச் சென்று, தான் செய்த பாபத்திற்குப் பரிஹாரம் செய்ய எண்ணினாள். அவளைக் காசிக்கு அழைத்து வந்த கருடன், சிவலிங்கம் ஒன்றை ஸ்தாபித்து பூஜிக்கத் தொடங்கினார். வினதா, ஸுர்ய பகவானை காகோல்க் ஆதித்யர் என்ற வடிவத்தில் வழிபட்டாள். சிவபெருமான் கருடன் முன்பு தோன்றி, மஹாவிஷ்ணுவின் வாஹனமாக எல்லோராலும் அறியப்படுவாய் என்று கூறி அருளினார்.

ஸுர்ய பகவான் வினதாவின் முன்பு தோன்றி, அவளுக்குப் பாப விமோசனம் அளித்தார். காசி காண்டம், அத்யாயம் 50ன்படி, காகோல்க் ஆதித்யர் பில்பில தீர்த்தத்தின் அருகில் வீற்றிருக்கிறார்.

இருப்பிடம்

ஏ 2/9, த்ரிலோசனுக்கு வடக்கே, காமேச்வர் கோயில் என்ற முகவரியில் அமைந்துள்ளது. (மச்சோதரிக்கு அருகில்) ப்ரஸித்தி பெற்ற ப்ரஹ்லாத காட் சமீபத்தில் அமைந்துள்ளது. ப்ரஹ்லாத் காட் சௌராஹா வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து இக்கோயிலுக்கு நடந்து செல்லலாம்.

காசி காண்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பில்பில தீர்த்தம் தற்போது த்ரிலோசனேச்வரர் அருகில் ஒரு கிணறு வடிவில் இருக்கிறது.

வழிபாட்டு முறைகள்

காலை 5.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலை 5.30 மணிக்கு மங்கள ஆரத்தியும், இரவு 9.30 மணிக்கு சயன ஆரத்தியும் நடைபெறுகின்றன.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீராஜேஷ் கிரி கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9839703054 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

லோலார்க் ஆதித்யர்

காசியின் தென்பகுதியில் அஸி கங்கா ஸங்கமத்திற்கு அருகிலுள்ள லோலார்க் குண்டத்திற்கு அருகில் லோலார்க் ஆதித்யர் வீற்றிருக்கிறார். லோலார்க் குண்டத்திற்கு காசி கண்டத்தில் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. கங்கா அஸி ஸங்கமிக்கும் இடத்தில்தான் லோலார்க் குண்டம் இருந்ததாக முன்காலச் செய்திகள் கூறுகின்றன. ஆனால் தற்போது அது ஒரு குளமாக மட்டுமே இருக்கிறது. இப்பொழுதும் கூட, மழைக்காலத்தில் பூமிக்கடியில் கங்கை நீர் இந்த குண்டத்தில் கலக்கிறது.

மாக மாதத்தில், வளர்பிறை ஷஷ்டி அல்லது ஸப்தமியுடன் ஞாயிற்றுக்கிழமையும் இணைந்த நாளன்று இந்தக் குளத்தில் நீராடுவது மிக விசேஷமானது. அதுபோன்ற ஒரு நாளில் இந்த குண்டத்தில் நீராடி, வழிபாடுகளை நிகழ்த்துவதால் அன்பர்கள் வாழ்வில் வேண்டிய வரங்களைப் பெறுவர். இதுபோன்று செய்வதால் ஒருவர் ஏழேழு பிறவிகளில் செய்த பாவங்கள் அனைத்தும் அகலும் என்று காசி கண்டத்தின் 46 வது அத்யாயம் கூறுகிறது.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் லோலார்க் ஆதித்யரிடம் ப்ரார்த்தனை செய்து வழிபடும் அன்பர்களின் பாவங்கள் எல்லாம் நீங்கும், தோல் சம்பந்தமான நோய்கள் குணமாகும் என்று காசி காண்டத்தின் 46 வது அத்யாயம் கூறுகிறது.

இருப்பிடம்

லோலார்க் குண்டம்/ஆதித்யர் துளசி காட்டிற்கு அருகே வீற்றிருக்கிறார். அஸி பகுதியில் உள்ள மார்வாடி ஸேவா ஸங்கம் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம். அல்லது துளசி காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

இக்கோயில் இருபத்து நான்கு மணி நேரமும் திறந்திருக்கிறது. ஞாயிற்றுக்கிழமைகளில் தரிசிப்பது சிறப்பு. ஒவ்வொரு வருடமும் பத்ரபாத மாதத்தில் வளர்பிறை ஷஷ்டி (லோலார்க் சட்) அன்று, பெருமளவிலான மக்கள் லோலார்க் குண்டத்தில் நீராடுவதற்கு வருகிறார்கள். மார்கசீர்ஷ மாதத்தின் வளர்பிறை ஷஷ்டி தினமும் முக்கியமான நாளாகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மயூக் ஆதித்யர்

ஒரு முறை ஸுர்ய பகவான் கபஸ்தீச்வரர் என்ற பெயரில் சிவலிங்கம் ஒன்றையும், மங்கள கௌரி என்ற பெயரில் அம்பாள் விக்ரஹம் ஒன்றையும் பஞ்சநத (பஞ்சகங்கா கட்டம்) தீர்த்தத்தில் உருவாக்கி, மிகுந்த பக்தியுடன் பூஜித்து வந்தார்.

ஸுர்ய பகவானின் உருக்கமான தவத்தினால் சுற்றுப்புறம் எங்கும் உஷ்ணம் பரவியது. ஸுர்ய கதிர்களின் உஷ்ணம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. உயிரினங்களால் அந்த வெப்பத்தைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை, அதனால் உயிர் வாழ்க்கை ஸ்தம்பித்தது.

சிவபெருமானும், பார்வதி தேவியும் ஸுர்ய பகவான் முன் தோன்றினர். சிவபெருமான் ஸுர்யனை லேசாகத் தொட்டவுடன் வெப்பம் குறைந்தது. கண்களைத் திறந்த ஸுர்ய பகவான், சிவபெருமானையும் பார்வதி தேவியையும் பல்வேறு துதிகளால் போற்றினார். மனம் மகிழ்ந்த இறைவனும் இறைவியும் ஸுர்யனுக்குப் பல்வேறு தெய்வீக வரங்களை அளித்தனர்.

ஸுர்யன் தன்னைக் குறித்துத் தவம் செய்தபோது, அவரது உடலே தெரியவில்லை ஒளிவெள்ளம்தான் தெரிந்தது என்று கூறிய சிவபெருமான், அவருக்கு மயூக ஆதித்யர் என்று பெயரிட்டார். மயூக் என்றால் ஒளிவெள்ளம் என்று பொருள். ஞாயிற்றுக்கிழமைகளில் மயூக் ஆதித்யரை வழிபடுபவர்களுக்கு நோயே வராது என்று சிவபெருமான் கூறியுள்ளார். (காசி காண்டம், அத்யாயம் 49)

இருப்பிடம்

கே 24/34, மங்கள கௌரி கோயில், பஞ்சகங்கா கட்டம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் பைரோநாத் (காலபைரவர்) கோயில் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து சந்துகளில் நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம். பொதுவாக, இங்கிருந்து நடப்பதற்கு 20 முதல் 30 நிமிடங்கள் ஆகும். அல்லது, பாலாஜி/பஞ்சகங்கா கட்டம் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

மயூக் ஆதித்யரின் விக்ரஹம் எப்பொழுதும் குளிர்ச்சியாகவும், ஈரமாகவும் இருக்கிறது. காய வைத்துத் துடைத்தாலும், மீண்டும் ஈரமாகிவிடுகிறது. சிவபெருமான் தொட்டதால்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இவ்வாறு ஆகிவிட்டது என்று கூறுகிறார்கள். கோயிலுக்கு அடியில் தூத்பாபா என்ற நதி ஓடுவதாக கோயிலுக்கு அருகிலுள்ள பெரியோர்கள் கூறுகிறார்கள்.

இந்த கோயிலின் உள்ளே கபஸ்தீச்வரர், மங்கள கௌரி, மங்கள விநாயகர் ஆகியோரைத் தரிசிக்கலாம். ப்ரஹ்மசாரிணி தேவி கோயிலும், ப்ரஹ்மேச்வரர் கோயிலும் அருகில்தான் உள்ளன.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் நண்பகல் 1.00 மணி வரையிலும், மாலை 3.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. மாலை வேளைகளில் ஆரத்தி நடைபெறுகிறது. விசேஷ வழிபாடுகள் செய்ய கோயில் அர்ச்சகரை முன்பே தொடர்பு கொள்ளுதல் நலம்.

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீமனோஜ் குமார் பாண்டே கோயிலின் தலைமை அர்ச்சகராவார். அவரது தொலைபேசி எண் (0)9305645502 என்பதாகும். மற்றொரு அர்ச்சகர் ஸ்ரீஉமேஷ் குமார் சர்மா என்பவரது தொலைபேசி எண் (0)9450284728 என்பதாகும்.

ஸாம்ப ஆதித்யர்

காசி கண்டத்தின்படி, ஒருமுறை நாரத மஹரிஷி த்வாரகாபுரிக்குச் சென்றார். அங்கு பகவான் ஸ்ரீக்ருஷ்ணரின் மகன்கள் அவரை அன்போடு வரவேற்றனர். அவர்கள் மிகுந்த மரியாதையோடு நாரதரிடம் நடந்துகொண்டனர். ஆனால் ஒரு மகனான ஸாம்பன் மட்டும் நாரதரை வணங்கவில்லை.

தமது அரண்மனையில் இருந்த பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் நாரதரை மிகப் பணிவாக வரவேற்றார். பரஸ்பர நலம் விசாரிப்புக்குப் பிறகு, ஸ்ரீக்ருஷ்ணரிடம் நாரதர் ஸாம்பனைப் பற்றிப் பேசினார். ஸாம்பன் மிகுந்த அழகும், பலமும், பல பெண்களைக் கவரும் ஆற்றலும் பெற்றவன் என்றும் கூறிச் சென்றார்.

நாரதர் சென்ற பிறகு, பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் ஸாம்பனை கண்காணித்தார். ஸாம்பனின் நடத்தையில் எந்த குறிப்பிடத்தக்க மாறுதலும் தென்படவில்லை.

சில நாட்களுக்குப் பிறகு, நாரதர் மீண்டும் த்வாரகைக்கு வந்தார். அந்த நேரத்தில் பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் தமது அந்தப்புரத்தில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருந்தார். வெளியே சுற்றிக் கொண்டிருந்த ஸாம்பனைப் பார்த்து, தாம் வந்திருப்பதாக ஸ்ரீக்ருஷ்ணரிடம் தகவல் சொல்லச் சொன்னார். ஸாம்பன் ஒரு கணம் யோசித்தான். அந்தப்புரத்தின் உள்ளே சென்றால், ஸ்ரீக்ருஷ்ணர் கோபிப்பார்; நாரதரின் கட்டளையை மீறினால் அவர் கோபப்படுவார் (சென்ற முறையே ஸாம்பன் நாரதரை மதிக்காமல் இருந்துவிட்டான்),

வேறு வழியின்றி குழப்பத்துடன், ஸாம்பன் ஸ்ரீக்ருஷ்ணரின் அந்தப்புரத்திற்குள் நுழைந்தான். நாரதரும் பின்தொடர்ந்தார். பிறகு, ஸ்ரீக்ருஷ்ணரைப் பார்த்தவுடன் ஸாம்பன் அங்கிருந்து சென்றுவிட்டான். ஸ்ரீக்ருஷ்ணருடன் இருந்த பெண்கள் ஸாம்பனைக் கண்டு மயங்கிவிட்டதாக நாரதர் கூறினார். இதனைக் கேட்ட ஸ்ரீக்ருஷ்ணர் ஸாம்பனுக்குத் தொழுநோய் வரும்படி சபித்தார். ஸாம்பன் ஸ்ரீக்ருஷ்ணரிடம் கெஞ்சி மன்னிப்பு கேட்டதும், ஸ்ரீக்ருஷ்ணர் மனமிரங்கி இந்த சாபத்திலிருந்து விடுபட காசிக்குச் சென்று, ஸ்ரீஸூர்ய பகவானை வழிபடுவாயாக என்று கூறினார்.

காசிக்கு வந்த ஸாம்பன் ஸாம்ப குண்ட் என்றொரு குண்டத்தை ஏற்படுத்தி, ஸ்ரீஸூர்யனைக் குறித்து கடுந்தவமியற்றி வழிபட்டு வந்தான். காலப்போக்கில் அவனைப் பற்றியிருந்த நோய் நீங்கிவிட்டது. காசி காண்டத்தின் 48வது அத்யாயத்தின்படி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஸூர்யோதய சமயத்தில் ஸாம்ப குண்டில் நீராடி ஸாம்ப ஆதித்யரை வழிபட்டால் தீராத நோய்களும் தீர்ந்துவிடும். ஸாம்ப ஆதித்யரை வழிபடும் பெண்கள் தீர்க்க ஸுமங்கலிகளாக இருப்பர்; இவரை வழிபடுவதால் மகப்பேறு வாய்க்கும். ஸாம்ப குண்டம் தற்போது ஸூரஜ் குண்டம் அல்லது ஸூர்ய குண்டம் என்று அழைக்கப்படுகிறது.

இருப்பிடம்

D 51/90, ஸூரஜ் குண்டம்/ஸூர்ய குண்டம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. இது மிகவும் பிரஸித்தி பெற்ற இடமாகும். அன்பர்கள் இந்த இடம் வரை சைக்கிள் ரிக்ஷாவில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரையிலும், மாலை 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. மாக மாதத்தில் (பிப்ரவரி - மார்ச்) வரும் ஞாயிற்றுக்கிழமைகளோடு இணைந்த நவமி மிக விசேஷமான

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நாளாகக் கருதப்படுகிறது. சித்திரை மாதத்து ஞாயிற்றுக்கிழமைகளில் வழிபடுவதும் சிறப்பு.

உத்தரார்க் ஆதித்யர்

காசி காண்டத்தின் 47வது அத்யாயத்தின்படி காசியில் ப்ரியவ்ரதன் என்ற ப்ராஹ்மணன் தன் அழகிய மனைவியான சுபவ்ரதா என்பவளுடன் வசித்து வந்தான். மிகுந்த பக்தியுடன் வாழ்ந்து வந்த இவர்களுக்கு ஸுலக்ஷணா என்ற அழகிய மகளும் இருந்தாள். இந்தப் பெண் மூல நக்ஷத்திரம் முதல் பாதத்தில் பிறந்தவள். இவளுடைய ஜாதகத்தில் நான்காமிடத்தில் குரு இருக்கிறார். இது அவ்வளவு அனுகூலமான க்ரஹநிலை அல்ல.

ஸுலக்ஷணா வளர்ந்தாள், வீட்டு வேலைகளில் தேர்ச்சி பெற்றாள். திருமண வயது நெருங்கியவுடன் அவளுக்குச் சரியான மணமகன் அமைய வேண்டுமே எனப் பெற்றோர்கள் கவலையில் ஆழ்ந்தனர். இந்தக் கவலையில் நோய்வாய்ப்பட்டு சில காலம் கழித்து, தந்தை இறந்துவிட்டார். துக்கம் தாங்க முடியாமல் தாயும் இறந்துவிட, ஸுலக்ஷணா தனித்து விடப்பட்டாள்.

ஸுலக்ஷணா தன் பெற்றோர்களின் இறுதிக்கடன்களை முறையாக செய்து முடித்த பிறகு, ஸூர்ய பகவானை உத்தரார்க் ஆதித்யர் என்ற வடிவத்தில் வழிபடத் தொடங்கினாள். அவள் கடுந்தவம் இயற்றி வந்த காலத்தில், நாள்தோறும் வெள்ளை ஆடு ஒன்று வந்து அவளையே பார்த்துக்கொண்டு நிற்கும். காலையில் குண்டத்தில் நீராடி, மாலை வரை காத்திருந்து, மாலையில் புல்லைத் தின்றுவிட்டு, உத்தரார்க் குண்டத்தில் நீர் அருந்தி விட்டுச் சென்றுவிடும். இது பல வருடங்கள் தொடர்ந்தது.

ஒருநாள் சிவபெருமானும், பார்வதிதேவியும் உத்தரார்க் ஆதித்யரை நோக்கித் தவம் செய்து கொண்டிருந்த இந்தப் பெண்ணைப் பார்த்தனர். அவளது பக்தியால் கவரப்பட்ட பார்வதி பரமேச்வரர் அவளுக்கு வரமளிக்க முன்வந்தனர்.

ஒரு கணம் யோசித்த ஸுலக்ஷணா அருகிலிருந்த ஆட்டைப் பார்த்தாள். தனக்கு பதிலாக, அந்த ஆட்டிற்கு வரமளிக்கும்படி சிவபெருமானிடம் வேண்டினாள். அவளது உதார குணத்தைப் பார்த்து அதிசயத்தில் மூழ்கிய பார்வதி தேவி, ஸுலக்ஷணாவைத் தன்னுடைய சேடிப் பெண்ணாக சேர்த்துக் கொண்டாள். உத்தரார்க்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குண்டத்தில் வழிபட்ட காரணத்தினால் அந்த ஆடு அடுத்த பிறவியில் காசி ராஜனின் மகளாகப் பிறக்கும் வரத்தைப் பெற்றது.

காசி காண்டத்தின்படி, இந்த குண்டத்தில் தவம் செய்த ஆடு மறக்க முடியாதது (கடுங்குளிரிலும் அந்த ஆடு குண்டத்தில் நீராடி வந்தது) என்று பார்வதி தேவி கூறினாள். அன்பர்கள் புஷ்ய மாதத்தில் (டிசம்பர் - ஜனவரி) ஞாயிற்றுக்கிழமைகளில் நீராடி உத்தரார்க் ஆதித்யரை வழிபட வேண்டும். இதனால் அவர்கள் இறையருள் பெறுவர். இந்தக் குண்டத்திற்குப் பர்கரி குண்டம் என்று பெயர். (ஆதாரம் : ஸம்க்ஷிப்த ஸ்கந்த புராண், கீதா ப்ரஸ், பக்கம் 831). உள்ளூர் பாஷையில் பக்ரியா குண்டம் என்று அழைக்கப்படுகிறது.

இருப்பிடம்

அலைபூர் பக்ரியா குண்டம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை ஆட்டோ அல்லது சைக்கிள் ரிக்ஷாவில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.00 மணி முதல் பகல் 12.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலை 8.00 மணிக்கு ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீஅஷோக் த்ரிபாதி கோயிலின் அர்ச்சகராவார். (0)9305041589 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

விமல் ஆதித்யர்

முன்னொரு காலத்தில், மலை சூழ்ந்த இடத்தில் விமல் என்ற பெயருடைய ஒருவன் வசித்து வந்தான். முன்வினை காரணமாக அவனுக்குத் தொழுநோய் வந்தது. அவன் தனது குடும்பத்தையும், பிற சொத்துக்களையும் விட்டுவிட்டுக் காசிக்கு வந்து, ஸூர்ய பகவானை வழிபடத் தொடங்கினான்.

சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ளபடி, பூஜைகள், புஷ்ப அர்ச்சனை முதலியவற்றைச் செய்தான். அவனுடைய பக்தியை மெச்சி, ஸூர்ய பகவான் அவனுக்கு காட்சி கொடுத்தார். அவனது உடல் நோய் மறைந்தது. ஸூர்ய பகவான் வேண்டும் வரத்தைக் கேள் என்று கூறினார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விமல் "இந்த கொடிய நோயினால் எவரும் பாதிக்கப்படக் கூடாது வாழ்வில் அவர்கள் துன்பப்பட கூடாது" என்று வேண்டினான். ஸுர்ய பகவானும் அவ்வாறே வரம் தந்தார். மேலும் இந்த இடத்தில் தாம் விமல ஆதித்யர் என்ற பெயருடன் வீற்றிருந்து எக்காலத்திலும் அருள்புரியப் போவதாகக் கூறினார்.

காசி காண்டத்தின்படி, தரிசனம் செய்த மாத்திரத்திலேயே அனைத்துவிதமான நோய்களையும் நீக்கக்கூடிய ஆற்றல் படைத்தவர் விமல ஆதித்யர்.

இருப்பிடம்

D 35/273, காரி கௌஸன் பின்புறமுள்ள சந்தில், கோடவ்லியா அருகில் ஜங்கம்பாரி என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடத்திற்கு ரிக்ஷாவில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது.

வ்ருத்த ஆதித்யர்

காசி காண்டத்தின்படி, ஹரித் என்ற முதிய பக்தர், விசாலாக்ஷி தேவிக்கு அருகில் இருந்துகொண்டு ஸுர்ய பகவானை வழிபட்டு வந்தார். வெகு காலத்திற்குப் பிறகு, ஸுர்ய பகவான் அவருக்குக் காட்சிகொடுத்து, வேண்டும் வரத்தை அருள்வதாகக் கூறினார்.

முதியவர் கூறினார், தவம் செய்வதற்குச் சக்தி வேண்டும். தவத்தினால் வாழ்வில் வளம், ஞானம், மகிழ்ச்சி உள்ளிட்ட அனைத்து மேன்மைகளையும் ஒருவன் அடைகிறான். இளமையோடிருந்தால் தவம் செய்வது எளிது. எனவே எனக்கு இளமையைத் தாருங்கள்.

முதியவரின் உண்மையான பக்தியைக் கண்ட ஸுர்ய பகவான் அவருக்கு அவ்வாறே வரமளித்தார். முதியவர் இளைஞரானார். முதியவரால் வணங்கப்பெற்றதால், இவ்விடத்தில் ஸுர்ய பகவான் வ்ருத்த ஆதித்யராக அறியப்படுகிறார். காசி கண்டத்தின்படி, வ்ருத்த ஆதித்யரிடம் விடாமல் ப்ரார்த்தனை செய்து வருபவர்கள் இளைஞரைப் போன்று எப்பொழுதும் ஆற்றலுடன் திகழ்வர்.

இருப்பிடம்

D 3/15, பாரே ஹநுமான்ஜிக்கு தென்புறத்தில், மிர் கட்டத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் தசாச்வமேத் விச்வநாத் கல்லி வரை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து நடந்து செல்லலாம். அல்லது மிர் காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்று அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.30 மணி முதல் இரவு 9.30 மணி வரை திறந்திருக்கிறது. நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை. விக்ரஹம் கோயிலினுள் இருக்கிறது. வெளிப்புற சுவற்றில் ஸுர்ய சக்கரம் இருக்கிறது. அன்பர்கள் தாங்களே வழிபாடுகளை நிகழ்த்தலாம்.

யம ஆதித்யர்

யமதர்மராஜா யம தீர்த்தத்தில் சிவலிங்கத்தையும், ஸுர்ய பகவானின் விக்ரஹம் ஒன்றையும் வைத்துத் தவமியற்றி வந்தார். அந்த சிவலிங்கத்திற்கு யமேச்வரர் என்ற திருநாமமும், ஸுர்ய பகவானுக்கு யம ஆதித்யர் என்ற திருநாமமும் ஏற்பட்டன.

யம தீர்த்தத்தில் (தற்போது கங்கையில் ஸங்கட கட்டம்) நீராடி யமேச்வரரையும், யம ஆதித்யரையும் வழிபடுபவர்கள் யம வாதனைக்கு ஆளாகமாட்டார்கள் என்று காசி கண்டம் குறிப்பிடுகிறது.

செவ்வாய்கிழமை, பரணி நக்ஷத்திரம், சதுர்தசி ஆகிய மூன்றும் ஒன்றுசேரும் நாளில் முன்னோர்களுக்கு உரிய பித்ரு காரியங்களை ஒருவர் செய்வதால் மிகுந்த நன்மை உண்டாகும். மேற்குறிப்பிட்ட நாளில் யமதீர்த்தத்தில் நீராடி செய்யப்படும் இந்த சடங்குகளுக்காக முன்னோர்கள் காத்திருப்பதாக ஐதீகம்.

யம தீர்த்தத்தில் நீராடி, யமேச்வரரையும் யம ஆதித்யரையும் வழிபடும் அன்பர்கள் எப்பொழுதும் இன்பமாக வாழ்வர்.

இருப்பிடம்

C/K 7/135, ஸங்கட காட் படிகளில் யம ஆதித்யர் வீற்றிருக்கிறார். அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம். ஸங்கட தேவி கோயில் ஓர் புகழ்பெற்ற இடமாகும். அன்பர்கள் ஸங்கட கட்டம் வரை படகில் சென்றும் இவ்விடத்தை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

அன்பர்கள் நாள் முழுவதும் வழிபடலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



ஸ்ரீபசுபதேச்வரர்

யூ ட்யூப் (YOU TUBE) காணொளிகள்



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆத்ம வீரேச்வரர்

காசி காண்டத்தின் 82 வது அத்யாயத்தில், சிவபெருமான் ஆத்மவீரேச்வர லிங்கத்தின் சக்தியைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார் :

முன்னொரு காலத்தில் அமித்ரஜித் என்ற மன்னன் அரசாட்சி புரிந்து வந்தான். மஹாவிஷ்ணுவின் தீவிர பக்தனான அவன், தன்னுடைய அரசாட்சியின் கீழ் உள்ள அனைவரும் விஷ்ணு பக்தர்கள் ஆக வேண்டும் என்று விரும்பினான். ஒரு நாள் நாரத மஹரிஷி அவனுடைய அரண்மனைக்கு வருகை புரிந்தார். அவரைத் தகுந்த மரியாதையுடன் வரவேற்றான் மன்னன்.

மன்னன் நாரத மஹரிஷியின் அறிவுரையின் பேரில், மலயகந்தினி என்ற அழகிய பெண் ஒருத்தியைத் தீயவரின் பிடியிலிருந்து காப்பாற்றித் திருமணம் செய்து கொண்டு, காசியை அடைந்து இன்புற்று வாழ்ந்தனர். சில காலம் கழித்து, மலயகந்தினிக்கு ஓர் அழகிய ஆண் மகவு பிறந்தது. பிறந்தவுடனேயே பதினாறு வயது பாலகனாக ஆகிவிட்டான் அந்தக் குழந்தை. ஸாதகமற்ற க்ரஹ நிலைகளில் அவன் பிறந்ததால்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அவனைக் கொன்றுவிடும்படியும், இல்லையேல் மன்னனின் உயிருக்கு ஆபத்து என்றும் அமைச்சர்கள் மலயகந்தினியிடம் கூறினர்.

மன்னனைக் காப்பாற்றுவதற்காக அரசி, மகனை விகட தேவியிடம் அனுப்பினாள். ஆனால் பதினாறு வயதுக் குழந்தையைக் கொல்வதற்கு எவருக்கும் மனம் வரவில்லை. அந்தப் பாலகன் சிவபெருமானைக் குறித்துக் கடும் தவம் செய்தான். சிவபெருமான் அவன் முன்னர் லிங்க வடிவில் தோன்றினார். அந்த லிங்கத்திற்குப் பெயர் வீரேச்வரர் என்பதாகும்.

வீரேச்வர லிங்கத்திற்கு பூஜை, அபிஷேகம், அர்ச்சனை முதலியவற்றைச் செய்பவர்கள் அனைத்துவித வளங்களும், மகிழ்ச்சியும், வெற்றியும் பெறுவர். வீரேச்வர லிங்கத்திற்கு பூஜை செய்வதால் மூன்று கோடி லிங்கங்களுக்குப் பூஜை செய்த பலன் கிடைக்கும் என்று காசி கண்டம், அத்யாயம் 83 கூறுகிறது. சதுர்தசி இரவுகளில் கண்விழித்து இந்த லிங்கத்தை தரிசிப்பது சிறப்பு. பஞ்சாமிர்த அபிஷேகம் செய்வதும் மிகுந்த சிறப்பு என்று காசி கண்டம் கூறுகிறது.

குழந்தைப் பேறு பெற ஆத்ம வீரேச்வரருக்குச் செய்ய வேண்டிய பூஜை/அர்ச்சனை குறித்து காசி கண்டத்தின் 11 வது அத்யாயம் கூறுகிறது. விச்வனர் என்ற முனிவர் தமது மனைவியுடன் பல்வேறு புனிதத் தலங்களுக்குச் சென்ற பிறகு, காசியில் உள்ள ஆத்ம வீரேச்வர ஸித்த பீடத்திற்கு வந்தனர். முனிவர் இக்கோயிலில் பல மாதங்களுக்குப் பூஜைகளையும், சடங்குகளையும் செய்து வந்தார். ஒரு நாள் அபிலாஷ அஷ்டகம் என்ற ஸ்தோத்ரத்தை அவர் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது, லிங்கத்திற்கு அருகில் ஓர் எட்டு வயது பாலகன் நிற்பதைக் கண்டார். முனிவர் அந்தப் பாலகனைச் சிவபெருமானாகவே கண்டு வழிபடத் தொடங்கினார்.

எட்டு வயது பாலகனாகத் தோன்றிய சிவபெருமான், முனிவர் விச்வனரைப் போல அபிலாஷ அஷ்டகத்தை ஒரு வருடம் தொடர்ந்து பாராயணம் செய்தால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்று கூறியருளினார். அந்த பாலகன் ஆத்ம வீரேச்வர லிங்கத்திற்குள் மறைந்துவிட்டான்.

வீரேச்வரர் என்று காசி காண்டத்தில் குறிப்பிடப்பட்டாலும், ஆத்ம வீரேச்வரர் என்றே இந்த லிங்கத் திருமேனி அழைக்கப்படுகிறது.

C/K 7/158, ஸிந்தியா காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. வாராணசியில் இது ப்ரஸித்தி பெற்ற இடமாகும். ஸிந்தியா காட் வரை படகில் சென்று இந்த இடத்தை அடைய முடியும். அல்லது சௌக்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வரை சைக்கிள் ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து சந்துகள் வழியாக நடந்து சென்றும் அடையலாம். ஆத்ம வீரேச்வரர் கோயிலில் ருத்ர ஜபம் செய்வது மிகுந்த பலனளிக்கும்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.00 மணி முதல் பகல் 11.30 மணி வரையிலும், பிற்பகல் 12.30 முதல் இரவு 9.30 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. இரவு 7.00 மணி முதல் 8.30 மணி வரை விசேஷ ஆரத்தி நடைபெறுகிறது. விசேஷ பூஜைகள் செய்ய அர்ச்சகரை முன்பே தொடர்பு கொள்ளுதல் நலம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீ முன் முன் குரு கோயிலின் அர்ச்சகர் ஆவார். விசேஷ பூஜைகள் செய்ய 9792820159 என்ற எண்ணில் அவரை தொடர்பு கொள்ளலாம்.

தர்மேச்வரர்

பார்வதி தேவி சிவபெருமானிடம் காசியில் உள்ள பல்வேறு சிவலிங்கங்களைக் குறித்துக் கேட்டாள். சிவபெருமான் கூறத் தொடங்கினார்: முன்னொரு காலத்தில் ஆனந்த வனத்தில் (காசியில்) யமராஜர் ஒரு லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து சிவபெருமானைக் குறித்துக் கடுந்தவம் இயற்றினார். கடுங்குளிரிலும், கடுமையான கோடைக்காலத்திலும் அவரது தவம் தொடர்ந்தது. அவர் பல வருடங்கள் ஒற்றைக்காலில் நின்று தவம் செய்தார், பின் கால் நுனியில் நின்றபடி தவம் செய்தார். முடிவில் சிவபெருமான் அவருக்குக் காட்சிகொடுத்து, தர்மராஜா என்ற பட்டத்தை அவருக்குச் சூட்டி அருளினார். (ஸந்த்யா வந்தனம் முதலிய மந்த்ரங்களில் யமாய தர்மராஜாய என்று வருவதைப் பார்க்கலாம்). யமராஜனால் ப்ரதிஷ்டை செய்யப்பெற்ற லிங்கத்திற்கு தர்மேச்வரர் என்று பெயர் சூட்டினார் சிவபெருமான். மகிழ்ச்சியில் திக்குமுக்காடிய யமதர்மராஜாவிற்கு மகிழ்ச்சியில் பேச்சே எழவில்லை.

சிவபெருமான் தானே கூறத் தொடங்கினார் : யமதர்மராஜா மிகுந்த நியாயத்துடன் நடந்து கொள்ள வேண்டும், பாவம் செய்பவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். புண்ணியம் செய்பவர்களை ஸ்வர்கத்திற்கு அனுப்ப வேண்டும். காசியிலேயே வாழ்ந்திருந்து வழிபாடுகளைச் செய்பவர்கள் எந்தப் பிறவியில் செய்த எந்தப் பாவத்திலிருந்தும் விடுபட வேண்டும். அதன்படியே அவர் பாவம் செய்பவர்களுக்கு யமராஜராகவும்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

புண்ணியம் செய்பவர்களுக்குத் தர்மராஜராகவும் விளங்குகிறார். (காசி காண்டம், அத்யாயம் 78)

தர்ம கூபத்தில் நீராடி, தர்மேச்வரரை வழிபடுபவர்கள் அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுபடுவர்.

காசியிலேயே வாழ்ந்திருந்து தினசரி வழிபாடுகளைச் செய்து வருபவர்களைப் பாவங்கள் அணுகுவதில்லை என்பது மக்களிடையே நிலவி வரும் ஓர் ஆழமான நம்பிக்கை ஆகும்.

இருப்பிடம்

D 2/21 மிர் காட் என்ற இடத்தில் அமைந்துள்ளது. புகழ்பெற்ற தசாச்வமேத் பகுதியிலிருந்து இந்த இடத்தை அடையலாம். அன்பர்கள் தசாச்வமேத் விச்வநாத கல்லி வரை ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து விஸாலாக்ஷி கௌரி கோயில் வழியாக நடந்து செல்லலாம். விச்வேச்வரர் கோயிலில் தரிசனம் முடித்த அன்பர்கள், ஸரஸ்வதி படக் கேட் வழியாக, விஸாலாக்ஷி கௌரி கோயில் செல்லும் பாதையில் நடந்து சென்று தர்மேச்வரரை அடையலாம். அல்லது, அன்பர்கள் மிர் காட் வரை படகில் சென்று அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

தர்மேச்வரர், தர்ம கூபம், விஸாலாக்ஷி தேவி முதலியோர் உள்ள இடம் முழுவதும் ஓர் ஆற்றல் வாய்ந்த சக்திபீடமாகக் கருதப்படுகிறது. இங்கு செய்யப்படும் எந்தப் பிரார்த்தனையும் மிக அதிக அளவில் பலன்களை அளித்தே தீரும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் மதியம் 12.30 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 7.30 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலை 5.00 மணிக்கும் இரவு 7.00 மணிக்கும் ஆரத்தி நடைபெறுகின்றன.

கார்த்திகை மாதம் சுக்ல பக்ஷ அஷ்டமியன்று தர்மேச்வரர் கோயிலில் வழிபாடுகள் செய்வது மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

அருகில் தர்ம கூபம் என்றொரு கிணறு இருக்கிறது. அதில் நீராடி ச்ராத்தம் செய்வது, கயாவில் சென்று ச்ராத்தம் செய்வதற்கு நிகரானது.

விசேஷ பூஜைகள் செய்ய அர்ச்சகரை முன்பே தொடர்பு கொள்ளுதல் நலம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீசங்கர் உபாத்யாய கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய ()9984637478 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

கேதாரேச்வரர்

கேதாரேச்வர லிங்கம் பன்னிரெண்டு ஜ்யோதிர்லிங்கங்களுள் ஒன்றாகும், இது இமய மலையில் உள்ளது. காசி காண்டத்தின்படி, முன்னொரு காலத்தில் ஒரு பக்தர் வசிஷ்டன் என்ற பெயருடைய தன் மகனுக்கு உஜ்ஜயினி நகரில் உபநயனம் செய்து வைத்தார். வஸிஷ்டன் லிங்க பூஜை முதலிய அனைத்துப் பூஜைகளையும் மிகுந்த பக்தி ச்ரத்தையுடன் செய்து வந்தான். அவன் இமய மலையில் உள்ள கேதாரேச்வரர் கோயிலுக்குத் தவறாமல் தன் குருநாதருடன் சென்று வழிபட்டு வந்தான்.

ஒருமுறை கேதாரேச்வரர் கோயிலுக்குச் செல்லும் வழியில், அவனது குருநாதர் இறந்துவிட்டார். அவருடைய புண்ணியங்களின் பலனாக அவர் கைலாஸத்தை அடைந்தார். பன்னிரெண்டு வயதே நிரம்பியிருந்த வசிஷ்டன் கேதாரேச்வரரைத் தரிசிப்பதால் ஏற்படும் புண்ணியத்தின் சிறப்பை உணர்ந்து கொண்டான். காசிக்குச் சென்று அங்கு வசித்து வந்தான்.

ப்ரஹ்மசாரியாகவே வாழ்ந்த வசிஷ்டர் ஆண்டுதோறும் சித்ரா பௌர்ணமிக்குக் கேதாரேச்வரரைச் சென்று தரிசித்து வந்தான். இது அவரது 61வது வயது வரை தொடர்ந்தது. வயதாகிவிட்டதால் காசியை விட்டு நகர முடியவில்லை, எனினும் சிவபெருமானிடம் இடைவிடாது ப்ரார்த்தனை செய்து வந்தார். சிவபெருமான் அவருக்குக் காட்சி கொடுத்து வரம் ஒன்றை அருளினார். கேதாரேச்வரராகக் காசியில் அருள் பாலிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார் வசிஷ்டர்.

வசிஷ்டரின் பக்தியைக் கண்டு உள்ளம் குளிர்ந்த இறைவன் மகிழ்ச்சியுடன் அதற்கு இசைந்தார். கேதாரேச்வரராகக் காசியில் தோன்றிய இறைவன், காசியில் உள்ள கேதாரேச்வரரை வழிபடுவதால், இமயமலையில் உள்ள கேதாரேச்வரரை வழிபடுவதைக் காட்டிலும் ஏழு மடங்கு அதிக புண்ணியம் கிடைக்கும் என்று கூறியருளினார். (காசி கண்டம், அத்யாயம் 77). கேதாரேச்வரருடன் தொடர்புடையதாக கௌரி குண்டம், ஹம்ஸ தீர்த்தம், மானஸ ஸரோவர தீர்த்தம் ஆகியவற்றைப் பற்றி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காசி காண்டம் குறிப்பிடுகிறது. தற்போது கௌரி குண்டம் மட்டுமே உள்ளது. ஹம்ஸ தீர்த்தமும், மாநஸ ஸரோவரமும் வற்றிவிட்டன.

பக்தர்கள் சுக்லபக்ஷ சதுர்தசியன்று வ்ரதமிருந்து, மறுநாள் பௌர்ணமியன்று கேதாரேச்வரருக்குப் பூஜைசெய்து வ்ரதத்தை நிறைவுசெய்கின்றனர். வசிஷ்டர் சித்ரா பௌர்ணமி தோறும் கேதாரநாதத்திற்குச் சென்று வழிபட்டார் என்று முன்பே கூறப்பட்டது.

காசி மூன்று கண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை ஓங்கார கண்டம், விச்வேச்வர கண்டம், கேதார கண்டம் ஆகியவையாகும். காசியில் இறப்பவர் முக்தியடைகிறார் என்பது மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. அதிலும், கேதார கண்டத்தில் இறப்பவர் உடனே முக்தியடைகிறார், மற்ற கண்டங்களில் சிறிது கஷ்டங்களை அனுபவித்துப் பின் முக்தி அடைவர் என்று கூறப்படுகிறது.

பாரத தேசத்தில் பன்னிரு ஜ்யோதிர்லிங்கங்கள் இருப்பதுபோலவே, காசியிலும் பன்னிரு ஜ்யோதிர்லிங்கங்கள் இருக்கின்றன. கேதாரநாத்தில் உள்ள ஜ்யோதிர்லிங்கமாகக் கேதாரேச்வரர் வழிபடப்படுகிறார்.

இருப்பிடம்

B 6/102 கேதார் கட்டம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. ப்ரஸித்திபெற்ற இந்த இடத்திற்கு அன்பர்கள் ரிக்ஷாவில் செல்லலாம். அல்லது அன்பர்கள் ஸோனர்புரா வரை ரிக்ஷா அல்லது காரில் சென்று, அங்கிருந்து நடந்து சென்றும் அடையலாம். அன்பர்கள் கேதார கட்டம் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 3.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை திறந்திருக்கிறது. முதல் ஆரத்தி காலை 3.15 மணிக்கும், இரண்டாவது ஆரத்தி காலை 10.00 மணிக்கும், மூன்றாவது ஆரத்தி மாலை 5.30 மணிக்கும், சயன ஆரத்தி இரவு 10.30 மணிக்கும் நடைபெறுகின்றன.

இங்கு வழிபட ஏகாதசி, ப்ரதோஷம், பௌர்ணமி ஆகிய நாட்கள் மிகவும் விசேஷமானவையாகும். வருடத்திற்கொருமுறை அன்னாபிஷேகம் நடைபெறுகிறது.

திங்கட்கிழமைதோறும் கங்கையில் நீராடி, கேதாரேச்வரரை வழிபடுவது மிகவும் சிறந்தது. ச்ரவண மாதத்தில் வரும் திங்கட்கிழமைகளில் வழிபடுவது மிகவும் சிறந்தது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

செவ்வாய்கிழமையன்று ஏற்படும் அமாவாஸ்யை திதியில் கேதார கட்டத்தில் ச்ராத்த காரியங்களைச் செய்வது மிகவும் சிறந்தது. தமிழகத்தைச் சேர்ந்த குமாரஸ்வாமி மடத்தினரால் பூஜைகள் நடத்தப்படுகின்றன. விசேஷ பூஜைகள் செய்ய, அர்ச்சகரை முன்பே தொடர்பு கொள்ளுதல் நலம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீ டி. நாராயண சர்மா கோயிலின் அர்ச்சகராவார். அவரது செல் எண். (0)9839655172. குமாரஸ்வாமி மடத்தின் தொலைபேசி எண். 0542-2454064.

க்ருத்தி வாஸேச்வரர்

சிவபெருமான் ரத்னேச்வரரைப் பற்றி, பார்வதி தேவியிடம் கூறிக்கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் மஹிஷாஸுரனின் மகனான கஜாஸுரனை சிவகணங்கள் அடித்துக் கொண்டிருந்தனர். அவனுடைய காலடி பூமியில் பட்ட இடங்களிலெல்லாம் நிலநடுக்கம் ஏற்பட்டது போல் இருந்தது. அவனுடைய பெரிய கைகள் மரங்களை வேரறுத்துப் போட்டன. அவனுடைய பெருமூச்சு கடலில் பேரலைகளைத் தோற்றுவித்தது.

கஜாஸுரனை விட்டால், உலகில் மிகப் பெரிய கலகத்தை ஏற்படுத்திவிடுவான். காசியில் எந்தவிதமான கலகமும் ஏற்படுவதை சிவபெருமான் விரும்பவில்லை. கஜாஸுரன் வேகமாக சிவபெருமானை நோக்கி வந்தபோது, அவர் அவனது உடலைத் திரிசூலத்தைக் கொண்டு கிழித்து, வானத்தில் உயரத் தூக்கினார். சிவபெருமானின் கரங்களில் தான் உயிர் இழப்பது தனக்குக் கிடைத்த பேறு என்று கஜாஸுரன் சாகும் தருவாயில் கூறினான். எல்லா உயிரினங்களும் ஒரு நாள் இறந்துதான் ஆக வேண்டும், ஆனால் அந்த இறப்பே ஒரு வரமாக அமைவது என்பது அரிதாகும். தான் இறந்த பிறகு தன்னுடைய தோலை சிவபெருமான் உடுத்திக்கொள்ள அவருடைய ஸ்பரிசம் தன் உடலுக்கு எப்போதும் கிடைக்க வேண்டும் என்று கஜாஸுரன் ப்ரார்த்தனை செய்துகொண்டான்.

சிவபெருமான் அதற்கு இசைந்தார். மேலும் அவர் கூறினார்: அவிமுக்த க்ஷேத்திரமாகிய காசியில் கஜாஸுரன் உயிரிழந்திருப்பதால், அவனுடைய உடலே அதே இடத்தில் ஒரு பெரிய சிவலிங்கமாகிவிடும். அந்த லிங்கம் க்ருத்தி வாஸேச்வரர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

என்று அழைக்கப்படும். காசியில் உள்ள எந்த லிங்கத்தையும் விட க்ருத்திவாஸேச்வரர் பெரிய லிங்கமாக இருக்கும். உலக நன்மைக்காக, க்ருத்தி வாஸேச்வர லிங்கத்தில், தான் தன் பரிவாரங்களுடன் உறைந்திருப்பதாகவும் சிவபெருமான் கூறினார்.

பல்வேறு முற்பிறவிகளிலும், இந்தப் பிறவியிலும் செய்த பாவங்கள் அனைத்தும் புண்ணியச் செயல்களால் கழுவப்படும். ஆனால் க்ருத்திவாஸேச்வரரை வழிபட்ட மாத்திரத்தில் எல்லாப் பாவங்களும் அகலும். மற்ற இடங்களில் ஏழு கோடி ருத்ர ஜபம் செய்வதால் கிடைக்கும் பலன், க்ருத்தி வாஸேச்வரர் திருமுன்னால் ஒரு முறை ருத்ர ஜபம் செய்வதால் ஏற்படும். (காசி காண்டம், அத்யாயம் 68).

ப்ரஹ்ம வைவர்த்த புராணத்தின்படி, க்ருத்தி வாஸேச்வரர் காசியில் வாழ்பவர்களின் வாழ்வை பயனுடையதாக்குகிறார், இங்கு இறப்பவர்களுக்கு மோக்ஷம் அளிக்கிறார். கூர்ம புராணத்தின்படி, ஒரு ஜீவன் ஆயிரம் பிறவிகள் பிறந்திருந்தாலும் சரி, கீர்த்தி வாஸேச்வரரின் அருளால் அந்த ஜீவன் தளைகளிலிருந்து விடுவிக்கப்படும்.

காசி காண்டத்தின் ஒரு பகுதியில், காசியில் உள்ள லிங்கங்களைப் பற்றியும், அவற்றின் முக்தியளிக்கும் ஆற்றல் குறித்தும் பார்வதி தேவி அறிந்துகொள்ள விரும்பினாள். காசியில் கோடிக்கணக்கான லிங்கங்கள் இருப்பதாக சிவபெருமான் கூறினார். (காசி காண்டம், அத்யாயம் 73). அவற்றுள் பல ஸ்வம்பு லிங்கங்கள், மற்றவை பக்தர்களால் வேதோக்தமாக ஸ்தாபிக்கப்பட்டவை.

அவற்றுள் பதினான்கு முக்கியமான லிங்கங்கள் உள்ளன. அவற்றின் பெயரைச் சொல்வதாலேயே அன்பர்கள் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுவர். அந்த லிங்கங்களுள் நான்காவது க்ருத்தி வாஸேச்வரர்.

இடைப்பட்ட காலத்தில் முகாலாயர்கள் பல கோயில்களை அழித்தனர். காசியில் முக்கியமாக மூன்று கோயில்களை இடித்து நாசம் செய்தனர். விச்வேச்வரர், க்ருத்தி வாஸேச்வரர், பிந்து மாதவர் ஆகிய மூன்று கோயில்களும் அவர்களால் இடிக்கப்பட்டன.

க்ருத்தி வாஸேச்வரர் கோயில் கால பைரவர் கோயிலுக்கு வடக்குப்புறத்தில் அமைந்திருந்தது. அது அவுரங்கசீப்பால் இடிக்கப்பட்டது. அந்தக் கோயிலுக்கு அருகில் ஹம்ஸ தீர்த்தம் இருந்தது. அன்பர்கள் ஹம்ஸ தீர்த்தத்தில் நீராடி கீர்த்தி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வாஸேச்வரரை வழிபடுதல் மரபு.

கோயில் இடிக்கப்பட்டு வெகு காலத்திற்குப் பிறகு, ராஜா பட்னிமல் முன்பு கோயில் இருந்த இடத்திற்குத் தெற்குப்புறத்தில் தற்போதுள்ள கோயிலைக் கட்டியுள்ளார். தற்போதுள்ள கோயிலில் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

முன்பு இருந்த க்ருத்தி வாஸேச்வரர் கோயில் மிகப் பெரிய கோயிலாக இருந்தது. கோயில் இடிக்கப்பட்டு அந்த இடத்தில் மசூதி ஒன்றும் எழுப்பப்பட்டது. க்ருத்தி வாஸேச்வர லிங்கம் இருந்த இடத்தில் ஒரு நீரூற்று அமைக்கப்பட்டது. சில வருடங்களுக்கு முன்பு வரை அன்பர்கள் அந்த நீரூற்றுக்கு அருகில் சென்று சிவராத்ரி தினங்களில் வழிபட்டு வந்தன. மூன்று வருடங்களுக்கு முன்பு ஒரு பெரிய சிவலிங்கம் அந்த இடத்தில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அன்பர்கள் அங்கும் வழிபாடுகள் செய்து வருகின்றனர்.

இங்கு வழிபாடு செய்ய (அமாவாஸ்யைக்கு முன்பு வரும்) தேய்பிறை சதுர்தசி தினம் மிக முக்கியமான தினமாகக் கருதப்படுகிறது. சதுர்தசியன்று வ்ரதமிருந்து க்ருத்தி வாஸேச்வரரை வழிபடும் அன்பர்கள் வாழ்வில் மிக உயர்ந்த இன்பத்தை எய்துவர். மாக மாதத்தில் பூஜை/அர்ச்சனை முதலியவை செய்தல், சதுர்தசி, மற்றும் சித்ரா பௌர்ணமி ஆகிய தினங்களுக்கு காசி கண்டம் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. இந்த நாட்களில் பூஜை செய்வது அன்பர்களுக்கு மிகுந்த பலனைக் கொடுக்கும்.

இருப்பிடம்

கே - 46/23 என்ற எண்ணில் ம்ருத்யுஞ்ஜய மஹாதேவர் கோயிலுக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ளது. பழைய நூல்களில் ஹம்ஸ தீர்த்தம் என்று அழைக்கப்பட்டது, தற்போது ஹர தீர்த்தம் என்ற பெயருடன் விளங்கி வருகிறது. முன்பு குளம் இருந்த இடத்தில் தற்போது கட்டிடங்கள் எழுப்பப்பட்டுவிட்டன. பிஷேச்வர் கஞ்ஜ் என்ற புகழ்பெற்ற இடத்திலிருந்து கோயிலை அடைதல் எளிது. அங்கிருந்து சைக்கிள் ரிக்ஷாவில் கோயிலுக்குச் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 4.00 மணி முதல் பகல் 1.30 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. மங்கள ஆரத்தி காலை 4.00

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மணிக்கு நடைபெறுகிறது. காலை 8.00 மணி, பகல் 12.00 மணி மற்றும் இரவு 8.00 மணிக்கும் ஆரத்தி நடைபெறுகிறது. சயன ஆரத்தி இரவு 10.00 மணிக்கு நடைபெறுகிறது.

வழிபாடுகள் செய்வதற்கு, அர்ச்சகரை முன்பே தொடர்பு கொள்ளலாம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீதினேஷ் சந்த்ர கௌர் கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய 9369004142 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

ம்ருத்யுஞ்ஜயேச்வரர் (ம்ருத்யுஞ்ஜய மஹாதேவ்)

பார்வதி தேவி காசியில் உள்ள பல்வேறு தீர்த்தங்களையும், லிங்கங்களையும் பற்றிக் கூறுமாறு சிவபெருமானிடம் வேண்டிக் கொண்டாள். சிவபெருமானும் மகிழ்வுடன் கூறத் தொடங்கினார். (காசி கண்டம், அத்யாயம் 97)

காலேச்வரருக்கு அருகில் ம்ருத்யுஞ்ஜயேச்வரர் வீற்றிருக்கிறார். இந்த லிங்கம் அன்பர்களுக்கு ஏற்படும் அகால மரணத்தைத் தடுக்கும் சக்தி வாய்ந்தது. லிங்கத்திற்கு அருகில் காலோதக கூபம் (கிணறு) உள்ளது. இதன் நீர் எல்ாவித நோய்களையும் தீர்க்க வல்லது.

ம்ருத்யுஞ்ஜயேச்வரருக்கு அபம்ருத்யு ஹரேச்வரர் என்று மற்றொரு பெயரும் உண்டு (காசி கண்டம).

இருப்பிடம்

கே 52/39, வ்ருத்த கால் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை பிசேச்வர் கஞ்ஜ்/ ஜி.பி.ஓ வழியாக ரிக்ஷாவில் செல்லலாம்.

அன்பர்கள் இந்த லிங்கத்தை ம்ருத்யுஞ்ஜய மஹாதேவ் என்று அழைக்கின்றனர், இது மிகவும் ப்ரஸித்திபெற்ற இடமாகும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 4.00 மணி முதல், நள்ளிரவு 12.00 மணி வரை திறந்திருக்கிறது. அலங்காரத்தின்போது, சில சமயம் கோயில் கதவு மூடியிருக்கும். காலை 5.30 மணிக்கும், மாலை 6.30 மணிக்கும், இரவும் ஆரத்தி நடைபெறுகின்றன.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ம்ருத்யு என்றால் மரணம் என்று பொருள், ஜய என்றால் அதனை வெற்றிகொள்வது என்று பொருள். மரணத்தை வெல்பவர் ம்ருத்யுஞ்ஜயர்.

ஜாதகத்தில் ஆயுள் குறித்த ப்ரச்சனைகள், அகால மரணக் குறிப்புகள் தென்பட்டால், இந்தக் கோயிலுக்கு வந்து மஹா ம்ருத்யுஞ்ஜய ஜபம் செய்வது அன்பர்களின் வழக்கம், பலர் இதில் வெற்றி கண்டுள்ளனர்.

கோயிலின் அர்ச்சகர்

இங்கு விசேஷ பூஜைக்கு திரு சைலேஷ் சாஸ்திரி என்பவரிடம் தொடர்பு கொள்ளலாம். செல் நம்பர் 9889145353

ஓங்காரேச்வரர்

பார்வதி தேவி சிவபெருமானிடமிருந்து ஓங்காரேச்வரரைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்பினாள். சிவபெருமான் கூறத் தொடங்கினார். (காசி காண்டம், அத்யாயம் 73).

ப்ரஹ்மதேவர் பல வருடங்கள் கடும் தவம் இயற்றி வந்தார். அப்பொழுது பூமியைப் பிளந்து கொண்டு ஒளிவெள்ளமாக ஒரு தெய்வீக சக்தி வெளிக் கிளம்பியது. அந்த சக்தி ஒரு லிங்க உருக்கொண்டது. வேதங்களின் ஸாரமாக, அகார, உகார, மகார எழுத்துக்களைக் குறிப்பதாக அந்தத் தெய்வீக சக்தி விளங்கியது. அந்தத் தெய்வீக ஒளியில், உலகை ஆளும் ஓங்காரத்தை ப்ரஹ்மதேவர் கண்டார்.

நான்கு கொம்புகள், ஏழு கைகள், இரண்டு தலைகளுடன் கூடிய ஒரு உருவத்தை ப்ரஹ்மதேவர் கண்டார். வேதங்கள், புராணங்கள், (அகார, உகார, மகார, நாத, பிந்து ஆகியவற்றைக்) பஞ்ச ப்ரஹ்மம் ஆகியவற்றுடன் கூடிய தெய்வீக ஒளியைக் கண்டார், பஞ்சாக்ஷர லிங்கத்தை வழிபட்டார். தன் எதிரில் தோன்றிய சிவபெருமானைப் போற்றித் துதித்தார்.

ப்ரஹ்மதேவர் சிவபெருமானைப் போற்றித் துதித்ததை விரிவாக எடுத்துக் கூறுகிறது காண்டம். சிவபெருமான், ப்ரஹ்மதேவருக்கு வரம் ஒன்றை அளித்தார். தற்போது தோன்றியுள்ள சிவலிங்கத்தில் சிவபெருமான் எப்பொழுதும் வீற்றிருக்க வேண்டும், அது ஓங்காரேச்வரர் என்ற திருப்பெயருடன் விளங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். சிவபெருமான்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அதற்கு இசைந்தார், இந்த சிவலிங்கம் (அகார, உகார, மகார, நாத, பிந்து) ஆகியவற்றைக் குறிக்கும் சிவபஞ்சாயதனம் என்ற பெயருடனும் விளங்கும் என்று கூறினார்.

மத்ஸ்யோதரி தீர்த்தத்தில் நீராடி, ஓங்காரேச்வரரை வழிபடுபவர்கள் மறுபிறவி குறித்துப் பயம் கொள்ள வேண்டாம். ஓங்காரேச்வரரை வழிபடுபவர்கள், அச்வமேத யாகம் செய்த பலன் பெறுவர். ஓங்காரேச்வரரை வழிபடுவதால், ஒரு லக்ஷம் ருத்ர ஜபம் செய்த புண்ணியமும், உலகிலுள்ள எல்லா சிவலிங்கங்களையும் தரிசித்த புண்ணியமும் கிடைக்கும்.

காசியைத் தவிர வேறிடத்தில் இறக்க நேரிட்டாலும், ஓங்காரேச்வரரின் பக்தர் முக்தி அடைவார். ஓங்காரேச்வரரிலிருந்து வெளிப்படும் தெய்வீக ஆற்றல், ப்ரஹ்மதேவர் படைப்புத் தொழிலை ஆற்றுவதற்கு அருள்புரியும் என்று சிவபெருமான் கூறினார். வேண்டிய வரங்களையெல்லாம் ப்ரஹ்மதேவருக்கு அளித்துவிட்டு, அந்த லிங்கத்திற்குள் மறைந்தார் சிவபெருமான்.

முன்பு சிவ பஞ்சாயதனத்தைக் குறிக்கும் ஐந்து லிங்கங்கள் : அகாரேச்வரர், ஓங்காரேச்வரர், மகாரேச்வரர், நாதேச்வரர், பிந்து லிங்கம் இருந்தன. தற்போது அகாரேச்வரர், ஓங்காரேச்வரர், மகாரேச்வரர் ஆகிய மூன்று லிங்கங்களே உள்ளன.

ஓங்காரேச்வர லிங்கம் கபிலேச்வரர், நாதேச்வரர் என்ற பெயர்களாலும் வழங்கப்படுகிறது. ஓங்காரேச்வரர் அமைந்திருக்கும் மத்ஸ்யோதரி தீர்த்தத்தில், மழைக்காலத்தில் கங்கை நீர் வந்து ஸங்கமிக்கிறது.

காசி காண்டத்தின் 73 வது அத்யாயத்தில், அஷ்டமி மற்றும் சதுர்தசி நாட்களில் மத்ஸ்யோதரியில் நீராடி, ஓங்காரேச்வரரை வழிபடுவதால், எல்லாப் பாவங்களும் நீங்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஓங்காரேச்வரரை வழிபடுபவர் பாக்கியசாலி, அவர்கள் ஸ்வர்கத்தை அடைவது திண்ணம். இந்தக் கோயிலில் ஒருவர் வழிபடுவதைக் கண்டால், அவர்களது பித்ருக்கள் பரமானந்தம் அடைவர்.

இருப்பிடம்

ஏ-33/23, படனி டோலா, என்ற முகவரியில் மச்சோதரிக்கு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



பகீரதேஸ்வரர்

ப்ரஹமேஸ்வரர்

சண்டீஸ்வரர்

சந்திரேஸ்வரர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



தசாஸ்வமேதேஸ்வரர்



தர்மேஸ்வரர்

ஈசானேஸ்வரர்



கணேஸ்வரர்
(ராமேஸ்வரர்)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கங்கேஸ்வரர்

கபஸ்தீஸ்வரர்

கருடேஸ்வரர்

கவுதமேஸ்வரர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கங்கேஸ்வரர்

கபஸ்தீஸ்வரர்



கருடேஸ்வரர்



கவுதமேஸ்வரர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வடக்குப்புறத்தில் அமைந்துள்ளது. காசி காண்டத்தில் கூறப்பட்டுள்ள மத்ஸ்யோதரி தீர்த்தம் தற்போது முழுவதுமாக வற்றிவிட்டது, மச்சோதரி என்ற பெயரால் இந்தப் பகுதி வழங்கப்படுகிறது. மச்சோதரிக்கு இடதுபுறத்தில் சென்றால், த்ரிலோசன் போலீஸ் சௌகி வரும், இங்கிருந்து இடதுபுறம் திரும்பிச் சென்றால் ஓங்காரேச்வரரை தரிசிக்கலாம்.

அகாரேச்வரர் ஏ-33/47 என்ற எண்ணிலும், மகாரேச்வரர் ஏ-33/25 என்ற எண்ணிலும் அருகிலேயே உள்ளனர்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் 11.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 10.00 வரையிலும் திறந்திருக்கிறது. காலையில் ஆரத்தி நடைபெறுகிறது. வைகாசி மாதம் இங்கு வழிபடுவதற்குச் சிறந்த மாதமாகும். சுக்லபக்ஷ சதுர்தசி அன்று வருடாந்தர ச்ருங்கார் எனப்படுகின்ற அலங்கார ஸேவை நடைபெறுகிறது. மேற்கூறிய நாளில் வ்ரதமிருந்து ஓங்காரேச்வரரை வழிபடும் அன்பர்கள் அறிவுச்செல்வம் பெற்றுத் திகழ்வர்.

மத்ஸ்யோதரி தீர்த்தம் தற்போது வற்றிவிட்டதால், அன்பர்கள் கங்கை நீர் கொண்டு ஓங்காரேச்வரருக்கு அபிஷேகம் செய்யலாம்.

விசேஷ பூஜைகள் செய்ய அர்ச்சகரை முன்பே தொடர்பு கொள்ளுதல் நலம்.

கோயிலின் அர்ச்சகர்

பண்டித சிவதூத் பாண்டே கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9307750377, (0)9305818473 என்ற எண்களில் தொடர்புகொள்ளலாம்.

விச்வேச்வரர் (விச்வநாதர் கோயில்)

விச்வேச்வரர் கோயில் பன்னிரு ஜ்யோதிர்லிங்கங்களுள் ஒன்றாகும். காசி கண்டம், சிவ புராணம் முதலிய புராணங்களில் இந்தக் கோயிலைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. காசி கண்டத்தின்படி, இந்தக் கோயிலுக்கு மோக்ஷ லக்ஷ்மி விலாஸ் என்று பெயர். ஐந்து மண்டபங்கள் கொண்ட இந்தக் கோயிலின் முக்கிய மண்டபமான கர்ப க்ருஹத்தில் விச்வேச்வரர் லிங்கம் உள்ளது. விச்வேச்வரர் லிங்கம் ஸ்வயம்பு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

லிங்கமாகும்.

தெற்கில் முக்தி மண்டபமும், மேற்கில் ச்ருங்கார மண்டபமும், வடக்கில் ஐச்வர்ய மண்டபமும், கிழக்கில் ஞான மண்டபமும் உள்ளது. காசி காண்டத்தின் 97 வது அத்யாயத்தின்படி, சிவபெருமானும், பார்வதி தேவியும் தேவர்கள் புடைசூழ முக்தி மண்டபத்திற்கு வந்து, அங்கிருந்து ச்ருங்கார மண்டபத்தில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்தனர்.

விச்வேச்வர லிங்கத்தின் பெருமையைச் சிவபெருமான் தன் சொற்களால் கூறுகிறார் :

விச்வேச்வர லிங்கத்தைத் தொட்டுப் பூஜிப்பதால், முன் இரண்டு தலைமுறைகளில் செய்த பாவங்கள் அகலும்.

விச்வநாதர் கோயில் கர்ப்பக்ருஹத்திற்குள் நுழைந்து அன்பர்கள் தாங்களே பூஜை செய்யலாம். தூய பக்தியுடன், சிவலிங்கத்திற்குப் புனித நீரால் அபிஷேகம் செய்து ஒரு மலரால் பூஜித்தால், நூறு தங்க மலர்களால் பூஜை செய்த பலன் கிடைக்கும்.

சிவபெருமான் இந்தச் சிறப்புக்களைக் கூறிக்கொண்டிருந்தபோது, சிவபெருமானுக்கு ஒருபுறம் இந்த்ரனும், மறுபுறம் ஸப்த ரிஷிகளும் வீற்றிருந்தனர். (காசி காண்டம், அத்யாயம் 99, 5 வது பத்தி). இன்றும் கூட, ஏழு ரிஷிகளின் பரம்பரையினராகக் கருதப்படும் ஏழு அர்ச்சகர்கள் நாள்தோறும் இரவு 7.00 - 7.30 மணிக்கு ஸப்த ரிஷி பூஜை/தீபாராதனை செய்கின்றனர். இந்தத் தீபாராதனையின் வீடியோ பதிவுகளை www.shrikashivishwanath.org என்ற வலைத்தளத்தில் காணலாம். காசிக்கு வருபவர்கள் எல்லோரும் இந்தத் தீபாராதனையை மிகவும் விரும்பிக் கண்டு, தரிசித்து ஆனந்தம் பெறுகின்றனர்.

காசி காண்டம், பத்ம புராணம், லிங்க புராணம் முதலிய பல்வேறு நூல்கள், பலவிதமான பூஜைகள் விவரித்துக் கூறப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் முறையாகச் செய்வது தற்போதைய சூழ்நிலையில் இயலாத காரியமாகும்.

கங்கையில் மணிகர்ணிகா கட்டத்தில் நீராடி, விச்வநாதரைத் தரிசிப்பதால் ஒரு மனிதரின் எல்லாப் பாவங்களும் நீங்குகின்றன.

காசி காண்டத்தின் பல்வேறு பகுதிகளில், பல்வேறு அத்யாயங்களில் விச்வநாதரின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. அவற்றை முழுவதும் கூறுவது இயலாத காரியமாகும். உலகம் முழுவதும் பல அன்பர்கள் மிகுந்த பக்தி ச்ரத்தையுடன் விச்வநாதரை வழிபடுகின்றனர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருப்பிடம்

C/K 35/19, சௌக், வாராணசி என்ற முகவரியில் அமைந்துள்ளது. தசாச்வமேத்-விச்வநாத கல்லி எனப்படும் சந்தில் சென்றால் விச்வநாதர் கோயிலை அடையலாம். கோயிலை அடைய மூன்று வழிகள் இருக்கின்றன. தசாச்வமேத் முதல் வழி, பன்ஸ்படக் இரண்டாவது வழி, ஞான வாபி வழியாக மூன்றாவது வழி ஆகும். எது சுலபமான வழி என்று கூறுவது கடினமாகும், காவல்துறையினரின் கடும் கட்டுப்பாட்டில் இருப்பதால், உள்ளே விடும் வழிகள் மாறிக்கொண்டே இருக்கும். திங்கட்கிழமைகள் மற்றும் முக்கிய தினங்களில் ஞான வாபி வழியாக உள்ளே சென்று, பன்ஸ்படக் வழியாக வெளியே விடுவர். சந்தின் உள்ளே கோயில் இருப்பதால், வழிதெரிந்தவர்களுடன் செல்வது நலம்.

வழிபாட்டு முறைகள்

ஓரிரண்டு மணி நேரங்கள் தவிர, மீதி நாள் முழுவதும் கோயில் திறந்திருக்கிறது. காலை 2.30 மணி முதல் 4.00 மணி வரை மங்கள ஆரத்தியும், 11.30 மணி முதல் 12.30 மணி வரை போக் ஆரத்தியும் நடைபெறுகின்றன. இரவு 7.00-7.30 மணிக்கு ஸப்த ரிஷி பூஜை நடைபெறுகிறது, அதனைத் தொடர்ந்து 9.00 மணிக்கு அலங்காரமும், இரவு 11.00 மணிக்கு சயன ஆரத்தியும் நடைபெறுகின்றன. கோடைக் காலத்திலும், குளிர் காலத்திலும் இந்த நேரங்களில் சிறு மாற்றங்கள் இருக்கும்.

காசியில் உள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரத்தைச் சேர்ந்தவர்களால் பல்வேறு காலங்களில் பல்வேறு பூஜைகள் செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டிலிருந்து வருபவர்கள், இரண்டு நாட்களாவது தங்கியிருந்து, நாட்டுக்கோட்டை சத்திரத்தினரால் செய்யப்படும் பூஜைகளில் கலந்துகொண்டு செல்வது நலம்.

கோயிலின் அர்ச்சகர்கள்

1983 ம் ஆண்டு முதல், கோயிலின் நிர்வாகம், மாவட்ட ஆட்சித்துறையினரால் நடத்தப்படுகிறது. கோயில் ஒரு நெரிசலான பகுதியில் உள்ளது. அன்பர்களின் வசதிக்காக ஒரு சுற்றுச்சுவர் இடிக்கப்பட்டு அதிக இடவசதி செய்யப்பட்டுள்ளது. www.shrikashivishwanath.org என்ற வலைத்தளத்தில் கோயிலைப் பற்றியும், விசேஷ பூஜைகள் பற்றியும் படித்து அறிந்து கொள்ளலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வ்ருத்த காலேச்வரர்

காசி காண்டத்தின் 24வது அத்யாயத்தின்படி, முன்னொரு காலத்தில் வ்ருத்த காலன் என்ற பெயருடைய ஒரு தீவிர பக்தர் இருந்தார். அவர் முற்பிறவியில் சிவசர்மா என்ற பெயருடன் மதுரையில் வசித்து வந்தார். அவர் ஹரித்வாரத்தில் இறந்து, பின் வைகுண்டத்தை அடைந்தார். அவரது புண்ணிய பலனால், மீண்டும் மனிதப் பிறவி பெற்று, காசியை அடைந்தார். அவர் ஒரு லிங்கத்தை வழிபட்டு வந்தார். அந்த லிங்கத்திற்கு வ்ருத்த காலேச்வரர் என்று பெயர்.

வ்ருத்த காலர் சிவலிங்கத்தை ஸ்தாபித்துக் கோயில் ஒன்றை எழுப்பினார். ஆனால் மஹாதேவரே கோயில் கட்டியதாக கூறி வந்தார். இதிலிருந்து நாம் செய்த நற்செயல்கள் எல்லாவற்றிற்கும் தம்பட்டம் அடித்துக் கொள்ளக் கூடாது என்ற பண்பை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நமக்குக் கிடைக்க வேண்டிய அங்கீகாரம், கௌரவம் அனைத்தும் கிடைத்தே தீரும் என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும்.

இந்தக்கோயில் முன்பு தாராநகர் என்ற பகுதியில் இருந்தது. தற்போது அந்தக் கோயில் இல்லை. வேறொரு இடத்தில் காலேச்வரர் என்ற பெயருடன் லிங்கம் ஸ்தாபிக்கப்பட்டு கோயில் எழுப்பப்பட்டது. சில காலம் கழித்து, முன்பு கோயில் இருந்த இடத்திலேயே மீண்டும் ஒரு கோயில் எழுப்பப்பட்டது. இரண்டு கோயில்களையும் பிரித்து அறிந்துகொள்வதற்காக வ்ருத்த காலேச்வரர் என்ற பெயர் வைக்கப்பட்டது.

காசி கண்டத்தின்படி, வ்ருத்த காலேச்வரருக்குப் பூஜை, அர்ச்சனை செய்பவர்கள் வேண்டிய வரங்களெல்லாம் பெறுவர். எல்லாவித நோய்களிலிருந்தும், வறுமையிலிருந்தும் நீங்கியவராய் ஆனந்தமாக வாழ்வர். அருகில் எல்லாவித நோய்களுக்கும் மருந்தாகும் காலோதக தீர்த்தம் உள்ளது.

ப்ரஹ்ம வைவர்த புராணத்திலும், லிங்க புராணத்திலும் வ்ருத்த காலேச்வரர் லிங்கம் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

இருப்பிடம்

கே-52/39 என்ற எண்ணில், வ்ருத்த கால் பகுதியில், ம்ருத்யுஞ்ஜயேச்வரர் கோயில் வளாகத்தில் உள்ளது. ரிக்ஷா அல்லது ஆட்டோ ரிக்ஷாவில் பிஷேச்வர்கஞ்ஜ் என்ற மார்க்கெட் பகுதி வரை சென்று, அங்கிருந்து நடந்து செல்லலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தாங்களே அபிஷேகமும், பூஜையும் செய்யலாம். விசேஷ பூஜைகள் செய்ய, அர்ச்சகரை முன்பே தொடர்பு கொள்ளுதல் நலம்.

கோயிலின் அர்ச்சகர்

இங்கு விசேஷ பூஜைக்கு திரு சைலேஷ் சாஸ்திரி என்பவரிடம் தொடர்பு கொள்ளலாம். செல் நம்பர் 9889145353

கோள்களால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட சிவன் கோயில்கள்

கபஸ்தீச்வரர்

ஸூர்ய பகவான், (பஞ்சநத தீர்த்தம்) பஞ்சகங்கா கட்டத்தில் ஒரு சிவலிங்கத்தையும், தேவியின் திருவுருவத்தையும் ப்ரதிஷ்டை செய்து தவம் புரிந்து வந்தார்.

ஸூர்ய பகவான் கடுமையாகத் தவம் செய்ததால், சுற்றுப்புறம் எங்கும் வெப்பம் சூழத் தொடங்கியது. ஸூர்ய பகவானின் உருக்கமான தவத்தினால் சுற்றுப்புறம் எங்கும் உஷ்ணம் பரவியது. ஸூர்ய கதிர்களின் உஷ்ணம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. உயிரினங்களால் அந்த வெப்பத்தைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை, அதனால் உயிர் வாழ்க்கை ஸ்தம்பித்தது.

சிவபெருமானும், பார்வதி தேவியும் ஸூர்ய பகவான் முன் தோன்றினர். சிவபெருமான் ஸூர்யனை லேசாகத் தொட்டவுடன் வெப்பம் குறைந்தது. கண்களைத் திறந்த ஸூர்ய பகவான், சிவபெருமானையும் பார்வதி தேவியையும் பல்வேறு துதிகளால் போற்றினார். மனம் மகிழ்ந்த இறைவனும் இறைவியும் ஸூர்யனுக்குப் பல்வேறு தெய்வீக வரங்களை அளித்தனர்.

ஸூர்ய பகவானால் வழிபடப்பட்ட லிங்கம் கபஸ்தீச்வரர் என்று வழங்கப்பெறும் என சிவபெருமான் கூறினார். பஞ்சநத தீர்த்தத்தில் நீராடி, கபஸ்தீச்வரரை வழிபடுபவர்கள் அனைத்துப் பாவங்களும் நீங்கப்பெற்று மோக்ஷத்தை அடைவர். (காசி காண்டம், அத்யாயம் 49).

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருப்பிடம்

கே 24/34, மங்கள கௌரி கோயில், பஞ்சகங்கா கட்டம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் பைரோநாத் (காலபைரவர்) கோயில் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து சந்துகளில் நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம். அல்லது பஞ்சகங்கா கட்டம் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரையிலும், பிற்பகல் 3.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது. கோயில் மூடுவதற்குச் சற்று முன்பாக சயன ஆரத்தி நடைபெறுகிறது.

ஜாதகத்தில் ஸுர்யனின் இருப்பிடத்தால் ஏதேனும் தோஷம் உள்ளவர்கள், ஸுர்யனால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட இந்த லிங்கத்தை வந்து தரிசித்து, வழிபாடுகள் செய்வது சிறந்தது.

கோயிலின் அர்ச்சகர்கள்

இங்கு விசேஷ பூஜைக்கு திரு சிவேஷ் சர்மா என்பவரிடம் தொடர்பு கொள்ளலாம். செல் நம்பர் 9838044103

சந்த்ரேச்வரர்

காசி காண்டத்தின்படி, சிவபெருமானை வழிபடுவதற்காகச் சந்த்ரனால் ஸ்தாபிக்கப்பட்டது இந்த லிங்கம். சந்த்ரன் சந்த்ர கூபம் என்றொரு கிணற்றையும் ஏற்படுத்தியுள்ளார். சந்த்ரேச்வரர் நவக்ரஹ லிங்கங்களுள் ஒன்று. நவக்ரஹ யாத்திரை மேற்கொள்பவர்கள் சந்த்ரேச்வர லிங்கத்திற்கு வழிபாடுகளைச் செய்கிறார்கள்.

இந்த லிங்கத்தை ஸ்தாபித்த பிறகு, சந்த்ரன் சிவபெருமானைக் குறித்துக் கடுந்தவம் இயற்றினார். இது பல வருடங்கள் தொடர்ந்தது. அதன் பிறகு, சிவபெருமான் அவருக்குக் காட்சியளித்து அருள்புரிந்தார். இந்த லிங்கம் நிர்மாணம் செய்யப்பட்டுள்ள இடம் ஒரு சக்தி பீடமாகும் என்று தெரிவித்தார். பௌர்ணமி அன்று சந்த்ரேச்வரரை வழிபடுபவர்கள் வாழ்வில் அனைத்து வளங்களும், மகிழ்ச்சியும் பெறுவர் என்று கூறினார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திங்கட்கிழமை அன்று வரும் அமாவாஸ்யையும் சந்த்ரேச்வரரை வழிபடுவதற்கு மிக முக்கியமான நாளாகும். அன்பர்கள் த்ரயோதசி அன்று சந்த்ரேச்வரரை வழிபட்டு, சதுர்தசியன்று உபவாஸம் இருப்பது வழக்கம். பிறகு, ஸோமவார (திங்கட்கிழமை) அமாவாஸ்யை அன்று, சந்த்ர கூபத்தில் நீராடி பித்ருக்களுக்கு ச்ராத்த கர்மாக்களைச் செய்ய வேண்டும். இதனால் அவர்கள் வாழ்வில் வளமும், பித்ருக்களின் ஆசிகளும் பெறுவர்.

பித்ரு கர்மாக்களைச் செய்ய முடியாவிட்டாலும், சந்த்ர கூபத்தின் நீரையாவது தொட வேண்டும். தொட முடியாவிட்டாலும், கண்ணால் பார்க்கவாவது வேண்டும்.

மேலே குறிப்பிட்டபடி வழிபாடுகளைச் செய்துவிட்டு, துறவிகளுக்கு அன்னதானம் செய்ய வேண்டும். சித்ரா பௌர்ணமியன்று சந்த்ரேச்வரரை வழிபடுதல் மிகுந்த சிறப்பு வாய்ந்ததாகும். சந்த்ரேச்வரரின் தீவிர பக்தர், காசியில் அல்லாமல் வேறு எங்காவது உயிர் நீத்தாலும்,அவர் ஸ்வர்கத்தை அடைவார். (காசி காண்டம், அத்யாயம் 14)

சந்த்ரேச்வர லிங்கத்தை வழிபடுவதால் உள்ள அமைதியும், தெளிந்த அறிவும் ஏற்படும். ஜாதகத்தில் சந்த்ரனால் ஏற்படும் க்ரஹ தோஷம் நீங்க, சந்த்ரேச்வரருக்கு விசேஷ பூஜைகள் செய்ய வேண்டும்.

இருப்பிடம்

C/K 7/124, ஸித்தேச்வரி, சௌக், வாராணசி என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம்.அல்லது ஸிந்தியா காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை திறந்திருக்கிறது. காலை 10.00 மணி முதல் இரவு 9.00 வரை கோயில் திறந்திருக்கிறது. வழக்கமான பூஜைகள் அர்ச்சகரால் செய்யப்படுகின்றன. சிவராத்ரீ மற்றும் சில ஏகாதசி தினங்களில் விசேஷ பூஜைகள் நடைபெறுகின்றன.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீதுரோணர் கோயிலின் அர்ச்சகராவார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மங்களேச்வரர்

ஒருமுறை சிவபெருமான் தேவியைப் பிரிந்ததால் மிகுந்த துக்கத்தில் இருந்தார். அவரது நெற்றியிலிருந்து ஒரு துளி வியர்வை பூமியில் விழுந்தது. வியர்வைத் துளியும், பூமியும் இணைந்ததால் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையைப் பூமித்தாய் வளர்த்து வந்தாள். பூமித்தாயின் சேர்க்கையினால் பிறந்ததால், அவன் பௌமகுமாரன் எனப்பட்டான். அந்த மைந்தன் காசிக்கு வந்து பஞ்ச முத்ரா சக்தி பீடம் என்ற சக்தி பீடத்தை அடைந்தான். அங்கு சிவலிங்கம் ஒன்றை ஸ்தாபித்து, கடுந்தவம் புரிந்து வந்தான்.

பல காலம் கழித்து, சிவபெருமான் அவனுக்குக் காட்சிகொடுத்து, அங்காரகன் என்ற பெயரையும், மஹாக்ரஹம் என்ற பட்டத்தையும் தந்தருளினார். (நவக்ரஹங்களில் மஹாக்ரஹம் என்று கூறப்படுவது செவ்வாய்/அங்காரகன்).

செவ்வாய்கிழமையும் சதுர்த்தியும் சேர்கின்ற நாளில் (அங்காரக சதுர்த்தியன்று) அங்காரகனால் ஏற்படுத்தப்பட்ட லிங்கமான மங்களேச்வரருக்கு பூஜை செய்பவன் எல்லையில்லா வளமும் ஆனந்தமும் பெறுவான் என்று சிவபெருமான் கூறினார். (காசி காண்டம், அத்யாயம் 17).

ஜாதகத்தில் செவ்வாய்தோஷம் உள்ளவர்கள் இங்கு வந்து வழிபடுதல் மிகுந்த பலனளிக்கும்.

செவ்வாய்கிழமையை பௌமவாஸர: என்று ஸம்ஸ்க்ருதத்தில் குறிப்பிடுகின்றனர். மங்களேச்வரருக்கு அங்காரேச்வரர் என்றும் ஒரு பெயர் உண்டு.

இருப்பிடம்

C/K 7/158, ஸிந்தியா காட், ஆத்ம வீரேச்வரர் கோயில் உட்புறம் என்ற முகவரியில் அமைந்துள்ளது. இந்த இடத்தை அடைய படகில் ஸிந்தியா காட் வரை செல்லலாம். அல்லது சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து சந்துகள் வழியாக நடந்து சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் 11.30 மணி வரையிலும், பகல் 12.30 மணி முதல் இரவு 9.30 மணி வரையிலும் திறந்திருக்கிறது. இரவு 7.00 மணி முதல் 8.30 மணி வரை விசேஷ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆரத்தி நடைபெறுகிறது. விசேஷ பூஜைகள் செய்ய அர்ச்சகரை முன்பே தொடர்புகொள்ள வேண்டும்.

புதேச்வரர்

காசி காண்டத்தின்படி, ஒரு சமயம் சந்த்ரன் ப்ருஹஸ்பதியின் மனைவியான தாராவின் மீது காதல் கொண்டான். தேவர்கள் கண்டித்ததையும் பொருட்படுத்தாமல், தாராவைக் கவர்ந்து சென்றான். பல முறை கெஞ்சிக் கேட்ட பிறகும், தாராவைத் திருப்பி அனுப்பவில்லை.

ருத்ர தேவரிடம் விஷயம் கூறப்பட்டது. அவர் பினாகம் என்ற தம் ஆயுதத்தினால் சந்த்ரனைத் தாக்கினார். சந்த்ரனும் எதிர்த்தான். முடிவில் தாரா சந்த்ரனிடமிருந்து பிரிக்கப்பட்டு, ப்ருஹஸ்பதியிடம் ஒப்படைக்கப்பட்டாள்.

தாரா கர்ப்பமாக இருப்பதை ப்ருஹஸ்பதி அறிந்தார். கருவைக் கலைத்துவிடும்படி ப்ருஹஸ்பதி கூற, அவள் அவ்வாறே தோட்டத்தில் செய்தாள். ஆனால் அதற்குள் குழந்தை முழு உருவம் பெற்றுவிட்டது. குழந்தை மண்ணைத் தொட்டவுடன் அது பிறந்த விஷயம் தேவர்கள் அனைவருக்கும் தெரிந்துவிட்டது. எல்லோரும் தாராவிடம் குழந்தையின் தந்தை யார் எனக் கேட்க, அவள் மௌனமாக இருந்தாள்.

இதற்கிடையில், மிகவும் புத்திசாலியாக விளங்கிய அந்தப் பிறந்த குழந்தை, உண்மையைக் கூறவில்லையென்றால் சபித்துவிடப் போவதாகத் தாயிடம் கூறியது. முடிவில் சந்த்ரனே குழந்தையின் தந்தை என்று தாரா தெரிவித்தாள். மிகவும் புத்திசாலியான அந்தக் குழந்தை புதன் என்று அழைக்கப்பட்டான். புதன் சந்த்ரனிடம் அனுமதி பெற்று, காசிக்கு வந்து சிவபெருமானை வழிபட்டு வந்தார்.

காசியில் லிங்கம் ஒன்றை ஸ்தாபித்துப் பலகாலம் தவம் செய்து வந்தார். சிவபெருமான் அவருக்குக் காட்சி கொடுத்து, அவரால் வழிபடப்பட்ட லிங்கம் புதேச்வரர் என்று அழைக்கப்பெறும் என்றும், புதேச்வரரை வழிபடும் அன்பர்கள் மிக உயர்ந்த அறிவாற்றலைப் பெறுவர் என்றும் கூறியருளினார். (காசி காண்டம், அத்யாயம் 15)

இருப்பிடம்

C/K 7/158, ஸிந்தியா காட், ஆத்ம வீரேச்வரர் கோயிலின் உள்ளே என்ற முகவரியில் அமைந்துள்ளது. இந்த இடத்தை ஸிந்தியா காட் வழியாக படகிலும் சென்று அடையலாம். அல்லது சௌக் வரை ரிக்ஷாவில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சென்று, அங்கிருந்து நடந்து சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.00 மணி முதல் 11.30 மணி வரையிலும், மதியம் 12.30 மணி முதல் இரவு 9.30 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. மாலை 7.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை விசேஷ ஆரத்தி நடைபெறுகிறது. விசேஷ பூஜைகள் செய்ய அர்ச்சகரை முன்பே தொடர்புகொள்ளுதல் நலம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீ முன் முன் குரு கோயிலின் அர்ச்சகர் ஆவார். விசேஷ பூஜைகள் செய்ய 9792820159 என்ற எண்ணில் அவரை தொடர்பு கொள்ளலாம்.

ப்ருஹஸ்பதீச்வரர்

ப்ருஹஸ்பதி அல்லது குரு அங்கிர மஹரிஷியின் புதல்வர் ஆவார். அவர் நற்குணங்கள் நிரம்பப்பெற்றவராக, பெரியோர்களிடம் மரியாதை மிக்கவராக விளங்கினார்.

அவர் காசிக்கு வந்து சிவலிங்கம் ஒன்றை ஸ்தாபித்து நீண்ட காலம் வழிபட்டு வந்தார். சிவபெருமான் அந்த லிங்கத்திலிருந்து ஜோதி வடிவில் அவருக்குக் காட்சியளித்தார்.

சிவபெருமானைத் தரிசித்தவுடன், அவரைப் போற்றித் துதித்தார் ப்ருஹஸ்பதி. சிவபெருமான் ப்ருஹஸ்பதியைத் தேவர்களின் தலைவராக்கினார். சிவபெருமானைப் பொருள் சேர்ந்த புகழ்மொழிகளால் போற்றித் துதித்ததால், அவர் வாசஸ்பதி (சொல்வன்மை) படைத்தவராகவும் ஆனார். ப்ருஹஸ்பதியால் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கம் ப்ருஹஸ்பதீச்வரர் ஆகும்.

ப்ருஹஸ்பதீச்வரரைத் தொடர்ந்து வழிபடும் அன்பர்களின் எண்ணங்கள் எல்லாம் நிறைவேறும் என்று சிவபெருமான் கூறினார். மேலும் ப்ரஹ்மதேவர், இந்த்ரன் முதலிய அனைத்து தேவர்களையும் அழைத்து, தேவர்களின் ஆசிரியராக (குருவாக) ப்ருஹஸ்பதியை நியமித்தார். அறிவாளிகளின் தெய்வமாக ப்ருஹஸ்பதி திகழ்கிறார்.

பூச நக்ஷத்திரம் கூடிய வியாழக்கிழமையில் ப்ருஹஸ்பதீச்வரரை வழிபடும் அன்பர்கள் வெற்றி மேல் வெற்றி காண்பர். ப்ருஹஸ்பதீச்வரரைத் தொடர்ந்து ஆறு மாதங்கள் வழிபடும் அன்பர்கள் தங்கள் பாவங்களிலிருந்து விடுபடுவர். (காசி காண்டம், அத்யாயம் 17)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருப்பிடம்

7/133, ஸிந்தியா காட், வாராணஸி, ஆத்ம வீரேச்வரர் கோயிலுக்கு எதிர்புறம் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து ஸங்கட தேவி கோயில் வழியாக நடந்து செல்லலாம். அல்லது ஸிந்தியா காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை கோயில் திறந்திருக்கிறது. காலை 6.00 மணி, பகல் 2.00 மணி, இரவு 10.00 மணி ஆகிய நேரங்களில் ஆரத்தி நடைபெறுகிறது. இவை தவிர, வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இரவு 11.00 மணிக்கு ஆரத்தி நடைபெறுகிறது. வழக்கமான பூஜைகள் அர்ச்சகரால் செய்யப்படுகின்றன. சிவராத்ரீ, சில ஏகாதசி முதலிய முக்கிய தினங்களில் விசேஷ பூஜைகளும் நடைபெறுகின்றன. நாள்தோறும். காலை, மதியம், இரவு ஆகிய மூன்று வேளைகளிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீகாளி சரண் மிச்ரா கோயிலின் அர்ச்சகராவார்.

சுக்ரேச்வரர்

வெகு காலத்திற்கு முன்பு, சுக்ரன் காசிக்கு வந்து கிணறு ஒன்றை வெட்டி, சிவலிங்கம் ஒன்றை ஸ்தாபித்துப் பூஜை செய்து வந்தார். பூஜைக்கு அவர் பலவித மலர்களையும், இலைகளையும் பயனபடுத்தினார். இவ்வாறு பலகாலம் அவர் பூஜை செய்து வந்தார். ஆனால் சிவபெருமான் அவருக்குக் காட்சி கொடுக்கவே இல்லை.

அரிசி உமியை எரித்து அந்தப் புகையில் உயிர் தரித்து வந்து தனது தவத்தைத் தொடர்ந்தார் சுக்ரன். இறுதியாக, சிவபெருமான் அவருக்குக் காட்சி கொடுத்து அவருக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். சுக்ரன் பல ஸ்தோத்திரங்களால் இறைவனைப் பேற்றிப் புகழ்ந்து, மீண்டும் பலவித பூஜைகள் செய்ய ஆரம்பித்தார். சுக்ரனின் பக்தியால் மனம் மகிழ்ந்த சிவபெருமான் அவரைத் தனது மகனாகவே ஏற்றுக் கொண்டார்.

இறந்தாரை உயிர்ப்பிக்கும் ம்ருத ஸஞ்ஜீவினியைப் பற்றிய ரகசியத்தை சிவபெருமான் சுக்ரனுக்குக் கூறினார். மேலும்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

க்ரஹங்களுள் ஒளிமிக்கவராக அவர் விளங்குவார் என்றும், அவரது ஸஞ்சாரம் அனுகூலமாக உள்ள காலத்தில் நிகழும் திருமணங்கள் மகிழ்ச்சி நிறைந்த வாழ்வளிக்கும் என்றும் கூறினார். (இன்றும் திருமண நாளை நிச்சயிக்கும்போது சுக்ரனின் நிலையைக் கருத்தில் கொள்கின்றனர்).

சுக்ரனால் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கம் சுக்ரேச்வரர் என்று அழைக்கப்படுகிறது. சுக்ரேச்வரரை வழிபடுபவர்கள் வாழ்வில் அனைத்து வளங்களும் பெறுவர். சுக்ரேச்வரருக்குத் தொடர்ந்து ஒரு வருட காலம் பூஜை செய்பவர்கள் நன்மக்களையும், நிறைந்த மகிழ்ச்சியையும் பெறுவர். இவற்றையெல்லாம் கூறிய பிறகு, சிவபெருமான் சுக்ரேச்வரர் லிங்கத்தில் ஐக்கியமாகிவிட்டார். (காசி காண்டம், அத்யாயம் 16)

இப்பொழுதும் கூட, ஒரு மனிதருக்கு நல்ல காலம் பிறந்தால், சுக்ர திசை என்று கூறுவார்கள். திருமணங்களில் சுக்ர ஸ்தானத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

தெய்வீகம் நிறைந்த சுக்ர கூபம் என்ற கிணறு அருகில் இருக்கிறது.

இருப்பிடம்

அந்நபூர்ணா விச்வேச்வரர் கோயில் அமைந்துள்ள சந்திற்கு அடுத்த சந்தில் டி 8/30, காலிகா கல்லி என்ற முகவரியில் அமைந்துள்ளது.

வழிபாட்டு முறைகள்

அன்பர்கள் நாள் முழுவதும் ஜன்னல் வழியாக தரிசனம் செய்யலாம். குறிப்பிட்ட பூஜைகள் என எவையும் இல்லை. அன்பர்கள் தரிசனம் மட்டுமே செய்ய முடியும்.

சனீச்வரர்

காசி கண்டத்தின்படி. காச்யபருக்கும், தாக்ஷாயிணிக்கும் பிறந்தவர் ஸூர்ய பகவான். ஸூர்ய பகவான் ஸங்க்யா தேவியை மணந்தார். ஸங்க்யாதேவி சிறந்த பத்தினியாகத் திகழ்ந்தாள்.

காலகட்டத்தில், அவர்களுக்கு இரண்டு மகன்களும். ஒரு மகனும் பிறந்தனர். முதல் மகன் வைச்வதமனு, இரண்டாவது மகன் யமன், மூன்றாவதாகப் பிறந்த மகள் யமுனா. சிறிது காலத்திற்குப் பிறகு, ஸங்க்யா தேவியால், ஸூர்ய பகவானிடமிருந்து வெளிப்பட்ட வெப்பத்தைத் தாங்க முடியவில்லை.

ஸங்க்யாதேவி தன்னைப் போலவே தன்னுடைய நிழலான சாயா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தேவியைப் படைத்தாள். சாயாதேவி தான் யார் என்பதை வெளிப்படுத்திக் கொள்ளாமல் ஸுர்ய பகவானுடன் வாழ்க்கை நடத்த வேண்டும், குழந்தைகளையும் நல்ல முறையில் பேண வேண்டும் என்ற உறுதிமொழிகளைப் பெற்றுக்கொண்டு ஸங்க்யாதேவி தன் பிறந்தகத்திற்குச் சென்றுவிட்டாள்.

சில காலம் கழித்து, சாயாதேவிக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன. அவற்றுள் இரண்டாவது குழந்தைதான் சனைச்சரர். தனக்குக் குழந்தைகள் பிறந்தவுடன், ஸங்க்யாதேவியின் மீது சாயாதேவி காட்டி வந்த அக்கறை நாளடைவில் குறைந்தது. இது தெரிய வந்ததும், ஸுர்ய பகவானுக்கு மிகுந்த கோபம் வந்தது. சாயாதேவி உண்மையைக் கூறினாள். அவளுடைய குற்றத்தை மன்னித்தார் ஸுர்ய பகவான்.

சாயாதேவிக்கும், ஸுர்ய பகவானுக்கும் பிறந்த சனைச்சரர் காசிக்கு வந்து சனீச்வரர் என்ற லிங்கம் ஒன்றை ஸ்தாபித்து வழிபட்டு வந்தார். சிவனருள் பெற்றார்.

இந்த லிங்கத்தை சனிக்கிழமையன்று தரிசித்து வழிபட்டால், சனி க்ரஹத்தால் உண்டாகும் தீமைகள் அகலும்.

இருப்பிடம்

சனீச்வரர் லிங்கம் 35/19 என்ற எண்ணில், விச்வநாதர் கோயிலின் தெற்கு வாசலில் உள்ளது. இந்த இடத்தை அடைய விச்வநாதர் கோயிலுக்குச் செல்லும் வழியைப் பார்க்கவும். சைலேச்வரர் முன்பு வெங்கலத்தால் ஆன தடுப்பு ஒன்று உள்ளது. ப்ரதான வாயிலில் நுழைந்து, உடனே இடதுபுறம் திரும்பினால், ஓரத்தில் தரைமட்டத்திற்கு கீழே லிங்கம் உள்ளது.

வழிபாட்டு முறைகள்

நாள்தோறும் கோயில் அர்ச்சகர்களால் ஆரத்தி செய்யப்படுகிறது. அன்பர்கள் இந்த ஸந்நிதியில் பூஜை செய்வதற்கு கோயில் விதிமுறைகள் இருக்கின்றன. விச்வேசவரர் கோயிலில் கடுமையான காவல் இருப்பதால், அன்பர்கள் நிதானமாக பூஜை செய்யும் வாய்ப்பு மிகக் குறைவே.

கோயிலின் அர்ச்சகர்

கோயிலின் ஆட்சித்துறையினரால் நிர்வகிக்கப்படுகிறது. அன்பர்கள் தாங்களே பூஜை செய்யலாம், ஆனால் நீண்ட நேரம் எடுத்துக்கொள்ள முடியாது என்பதை நினைவில் கொள்ளவும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நக்ஷத்ரேச்வரர்

வெகு காலத்திற்கு முன்பு, ரோஹிணி உட்பட அறுபத்து நான்கு அழகிய பெண்கள், காசிக்கு வந்து சிவபெருமானை உருக்கமாக வழிபட்டனர். வருணன் கங்கையுடன் கலக்கும் இடத்தில் லிங்கம் ஒன்றை ஸ்தாபித்து, நக்ஷத்ரேச்வரர் என்ற பெயருடைய அந்த லிங்கத்திற்கு சிவபூஜை செய்து வந்தனர்.

சிவபெருமான் அவர்களுக்குக் காட்சி கொடுத்து, அவர்களின் வேண்டுதலைக் கேட்டறிந்தார். அவர்கள் அனைவரும், சிவபெருமானைப் போன்றே அழகும், இளமையும் மிக்க கணவர்கள் தங்களுக்கு அமைய வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். அவர்கள் வேண்டிய வரத்தை அளித்து, சந்த்ர லோகத்திற்கும் மேலான தேவ உலகில் அவர்கள் வசிப்பர் என்று கூறினார்.

ஜாதகத்தில் எந்த க்ரஹத்தாலும், நக்ஷத்திரத்தாலும் ஏற்படும் தோஷங்கள் நக்ஷத்ரேச்வரரை வழிபடுவதால் அகலும். அந்த அன்பர்கள் சிவனருள் பெற்று, அந்தப் பெண்கள் அடைந்த அதே உலகத்தை அடைவர்.

இருப்பிடம்

ஏ 37/51, ராஜ் காட் ஃபோர்ட், ஆதி கேசவர் கோயில் உட்புறம் உள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை ரிக்ஷா/சைக்கிள் ரிக்ஷா/ காரில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் 6.00 மணி முதல் 12.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் 10.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. கோயில் திறந்திருக்கும் நேரம் மாறுதலுக்கு உட்பட்டது. முக்கிய கதவு மூடியிருந்தாலும், கம்பிக்கதவுகள் வழியாகத் தரிசிக்கலாம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீ ஸி. பி. த்ரிபாதி கோயிலின் அர்ச்சகராவார். ருத்ர ஜபம் முதலிய விசேஷ பூஜைகள் செய்ய (0)9305177440.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ரிஷிகளால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கங்கள்

அகஸ்த்யேச்வரர்

விந்திய மலைக்கு அருகே வந்த நாரத மஹரிஷி, ஸுமேரு மலை மிக வேகமாக வளர்ந்து வருவதாகவும், விரைவில் விந்திய மலையை விட உயரமாகிவிடும் என்றும் அதனிடம் கூறினார். இதனால் எரிச்சலடைந்த விந்திய மலை மிக வேகமாக வளர ஆரம்பித்தது. இதனால் உலகின் பெரும்பாலான பகுதி வெளிச்சமில்லாமல் மறைக்கப்பட்டது. இதனால் பெருங்குழப்பம் உண்டானது. உலகில் உள்ள பல உயிர்கள், தாவரங்கள் மடியத் தொடங்கின. தேவர்களும், பண்டிதர்களும் ப்ரஹ்மதேவரை அணுகி விஷயத்தைக் கூறினர். ப்ரஹ்மதேவன் காசிக்குச் சென்று அகஸ்த்ய முனிவரிடம் விஷயத்தைக் கூறுமாறு அறிவுறுத்தினார்.

தேவ குருவான ப்ருஹஸ்பதியுடன் தேவர்கள் காசிக்குச் சென்று அகஸ்த்ய முனிவரின் ஆச்ரமத்தை அடைந்தனர். சிவலிங்கம் ஒன்றை ஸ்தாபித்து, சிவபெருமானை வழிபட்டு வந்தார் அகஸ்த்யர். அந்த சிவலிங்கத்திற்கு அகஸ்தீச்வரர். அகஸ்த்ய குண்டம் ஒன்றை ஏற்படுத்தி, அதில் நீராடி சிவபெருமானைப் பூஜித்து வந்தார். காசி காண்டத்தின் மூன்றாவது அத்யாயம் இந்த ஆச்ரமத்தின் எழிலை வர்ணிக்கிறது.

அகஸ்த்ய குண்டத்தில் நீராடி, பித்ரு காரியங்களைச் செய்பவர்கள் காசியில் வசித்த பலனைப் பெறுவர். (காசி காண்டம், அத்யாயம் 26)

அன்பர்கள் அகஸ்த்ய குண்டத்தில் நீராடி, முன்னோர்களுக்குரிய பித்ரு காரியங்களைச் செய்ய வேண்டும். அவர்கள் அகஸ்தீச்வரரை வழிபட வேண்டும். அப்படி வழிபடும் அன்பர்களின் துன்பங்கள் எல்லாம் அழிந்துவிடும். அவர்கள் துன்பம் நீங்கி, இறப்பிற்குப் பிறகு ஸ்வர்கத்தை அடைவார்கள். (காசி கண்டம், அத்யாயம் 61)

இருப்பிடம்

D 36/11, ஆகஸ்டு குண்ட் மொஹல்லா என்ற இடத்தில் அமைந்துள்ளது. இது நாட்டுக்கோட்டை சத்திரத்திற்கு அருகில் உள்ளது. கோடௌலியா என்ற இடத்திற்குச் செல்லும் வழியில் சுசீல் சினிமா எதிர்ப்படும். அந்த சினிமாவைக் கடந்தவுடன் இடதுபுறம் திரும்பிச் சென்று, அந்த சந்தின் முடிவில் மறுபடியும் இடது புறம் சென்று, வலதுபுறம் படிகள் ஏறிச் செல்ல வேண்டும்.

அகஸ்த்ய குண்டம் தற்போது வற்றிவிட்டது. ஆனால் அகஸ்த்ய முனிவர், அகஸ்த்யேச்வரர் மீதுள்ள மரியாதையால் இந்தப் பகுதி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முழுவதும் ஆகஸ்டு குண்ட் என்று அழைக்கப்படுகிறது.

வழிபாட்டு முறைகள்

காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை கோயில் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீசஞ்ஜய் ரோஹா கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9450528883 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

அங்கீரயேச்வர்

காசி காண்டத்தின் 18 வது அத்யாயம் காசியில் பல்வேறு ரிஷிகளால் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கங்களைப் பற்றிக் கூறுகிறது. ரிஷிகள் தங்களது தவத்தின் பயனால் பல தெய்வீக சக்திகளைப் பெற்றிருந்தனர் என்ற கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.

ஹரிகேஸ் தோட்டத்தில் அங்கீரஸ் என்ற முனிவர் அங்கீரயேச்வர் லிங்கத்தை ஸ்தாபித்தார். இந்த லிங்கத்தை வழிபடுபவர்கள் சிறந்த தேஜஸுடன் விளங்குவார்கள். இறந்தபின், ஸ்வர்கத்தை அடைவார்கள்.

இருப்பிடம்

டி 35/77 ஜங்கம்பரி மடம், ஜங்கம்பரி, வாராணசி என்ற இடத்தில் அமைந்துள்ளது. பிரஸித்தி பெற்ற இந்த இடத்தை ரிக்ஷாவில் சென்று அடையலாம். நுழைவாயிலுக்கு வலப்புறம் இந்த லிங்கம் அமைந்துள்ளது.

வழிபாட்டு முறைகள்

ஜங்கம்பரி மட வளாகத்திற்குள் இந்த லிங்கம் அமைந்துள்ளது. காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை இந்த இடம் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்களுக்கு வசதியான நேரத்தில் சென்று தாங்களே வழிபாடுகளை நடத்தலாம்.

புலஹேச்வரர்

காசியில் ரிஷிகளால் ஸ்தாபிக்கப்பட்ட பல்வேறு லிங்கங்களைப் பற்றிக் காசி காண்டத்தின் 18வது அத்யாயத்தில் கூறப்பட்டுள்ளது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்வர்கத்வார லிங்கத்திற்கு வடக்குப்புறத்தில் புலஹேச்வரர் வீற்றிருக்கிறார். புலஹர் என்ற ரிஷியால் ஸ்தாபிக்கப்பட்டது இந்த லிங்கம். இந்த லிங்கத்தை வழிபடுபவர்கள் இறந்த பிறகு, ப்ரஜாபதி லோகத்திற்குச் செல்கிறார்கள்.

இருப்பிடம்

C/K33/43, டாகுர்தாஸ் ஸுரேகா பவன், ப்ராஹ்மணாள் சௌராஹா என்ற இடத்தில் அமைந்துள்ளது. இது மணிகர்ணிகை கட்டத்திற்குச் செல்லும் வழியில் அமைந்துள்ளது. இந்த இடத்தில் சலவைக்கல்லால் ஆன ஒரு நடைமேடை உள்ளது. அதைக் கொண்டு இந்த இடத்தை அடையாளம் காணலாம்.

அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று இந்த இடத்தை அடையலாம். ப்ரஹமணாள் சௌராஹா/ஸ்வர்கத்வார் ஓர் முக்கியமான இடமாகும்.

புலஸ்தீச்வரர்

புலஸ்த்ய மஹரிஷியால் ஸ்தாபிக்கப்பட்ட புலஸ்தீச்வரரும் இந்த வளாகத்திலேயே வீற்றிருக்கிறார்.

வழிபாட்டு முறைகள்

லிங்கம் ஒரு தனியாரின் வீட்டிற்குள் உள்ளது. அன்பர்கள் நாள் முழுவதும் தரிசனம் செய்யலாம், தாங்களே வழிபாடுகளையும் செய்யலாம்.

வசிஷ்டேச்வரர்

பல்வேறு ரிஷிகளால் காசியில் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கங்களைப் பற்றி காசி காண்டத்தின் 18வது அத்யாயம் குறிப்பிடுகிறது. ரிஷிகளின் தவத்திற்கு இரங்கி, இறைவன் அவருக்குத் தெய்வீக ஆற்றல்களை அருளினார். வசிஷ்ட மஹரிஷி ஒரு லிங்கத்தை ஸ்தாபித்தார்.

சோகவனம் என்ற வனத்தில் வசிஷ்டரால் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கத்தை வழிபடுபவர்கள் இறந்த பிறகு ப்ரஜாபதி லோகத்தை அடைவர். வருணா நதிக்கும், வசிஷ்டேச்வர லிங்கத்திற்கும் தொடர்பு உள்ளது என்று காசி கண்டம் குறிப்பிடுகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருப்பிடம்

வசிஷ்டேச்வர லிங்கத்தின் இருப்பிடமாக இரண்டு இடங்கள் கூறப்படுகின்றன. வருண ஸங்கமத்தைக் கடந்த பிறகுள்ள வருண நதியின் கரையில் சொல்லப்படுகிறது. மற்றொன்று 7/161, ஸங்கட காட் என்ற இடத்தில் உள்ளது. உள்ளூர்வாசிகள் இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் உள்ள லிங்கத்தையே வசிஷ்டேச்வரராக வழிபடுகின்றனர். அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து ஸங்கட தேவி கோயில் வழியாக நடந்து செல்ல வேண்டும். அல்லது ஸங்கட கட்டம் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. கோயிலுக்கென்று தனியாக அர்ச்சகர் எவரும் இல்லை.

வாமதேவேச்வரர்

காசியில் அன்பர்கள் மேற்கொள்ள வேண்டிய பல யாத்திரைகளைப் பற்றி காசி காண்டத்தின் 100வது அத்யாயம் கூறுகிறது. அன்பர்கள் நாள்தோறும் மேற்கொள்ள வேண்டிய அந்தர்க்ருஹி யாத்திரை பற்றியும் கூறுகிறது. இவ்வாறு வழிபட வேண்டியவற்றுள் வசிஷ்டர் மற்றும் வாமதேவரால் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கங்களும் உள்ளன.

வாமதேவரால் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கம் வாமதேச்வரர் ஆகும். இவரை வழிபடுவதால், வாழ்வில் தோன்றும் எல்லா இடர்களும் நீங்கும்.

இருப்பிடம்

C/K 7/161, ஸங்கட காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து புகழ்பெற்ற ஸங்கட தேவி கோயில் வழியாக நடந்து செல்லலாம். அல்லது ஸங்கட காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

கோயிலின் அர்ச்சகர்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. கோயிலுக்கென்று தனியாக அர்ச்சகர் எவரும் இல்லை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வ்யாஸேச்வரர்

மஹாபாரதத்தையும், பதினெட்டுப் புராணங்களையும் இயற்றிய வ்யாஸர் முதலிய பிற முனிவர்களிடையில், யார் பெரிய கடவுள் என்பதில் சர்ச்சை எழுந்தது. மஹாவிஷ்ணுவே முதன்மையானவர் என்பதை நிரூபிக்க அவர் தனது பத்தாயிரம் சீடர்களுடன் காசிக்கு வந்தார்.

பஞ்சகங்கையில் நீராடி, மஹாவிஷ்ணுவான பிந்து மாதவரை வணங்கிப் போற்றித் துதித்தார். தனது சீடர்களுடன் விஷ்ணுவைக் குறித்து பஜனை செய்தார். பிறகு, விச்வேச்வரர் கோயிலுக்குச் சென்றார். ஒரு கையைத் தூக்கியபடி, அவர் விஷ்ணுவைக் குறித்த ஸ்தோத்ரங்களைச் சொல்லிக்கொண்டே ஆடிப் பாடினார். அவரது பஜனை உச்சநிலையை அடைந்தபோது, நந்தி பகவான் அவரது ஒரு கையை அசைக்க முடியாமல் செய்துவிட்டார். வ்யாஸர் பேச்சிழந்தார். வ்யாஸருக்கு விஷ்ணு காட்சி கொடுத்து, அவர் ஒரு குற்றம் இழைத்துவிட்டதாகக் கூறினார். சிவபெருமானே முழுமுதற்கடவுள் என்றும், தன்னிடம் உள்ள தெய்வீக ஆற்றல்கள் அனைத்தும் சிவபெருமானால் அருளப்பட்டவை என்றும் கூறினார். தன்னுடைய கையும் வாக்கும் செயலிழந்துவிட்டதை சைகையால் தெரிவித்த வ்யாஸர், அதனைச் சரி செய்யும்படி விஷ்ணுவிடம் இறைஞ்சினார். அவரது தொண்டையை மஹாவிஷ்ணு மெதுவாகத் தொட்டவுடன், வ்யாஸர் சிவபெருமானைக் குறித்துப் பாட ஆரம்பித்தார். அவரது கைகளும் சரியாகிவிட்டன.

காசியில் கண்ட கர்ண புஷ்கரணிக்கு அருகில், சிவலிங்கம் ஒன்றை ஸ்தாபித்து, சிவபெருமானை வழிபடத் தொடங்கினார் வ்யாஸர். அதற்குப் பிறகு, அவர் காசியை விட்டுச் செல்லாமல் அங்கேயே தங்கிவிட்டார். வ்யாஸரால் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கம் வ்யாஸேச்வரர் என்று அழைக்கப்படுகிறது. வ்யாஸேச்வரரை வழிபடுபவர்கள் மெய்யறிவைப் பெறுவர், இறந்த பிறகு ஸ்வர்கத்தை அடைவர்.

கண்ட கர்ண புஷ்கரணியில் நீராடி, வ்யாஸேச்வரரை வழிபட வேண்டும் என்று காசி காண்டம் கூறுகிறது.

இருப்பிடம்

கர்ண கண்ட புஷ்கரணியில் வ்யாஸேச்வரர் வீற்றிருக்கிறார். அன்பர்கள் தொலைவில் இருந்தே தரிசிக்க முடியும். மழைக்காலத்தில், நீரின் அளவு அதிகரித்துவிடுவதால், இந்த லிங்கம் நீரினுள் மூழ்கிவிடுகிறது. காசியில் உள்ள மற்ற குளங்கள் வற்றும்போதும், தெய்வீக சக்தியால் இந்தக் குளம் மட்டும் வற்றுவதில்லை. கண்ட கர்ண புஷ்கரணி தீர்த்தத்தில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நீராடுவதன் முக்கியத்துவத்தைப் பற்றிக் காசி காண்டம் எடுத்துரைக்கிறது. தற்போது இதில் பக்தர்கள் நீராடுவதில்லை.

சிவகணங்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கங்கள்

பாரபூதேச்வரர்

சிவபெருமான் மந்தர மலையில் இருந்துகொண்டு, காசியில், மன்னன் திவோதாஸின் அரசாட்சியில் கலகத்தை ஏற்படுத்துவதற்காக, சிவ கணங்களை அனுப்பினார். (பார்க்க : குக்குடேச்வரர்)

சிவ கணங்களின் ஒரு பிரிவில் பாரபூத் என்ற பெயருடைய சிவகணம் பாரபூதேச்வரர் லிங்கத்தை ஸ்தாபித்தது. காசியில் உள்ள இந்த லிங்கத்தை வழிபடும் அன்பர்கள் முக்தி பெறுவர். இந்த லிங்கத்தை வழிபடாதவர்கள், காய்க்காத மரம் போன்று பூமிக்குப் பாரமாக இருப்பர் என்று காசி காண்டத்தின் 55வது அத்யாயம் கூறுகிறது.

இருப்பிடம்

C/K 54/44, ராஜா தர்வாசா என்ற இடத்தில் அமைந்துள்ளது. சௌக் பகுதியிலிருந்து நீசிபாக் செல்லும் வழியில் சௌக் காவல் நிலையத்தைக் கடந்தவுடன் இடதுபுறம் திரும்பிச் சென்றால் ராஜா தர்வாசாவை அடையலாம். சுமார் 150 கஜங்கள் நடந்தவுடன் சிறிது வலதுபுறம் திரும்பினால், இந்தக் கோயிலை அடையலாம். அன்பர்கள் உள்ளூர்வாசிகளிடம் வழிகேட்டுச் செல்லலாம். அன்பர்கள் ராஜா தர்வாசா வரை ரிக்ஷாவில் செல்லலாம். மிகவும் கூட்டமாக இருக்கும் நேரங்களில், சௌக் கில் இறங்கி நீசிபாக் சாலையில் ராஜா தர்வாசா நோக்கி நடந்தும் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் 9.00 மணி வரையிலும், மாலையில் இரண்டு மணிநேரங்களும் திறந்திருக்கிறது. இந்த நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை. கம்பிக்கதவுகள் வழியாக நாள் முழுவதும் அன்பர்கள் தரிசனம் செய்யலாம்.

கிராதேச்வரர்

சிவபெருமான் மந்தரமலையில் இருந்துகொண்டு, காசியில் மன்னன் திவோதாஸின் ஆட்சியில் கலகத்தை ஏற்படுத்த, பல்வேறு சிவகணங்களை அனுப்பினார். (பார்க்க : குக்குடேச்வரர்)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கிராதன் என்ற பெயருடைய ஒரு சிவகணம் லிங்கம் ஒன்றை ஸ்தாபித்தது. அந்த லிங்கத்தின் பெயர் கிராதேச்வரர் என்பதாகும்.

இந்த லிங்கத்தை வழிபடுபவர்கள் வாழ்வில் அனைத்து பயங்களும் நீங்கப் பெறுவர். (காசி காண்டம், அத்யாயம் 55). பாரபூதேச்வரருக்கு பின்புறம் உள்ள கிராதேச்வரரை வழிபட்டால் மறுபிறவி இல்லை என்று காசி கண்டத்தின் 69 வது அத்யாயம் கூறுகிறது.

இருப்பிடம்

C/K 52/15, பாரபூதேச்வரர் அருகில் என்ற முகவரியில் அமைந்துள்ளது. சௌக் பகுதியிலிருந்து நீசிபாக் செல்லும் வழியில், சௌக் காவல் நிலையத்திற்கு அடுத்துவரும் இடதுபுறம் ராஜா தர்வாஜா நோக்கி ஒரு வழி பிரிகிறது. அதில் ஒரு 200 கஜ தூரம் நடந்த பிறகு, ஷ்யாம்லால் கத்ரி அத்தர் மெர்ச்சண்ட்ஸ் (நறுமண விற்பனையாளர்கள்) கூடம் தென்படும். இந்தக் கடைக்கு எதிர்புறத்தில் 52/15 என்ற எண்ணுடன் ஒரு பெரிய கதவு உள்ளது. அங்கு நாராயண் அக்ரிகல்சுரல் இன்டஸ்ட்ரீஸ் உள்ளது. அந்த வளாகத்திற்குள் தரைமட்டத்திற்குக் கீழே கிராதேச்வரர் வீற்றிருக்கிறார்.

கிராதேச்வர லிங்கத்தைப் பற்றி மக்களுக்கு அவ்வளவாகத் தெரியாது, ஆனால் பெயரைச் சொன்னால், அத்தர் விற்பனையாளர்கள் சரியாக வழிகாட்டிவிடுவர். அன்பர்கள் ராஜா தர்வாஜாவை ரிக்ஷாவில் சென்று அடைய முடியும். கூட்டம் அதிகமாக உள்ள காலங்களில் சௌக் - நீசிபாக் வழியாக ராஜா தர்வாஜா நோக்கி நடந்துதான் செல்ல வேண்டும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

க்ஷேமேச்வரர்

காசிக்கு சிவபெருமான் முதலில் அனுப்பிய சிவகணங்கள் திரும்பி வராததால், இரண்டாவது முறையாக வேறு சிவகணங்களை அனுப்பினார். (சிவபெருமான் காசிக்குச் சிவகணங்களை அனுப்புதல் குறித்து, பார்க்க : குக்குடேச்வரர்).

இந்த சிவகணங்களும் காசியில் வந்து தங்களது பெயரில் லிங்கங்களை ஸ்தாபித்து, இங்கேயே தங்கி வழிபட ஆரம்பித்துவிட்டன. க்ஷேமக் என்ற பெயருடைய சிவகணம் ஸ்தாபித்த

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

லிங்கத்திற்கு க்ஷேமேச்வரர் என்று பெயர். க்ஷேமேச்வரரை வழிபடும் அன்பர்கள் எல்லாவித பாவங்களும் நீங்கி, வாழ்வில் வளமும், மகிழ்ச்சியும் பெறுவர் என்று காசி காண்டத்தின் 55 வது அத்யாயம் கூறுகிறது.

இருப்பிடம்

B 14/14, க்ஷேமேச்வரர் கட்டம் என்ற இடத்தில் மானஸரோவர கட்டத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் கேதார்கட்டம் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து கேதார்கட்டம் தபால் நிலையம் வரை நடந்து சென்று, வலதுபுறம் க்ஷேமேச்வர கட்டம் வரை செல்ல வேண்டும். கேதார கட்டத்தில் குமாரஸ்வாமி மடத்திற்குச் சொந்தமான ஒரு வீட்டினுள் இந்த லிங்கம் அமைந்துள்ளது.

வழிபாட்டு முறைகள்

அன்பர்கள் க்ஷேமேச்வர லிங்கத்தைக் கம்பிக் கதவுகள் வழியாகத் தரிசிக்கலாம்.

குக்குடேச்வரர்

காசியில் அரசன் திவோதாஸின் ஆட்சியில் கலகத்தை ஏற்படுத்துவதற்காக மந்தரமலையில் வீற்றிருந்த சிவபெருமான் விநாயகர், ப்ரஹ்மதேவர், ஸூர்ய பகவான், 64 யோகினிகள், சிவகணங்கள் எல்லோரையும் வரிசையாக அனுப்பினார்.அனுப்பிய எவரும் திரும்பி வரவில்லை, காசியிலேயே தங்கி, சிவபூஜையில் ஆழ்ந்துவிட்டனர்.

சிவபெருமான் பலமுறை பல்வேறு சிவகணங்களைக் காசிக்கு அனுப்பினார். அவர்களுள் குக்குடன் என்ற பெயருடைய ஒரு சிவகணம் காசியின் தெய்வீக அழகில் மயங்கி, குக்குடேச்வரர் என்ற சிவலிங்கத்தை ஸ்தாபித்து வழிபடத் தொடங்கிவிட்டார்.

முட்டை வடிவிலுள்ள குக்குடேச்வரரை வழிபட்டால் மறுபிறவி ஏற்படாது என்று காசி காண்டத்தின் 53வது அத்யாயம் கூறுகிறது.

இருப்பிடம்

துர்கா குண்டத்தில் உள்ள துர்கா தேவி கோயிலின் தெற்கு வாயிலுக்கு வெளியே குக்குடேச்வரர் வீற்றிருக்கிறார். அன்பர்கள் துர்கா குண்டம் வரை ரிக்ஷா/கார்/ஆட்டோவில் செல்ல முடியும்.

வழிபாட்டு முறைகள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

லங்லீச்வரர்

சிவபெருமானால் காசிக்கு அனுப்பபட்ட சிவகணங்கள், சிவலிங்கங்களை ஸ்தாபித்து வழிபடத் தொடங்கினார். அவர்களுள் ஒரு சிவகணத்தின் பெயர் லங்லி என்பதாகும். அவரால் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கத்திற்கு லங்லீச்வரர் என்று பெயர். லங்லீச்வரரை வழிபடுபவர்களை நோயே அண்டாது, அவர்கள் எப்பொழுதும் ஆரோக்கியமாக இருப்பர் என்று காசி காண்டத்தின் 55வது அத்யாயம் கூறுகிறது.

லைங்லீச்வரரை வழிபட்ட பிறகு, ஏழைகளுக்கும், உழவர்களுக்கும் தானம் அளித்தால், செல்வ வளம் பெருகும் என்றும் காசி காண்டம் குறிப்பிடுகிறது.

இருப்பிடம்

C/K 28/4 கோவா கல்லி சௌராஹா என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து கத்ரி மெடிக்கல் ஹால் வழியாக நடந்து செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 8.00 மணி முதல் 10.00 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலையிலும் மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீஜெய் ப்ரகாஷ் பாண்டே கோயிலின் அர்ச்சகராவார். (0)9918379713 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

பஞ்சாக்ஷேச்வரர்

சிவபெருமான் காசிக்குப் பல சிவகணங்களை அனுப்பினார். அவர்கள் எல்லோரும் காசியிலேயே தங்கி, சிவபூஜையில் ஈடுபட்டனர். மேலும் சில சிவ கணங்களைச் சிவபெருமான் அனுப்பினார். (சிவபெருமான் சிவகணங்களை அனுப்பியது குறித்து பார்க்க: குக்குடேச்வரர்)

இந்த சிவகணங்களும் காசியிலேயே தங்கி, தங்கள் பெயரில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சிவலிங்கங்களை ஸ்தாபித்து வழிபட்டு வந்தனர். த்ரிலோசனேச்வரருக்கு அருகில் உள்ள பஞ்சாக்ஷேச்வரர் ஒரு சிவகணத்தால் ஸ்தாபிக்கப்ட்டதாகும்.

பஞ்சாக்ஷேச்வரரை வழிபடும் அன்பர்கள் தங்கள் சமூகத்தில் மிகுந்த மதிப்பு மரியாதையுடன் வாழ்வர் என்று காசி கண்டத்தின் 55 வது அத்யாயம் கூறுகிறது.

இருப்பிடம்

த்ரிலோசன் காட் பகுதியில் அமைந்துள்ள த்ரிலோசனேச்வரருக்கு அருகில் வீற்றிருக்கும் பஞ்சாக்ஷேச்வரருக்கு ருத்ராக்ஷேச்வரர் என்றும் ஒரு பெயர். மச்சோதரியை கடந்து பிர்லா ஹாஸ்பிடல் பகுதியிலிருந்து இங்கு செல்வது எளிது. அன்பர்கள் ஆட்டோ அல்லது ரிக்ஷாவில் செல்லலாம். அல்லது த்ரிலோசன் காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச்சென்று அடையலாம். கோயில் ஏ-2/56 என்ற எண்ணில் இருக்கிறது, அருகில் ஒரு கை பம்பு உள்ளது.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.30 மணி முதல் 12.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 11.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீமிதிலேஷ் மிச்ரா கோயிலின் அருகில் உள்ளார். (0)9839744493 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

பிங்கலேச்வரர்

பல குழுக்களாக சிவகணங்கள் சிவபெருமானால் அனுப்பப்பட்டன. அதில் பிங்களன் என்ற பெயருடைய சிவலிங்கம் காசிக்கு வந்து காசியின் அழகில் மனதைப் பறிகொடுத்து, கபர்தீச்வரருக்கு அருகில் லிங்கம் ஒன்றை ஸ்தாபித்து வழிபட்டார்.

காசி காண்டத்தின் 53வது அத்யாயத்தின்படி, பிங்கலேச்வரரை வழிபடும் அன்பர்கள் எல்லாவித பாவங்களும் நீங்கித் தூய்மை பெறுவர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருப்பிடம்

பிங்கலேச்வரர் அல்லது நகுலேச்வரர் ஸி-21/40 என்ற எண்ணில், பிசாச்மோசன் என்ற புகழ்பெற்ற இடத்தில், கபர்தீச்வரருக்கு அருகில் வீற்றிருக்கிறார். சேத்கஞ்ச்/மல்தஹியா/ஃபாட்மான் ரோடு (ஸிக்ரா) விலிருந்து அன்பர்கள் ரிக்ஷா அல்லது ஆட்டோ ரிக்ஷாவில் செல்லலாம். அன்பர்கள் ச்ராத்த கடன்களைச் செய்யும்போது, பிண்ட தானத்திற்காக பிசாச்மோசன் குண்டத்திற்கு வருகின்றனர்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. விசேஷ பூஜைகள் செய்ய, அர்ச்சகரை முன்பே தொடர்பு கொள்ளுதல் நலம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீகமலேஷ் திவாரி கோயிலில் உள்ளார். அவரை (0)9918989066 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். பிசாச்மோசன் குண்டத்தில் பித்ரு காரியங்கள் செய்வதற்கும் ஸ்ரீதிவாரி உதவுகிறார்.

தில பர்ணேச்வரர்

சிவபெருமானால் காசிக்கு அனுப்பப்பட்ட பல சிவகணங்கள் திரும்பிப் போகவே, சிவபெருமான் மேலும் சில சிவகணங்களை அனுப்பினார். (பார்க்க : குக்குடேச்வரர்)

இந்த சிவகணங்களும் காசியிலேயே தங்கி, தங்கள் பெயரில் சிவலிங்கம் ஒன்றை ஸ்தாபித்து, சிவபூஜை செய்ய விரும்பின. அவர்களுள் ஒரு சிவகணத்தின் பெயர் தில பர்ணன் என்பதாகும். அவரால் ஸ்தாபிக்கப்பட்ட தில பர்ணேச்வரரை வழிபடுவதால், அனைத்துவித பாவங்களிலிருந்தும் விடுபடலாம். (காசி காண்டம், அத்யாயம் 53).

அன்பர்கள் எல்லாக் கோயில்களும் விஸ்தாரமாகப் பூஜை செய்வது என்பது இயலாது. கங்கை நீர் கொண்டு அபிஷேகம் செய்து, வில்வ இலைகளைச் சாற்றலாம்.

இருப்பிடம்

துர்கா குண்டத்தில் உள்ள துர்கா தேவி கோயிலின் முக்கிய வாசலுக்கு அருகில் (வலதுபுறம் உள்ள வளையல் கடைக்குப் பக்கத்தில்)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உள்ளது. துர்கா குண்டம் புகழ்பெற்ற இடமாகும். அன்பர்கள் இந்த இடம் வரை ஆட்டோ/ரிக்ஷா அல்லது காரில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்ப் போல் சென்று வழிபடலாம்.

காசி காண்டம் அத்யாயம் 69ல் குறிப்பிடப்பட்டுள்ள சிவன் கோயில்கள்

அமரேச்வரர்

காசி காண்டத்தின் 69 வது அத்யாயத்தின்படி, சிவபெருமான் கஜாஸுரனைக் கொன்று, அவனது தோலை ஆடையாக உடுத்திய இடம் ருத்ரவாஸம் எனப்படுகிறது. (பார்க்க : க்ருதி வாசேச்வரர்)

ஒருமுறை க்ருதி வாசேச்வரராகிய சிவபெரும: ன் உமாதேவியுடன் அமர்ந்திருந்தபோது, நந்தி காசி உள்ள 68 முக்கியமான வழிபடுவதற்கு உகந்த இடங்களை பற்றிக் கூறினார். பிறகு, பல்வேறு விக்ரஹங்களும், லிங்கங்களும் கொண்டு வரப்பட்டு நந்தி பெருமானால் இங்கு ஸ்தாபிக்கப்பட்டன.

கங்கா ஸாகர தீர்த்தத்திலிருந்து எடுத்துவரப்பட்ட லிங்க மூர்த்திக்குப் பெயர் அமரேச்வரர் என்பதாகும். அமரேச்வரரை வழிபடும் அன்பர்கள் அகால மரணம் குறித்த பயம் நீங்கி நீண்ட நாள் மகிழ்ச்சியாக வாழ்வர்.

இருப்பிடம்

B 2/20 லோலார்க் குண்ட் பின்புறம் (பதைனி) என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் புகழ்பெற்ற இடமான (அஸிக்கு அருகில் உள்ள) லோலார்க் வரை செல்லலாம். லோலார்க் கிற்குப் பின்புறம் மேற்குறிப்பிட்டுள்ள எண்ணில் ஓர் கட்டிடம் உள்ளது. அதன் கிழக்குப்பகுதியில் அமரேச்வர லிங்கத்தைத் தரிசிக்கலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பீமேச்வரர்

சிவபெருமான் கஜாஸுரனை வீழ்த்திய பிறகு, அவனது தோலை உரித்த இடத்திற்கு ருத்ர வாஸம் என்று பெயர் என காசி காண்டம் 69வது அத்யாயம் கூறுகிறது. (பார்க்க : க்ருத்தி வாஸேச்வரர்)

ஒரு முறை இறைவன் க்ருத்தி வாஸேச்வரராக உமாதேவியாருடன் அமர்ந்திருந்தபோது, நந்தியம் பெருமான் அவர்களை வணங்கி, காசியில் 68 முக்கியமான புனித வழிபடு தலங்கள் இருப்பதாகக் கூறினார். பல்வேறு இடங்களிலிருந்தும் லிங்கங்கள் மற்றும் திருவுருவங்கள் எடுத்து வரப்பட்டு இங்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

ஸப்த கோதாவரி தீர்த்தத்திலிருந்து பீமேச்வரர் என்ற திருப்பெயருடன், அன்பர்களுக்கு வாழ்வில் வளமும், வீடுபேறும் அருள்வதற்காகக் காசியில் எழுந்தருளியிருக்கிறார். நகுலேச்வரருக்கு கிழக்குப்புறத்தில் வீற்றிருக்கும் பீமேச்வரரை வழிபடுபவர்கள் மிகக் கொடிய பாவங்களிலிருந்தும் விடுபடுவர்.

பாரத தேசத்தில் பன்னிரு ஜ்யோதிர் லிங்கங்கள் இருக்கின்றன. அவற்றைக் குறிக்கும் வகையில் காசியிலேயே பன்னிரு ஜ்யோதிர் லிங்கங்கள் இருக்கின்றன. பீமேச்வரர் (மஹாராஷ்ட்ராவில் நாஸிக்–பூனா சாலையில் அமைந்துள்ள) பீமா சங்கரராக வழிபடப்படுகிறார்.

இருப்பிடம்

C/K 31/12, காசி கர்வட் கோயில் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் விச்வேச்வரர் கோயிலிலிருந்து வடக்கு நோக்கி ஸரஸ்வதி படக் செல்லும் பாதையில் சென்றால், காசி கர்வட் கோயிலை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

அன்பர்கள் நாள் முழுவதும் சென்று வழிபடலாம். லிங்கம் பூமிக்கு அடித்தளத்தில் இருப்பதால், மேலிருந்து தரிசிக்கலாம்.

பூர் புவ ஸுவ லிங்கம்

சிவபெருமான் கஜாஸுரனை வீழ்த்திய பிறகு, அவனது தோலை உரித்த இடத்திற்கு ருத்ர வாஸம் என்று பெயர் எனக் காசி காண்டம் 69வது அத்யாயம் கூறுகிறது. (பார்க்க : க்ருத்தி வாஸேச்வரர்)

ஒரு முறை இறைவன் க்ருத்தி வாஸேச்வரராக உமாதேவியாருடன் அமர்ந்திருந்தபோது, நந்தியம் பெருமான் அவர்களை வணங்கி, காசியில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

68 முக்கியமான புனித வழிபடு தலங்கள் இருப்பதாகக் கூறினார். பல்வேறு இடங்களிலிருந்தும் லிங்கங்கள் மற்றும் திருவுருவங்கள் எடுத்து வரப்பட்டு இங்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு இடங்களிலிருந்து விக்ரஹங்களும், லிங்கங்களும் நந்தி பகவானால் கொண்டு வரப்பட்டு காசியில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டன. கந்த மாதன மலையிலிருந்து காசியில் தோன்றிய லிங்கம் பூர் புவ ஸுவ லிங்கமாகும்.

இந்த லிங்கத்தை வழிபடும் அன்பர்கள் ஸ்வர்கத்தில் மகிழ்ந்திருப்பர்.

இருப்பிடம்

கே 63/26, பூத் பைரவ் அருகில் (ஆதாரம் : பண்டித் கேதார்நாத் வ்யாஸ் அவர்களின் புத்தகம்). இது மிகப் பெரிய லிங்கமாகும். அன்பர்கள் காசி தேவி கோயில்/புல நலா/லோஹாட்டியா வரை ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து ஜ்யேஷ்ட கௌரி/பூத் பைரவ் வரை நடந்து செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம் போல் சென்று வழிபடலாம்.

ஈசானேச்வரர்

காசி காண்டம், அத்யாயம் 14ன்படி, ஈசானபுரி என்றொரு இடம் இருந்தது, அதில் சிவபெருமானின் பக்தர்கள் வசித்து வந்தனர். சிவபெருமானின் பக்தர்களுள் பதினோரு பேர் காசியை அடைந்து, ஈசானேச்வரர் என்ற லிங்கத்தை ப்ரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தார்கள். அஷ்டமி மற்றும் சதுர்தசி தினங்களில் விசேஷ பூஜைகள் செய்து வந்தனர்.

சதுர்தசியன்று விரதமிருந்து, இரவு முழுவதும் விழித்திருந்து ஈசானேச்வரரை வழிபட்டால், இறையருளும் இன்பமும் மோக்ஷமும் கிடைக்கும்.

இருப்பிடம்

பன்ஸ்படக் பகுதியில் தீபக் சினிமா காம்பவுண்டுக்குள் இருக்கிறது. சினிமா அரங்கம் இடிக்கப்பட்டுத் தற்போது ஒரு ஷாப்பிங் மால் கட்டப்பட்டு வருகிறது. மால் உரிமையாளர்கள் கோயிலைப் பராமரித்து வருகிறார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மால் முழுவதும் கட்டி முடிக்கப்பட்ட பிறகு, அன்பர்கள் சென்று தரிசனம் செய்வது எளிதாக இருக்கும்.

வழிபாட்டு முறைகள்

தற்போது கோயில் காலை முதல் மாலை வரை திறந்திருக்கிறது. மால் செயல்படத் தொடங்கிய பிறகு வழிபாட்டிற்கென்று சில நேரங்கள் இருக்கக்கூடும். அன்பர்கள் தாங்களே சென்று வழிபடலாம்.

ஹரேச்வரர்

இறைவன் க்ருத்தி வாசேச்வரராக உமாதேவியுடன் வீற்றிருந்தபோது, நந்தி தேவர் இருவரையும் வணங்கி, காசியில் 68 வழிபாட்டு இடங்கள் இருப்பதாகக் கூறினார். பல்வேறு இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட சிவலிங்கங்கள் காசியில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

ஹரிசந்த்ர க்ஷேத்திரத்திலிருந்து ஹரேச்வரர் என்ற பெயருடைய லிங்கம் காசியில் தோன்றியது. இந்த லிங்கத்தை வழிபடும் பக்தர் எப்பொழுதும் வெற்றியுடன் விளங்குவார்.

இருப்பிடம்

ஏ 37/51, ராஜ்காட் ஃபோர்ட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை ஆட்டோ, ரிக்ஷா அல்லது காரில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் 12.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் 10.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டது.

கோயிலின் அர்ச்சகர்

இக்கோயில் ஸ்ரீ சி.பி. த்ரிபாதி அவர்களின் குடும்பத்தினரின் பொறுப்பில் பல தலைமுறைகளாக உள்ளது. விசேஷ பூஜைகள் செய்ய (0)9305177440 என்ற எண்ணில் அவரைத் தொடர்புகொள்ளலாம்.

ஜடீச்வரர் (பாடலீச்வரர்)

ராமேச்வரத்திலிருந்து காசியில் தோன்றிய ஒரு லிங்கம் ஜட தேவர். இந்த லிங்கம் ஜடீச்வரர் என்று அழைக்கப்படுகிறது. ஏக தந்த

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விநாயகருக்கு அருகில் அமைந்துள்ளது.

ஜடீச்வரரை (பாடலீச்வரர்) வழிபடும் அன்பர்களின் விருப்பங்கள் எல்லாம் நிறைவேறும், இறுதியில் அவர்கள் மோக்ஷத்தை அடைவர்.

இருப்பிடம்

பெங்காலி தோலாவில் D 32/118 என்ற எண்ணுடைய வீட்டின் வெளிப்புறம் அமைந்துள்ளது. அன்பர்கள் பெங்காலி தோலா போஸ்ட் ஆபீஸ் கல்லி வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து செல்லலாம். பாடலீச்வரர் மிகவும் ப்ரஸித்தி பெற்ற லிங்கமாகும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் கம்பிக் கதவுகள் வழியாக வழிபடலாம்.

கோடீச்வரர் (கோடி லிங்கம்)

ஒரு லிங்கத்தை வழிபட்டால் கோடி லிங்கங்களை வழிபட்ட பலன் கிடைக்கும் என்று ஒரு லிங்கத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்த லிங்கத்திற்குக் கோடி லிங்கம் என்று பெயர்.

இருப்பிடம்

ஸாக்ஷி விநாயகருக்கு அருகில் தசாச்வமேத் விச்வநாத கல்லியில் கோடீச்வரர் வீற்றிருக்கிறார். ஸாக்ஷி விநாயகருக்கு முன்னால் கிரிதர் ஸ்டோர்ஸ் என்ற புடவை கடையும், பூஜை பொருட்கள் விற்கும் ஒரு பாபாஜி கடையும் உள்ளது. இரண்டு கடைகளுக்கும் இடையில் கோடி லிங்கம் உள்ளது.

அன்பர்கள் தசாச்வமேத் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து செல்லலாம். அன்பர்கள் விச்வநாதர் தர்சனத்துடன் கோடி லிங்க தர்சனத்தையும் சேர்த்துக் கொள்ளலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தரிசனம் செய்யலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நீலகண்டேச்வரர்

காசி காண்டத்தின் 69வது அத்யாயம் பல்வேறு இடங்களிலிருந்து நந்திதேவரால் காசிக்குக் கொண்டுவந்து ஸ்தாபிக்கப்பட்ட லிங்கங்களைப் பற்றிக் கூறுகிறது. இது மிகவும் முக்கியமான பகுதியாகும்.

கலஞ்சர மலையிலிருந்து கொண்டு வரப்பட்டு, நந்திதேவரால் ஸ்தாபிக்கப்பட்ட நீலகண்டேச்வரரை வழிபடுவதால் அன்பர்கள் சிவமயமாக ஆகிவிடுவர்.

இருப்பிடம்

C/K 33/23, நீலகண்ட் மொஹல்லா என்ற முகவரியில் அமைந்துள்ளது. இந்த இடத்திற்கு நீலகண்டேச்வரர் கோயிலால் இந்தப் பெயர் ஏற்பட்டுள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று அடையலாம். இந்தக் கோயில், கர்நாடகத்தின் ஆதிசுஞ்சுனகிரி மஹாஸம்ஸ்த்தான மடத்தின் கிளைக்கு அடுத்து உள்ளது.

வழிபாட்டு முறைகள்

காலை 5.30 மணி முதல் 12.30 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீபாபுநாத் மிச்ரா கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9335230365 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

ருத்ரேச்வரர்

ருத்ர மஹாலயம் என்ற இடத்திலிருந்து ருத்ரேச்வரர் காசியில் தோன்றியுள்ளார். ருத்ரேச்வரரை வழிபடுபவர்கள் ருத்ர லோகத்தை அடைவர். காசியில் உள்ள ருத்ரேச்வர லிங்கத்தை வழிபடுபவர்கள் ருத்ரராகவே ஆகிவிடுவார்.

மற்றொரு குறிப்புப்படி (காசி கண்டம், அத்யாயம் 97) பார்வதி தேவி காசியில் உள்ள பல்வேறு தீர்த்தங்களையும், லிங்கங்களையும் பற்றிக் கூறுமாறு சிவபெருமானிடம் வேண்டிக்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கொண்டாள். சிவபெருமானும் மகிழ்வுடன் கூறத் தொடங்கினார்.

சிவபெருமான் ருத்ரவாஸம் என்ற பெயருடைய ஒரு குளத்திற்கு அருகில் ருத்ரேச்வரர் வீற்றிருப்பதாகக் கூறுகிறார். இந்த வடிவத்தில் இறைவனை வழிபடுவதால் ஒரு கோடி ருத்ர தேவர்களை வழிபட்ட பலன் கிடைக்கும்.

காசி காண்டம், இரண்டு இடங்களில் ருத்ரேச்வரர் வீற்றிருப்பதாகக் கூறுகிறது. ஒன்று க்ருத்தி வாஸேச்வரருக்கு அருகிலும், மற்றொன்று த்ரிபுரேச்வரருக்கு (த்ரிபுரா பைரவி) அருகிலும் உள்ளது. முதலில் கூறப்பட்ட லிங்கம் தற்போது இல்லை. இரண்டாவதாக உள்ள இடத்திலேயே தற்போது ருத்ரேச்வரரை வழிபடுகிறோம்.

சதுர்தசியும் திருவாதிரை நக்ஷத்திரமும் கூடிய நாளில் இங்கு வழிபடுவது மிகவும் சிறப்பு. ருத்ர குண்டத்தில் நீராடி, ருத்ரேச்வரரைப் பூஜிப்பவர்கள், காசியைத் தவிர வேறிடங்களில் உயிர் நீத்தாலும் அவர்கள் ருத்ர லோகத்தை அடைவர். ருத்ர குண்டம் தற்போது இல்லாததால், அதற்குப் பதிலாக கங்கையில் நீராடலாம்.

சதுர்தசியும், திருவாதிரை நக்ஷத்திரமும் இணைவது வருடத்திற்கு ஒருமுறைதான். காசி காண்டம் இதற்கு மிகுந்த முக்கியத்துவத்தை அளிப்பதால் பஞ்சாங்கத்தைப் பார்த்து, அந்தத் தேதியைத் தெரிந்து கொண்டு, அந்தச் சிறப்பு மிக்க நாளில் ருத்ரேச்வரரைச் சென்று வழிபடலாம்.

இருப்பிடம்

D 5/21 என்ற எண்ணில் (D 5/24) த்ரிபுரா பைரவி அருகில் அமைந்துள்ளது. தசாச்வமேத் கல்லி வரை ரிக்ஷாவில் சென்று, சந்தில் நுழைந்தவுடன் வலதுபுறம் திரும்பி, த்ரிபுரா பைரவி கோயிலுக்கு வழிகேட்டு ஒரு நூறு கஜ தூரம் நடந்து செல்லலாம். த்ரிபுரா பைரவி கோயிலுக்கு அடுத்துள்ள இடது திருப்பத்தில் வலதுபுறத்தில் ஒரு வீட்டினுள் ருத்ரேச்வர லிங்கம் உள்ளது. இந்த லிங்கம் மிகப் பெரியதாகும்.

வழிபாட்டு முறைகள்

லிங்கம் ஒரு வீட்டினுள் உள்ளது. வீட்டில் உள்ளவர்கள் அன்பர்கள் இந்த லிங்கத்தை வழிபடுவதற்கு அனுமதிக்கிறார்கள்.

ஸஹஸ்ராக்ஷேச்வரர்

ஸுவர்ண தீர்த்தத்திலிருந்து ஸஹஸ்ராக்ஷேச்வரர் என்ற பெயருடைய லிங்கம் காசியில் தோன்றியது. இந்த லிங்கம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஹிரண்ய கர்பேஸ்வரர்



ஜம்புகேஸ்வரர்

ஜ்வர ஹரேஸ்வரர்

ஜ்யேஷ்டேஸ்வரர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கோடி லிங்கம்



லாங்க்லிஸ்வரர்



மத்தியமேஸ்வரர்



மஹாகாலேஸ்வரர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



கந்துகேஸ்வரர்

கச்சேஸ்வரர்

காமேஸ்வரர்

கர்வீரேஸ்வரர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சைலேச்வரருக்குத் தெற்குப்புறத்தில் உள்ளது. இந்த லிங்கத்தை வழிபடுவதால், இப்பிறவியில் மட்டுமல்ல, முற்பிறவிகளில் செய்த பாவங்களும் அகலும். நூறாயிரம் வருடங்களில் செய்த பாவங்கள் அகலும் என்று காசி காண்டம் கூறுகிறது.

இருப்பிடம்

ஏ-40/11, மர்ஹியா காட், சைலபுத்ரி என்ற முகவரியில் அமைந்துள்ளது. வாராணஸி ரயில் நிலையத்திலிருந்து ஜி.டி. சாலையில் பயணித்தால், வாராணஸி சிட்டி ரயில் நிலையத்திற்கு முன்பாக, இடதுபுறம் ஒரு சாலை செல்கிறது. அங்கு ஒரு லெவல் க்ராஸிங் உள்ளது. இந்தச் சாலையைக் கடந்து 2 கி.மீ. தூரம் சென்றால், இந்த இடத்தை அடையலாம். ரிக்ஷா/ஆட்டோ ரிக்ஷா ஓட்டுனர்களுக்கு சைலபுத்ரி உள்ள இடம் நன்றாகத் தெரியும்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.00 மணி முதல் பகல் 12.00 மணி வரையிலும், மாலை 3.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது. கோயில் திறந்திருக்கும் நேரம் சிறிது மாறுபடலாம்.

கோயிலின் அர்ச்சகர்

ஆறு மாதங்களுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் பல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கோயிலில் வழிபாடுகளை நிகழ்த்தி வருகிறார்கள்.

சூல் டங்கேச்வரர்

ப்ரயாகை தீர்த்தத்திற்கு அருகில் சூல் டங்கேச்வரர் வீற்றிருக்கிறார். ப்ரயாகை தீர்த்தத்தில் நீராடி, சூல் டங்கேச்வரரை வழிபடுபவர்கள் ப்ரயாகையில் திரிவேணி ஸங்கமத்தில் நூறு முறை நீராடிய பலன் கிடைக்கும். மேலும், அன்பர்கள் வாழ்வில் வளமும், முக்திபேறும் பெறுவர்.

கங்கை காசிக்குள் மிகுந்த வேகத்துடன் நுழைந்தபோது, சிவபெருமான் தெற்குப்புறத்தில் கங்கை நுழைவதற்கு முன்னால் தனது சூலத்தை எறிந்தார். இதனால் கங்கையின் வேகம் குறைந்தது, அவள் மெதுவாக காசியில் ஓடினாள், காசியிலேயே வசித்து அன்பர்களுக்கு மகிழ்வளிக்கவும் முன்வந்தாள். காசியில் கடும்கோடையில் கூட கங்கை நதி வற்றுவதில்லை, சில இடங்களில் 130 அடி வரை ஆழம் இருக்கிறது. அஸிக்கு தெற்கே இரண்டு கி.மீ. தொலைவில் சூல் டங்கேஷ்வரர் கோயில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருப்பதாக மக்கள் கூறுகின்றனர்.

ஆனால், காசி காண்டத்தில் அது ப்ரயாகை தீர்த்தத்திற்கு அருகில், தசாச்வமேதேச்வரரின் பகுதியாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பிடம்

தசாச்வமேத கட்ட படிகளில் உள்ளது. அன்பர்கள் தசாச்வமேத் கட்டம் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து படிகள் இறங்கிச் செல்ல வேண்டும். இந்தக் கோயில் படா லிங்கம் என்ற பெயருடன் மிகவும் புகழ் பெற்று விளங்குகிறது. அன்பர்கள் தசாச்வமேத கட்டம் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் தாங்களே வழிபடலாம்.

ஸுக்ஷ்மேச்வரர்

ஆம்ரதகேச்வர க்ஷேத்திரத்திலிருந்து கொண்டுவரப்பட்ட ஸுக்ஷ்மேச்வர லிங்கம் விகட தந்த விநாயகருக்கு அருகில் உள்ளது. இந்த லிங்கத்தை வழிபடுபவர்கள் வேண்டிய வரமெல்லாம் பெறுவர். எப்பேர்ப்பட்ட ப்ரச்சனையையும் தீர்க்கக்கூடிய கூரிய அறிவுத்திறன் பெற்றவர்களாகத் திகழ்வர்.

இருப்பிடம்

தூப் சண்டி பகுதியில, தூமாவதி கோயிலில் உள்ளது. விகட த்வஜ விநாயகருக்கு அருகில், தூமாவதி தேவிக்குப் பின்புறம் அமைந்துள்ளது.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் 1.30 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 11.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீ முன்னா லால் கோஸ்வாமி கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9616884959 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

த்ரயம்பகேச்வரர்

த்ரிஸந்த்ய தீர்த்தத்திலிருந்து காசியில் தோன்றிய லிங்கம் த்ரியம்பகேச்வரர் ஆகும் . இந்த லிங்கத்தை வழிபடுவதால் வானுறையும் தெய்வமாகவே மண்ணில் மதிக்கப்படுவர்.

பன்னிரு ஜ்யோதிர்லிங்கங்களுக்கும் காசியில் கோயில் உள்ளது. அவற்றுள் இந்த லிங்கம் மஹாராஷ்ட்ரம் நாஸிக்கில் உள்ள த்ரியம்பகேச்வரரைக் குறிப்பதாக உள்ளது.

இருப்பிடம்

த்ரியம்பகேச்வரர் (த்ரிலோக்நாத) டி 38/21, ஹாவ்ஜ் கடோரா என்ற இடத்தில் அமைந்துள்ளது. கோடவ்லியா விலிருந்து சௌக் செல்லும்பொழுது, ஸ்பைஸ் கே.ஸி.எம் சினிமாவிற்குப் பிறகு இடது புறம் திரும்பி, சில கஜங்கள் தூரம் நடந்தால், அங்கு வலப்புறம் ஒரு திருப்பம் உள்ளது. அங்கு இந்தக் கோயில் அமைந்துள்ளது. இந்தக் கோயிலில் புருஷோத்தமரும் (மஹா விஷ்ணு) வீற்றிருக்கிறார். இந்தக் கோயில் புருஷோத்தமர் பெயரால் அறியப்படுகிறது.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் இரவு 11.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது.

த்ரிபுராந்தகேச்வரர்

ஸ்ரீசைல மலையிலிருந்து த்ரிபுராந்தகேச்வரர் என்ற பெயருடைய லிங்கம் காசியில் தோன்றியது. இந்த லிங்கத்தை வழிபடுவதால், ஸ்ரீசைல மலையைத் தரிசித்தப் புண்ணியம் கிடைக்கும். த்ரிபுராந்தகேச்வரரை வழிபடும் அன்பர்கள் மறுபிறவியைப் பற்றிக் கவலைகொள்ளத் தேவையில்லை, அவர்கள் நிச்சயமாக மோக்ஷத்தை அடைவார்கள்.

பன்னிரு ஜ்யோதிர் லிங்கக் கோயில்களும் காசியில் உள்ளன. ஆந்த்ரப்ரதேசம், மல்லிகார்ஜுன க்ஷேத்திரத்தில் உள்ள த்ரிபுராந்தகேச்வரராக வழிபடப்படுகிறார்.

இருப்பிடம்

டி-59/95, ஸிக்ரா தைலா (மண் குன்று). ஸிக்ராவிலிருந்து மெஹ்மூர்கஞ்ஜ் செல்லும் வழியில் நூறு கஜ தூரம் கந்த பிறகு, இடது புறத்தில் யூனியன் பேங்க் ஆஃப் இந்தியாவும், அதற்குப் பிறகு ஸித்தார்த் காம்ப்ளெக்ஸ் என்ற வணிக வளாகம் உள்ளது. இதற்கு அருகில் சீத்தலா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தேவி உள்ளது, அதற்குப் பிறகு இடதுபுறத்தில் ஒரு திருப்பம் வருகிறது. அந்த் திருப்பத்தில் சென்று, ஸிக்ரா திலா வரும். அதன் மீது இந்தக் கோயில் அமைந்துள்ளது. இந்தக் கோயிலிலேயே த்ரிமுக் விநாயகர் வீற்றிருக்கிறார்.

ஜ்யோதிர்லிங்கங்களாக காசியில் வழிபடப்படும் இரு வேறு கோயில்கள் உள்ளன. க்ருஷ்ணேச்வர் (காமாக்யா கோயில்), பைஜ்நாதேச்வரர் ஆகிய இரு லிங்கங்களும் எல்லோரா/ மஹாராஷ்ட்ரத்தில் உள்ள க்ருஷ்ணேச்வரராகவும், பார்லி மஹாராஷ்ட்ரா/ பிஹாரில் உள்ள பைஜ்நாத்தாகவும் வழிபடப்படுகின்றன.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் 11.30 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை. நகரத்தை விட்டுத் தூரத்தில் உள்ள அமைதியான இந்த இடத்தில் அன்பர்கள் தங்களது வழிபாடுகளைச் செய்யலாம்.

(த்ரிபுரேச்வரர்) த்ரிபுரா பைரவி

துர்காஸுரனை எதிர்த்துத் தேவி போரிட்டபொழுது, அவளது உடலிலிருந்து பல்வேறு சக்திகள் வெளிப்பட்டன. மிகுந்த ஆற்றல் வாய்ந்த இந்த சக்திகள் நெருப்பு பந்துகளாக வெளிப்பட்டு, அஸுரனையும், அவனது சேனைகளையும் அழித்தன. (காசி காண்டம், அத்யாயம் 72) கடைசியில் யுத்தத்தில் தேவி வெற்றி வாகை சூடினாள். அம்பிகையிடமிருந்து நெருப்பு பந்து வடிவில் வெளிவந்த சக்திகளுள் ஒன்று த்ரிபுரா பைரவியாக வடிவெடுத்தது. த்ரிபுரா பைரவி தேவியை வழிபடுபவர்கள் வாழ்வில் வெற்றி மேல் வெற்றி காண்பர்; அவர்களது உள்ளத்தின் உறுதி வளரும். 90 க்கும் அதிகமான சக்தியின் வடிவங்களில், சில தேவிகளைத்தான் நம்மால் தரிசிக்க முடிகிறது. சில கோயில்கள் கால வெள்ளத்தில் அழிந்துவிட்டன; சில தேவியரின் திருவுருவங்கள் தனிப்பட்ட நபர்களின் வீடுகளுக்கு உள்ளே வைத்துப் பூஜிக்கப்படுகின்றன. அங்கு பொதுமக்கள் சென்று வழிபட அனுமதிக்கப்படுவதில்லை.

இருப்பிடம்

D 5/24, மிர் காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. தசாச்வமேத விச்வநாத கல்லியிலிருந்து வந்து முதல் சந்திப்பில் வலது பக்கம் திரும்பினால், இந்த இடத்தை அடையலாம். இது மிகவும் பிரஸித்தி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பெற்ற இடமாகும். (ருத்தேச்வரருக்கு அருகில்) த்ரிபுரேச்வரர் சிவலிங்கத்தையும் அன்பர்கள் தரிசிக்கலாம். இதுபற்றி காசி காண்டத்தின் 69 வது அத்யாயம் கூறுகிறது.

வழிபாட்டு முறைகள்

காலை 5.00 மணி முதல் 10.00 வரையிலும், மாலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலையிலும் மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது. அன்பர்கள் கம்பிக்கதவுகள் வழியாக நாள் முழுவதும் தரிசனம் செய்யலாம்.

விமலேச்வரர்

ஸ்வரலீனேச்வரருக்கு அருகில் வீற்றிருக்கும் விமலேச்வரரை வழிபடுவதால், அன்பர்கள் ஸித்திகள் பெறுவர்.

இருப்பிடம்

ஏ-10/47, நயா மஹாதியோ, ப்ரஹ்லாத் காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த லிங்கத்தை நீல்கண்ட் மஹாதியோ என அழைக்கின்றனர். அன்பர்கள் ப்ரஹலாத் காட் சௌராஹா (க்ராஸ் கட் ரோடு) வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து வலதுபுறம் திரும்பிச் சென்றால் இந்த இடத்தை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் 10.00 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. கோயில் ஒரு வீட்டினுள் உள்ளது. கோயிலின் வடக்கில் உள்ள கம்பிக்கதவுகள் வழியாக நாள் முழுவதும் தரிசனம் செய்யலாம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீராஜ்குமார் த்ரிபாதி (ராஜு குரு) கோயிலில் உள்ளார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9369278044 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

வ்ருஷேச்வரர்

வ்ருஷபத்வஜ தீர்த்தத்திலிருந்து, வ்ருஷபேச்வரர் (வ்ருஷேச்வரர்) காசியில் தோன்றினார். இந்த லிங்கத்தை வழிபடுபவர்கள் எப்பொழுதும் ஆனந்தமாக இருப்பர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருப்பிடம்

கே 58/78 கோரக்நாத் மைதாகின் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை ரிக்ஷாவில் செல்லலாம். இங்கு ஒரு வேத பாடசாலை இருக்கிறது. இந்த லிங்கம் தரைமட்டத்திற்குக் கீழ் உள்ளது.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 7.30 மணி முதல் 11.30 மணி வரையிலும், மாலை 5.30 மணி முதல் 6.30 மணி வரையிலும் திறந்திருக்கிறது. நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டது.

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீக்ருஷ்ண ப்ரஸாத் சவ்கோடா கோயில் வளாகத்தில் உள்ளார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9792544991 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

காசி காண்டத்தின் 94வது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிவன் கோயில்கள்

அமிர்தேச்வர்

ஒரு காலத்தில் காசியில் சனரு என்ற பெயருடைய க்ருஹஸ்த ரிஷி வாழ்ந்து வந்தார். அவர் ஸநாதன தர்மத்தின் நெறிமுறைகளை வழுவாது கடைப்பிடித்து வந்தார். ப்ரஹ்ம யஜ்ஞம், லிங்க பூஜை முதலிய தர்மங்களை நாள்தோறும் செய்து வந்தார்.

ஒரு நாள் காட்டில் விளையாடச் சென்ற அவரது மகன் உபஜங்கினி பாம்பு கடித்து மூர்ச்சையாகி விழுந்தான். மகனை இழந்த துயரத்தில் ஆழ்ந்த முனிவர் அவனது உடலை மஹாஸ்மசானத்திற்கு (சுடுகாட்டிற்கு) அருகில் உள்ள ஸ்வர்க த்வாரத்திற்கு எடுத்து வந்தார். ஒரு மண்மேட்டின் மீது அவனது உடலைக் கிடத்தி விட்டு, எரியூட்டுவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்ய ஆரம்பித்தார்.

அந்த பூமிக்கடியில் நெல்லிக்காய் அளவிற்குச் சிறிய அளவில் ஒரு லிங்கம் இருந்ததை அவர் அறியவில்லை. மிகவும் சக்திவாய்ந்த அந்த லிங்கத்தின் அருளால், இறந்துவிட்டதாகக் கருதப்பட்ட உபஜங்கினி ஆழ்ந்த தூக்கத்திலிருந்து விழித்து எழுபவன் போல எழுந்தான். இதனைக் கண்ட முனிவர் ஆச்சரியம் அடைந்தார். அதே நேரத்தில் அந்த மண் மேட்டிற்கு அருகில் பாம்பு ஒன்று இறந்த புழு ஒன்றை வாயில் கவ்விக்கொண்டு அந்த இடத்திற்கு வந்து கொண்டிருந்தது. மண்ணுக்கு அருகில் வந்தவுடன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

புழுவிற்கு உயிர் வந்தது.

மண்ணுக்கடியில் இறந்தவரை உயிர் பிழைக்க வைக்கும் சக்தி வாய்ந்த ஏதேனும் அமிர்த சஞ்ஜீவினி இருக்க வேண்டும் என்று முனிவர் நினைத்தார். மண்ணைத் தோண்டிப் பார்த்தபோது, நெல்லிக்காய் அளவில் ஓர் லிங்கத்தைக் கண்டார். அந்த லிங்கத்தை வேதநெறிப்படி முறையாக ப்ரதிஷ்டை செய்தார். அமிர்தேச்வரர் என்ற பெயரால் அந்த லிங்கத்தை அழைத்து வழிபடத் தொடங்கினார்.

காசி காண்டத்தின் 94 வது அத்யாயத்தின்படி, இந்த லிங்கத்தைத் தொடுபவர்கள் மரணத்தை வெற்றிகொண்டு அமரத்துவம் அடைவார்கள். இறந்தவரை உயிர்ப்பிக்கும் ஆற்றல் இந்த லிங்கத்திற்கு இருக்கிறது. அமிர்தேச்வரரை வழிபடுபவர்கள் பிறவித் தளையிலிருந்து விடுபட்டு மீண்டும் பிறவா நிலை எய்துவர்.

காசி காண்டத்தின் 73 வது அத்யாயத்தில், முக்தியளிக்கக் கூடிய சக்தி வாய்ந்த 14 லிங்கங்களைப் பற்றி சிவபெருமான் பார்வதி தேவிக்குக் கூறுகிறார். அவற்றில் முதலாவதாக அவர் கூறியது அமிர்தேச்வர லிங்கமே ஆகும்.

இருப்பிடம்

C/K 33/28, நீல்கண்ட், பச்சா மஹராஜ் கங்காபுத்ர ஹவுஸ் என்ற இடத்தில் அமைந்துள்ளது. நீலகண்டேச்வரர் கோயிலில் இருந்து இடது புறம் (கிழக்குப் பக்கத்தில்) சிறிது தூரம் நடந்தால் ஒரு காளி கோயில் எதிர்ப்படும். அந்த காளி கோயிலுக்கு எதிர்ப்புறம் அமிர்தேச்வர லிங்கம் உள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து இந்த இடத்திற்கு நடந்து செல்லலாம். இந்த இடம் கர்நாடகாவைச் சேர்ந்த ஆதி சுஞ்சுனகிரி மஹாஸம்ஸ்தான சாக மடத்திற்கு அருகில் உள்ளது. காசி காண்டத்தின் 70 வது அத்யாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அமிர்தேச்வரி தேவியும் இங்கு வீற்றிருக்கிறாள்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

ஜ்யோதி ரூபேச்வரர்

மணிகர்ணிகைக்கு அருகில் ஜ்யோதி ரூபேச்வரர் என்ற லிங்கம் வீற்றிருப்பதாகக் காசி காண்டத்தின் 94 வது அத்யாயம் கூறுகிறது. கங்கை நதியே ஜ்யோதி ரூபேச்வரராக வழிபடப்படுகிறாள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

என்று கூறப்பட்டுள்ளது.

சக்ர புஷ்கரிணியில் (மணிகர்ணிகா) மஹாவிஷ்ணு சிவபெருமானைக் குறித்துக் கடுந்தவம் இயற்றினார். அப்போது ஒளி பொருந்திய லிங்கம் ஒன்று தோன்றியது, அதுதான் ஜ்யோதி ரூபேச்வரர்.

இந்த லிங்கத்தை வழிபடும் அன்பர்கள் ஸித்திகள் பெறுவர். அவர்களே ஒளி பொருந்தியவர்களாக ஆகிவிடுவர்.

இருப்பிடம்

C/K8/10, கோமத், அபய ஸந்யாஸ ஆச்ரமம் என்ற முகவரியில் அமைந்துள்ளது. ஒரு காலத்தில் திறந்தவெளியில் இருந்த லிங்கம், தற்போது ஒரு ஆச்ரமத்தின் வளாகத்திற்குள் உள்ளது. இந்த லிங்கத்தை அன்பர்கள் சென்று வழிபடலாம்.

அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து கோமத் செல்வதற்கான வழியை அருகில் உள்ளோரிடம் விசாரித்து நடந்து செல்லலாம்.

கருணேச்வரர்

காசி காண்டத்தின் 94வது அத்யாயத்தின்படி, மோக்ஷ த்வாரேச்வரருக்கு அருகில் கருணேச்வரரை தரிசிக்கலாம். இந்த லிங்கத்தை வழிபடுபவர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பர்.

மணிகர்ணிகையில் நீராடி, கருணேச்வரரை வழிபடும் அன்பர்கள் எப்பொழுதும் இன்பமாக இருப்பார்கள். இந்த லிங்கத்தை திங்கட்கிழமை தோறும் வழிபட வேண்டும். ஒவ்வொரு திங்கட்கிழமையும் தொடர்ந்து ஒரு வருடம் கருணேச்வரரை வழிபட்டு வந்தால் நினைத்து நிறைவேறும்.

இருப்பிடம்

C/K34/10, லாஹெளரி டோலா, பூத கணேஷ் அருகில் என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் தசாச்வமேத் விச்வநாத கல்லி வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று அடையலாம். லாஹெளரி டோலா பூத கணேஷ் ஒரு புகழ்பெற்ற இடமாகும்.

வழிபாட்டு முறைகள்

இந்த லிங்கம் ஒரு வீட்டினுள் அமைந்துள்ளது. அன்பர்கள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சென்று தரிசிக்கலாம்.

மோக்ஷ த்வாரேச்வரர்

காசி காண்டத்தின் 94வது அத்யாயத்தின்படி, மோக்ஷ த்வாரேச்வரரை வழிபடுபவர்கள் மோக்ஷத்தை அடைவர்.

இருப்பிடம்

C/K34/10, லஹௌரி டோலா, பூத கணேஷ் என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் தசாச்வமேத் விச்வநாத் கல்லி வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து சந்துகள் வழியாக நடந்து செல்லலாம். லஹௌரி டோலா பூத கணேஷ் மிகவும் ப்ரஸித்திபெற்ற இடமாகும்.

வழிபாட்டு முறைகள்

இந்த லிங்கம் ஒரு வீட்டினுள் அமைந்துள்ளது. அன்பர்கள் சென்று தரிசிக்கலாம்.

ஸ்வர்க த்வாரேச்வரர்

காசி கண்டத்தின் 94 வது அத்யாயம், சக்ர புஷ்கரிணி தீர்த்தத்தின் அருகில் அமைந்துள்ள பல்வேறு சிவலிங்கங்களைப் பற்றிக் கூறுகிறது. காசியில் உள்ள ஸ்வர்க த்வாரேச்வரர் லிங்கத்தை வழிபடுவதால், அனைத்துப் பாவங்களும் நீங்கி, இறந்த பின்னர் ஸ்வர்கத்தை அடைவர்.

இருப்பிடம்

C/K10/16, ப்ராஹ்மணாள் என்ற முகவரியில் அமைந்துள்ளது. புலஹேச்வரருக்கு எதிரில் தெற்குப் புறத்தில், ஒரு வீட்டில் படிக்கட்டுக்கள் உள்ளன. அந்தப் படிகளில் ஏறிச் சென்றால், தோட்டம் போன்ற ஒரு இடம் உள்ளது. அங்கு ஒரு சிறிய கோயில் போன்ற அமைப்பில் ஸ்வர்க த்வாரேச்வரர் வீற்றிருக்கிறார்.

ஸ்வர்க த்வாரி என்ற பெயருள்ள இந்த லிங்கம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தாங்களே வழிபடலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காசி காண்டத்தின் 97வது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிவன் கோயில்கள்

ஆபஸ்தம்பேச்வரர்

சிவபெருமான் காசியில் உள்ள பல்வேறு புனித தீர்த்தங்களையும் (குளங்களையும்), கூபங்களையும் (கிணறுகளையும்), வழிபடு தலங்களையும் பற்றி மிகுந்த மகிழ்ச்சியுடன் விவரித்தார். (காசி காண்டம், அத்யாயம் 97).

மத்யமேச்வரருக்கு அருகில் ஆபஸ்தம்பேச்வர லிங்கம் உள்ளது. இந்த லிங்கத்தை வழிபடுவதால் ஒருவர் ப்ரஹ்ம ஞானத்தை அடைவார்.

இருப்பிடம்

கே 53/66, தாரா நகர் என்ற இடத்தில் அமைந்துள்ளது. பிஷேச்வர்கஞ்ச்/ஜிபிஓ வழியாக ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து மத்யமேச்வரர் கோயிலுக்கு நடந்து செல்லலாம். இந்த கோயிலுக்கு அடையாளம் ஒரு கிணறும், பூத்வா பாபா (ஹனுமான்) கோயிலும் ஆகும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் கங்கை நீரைக் கொண்டும், மலர்களைக் கொண்டும் தாங்களே வழிபடலாம்.

ஆஷாடேச்வரர்

பார்வதிதேவியின் வேண்டுகோளுக்கிணங்க, காசியில் உள்ள பல்வேறு தீர்த்தங்களின் பெருமையை சிவபெருமான் எடுத்துரைத்தார். இங்குள்ள அனைத்து லிங்கங்களும், தீர்த்தங்களின் தெய்வீக சக்தியை உடையவை என்று குறிப்பிட்டார்.

ஆஷாடேச்வர லிங்கத்தின் சிறப்பை விவரித்தார். இந்த லிங்கத்தை வழிபடுபவர்களின் சகல பாவங்களும் அழிந்துவிடும். (காசி காண்டம், அத்யாயம் 97)

ஆஷாடேச்வரர் ஒரு தனிப்பட்ட கோயிலாகும், இக்கோயில் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. அன்பர்கள் திரளாக இக்கோயிலுக்கு வந்து தரிசிக்கின்றனர். காசி காண்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பழமையான லிங்கம் கோயிலின் பின்புறத்தில் வீற்றிருக்க, சென்ற நூற்றாண்டில் யாரோ ஒரு மஹான் ப்ரதிஷ்டை செய்த லிங்கத் திருமேனி கோயிலின் கர்ப்பக்ருஹத்தை அலங்கரிக்கிறது. அன்பர்கள் இரண்டு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

லிங்கங்களையும் வழிபடுகின்றனர்.

இருப்பிடம்

கே 63/53, காசிபுரா என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் லோஹாடியா என்ற பகுதி வழியாக இந்த இடம் வரை ஆட்டோவில் செல்லலாம். மற்றொரு வழி, ஜ்யேஷ்ட கௌரி வழியாகச் சென்று, பூத பைரவரைக் கடந்து இடதுபுறம் திரும்பிச் செல்ல வேண்டும். அருகிலுள்ள பிற கோயில்களுடன் சேர்த்து இந்தக் கோயிலைத் தரிசிப்பது நல்லது.

வழிபாட்டு முறைகள்

காலை 5.00 மணி முதல் 11.30 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் 10.30 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. கோயில் திறந்திருக்கும் நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை. காலையிலும் மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீ ஸ்ரீகாந்த் உபாத்யாய கோயிலின் அர்ச்சகராவார். ஸ்ரீருத்ரம் முதலிய விசேஷ பூஜைகள் செய்ய (0)9005165712 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

அவதூதேச்வரர்

விச்வேச்வரர் கோயிலுக்கு வடக்கே அவதூதேச்வர லிங்கமும், அவதூதேச்வர தீர்த்தமும் உள்ளன. இந்த லிங்கத்தை வழிபடுபவர்கள் மெய்யறிவைப் பெறுவார்கள். இந்த லிங்கம் பசுபதேச்வரருக்கு அருகில் உள்ளது. (காசி காண்டம் அத்யாயம் 97).

இருப்பிடம்

C/K 13/85, பசுபதேச்வரருக்கு எதிர்புறத்தில், பசுபதேச்வரர் கோயில் சந்தில் உள்ளது. புகழ்பெற்ற பசுபதேச்வர லிங்கத்தினால் இந்தப் பகுதி அழைக்கப்படுகிறது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து இந்த கோயிலுக்கு நடந்து செல்லலாம். இது புகழ்பெற்ற ஒரு இடமாகும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் கம்பிக்கதவுகள் வழியாக தரிசிக்கலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பத்ரேச்வரர்

காசியில் உள்ள பல்வேறு தீர்த்தங்களையும், லிங்க மூர்த்திகளையும் பற்றிக் கூறுமாறு சிவபெருமானிடம் பார்வதி கேட்டுக் கொண்டாள். அனைத்து லிங்கங்களும் தெய்வீக சக்தி மிகுந்தவை என்று கூறினார் சிவபெருமான்.

அச்வினியேச்வரருக்கு வடக்கே பத்ரஹ்ருதம் என்றொரு பசும்பால் நிறைந்த குண்டம் இருக்கிறது. இந்தக் குண்டத்தில் நீராடுவதால், தகுதியான ஒருவருக்கு ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த புண்ணியம் கிடைக்கும். பௌர்ணமியும், பூரட்டாதி நக்ஷத்திரமும் இணையும் நாட்களில் இந்த இடத்தைத் தரிசித்து நீராடுதல் மிகுந்த சிறப்பு. இந்தக் குண்டத்தில் நீராடி, அருகிலுள்ள பத்ரேச்வர லிங்கத்தை வழிபடுபவர்கள் இறந்த பிறகு ஸ்வர்க்கத்தை அடைவார்கள். (காசி காண்டம் : அத்யாயம் 97). (இந்தக் குண்டம் தற்போது இல்லை).

இருப்பிடம்

C/K 2/4, படனி டோலா, போசலா காட், வாராணஸி என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, புகழ்பெற்ற ஸங்கடதேவி கோயில் வழியாக நடந்து செல்லலாம். அல்லது அன்பர்கள் போசலா காட் வரை படகில் சென்று அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை கோயில் திறந்திருக்கிறது. தினசரி பூஜைகள் அர்ச்சகரால் நடத்தப்படுகின்றன. சிவராத்ரி, சில ஏகாதசிகள் முதலிய முக்கிய தினங்களில் சிறப்பு பூஜைகளும் நிகழ்கின்றன. காலை, மதியம், இரவு ஆகிய மூன்று வேளைகளிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

பூதேச்வரர்

காசி காண்டம் பூதேச்வரர் என்ற சக்தி வாய்ந்த லிங்கத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது. பூதேச்வரரை வழிபடும் அன்பர்கள் அனைத்து நலங்களும், வளங்களும் பெறுவர்.

இருப்பிடம்

பூதேச்வரர் கல்லி, தசாச்வமேத் என்ற இடத்தில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அமைந்திருக்கிறது. அன்பர்கள் தசாச்வமேத் பாட்டா கடை பகுதி வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து பூதேச்வரர் கல்லிக்கு வழிகேட்டு நடந்து செல்லலாம். இந்தக் கோயிலின் உள்ளே ஒரு சனைச்சரர் விக்ரஹமும் உள்ளது. அன்பர்கள் தசாச்வமேத் கட்டம் வரை படகில் சென்று, படிகள் ஏறிச் சென்றும் இந்த இடத்தை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.00 மணி முதல் நண்பகல் 1.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 9.30 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலையிலும் மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது. மூடியிருக்கும் நேரங்களில், அன்பர்கள் கம்பிக்கதவுகள் வழியாகத் தரிசனம் செய்யலாம். கோயில் திறந்திருக்கும் நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை.

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீஅசோக் ஜோஷி கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள், ருத்ர ஜபம் செய்ய 0542-2452165 என்ற எண்ணில் அவரை அணுகலாம்.

சக்ரேச்வரர் (யந்த்ரேச்வரர்)

சக்ர தீர்த்தத்தையும், சக்ரம் பொறிக்கப்பட்ட சக்ரலிங்கத்தையும் பற்றி காசிகண்டம் ஓரிடத்தில் குறிப்பிடுகிறது. (ஸ்ரீசக்ரம் என்பது அம்பாள் வழிபாட்டிற்குரிய உயர்ந்த யந்த்ரமாகும். தகுந்த குருநாதரிடம் முறையாக அறிந்து, மிகுந்த தூய்மையுடன் செய்யப்படுவது ஸ்ரீசக்ர வழிபாடாகும்.)

சக்ர தீர்த்தத்தில் நீராடி, சக்ரேச்வரரை வழிபடும் அன்பர்கள், இறந்தபின், சிவபெருமானின் இருப்பிடத்தை அடைவர்.

இருப்பிடம்

அந்நபூர்ணா கோயிலில் நுழைந்தவுடன் வலதுபுறம், யந்த்ரேச்வரர் என்று அழைக்கப்படும் சக்ரேச்வரர் லிங்கம் உள்ளது.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீபவன் ஜா கோயிலின் அர்ச்சகர்களில் ஒருவராவார். விசேஷ பூஜைகள் செய்ய 0542-2392619 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கொள்ளலாம்.

சதுர் முகேச்வரர்

வருண ஸங்கமேச்வரருக்கு முன்னால் சதுர்ப்ரஹ்மதேவரால் ஸ்தாபிக்கப்பட்ட சதுர் முகேச்வர லிங்கம் உள்ளது.

சதுர்முக ப்ரயாகேச்வரர் என்றும் (காசி காண்டம், அத்யாயம் 97) வழங்கப்படும் இந்த லிங்கத்தை வழிபடுபவர்கள் ப்ரஹ்மலோகத்தை அடைகின்றனர்.

இருப்பிடம்

சதுர்முகேச்வரர் (அல்லது ப்ரயாக லிங்கம்) வருண ஸங்கமேச்வரருக்கு முன்னால் ஆதிகேசவர் கோயிலில் அமைந்துள்ளது. இந்தக் கோயில் ஏ-37/51, ராஜ்காட் கோட்டை (ஃபோர்ட்) என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை ரிக்ஷா, சைக்கிள் ரிக்ஷா அல்லது காரில் செல்ல முடியும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை.

கோயிலின் அர்ச்சகர்

கோயில் பல தலைமுறைகளாக, ஸ்ரீ சி.பி. த்ரிபாதி என்பவரது குடும்பத்தினரின் பொறுப்பில் இருந்து வருகிறது. விசேஷ பூஜைகள் செய்ய (0)9305177440 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

தக்ஷேச்வரர்

ம்ருத்யுஞ்ஜயேச்வரருக்கு அருகில் தக்ஷேச்வரர் வீற்றிருக்கிறார். இந்த லிங்கத்தை வழிபடுவதால், அன்பர்கள் தங்கள் வாழ்வில் தெரிந்தோ தெரியாமலோ செய்த அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுபடுவர். இந்த லிங்கத்திற்கு அருகில் காலோதக கூபம் (கிணறு) உள்ளது.

அனைத்து நோய்களையும் நீக்க வல்லது இந்த த் தீர்த்தம்.

இருப்பிடம்

கே 52/39, வ்ருத்த கால் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடத்திற்கு பிஷேச்வர்கஞ்ச்/ஜி.பி.ஓ வழியாக ரிக்ஷாவில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 4.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணி வரை திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் கங்கை நீர் கொண்டும், மலர்கள் கொண்டும் வழிபடலாம்.

கோயிலின் அர்ச்சகர்கள்

இங்கு விசேஷ பூஜைக்கு திரு சைலேஷ் சாஸ்திரி என்பவரிடம் தொடர்பு கொள்ளலாம். செல் நம்பர் 9889145353

தன்வந்தரேச்வரர்

மால்தீச்வரருக்கு அருகில் தன்வந்தரேச்வரர் வீற்றிருக்கிறார். இந்த லிங்கத்தை வழிபடுவதால், அன்பர்கள் அனைத்துவித பாவங்களிலிருந்தும் விடுபடுவர். அனைத்துவித நோய்களும் அவர்களை விட்டு நீங்கும். தன்வந்த்ரி (தேவ வைத்தியர்) ம்ருத சஞ்ஜீவினி, இறந்தவரை உயிர்ப்பிக்கும் ஆற்றல் வாய்ந்த அம்ருதம் முதலிய பலவித மருந்துகளை தன்வந்தரி கூபத்தில் போட்டிருக்கிறார் என்று காசி கண்டம் கூறுகிறது. இந்தக் கிணறு தற்போது நம் கண்ணில் படுவதில்லை. இந்த லிங்கத்திற்குப் பக்கத்தில் காலோதக தீர்த்தம் உள்ளது. இந்தக் கிணற்றில் உள்ள நீர் அனைத்து நோய்களையும் தீர்க்க வல்லது. தன்வந்த்ரி கூபம், காலோதக தீர்த்தத்துடன் கலந்துவிட்டதாகப் பெரியவர்கள் கருதுகின்றனர்.

இருப்பிடம்

கே 52/39, ம்ருத்யுஞ்ஜய மஹாதேவ கோயில் உட்புறம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடத்திற்கு பிசேச்வர் கஞ்ச்/ ஜி.பி.ஓ வழியாகச் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 4.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை திறந்திருக்கிறது. அன்பர்கள் தாங்களே மலர்கள் மற்றும் கங்கை நீர் கொண்டு வழிபடலாம்.

கோயிலின் அர்ச்சகர்

இங்கு விசேஷ பூஜைக்கு திரு சைலேஷ் சாஸ்திரி என்பவரிடம் தொடர்பு கொள்ளலாம். செல் நம்பர் 9889145353

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

த்வாரேச்வரர்

சிவபெருமான் காசியில் த்வாரேச்வர தேவியுடன் வீற்றிருக்கும் த்வாரேச்வர லிங்கத்தைப் பற்றிக் கூறினார்.

த்வாரேச்வர லிங்கத்தை வழிபடுபவர்கள் காசியில் வாழ்வதனால் ஏற்படும் அனைத்து புண்ணியங்களையும் பெற்று ஸித்தியடைவர். தெய்வீக ஆற்றல்களையும், மோக்ஷத்தையும் அடைவர்.

இருப்பிடம்

B-27/1 என்ற எண்ணில் துர்க விநாயகருக்கு இடதுபுறத்தில் அமைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. விசாரித்துப் பார்த்ததில், துர்கா குண்டத்தில், துர்கா தேவி கோயிலின் தெற்கு வாயிலில் வீற்றிருப்பது தெரிய வருகிறது. கோயிலின் முக்கிய வாயில் மேற்குப்புறத்தில் இருக்கிறது. சிறுகோயில் போன்ற அமைப்பினுள்ளே த்வாரேச்வர தேவியுடன் த்வாரேச்வரர் வீற்றிருக்கிறார். (காசி கண்டம், அத்யாயம் 97)

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

கணேச்வரர் (ராமேச்வரர்)

ஸோமேச்வர லிங்கத்திற்கு அருகில் கணேச்வர லிங்கம் அமைந்துள்ளது. இந்த லிங்கத்தை வழிபடுபவர்கள் மகிழ்ச்சியும், வளமும் பெறுவர்.

நம் நாட்டில் பன்னிரெண்டு ஜ்யோதிர்லிங்கங்களைக் குறிக்கும் வகையில் காசியில் பன்னிரெண்டு ஜ்யோதிர்லிங்கங்கள் இருக்கின்றன. கணேச்வரர் ராமேச்வரர் என்றும் அழைக்கப்படுவார். (தமிழ்நாட்டில் ராமேச்வர க்ஷேத்திரத்தில் உள்ள சிவலிங்கத்தை இவர் குறிக்கிறார்).

இருப்பிடம்

கணேச்வரர் அல்லது ராமேச்வரர் டி 16/34, மன்மந்திர் காட்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் தசாச்வமேத் விச்வநாத் கல்லி வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்றால், கல்லியில் நுழைந்தவுடன் வலதுபுறம் திரும்பி 60 கஜ தூரம் நடந்து செல்ல வேண்டும். வாராஹி கோயிலுக்கு வழி கேட்டுச் சென்றால், இங்கு சென்று அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

கௌதமேச்வரர்

முசுகுந்தேச்வரருக்கு அருகில், கௌதமேச்வரர் என்ற லிங்கத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இந்த லிங்கம் கௌதம முனிவரால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டதாக இருக்கலாம்.

இந்த லிங்கத்தை வழிபடுபவர்கள் மகிழ்ச்சி நிறைந்த வாழ்வும், மோக்ஷமும் பெறுவார்கள்.

இருப்பிடம்

D 37/33, காசிநரேஷ் சிவாலா, கோடோவ்லியா என்ற முகவரியில் அமைந்துள்ளது. புகழ்பெற்ற மார்வாரி ஹாஸ்பிடலுக்கு அருகில் உள்ளது. இங்குள்ள வழிபாட்டு முறைகள் குறித்து சர்ச்சை எழுந்து, பின் காசி ராஜாவின் முயற்சியினால், இந்தப் பகுதி முழுவதும் கையகப்படுத்தப்பட்டு இங்கு கோயில் எழுப்பபட்டுள்ளது. அதனால் இந்தக் கோயில் காசி நரேஷ் சிவாலா என்று அழைக்கப்படுகிறது.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 4.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது. கோயில் மூடுவதற்குச் சற்று முன்பாக சயன ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீராம் தயால் பதக் மற்றும் ஸ்ரீவிந்த்யசாலி தேவி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வருடத்திற்கொரு முறை முறைமாற்றம் செய்து வழிபாடுகளை நிகழ்த்தி வருகின்றனர்.

கோப்ரக்ஷேச்வரர்

ஆதி மஹாதேவர் கோயிலுக்கு கிழக்குப்புறத்தில் கோப்ரக்ஷேச்வரர் வீற்றிருக்கிறார்.

கோப்ரக்ஷேச்வரர் அல்லது கௌரி சங்கர் கே 4/24, லால் காட் கௌரி சங்கர், (பிர்லா ஸம்ஸ்க்ருத வித்யாலயா அருகில்) பிர்லா ஹவுஸ் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடத்தை அடைய காய்காட் பகுதி வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து வழி விசாரித்து நடந்து செல்லலாம். அல்லது, லால் காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச்சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 7.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை திறந்திருக்கிறது. காலையில் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீ கே கே மிச்ரா கோயிலின் அருகில் உள்ளார். விசேஷ பூஜைகளுக்கு ஏற்பாடு செய்ய (0)9889291651 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

ஹஸ்தி பாலேச்வரர்

தக்ஷேச்வரருக்கு அருகில் ஹஸ்தி பாலேச்வர லிங்கம் உள்ளது. இந்த லிங்கத்தை வழிபடுவது ஒரு யானையை வழிபடுவதற்குச் சமானம். இவர் யானைக் கடவுளாக வழிபடப்படுகிறார்.

இருப்பிடம்

கே 52/39, ம்ருத்யுஞ்ஜய மஹாதேவர் கோயில் உட்புறம், தாராநகர் என்ற முகவரியில் உள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை ரிக்ஷாவில் பிசேச்வரர் கஞ்ஜ்/ஜி.பி.ஓ வழியாகச் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 4.00 மணி முதல் இரவு 12.00 வரை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கோயில் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் மலர்கள் கொண்டும், கங்கை நீர் கொண்டும் வழிபடலாம்.

கோயிலின் அர்ச்சகர்

இங்கு விசேஷ பூஜைக்கு திரு சைலேஷ் சாஸ்திரி என்பவரிடம் தொடர்பு கொள்ளலாம். செல் நம்பர் 9889145353

ஜம்புகேச்வரர்

காசி காண்டம் ஜம்புகேச்வரர் என்ற லிங்கத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இந்த லிங்கத்தை வழிபடுபவர்கள் அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுபட்டு, இறந்த பிறகு ஸ்வர்கத்தை அடைவர்.

இருப்பிடம்

கே - 58/101, பாரா கணேஷ் கோயில் வளாகத்திற்குள் என்ற முகவரியில் அமைந்திருக்கிறது. அன்பர்கள் லோஹட்டியா வரை ரிக்ஷா அல்லது சைக்கிள் ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து நடந்து செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 4.45 மணி முதல் இரவு 10.30 வரை திறந்திருக்கிறது. காலை 4.45 மணிக்கு மங்கள ஆரத்தியும், 10.30 மணிக்கு போக் ஆரத்தியும், இரவு 10.30 மணிக்கு சயன ஆரத்தியும் நடைபெறுகின்றன.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீஸுபாஷ் சந்த்ர திவாரி கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9415446300 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

ஜனகேச்வரர்

மால்தீச்வரருக்கு அருகில் ஜனகேச்வரர் வீற்றிருக்கிறார். இந்த லிங்க மூர்த்தியை வழிபடுபவர்கள் பரிபூரண ஞானத்தை அடைவர். இந்த லிங்கத்திற்கு அருகில் காலோதக கூபம் (கிணறு)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உள்ளது. இந்தக் கிணற்றின் நீர் அனைத்து நோய்களையும் குணப்படுத்த வல்லது.

இருப்பிடம்

கே - 52/39, ம்ருத்யுஞ்ஜய மஹாதேவ், தாராநகர் என்ற பகுதியில் உள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை பிசேச்வர கஞ்ஜ்/ ஜி.பி.ஓ வழியாக ரிக்ஷாவில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 4.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணி வரை கோயில் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் கங்கை நீர் கொண்டும், மலர்கள் கொண்டும் வழிபடலாம்.

கோயிலின் அர்ச்சகர்

கோயிலுக்கென்று தனியாக அர்ச்சகர் எவரும் இல்லை. ஸ்ரீ நவீன் தத் வியாஸ் என்பவரின் செல் 9026667628 என்ற எண்ணில் அவரை தொடர்பு கொள்ளலாம்.

ஜராஸந்தேச்வரர்

விசாலாக்ஷி கோயிலுக்கு அருகில் ஜராஸந்தேச்வர லிங்கம் அமைந்திருக்கிறது. இந்த லிங்கத்தை வழிபடுவதால் அன்பர்கள் எந்தவிதமான நோயிலிருந்தும் விடுபடுவர். இந்த லிங்கம் ஜ்வர நாசகர் (ஜ்வரத்தை அழிப்பவர்) என்று சொல்லப்படுகிறது.

முற்காலத்தில் மக்கள் நோயிலிருந்து விடுபடுவதற்குத் தெய்வங்களை வழிபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். தற்போதும் கூட, கடும் ஜ்வரத்திலிருந்து விடுபட இந்த லிங்கத்தை மக்கள் வழிபடுகின்றனர்.

இருப்பிடம்

D-3/71, மிர் காட், பாரே ஹநுமான் கோயில் என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் தசாச்வமேத் விச்வநாத் கல்லி வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து விசாலாக்ஷி கௌரி கோயில் வழியாக நடந்து செல்லலாம். அல்லது மிர் காட் வரை படகில் சென்று அங்கிருந்து படிகள் ஏறிச்சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காலை 7.00 மணி முதல் பகல் 1.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலையிலும் மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீராஜேச்வர ப்ரஸாத் கோயிலின் அர்ச்சகராவார்.

ஜ்வர ஹரேச்வரர்

கோப்ரக்ஷேச்வரருக்கு கிழக்குப் பக்கத்தில் ஜ்வர ஹரேச்வரர் வீற்றிருக்கிறார். (இவரை விஜ்வரர் என்று காசி கண்டம் குறிப்பிடுகிறது). மிக அதிக ஜ்வரம் முதலிய நோய்களால் வாடுபவர்கள் ஜ்வர ஹரேச்வரரை வழிபட்டால் நோய் தீரும்.

இருப்பிடம்

ஜே 6/85, (ஸ்கந்த மாதா கோயிலுக்குச் செல்லும் வழியில்) ஜயத்புராவில் அமைந்துள்ளது. ஜயத்புரா காவல் நிலையம் வழியாக அன்பர்கள் இந்த இடம் வரை ரிக்ஷாவில் செல்லலாம். ஸ்கந்த மாதா கோயில் மிக ப்ரஸித்தி பெற்றது. சிலர் 2/4, படனி டோலா என்ற இடத்தில் ஜ்வர ஹரேச்வரர் வீற்றிருக்கிறார் என்று கூறுகின்றனர். பண்டித கேதார்நாத் வ்யாஸ் விரிவாக ஆராய்ச்சி செய்து ஜயத்புரா முகவரியை உறுதிப்படுத்தியுள்ளார்.

இன்றும் கூட ஜ்வரத்திலிருந்து விடுபட மக்கள் மிகுந்த நம்பிக்கையோடு ஜ்வர ஹரேச்வரரை வழிபடுகின்றனர்.

ஜ்வர ஹரேச்வரர், கோப்ரக்ஷேச்வரருக்கு கிழக்குப் பக்கத்தில் வீற்றிருப்பதாக காசி காண்டம் தெரிவிக்கிறது. கிழக்குப் பக்கத்தில் ப்ரஹ்லாத காட், த்ரிலோசன், கங்கை முதலியன உள்ளன.

ஜயத்புராவில் உள்ள ஜ்வர ஹரேச்வரர் தற்போது வீற்றிருப்பது மேற்குத் திசையில் ஆகும். படனி டோலாவில் உள்ள கோயில் தெற்குப்புறத்தில் அமைந்துள்ளது. அந்நியர் படையெடுப்பின்போது, பல விக்ரஹங்கள் வேறு இடங்களில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. அதனால் கோயிலின் இருப்பிடம் குறித்து அன்பர்கள் குழப்பமடைய வேண்டாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 4.00 மணி முதல் பகல் 1.00 மணி வரையிலும், மாலை 3.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திறந்திருக்கிறது. காலை 6.00 மணிக்கும் இரவு 7.00 மணிக்கும் ஆரத்தி நடைபெறுகின்றன.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீகைலாசநாத் கோயிலின் அர்ச்சகராவார்.

கச்சேச்வரர்

சுக்ரேச்வரருக்கு முன்னால் கச்சேச்வரர் என்ற லிங்கம் உள்ளது. இங்கு சுக்ர கூபம் (கிணறு) உள்ளது.

கச்சேச்வரரை வழிபடுபவர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பர். சுக்ர கூபத்தின் நீரைத் தொடுபவர்கள் அச்வமேத யாகத்தின் பலனைப் பெறுவர்.

இருப்பிடம்

D - 80, காலிகா கல்லி என்ற இடத்தில் அமைந்துள்ளது. விச்வநாதர்-அந்நபூர்ணா கல்லிக்கு அடுத்த கல்லியில் சுக்ரேச்வரருக்கு அருகில் அமைந்துள்ளது.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

கஹோலேச்வரர்

கஹோலேச்வரரை வழிபடும் அன்பர்கள் காசியில் வாழ்ந்த பலனையும், ஸித்திகளையும் பெறுவர். அவர்கள் தெய்வீக சக்திகளையும், மோக்ஷத்தையும் அடைவர்.

இருப்பிடம்

காமச்சா பகுதியில் படுக் பைரவர் கோயிலின் உட்புறத்தில், ஆதி பைரவரைத் தரிசிக்கச் செல்லும் வழியில் வலதுபுறம் வீற்றிருக்கிறார். கோயிலின் ஒரு வழிக்கதவு மூடியே இருக்கிறது. அன்பர்கள் இந்த இடம் (படுக் பைரவர், காமச்சா) வரை ரிக்ஷாவில் செல்லலாம்.

K 63/22 என்ற எண்ணில் பூத பைரவருக்கு அருகில் மற்றொரு கஹோலேச்வரர் இருப்பதாகக் கூறுகின்றனர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 11.30 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலையில் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

மஹந்த் விஜய் புரி மற்றும் ஆசார்ய சம்பு சரண் (படுக் பைரவர்) கோயிலின் அர்ச்சகராவர். (0)9839152539 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம். ராஹு சாந்தி, கால ஸர்ப்ப தோஷம், தந்த்ர நிவாரணம் முதலியவற்றுக்காக அவர்கள் விசேஷ பூஜைகள் செய்கின்றனர்.

காலேச்வரர்

லிங்கத் திருவுருவத்தைப் பார்த்த மாத்திரத்தில் பக்தர்களின் உள்ளத்தில் நம்பிக்கையை உருவாக்கும் ஆற்றல் படைத்த காலேச்வரரைப் பற்றி சிவபெருமான் குறிப்பிடுகிறார்.

காலேச்வரரை வழிபடுபவர்கள் உள்ளமும், எண்ணங்களும் தூய்மை பெறும். தூய எண்ணங்கள் உடையவருக்கு வாழ்வில் பயம் என்பதே இருக்காது.

இருப்பிடம்

கே-31/49, தண்டபாணி கோயில் உட்புறம் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் பைரோநாத் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து தண்டபாணி கோயிலுக்குச் செல்லும் வழி கேட்டுச் செல்லலாம். படகில் செல்வதானால், பஞ்ச கங்கா கட்டம் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்று அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.30 மணி முதல் 11.00 மணி வரையிலும், மாலை 3.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலை 7.30 மணிக்கும், இரவு 9.00 மணிக்கும் ஆரத்தி நடைபெறுகிறது. கோயில் திறந்திருக்கும் நேரம் மாற்றத்திற்கு உட்பட்டது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீத்ரிபுவன் பாண்டே கோயிலின் அர்ச்சகராவார். ஸ்ரீச்யாம் பிஹாரி என்பவரும் கோயிலில் உள்ளார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கர்தமேச்வரர்

சிவபெருமான் கர்தமேச்வர லிங்கம் அர்க விநாயகருக்கு அருகில் (லோலார்க்) உள்ளதாகவும், இந்த லிங்கம் அர்க விநாயகருக்கும், துர்கா தேவிக்கும் இடையில் இருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

கர்தமேச்வரரை வழிபடும் அன்பர்கள் சிவனருள் பெற்று வணங்குவர். அவர்களது எண்ணங்கள் எல்லாம் ஈடேறும்.

இருப்பிடம்

பி 2/17 என்ற எண்ணில் மஹிஷாஸூரமர்த்தினி (சாமுண்டா தேவி) கோயில் வளாகத்தில் உள்ளது. அன்பர்கள் லோலார்க் வரை ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து நடந்து சென்று மஹிஷாஸூரமர்த்தினி கோயிலை அடையலாம்.

காசி பகுதியில் 128 தெய்வத் திருவுருவங்ளைத் தரிசிக்கும் பஞ்ச கோச யாத்திரை மேற்கொள்ளப்படுகிறது. அதில் காண்டவ க்ராமத்தில் கர்தமேச்வரர் கோயில் உள்ளது. அஸியிலிருந்து தென்மேற்கு திசையில் 7 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. கர்தமேச்வரர் கோயில் 10ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. நுணுக்கமான கலை வேலைப்பாடுகளுக்குப் புகழ்பெற்றது. அன்பர்கள் இந்தக் கோயிலையும் தரிசிக்கலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.30 மணி முதல் 11.30 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலையிலும் மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது. மாலை 7.00-7.30 மணிக்கு நடைபெறும் ஆரத்தி மிகவும் சிறப்பானது.

கரவீரேச்வரர்

மஹாலக்ஷ்மீச்வரருக்கு அருகில் கரவீரேச்வரர் வீற்றிருப்பதாக சிவபெருமான் கூறியுள்ளார். கரவீரேச்வரரை வழிபடும் அன்பர்கள் அனைத்துவித நோய்களிலிருந்தும் விடுபடுவர்.

காசி காண்டம், இந்த ப்ரதேசத்தையே ஒரு சக்தி பீடம் என்று கூறுகிறது. மிகவும் சக்தி வாய்ந்த தேவியர் பலர் இருக்கின்றனர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காசியில் மிகவும் ஆற்றல் மிக்க சக்தி பீடம் மஹாலக்ஷ்மி சக்தி பீடமே ஆகும்.

இருப்பிடம்

D 52/41 என்ற எண்ணில் மஹாலக்ஷ்மி கோயிலுக்கு வெளிப்புறம் (1008 சனி மஹராஜ், பூரப் முக் சனி வளாகத்திற்குள்) என்ற இடத்தில் அமைந்துள்ளது. மஹாலக்ஷ்மி கோயிலும், லக்ஷ்மி குண்டமும் மிகவும் ப்ரஸித்தி பெற்றவை. அன்பர்கள் லக்ஷா வழியாக ரிக்ஷாவில் சென்று அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் பகல் 1.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை திறந்திருக்கிறது. கோயில் திறந்திருக்கும் நேரம் மாற்றத்திற்கு உட்பட்டது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் தாங்களே வழிபடலாம்.

கூஷ்மாண்டேச்வரர்

மணிகர்ணிகா, பிதாமஹேச்வரரைப் பற்றிக் குறிப்பிடுகையில் சிவபெருமான் கூஷ்மாண்டேச்வரரைப் பற்றியும் கூறுகிறார். கூஷ்மாண்டேச்வரரை வழிபடுபவர்கள் சிவனருள் பெறுவர்.

இருப்பிடம்

C/K 10/16, ப்ராஹ்மணால், ஸ்வர்க த்வாரேச்வரர் அருகில் என்ற முகவரியில் அமைந்துள்ளது. புலஹேச்வரருக்கு எதிரில் தெற்குப்புறத்தில் ஒரு வீட்டில் படிகள் உயரச் செல்கின்றன. படிகள் ஏறிச் சென்றால், ஒரு தோட்டம் தென்படுகிறது, அங்கு ஒரு சிறிய கோயிலில் ஸ்வர்க த்வாரேச்வரர் வீற்றிருக்கிறார். அவருக்கு அருகில் கூஷ்மாண்டேச்வரர் வீற்றிருக்கிறார். ஸ்வர்க்க த்வாரி என்ற இடம் மிகவும் முக்கியமான இடமாகும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை திறந்திருக்கிறது. அன்பர்கள் தாங்களே வழிபாடுகள் செய்யலாம்.

க்ருஷ்ணேச்வரர்

வசிஷ்டேச்வரருக்கு அருகில் க்ருஷ்ணேச்வரர் வீற்றிருக்கிறார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

க்ருஷ்ணேச்வரரை வழிபடும் அன்பர்கள் இறந்த பிறகு, விஷ்ணு லோகத்தை அடைவர்.

இருப்பிடம்

C/K 7/159 என்ற எண்ணில், ஸங்கட தேவி கோயிலின் வெளிப்புற சுவரில் க்ருஷ்ணேச்வரர் வீற்றிருக்கிறார். ஹரிச்சந்த்ரேச்வரருக்கு எதிர்புறத்தில், க்ருஷ்ணேச்வரர் கிழக்கு நோக்கி வீற்றிருக்கிறார். அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து புகழ்பெற்ற ஸங்கட தேவி கோயில் வழியாக நடந்து செல்லலாம். அல்லது ஸங்கட கட்டம் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

மதாலசேச்வரர்

சுக்ரேச்வரருக்குக் கிழக்குப்பக்கத்தில் மதாலசேச்வரர் லிங்கத்தைப் பற்றிக் காசி காண்டம் குறிப்பிடுகிறது.

மதாலசேச்வர லிங்கத்தை வழிபடும் அன்பர்கள் சிவனருள் பெறுவர் என்பது உறுதி.

இருப்படம்

டி 5/133,காலிகா கல்லி என்ற இடத்தில் அமைந்துள்ளது. அந்நபூர்ணா கோயிலிலிருந்து விச்வநாதர் கோயிலுக்குச் செல்லும் வழியில், விச்வநாதர் கோயிலைக் கடந்த பிறகு, ஒரு ஐம்பது கஜ தூரத்தில் ஸரஸ்வதி படக் என்ற குறுக்குச்சாலை ஒன்று வரும். அதில் வலதுபுறம் திரும்பி சிறிது தூரம் நடந்தால், மறுபடி வலதுபக்கம் ஒரு திருப்பம் வரும், அதற்கு காலிகா கல்லி என்று பெயர். வலதுபுறம் திரும்பாமல், (இடதுபுறத்திலேயே எதிர்திசையில்) மதாலேச்வரர் வீற்றிருக்கிறார். இந்த லிங்கத்தை அருகிலுள்ள மக்கள் பஞ்சம் மந்தரேச்வரர் என்று அழைக்கிறார்கள்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை திறந்திருக்கிறது. அன்பர்கள் நாள் முழுவதும் தரிசனம் செய்யலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மஹாகாலேச்வரர்

உஜ்ஜயினியில் உள்ள ஜ்யோதிர்லிங்கமான மஹாகாலேச்வரே, இங்கும் அதே பெயருடன் வீற்றிருக்கிறார்.

இருப்பிடம்

கே 52/39 என்ற எண்ணில் ம்ருத்யுஞ்ஜய மஹாதேவர் கோயிலில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை பிசேச்வர் கஞ்ஜ்/ஜி.பி.ஓ வழியாக ரிக்ஷாவில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 4.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் கங்கை நீர் கொண்டும், மலர்கள் கொண்டும் அர்ச்சித்து வழிபடலாம்.

கோயிலின் அர்ச்சகர்

இங்கு விசேஷ பூஜைக்கு திரு சைலேஷ் சாஸ்திரி என்பவரிடம் தொடர்பு கொள்ளலாம். செல் நம்பர் 9889145353

மஹாலக்ஷ்மீச்வரர்

லக்ஷ்மீ குண்டத்திற்கு அருகில் உள்ள மஹாலக்ஷ்மீச்வரரைப் பற்றி சிவபெருமான் கூறினார். லக்ஷ்மீ குண்டத்தில் நீராடி, மஹாலக்ஷ்மீச்வரரை வழிபடுபவரைத் தேவலோகத்தில் தேவதா ஸ்த்ரீகள் சூழ்ந்துகொண்டு, சாமரம் வீசுவர்.

தேவர்கள் தங்கள் மனைவியருடன் தேவலோகத்திலிருந்து பூமிக்கு வந்து மஹாலக்ஷ்மீச்வரரை வழிபடுகின்றனர் என்று காசி காண்டம் கூறுகிறது.

காசி காண்டம், இந்தப் பகுதி முழுவதையும் ஒரு சக்தி பீடமாகவே கூறுகிறது. மஹாலக்ஷ்மி சக்தி பீடம் மிகவும் ஆற்றல் வாய்ந்ததாகும்.

இருப்பிடம்

D 52/54 என்ற எண்ணில் லக்ஷ்மி குண்டத்திற்கு மேலே, அடி பம்பிற்கு எதிர்புறம் மஹாலக்ஷ்மீச்வரர் வீற்றிருக்கிறார். இந்தக்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கோயில் மிகவும் ப்ரஸித்தி பெற்றது. லக்ஸா வழியாக ரிக்ஷாவில் செல்லலாம். மஹாலக்ஷ்மீச்வரரை காசிவாசிகள் ஸோராஹியா மஹதேவ் என்ற பெயரால் அழைக்கின்றனர்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை திறந்திருக்கிறது. கோயில் திறந்திருக்கும் நேரம் மாற்றத்திற்கு உட்பட்டது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

மஹாஸித்தேச்வரர்

ஸித்த குண்டத்திற்கு அருகில் மஹாஸித்தேச்வர லிங்கம் உள்ளது. மஹாஸித்தேச்வரரை வழிபடுபவர்கள் எல்லாவிதமான ஸித்திகளும் அடைவர்.

இருப்பிடம்

அஸி பகுதியில், அபய சினிமா அருகில் கோயங்கா காலேஜில் ஸித்தேச்வரர் வீற்றிருக்கிறார். அஸி க்ராஸ் ரோடு அல்லது துர்கா குண்டம் வழியாக ரிக்ஷாவில் செல்லலாம்.

ஜே-6/85 என்ற எண்ணில் ஜயத்புராவில், ஜ்வரஹரேச்வரர் கோயிலில் இன்னொரு ஸித்தேச்வரர் ஸந்நிதி உள்ளது.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.30 மணி முதல் இரவு 9.00 மணி வரை திறந்திருக்கிறது. காலை 6.30 மணிக்கும், இரவு 7.15 மணிக்கும் ஆரத்தி நடைபெறுகிறது. கோயில் வளாகத்தில் காலையிலும், மாலையிலும் சில அன்பர்கள் ஜபம் செய்து வருகின்றனர்.

கோயிலுக்கு அருகில் ஸித்த குண்டத்தின் எஞ்சிய பகுதியாக ஸித்த கூபம் (கிணறு) இருக்கிறது. அன்பர்கள் இந்தக் கிணற்றையும் வழிபடுகின்றனர்.

இந்தக் கோயில் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

மால்தீச்வரர்

ஹஸ்தி பாலேச்வரருக்கு அருகில் மால்தீச்வரர் வீற்றிருக்கிறார். இந்த லிங்கத்தை வழிபடுவதால் வாழ்வில் வளம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பெறுவர். இந்த லிங்கத்திற்கு அருகில் காலோதக கூபம் (கிணறு) உள்ளது. இந்தக் கிணற்றின் நீர் எல்லாவித நோய்களையும் தீர்க்க வல்லது.

இருப்பிடம்

கே 52/39 என்ற எண்ணில் வ்ருத்தகால/ ம்ருத்யுஞ்ஜய மஹாதேவர் கோயில் உட்புறம், தாராநகர் என்ற முகவரியில் உள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை ரிக்ஷாவில் பிசேச்வரர் கஞ்ஜ்/ ஜி.பி.ஓ வழியாகச் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 4.00 மணி முதல் இரவு 12.00 வரை திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் மலர்கள் கொண்டும், கங்கை நீர் கொண்டும் வழிபடலாம்.

கோயிலின் அர்ச்சகர்

இங்கு விசேஷ பூஜைக்கு திரு சைலேஷ் சாஸ்திரி என்பவரிடம் தொடர்பு கொள்ளலாம். செல் நம்பர் 9889145353

ம்ருத்யுஞ்ஜயேச்வரர் (ம்ருத்யுஞ்ஜய மஹாதேவ்)

காலேச்வரருக்கு அருகில் ம்ருத்யுஞ்ஜயேச்வரர் வீற்றிருக்கிறார். இந்த லிங்கம் அன்பர்களுக்கு ஏற்படும் அகால மரணத்தைத் தடுக்கும் சக்தி வாய்ந்தது. லிங்கத்திற்கு அருகில் காலோதக கூபம் (கிணறு) உள்ளது. இதன் நீர் எல்ாவித நோய்களையும் தீர்க்க வல்லது.

ம்ருத்யுஞ்ஜயேச்வரருக்கு அபம்ருத்யு ஹரேச்வரர் என்று மற்றொரு பெயரும் உண்டு (காசி கண்டம).

இருப்பிடம்

கே 52/39, வ்ருத்த கால் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை பிசேச்வர் கஞ்ஜ்/ ஜி.பி.ஓ வழியாக ரிக்ஷாவில் செல்லலாம்.

அன்பர்கள் இந்த லிங்கத்தை ம்ருத்யுஞ்ஜய மஹாதேவ் என்று அழைக்கின்றனர், இது மிகவும் ப்ரஸித்திபெற்ற இடமாகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 4.00 மணி முதல், நள்ளிரவு 12.00 மணி வரை திறந்திருக்கிறது. அலங்காரத்தின்போது, சில சமயம் கோயில் கதவு மூடியிருக்கும். காலை 5.30 மணிக்கும், மாலை 6.30 மணிக்கும், இரவும் ஆரத்தி நடைபெறுகின்றன.

ம்ருத்யு என்றால் மரணம் என்று பொருள், ஜய என்றால் அதனை வெற்றிகொள்வது என்று பொருள். மரணத்தை வெல்பவர் ம்ருத்யுஞ்ஜயர்.

ஜாதகத்தில் ஆயுள் குறித்த ப்ரச்சனைகள், அகால மரணக் குறிப்புகள் தென்பட்டால், இந்தக் கோயிலுக்கு வந்து மஹா ம்ருத்யுஞ்ஜய ஜபம் செய்வது அன்பர்களின் வழக்கம், பலர் இதில் வெற்றி கண்டுள்ளனர்.

கோயிலின் அர்ச்சகர்

இங்கு விசேஷ பூஜைக்கு திரு சைலேஷ் சாஸ்திரி என்பவரிடம் தொடர்பு கொள்ளலாம். செல் நம்பர் 9889145353

முசுகுந்தேச்வரர்

காசி காண்டத்தின் 97 வது அத்யாயம் காசியில் உள்ள பல லிங்கங்களைப் பற்றிக் கூறுகிறது. அவற்றுள் முசுகுந்தேச்வரர் என்ற லிங்கத்தைப் பற்றி முக்கியமாகக் குறிப்பிடுகிறது.

இந்த லிங்கத்தை வழிபடுபவர்கள், வாழ்வில் மகிழ்ச்சியும், மோக்ஷமும் பெறுவர்.

இருப்பிடம்

ராடியோ என்று அழைக்கப்படும் ம்ருத்யுஞ்ஜயேச்வரர் ஜய்புரியா பவன் அருகில் (கோடவ்லியா பகுதியில்), பவனுக்கு முந்தைய இடது புறத் திருப்பத்தில் உள்ளார். இது கொடை சௌகி நோக்கிச் செல்லும் வழியாகும். இந்தப் பகுதிக்கே பராடியோ என்று பெயர்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் 11.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நள கூபேச்வரர் (அ) நள குபேரேச்வரர்

காமேச்வரருக்குக் கிழக்குப் பக்கத்தில் நள கூப லிங்கம் உள்ளது. அந்த லிங்கத்திற்கு முன்னால் நள கூபம் உள்ளது என்று சிவபெருமான் கூறினார். நள கூபத்தில் நீராடி, நள கூபேச்வரரை வழிபடுவதால், பயிர்கள் நன்கு செழித்து வளரும், மக்கள் மகிழ்ச்சி பெறுவர்.

இருப்பிடம்

கே 30/6, காஸி டோலா என்ற முகவரியில் அமைந்துள்ளது. காமேச்வரருக்குக் கிழக்கே முன்பு பஞ்சல்கேச்வரர் லிங்கம் இருந்ததாகவும், அது மறைந்து, தற்போது இந்த லிங்கம் இருப்பதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

நள கூப லிங்கத்தைப் பற்றிக் காசி காண்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் பஞ்சல்கேச்வரரைப் பற்றிக் குறிப்பிடவில்லை. அந்நியர் படையெடுப்பின்போது பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

தனியாருக்குச் சொந்தமான ஒரு வீட்டினுள் நள கூபேச்வர லிங்கம் உள்ளது. அன்பர்கள் கம்பிக்கதவுகள் வழியாக தரிசனம் செய்யலாம். இந்தப் புத்தகத்தின் ஆசிரியர்களைக் கங்கை நீர் கொண்டு சிறு அபிஷேகமும், பூஜையும் செய்வதற்கு அனுமதித்தனர்.

நள கூபம் (கிணறு) தற்போது உள்ளது.

அன்பர்கள் பைரோநாத் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து சந்துகள் வழியாக நடந்து செல்லலாம்.

நிகும்பேச்வரர்

விச்வேச்வரருக்கு தெற்குப்பகுதியில் நிகும்பேச்வரர் வீற்றிருக்கிறார். இவர் இந்தப் பகுதியைக் கண்காணித்து, பக்தர்களுக்கு அருள்புரிகிறார். காசி காண்டம், தவறாமல் நிகும்பேச்வரரை வழிபட வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்கிறது.

இருப்பிடம்

விச்வேச்வரர் கோயில் வளாகத்திற்குள், 35/19 என்ற எண்ணில், பார்வதி கோயில் உட்புறத்தில் அமைந்துள்ளது. இந்த இடத்திற்குச் செல்ல, விச்வேச்வரர் கோயிலுக்குச் செல்லும் வழியைப்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பார்க்கவும். காசி காண்டம், இந்த லிங்கம் விச்வேச்வரருக்குத் தெற்குப்புறத்தில் இருப்பதாகக் கூறுகிறது. ஆனால் தற்போதுள்ள விச்வேச்வரர் கோயில் வேறோரிடத்திலிருந்து இந்த இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் இந்த லிங்கத்தை வழிபட மட்டுமே முடியும். நிகும்பேச்வரர் வீற்றிருக்கும் விச்வேச்வரர் கோயில் மாவட்ட ஆட்சித்துறையின் நிர்வாகத்தின் கீழ், கடும் காவல்துறை சட்டதிட்டங்களுடன் செயல்பட்டு வருகிறது. அன்பர்கள் இங்கு விசேஷ பூஜைகள் செய்வது சற்று கடினம்.

பஞ்ச கங்கேச்வரர் (பஞ்சநதேச்வரர்)

காசி காண்டம், மங்கள கௌரிக்கு அருகில் ஒரு பஞ்சநதேச்வரரைப் பற்றிக் குறிப்பிடுகிறது. உள்ளூர்வாசிகள் அதனைப் பஞ்ச கங்கேச்வரர் என்று குறிப்பிடுகின்றனர்.

பஞ்ச கங்கேச்வரரை வழிபடுபவர்கள் வாழ்வில் எல்லா வளங்களும் பெற்று இன்புறுவர்.

இருப்பிடம்

பஞ்சநதேச்வரர் (பஞ்ச கங்கேச்வரர்) கே 22/11, தைலிங்க ஸ்வாமி மடம் என்ற முகவரியில் அமைந்துள்ளது. மடத்திற்குள் நுழையாமல், வெளிப்புற வளாகத்தினுள் சென்றால் பூமிக்கு அடியில், கம்பிக் கதவுகள் வழியாக இவரை தரிசிக்கலாம். பிந்து மாதவர் கோயில் உட்புறம் உள்ள பெரிய லிங்கத்தையும் அன்பர்கள் பஞ்ச கங்கேச்வரர் என்றே அழைக்கின்றனர்.

அன்பர்கள் பைரோநாத் வரை ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து தைலிங்க ஸ்வாமி மடத்திற்கு வழிகேட்டு நடந்து செல்லலாம். படகில் சென்றால், பஞ்ச கங்கா கட்டத்தில் இறங்கி, படிகள் ஏறிச் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மஹாலக்ஷ்மீஸ்வரர்

மாலதீஸ்வரர்



மதாலஸேஸ்வரர்



முச்குந்தேஸ்வரர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நர்மதேஸ்வரர்

நீலகண்டேஸ்வரர்

நக்ஷத்ரேஸ்வரர்

பஞ்சாக்ஷேஸ்வரர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

புலஹேஸ்வரர்

ரத்னேஸ்வரர்



ஷூல் டங்கேஸ்வரர்



ஸோமேஸ்வரர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பவநேச்வரர்

காசி கண்டம், பவநேச்வரர் என்ற பெயருடைய லிங்கத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இந்த லிங்கம் அன்பர்களுக்கு அனைத்துவித ஸித்திகளையும் அளிக்க வல்லதாகும்.

இருப்பிடம்

கே 63/14 பூத பைரவர் மொஹல்லா என்ற இடத்தில் அமைந்துள்ளது. தரைமட்டத்திற்குக் கீழே லிங்கம் உள்ளது. படிகள் இறங்கிச் செல்ல வேண்டும். அன்பர்கள் காசிதேவி கோயில்/ப்யூலா நலா/லோஹட்டியா வரை ரிக்ஷாவில் சென்று ஜ்யேஷ்ட கௌரி/பூத பைரவர் வரை நடந்து செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் 10.00 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

பித்ரேச்வரர்

பித்ரு குண்டத்திற்கு அருகில் பித்ரேச்வரர் வீற்றிருப்பதாகக் காசி காண்டம் கூறுகிறது.

பித்ரு குண்டத்தில் பித்ருக்களுக்கு ச்ராத்தம், தர்ப்பணம் முதலியவற்றைச் செய்பவர்கள் தங்கள் பித்ருக்களை மகிழ்விக்கிறார்கள். அவர்கள் தங்களது வாரிசுகளுக்கு ஆசி வழங்குகிறார்கள்.

இருப்பிடம்

18/47, பித்ரு குண்ட் தலப் என்ற இடத்தில் அமைந்துள்ளது. இந்த இடம் முழுவதற்குமே பித்ரு குண்டம் என்றுதான் பெயர். அன்பர்கள் மல்ஹதியா லோஹா, பிசாச்மோசன் வழியாக பித்ரு குண்டத்திற்குச் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை திறந்திருக்கிறது. நவராத்ரிக்கு முன்பு வரும் பித்ரு பக்ஷத்தில் (மஹாலய பக்ஷத்தில்) அன்பர்கள் பித்ரு குண்டத்தில் பித்ரு காரியங்களைச் செய்கின்றனர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ப்ரஹ்லாதேச்வரர்

ஸ்வரலீனேச்வரருக்கு அருகிலுள்ள ப்ரஹ்லாதேச்வரர் ஸ்வயம்பு லிங்கமாவார். ப்ரஹ்லாதேச்வரரை வழிபடுபவர்கள் உறுதியாகச் சிவனருள் பெறுவார்கள். (காசி கண்டம், அத்யாயம் 97)

இருப்பிடம்

ஏ-10/80, ப்ரஹ்லாத கட்டம் என்ற இடத்தில் உள்ளது. ப்ரஹ்லாத காட் சௌராஹா வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று அடையலாம். அல்லது ப்ரஹ்லாத கட்டம் வரை படகில் சென்று அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம். படிகளுக்கு மேலே கோயில் அமைந்துள்ளது.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் 10.00 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீரமேஷ் சந்த் திவாரி கோயிலுக்கு அருகில் உள்ளார். விசேஷ பூஜைகள் செய்ய (0)933556647 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸமுத்ரேச்வரர்

ஈசானேச்வரர் மற்றும் லைங்கேச்வரருக்கு அருகில் ஸமுத்ரேச்வர லிங்கம் வீற்றிருப்பதாக காசி கண்டம் குறிப்பிடுகிறது.

இந்த லிங்கங்களை வழிபடுபவர்கள் ஸித்தியும், மோக்ஷமும் அடைவார்கள். அவர்கள் தெய்வப் பிறவிகளாகவே கருதப்படுவர்.

இருப்பிடம்

பன்ஸ்படக் மெயின் ரோட்டில் உள்ளது. கோடவ்லியா விலிருந்து சௌக் செல்லும் வழியில், பன்ஸ்படக் விச்வநாத கல்லிக்குப் பிற்கு, ஸமுத்ரேச்வரர் சாலையின் வலதுபுறத்தில் உள்ளார். சௌக் பகுதியிலிருந்து கோடவ்லியா செல்லும்போது பன்ஸ்படக் விச்வநாத கல்லிக்கு முன்பாக இடதுபுறத்தில் லிங்கம் உள்ளது. அருகில் உள்ளவர்கள் இந்த லிங்கத்தை அர்த்த கபரி பாபா என

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அழைக்கின்றனர்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் 11.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் தாங்களே வழிபாடுகளைச் செய்யலாம்.

ஷட்காலேச்வரர்

பார்வதி தேவி காசியில் உள்ள பல்வேறு தீர்த்தங்களையும், லிங்கங்களையும் பற்றிக் கூறுமாறு சிவபெருமானிடம் வேண்டிக் கொண்டாள். சிவபெருமானும் மகிழ்வுடன் கூறத் தொடங்கினார். (காசி கண்டம், அத்யாயம் 97)

காசி கண்டம் ஷட்காலேச்வர லிங்கத்தைப் பற்றிக் கூறுகிறது. சிவபெருமான் அன்பர்களுக்கு எளிதாகத் தரிசனம் கொடுப்பதற்காக இந்த லிங்க வடிவம் எடுத்துக் கொண்டதாகக் காசி கண்டம் கூறுகிறது.

ஷட்காலேச்வரரை வழிபடுபவர்கள் நூறாண்டுகள் நலமாக வாழ்வர்.

இருப்பிடம்

C/K 17/24, தாதேரி பஜார் என்ற இடத்தில் தரைமட்டத்திற்கு கீழே அமைந்துள்ளது. அன்பர்கள் இதனை பீடல் சிவாலா (வெண்கலத்தால் ஆன சிவாலயம்) என்று அழைக்கின்றனர். 18/6 ல் அமைந்துள்ள தசரத் கலா கேந்திரத்திற்கு எதிரில் இது அமைந்துள்ளது. அன்பர்கள் கம்பிக் கதவுகள் வழியாகத் தரிசனம் செய்யலாம். மிகவும் சக்தி வாய்ந்த லிங்கம் ஆகையால் அருகில் யாருக்கும் அருகில் செல்ல அனுமதி இல்லை.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை முதல் மாலை வரை திறந்திருக்கிறது. அன்பர்களுக்குத் தரிசனம் செய்ய மட்டும் அனுமதி அளிக்கப்படுகிறது.

மஹாஸித்தேச்வரர்

ஸித்த குண்டத்திற்கு அருகில் மஹாஸித்தேச்வர லிங்கம் உள்ளது. மஹாஸித்தேச்வரரை வழிபடுபவர்கள் எல்லாவிதமான

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸித்திகளும் அடைவர்.

இருப்பிடம்

அஸி பகுதியில், அபய சினிமா அருகில் கோயங்கா காலேஜில் ஸித்தேச்வரர் வீற்றிருக்கிறார். அஸி க்ராஸ் ரோடு அல்லது துர்கா குண்டம் வழியாக ரிக்ஷாவில் செல்லலாம்.

ஜே-6/85 என்ற எண்ணில் ஜயத்புராவில், ஜ்வரஹரேச்வரர் கோயிலில் இன்னொரு ஸித்தேச்வரர் ஸந்நிதி உள்ளது.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.30 மணி முதல் இரவு 9.00 மணி வரை திறந்திருக்கிறது. காலை 6.30 மணிக்கும், இரவு 7.15 மணிக்கும் ஆரத்தி நடைபெறுகிறது. கோயில் வளாகத்தில் காலையிலும், மாலையிலும் சில அன்பர்கள் ஜபம் செய்து வருகின்றனர்.

கோயிலுக்கு அருகில் ஸித்த குண்டத்தின் எஞ்சிய பகுதியாக ஸித்த கூபம் (கிணறு) இருக்கிறது. அன்பர்கள் இந்தக் கிணற்றையும் வழிபடுகின்றனர்.

இந்தக் கோயில் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

உபசாந்தேச்வரர்

பார்வதி தேவி கேட்டுக்கொண்டதற்கிணங்க, சிவபெருமான் காசியில் உள்ள பல்வேறு தீர்த்தங்களைப் பற்றிக் கூறத் தொடங்கினார். லிங்கங்கள் அனைத்தும் தீர்த்தத்தின் தெய்வீக சக்தியை உடையவை என்று சிவபெருமான் கூறினார்.

சிவபெருமான் பத்ரேச்வரரின் தெய்வீக சக்திகளைக் கூறினார். பத்ரேச்வரருக்கு வடகிழக்கு திசையில் உபசாந்தேச்வரர் லிங்கம் உள்ளது. இந்த லிங்கத்தைத் தொட்ட மாத்திரத்திலேயே அற்புதமான மன அமைதியைப் பெறலாம். இந்த லிங்கத்தை வழிபடுவதால், வெகு காலமாக சேர்ந்திருக்கும் பாவங்களும் அழிந்துவிடுகின்றன. (காசி காண்டம், 97வது அத்யாயம்).

இருப்பிடம்

C/K 2/4, படனி டோலா, போசலா காட், வாராணஸி என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து புகழ்பெற் ஸங்கட தேவி கோயில் வழியாகச் செல்ல முடியும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மற்றொரு முக்கிய அடையாளம் கங்காமஹால் கட்டிடம். அன்பர்கள் போசலா காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை கோயில் திறந்திருக்கிறது. மற்ற கோயில்கள் போல, இங்கு கர்ப்ப க்ருஹத்திற்குள் பக்தர்கள் செல்ல அனுமதியில்லை. காசி காண்டத்தில் இந்த லிங்கத்தைத் தொடுவது பற்றிக் கூறப்பட்டுள்ளது. மிகவும் சக்தி வாய்ந்த லிங்கம் ஆகையால், அன்பர்களைத் தொட அனுமதிப்பதில்லை.

அன்றாடம், அர்ச்சகர்களால் பூஜைகள் செய்யப்படுகின்றன. சிவராத்ரீ, ஏகாதசீ போன்ற நாட்களில் விசேஷ பூஜைகள் நடைபெறுகின்றன. காலை, மதியம், இரவு ஆகிய மூன்று காலங்களிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீ கோபால்ஜி த்ரிபாதி கோயிலின் அர்ச்சகர் ஆவார்.

வருணா ஸங்கமேச்வரர்

காசியில் உள்ள பல்வேறு வழிபடு தலங்களைக் குறித்து, பிந்து மஹரிஷியிடம் மஹாவிஷ்ணு கூறிக் கொண்டிருந்தார். வருண நதிக்கருகில், ஆதி கேசவராக அவர் ஸங்கமேச்வர மஹாலிங்கத்தை ஸ்தாபித்துள்ளார்.

ஸங்கமேச்வரரை வழிபடுவதால், அன்பர்களின் பாவங்கள் அனைத்தும் நீங்குகின்றன. (காசி காண்டம், அத்யாயம் 61, 97). வருண ஸங்கமேச்வரருக்கு ருத்ராபிஷேகம் செய்தால், கோ தானம் செய்த பலன் கிடைக்கும்.

இரண்டு நதிகள் ஸங்கமிக்கும் இடம் மிகவும் புனிதமானதாகக் கருதப்படுகிறது.

இருப்பிடம்

ஏ-37/51 என்ற எண்ணில், ஆதி கேசவர் கோயில் உட்புறம், ராஜ்காட் கோட்டையில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை ரிக்ஷா/ஆட்டோ/காரில் செல்ல முடியும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஏறிச்சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை திறந்திருக்கிறது. காலை 10.00 மணிக்கும், இரவு 9.00 மணிக்கும் ஆரத்தி நடைபெறுகிறது. வழக்கமான பூஜைகள் அர்ச்சகரால் செய்யப்படுகின்றன. ஏகாதசி, சிவராத்ரீ போன்ற விசேஷ தினங்களில் சிறப்புப் பூஜைகளும் நடைபெறுகின்றன.

விசாலாக்ஷேச்வரர்

விசாலாக்ஷி தேவிக்கு அருகில் விசாலாக்ஷேச்வரர் வீற்றிருப்பதாகக் காசி காண்டம் கூறுகிறது. விசாலாக்ஷேச்வரரை வழிபடுவதால் அன்பர்கள் வாழ்வில் வளமும், மகிழ்ச்சியும் பெறுவர்.

இருப்பிடம்

டி 3/85, விசாலாக்ஷி கோயில், மிர் காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் தசாச்வமேத் விச்வநாத் கல்லி/ பன்ஸ்படக் விச்வநாத் கல்லி வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து இந்த இடத்திற்கு நடந்து செல்லலாம். அன்பர்கள் விச்வேச்வரர்/அந்நபூர்ணி தரிசனத்துடன் இந்தக் கோயிலையும் சேர்த்துக் கொள்வது வழக்கம்.

வழிபாட்டு முறைகள்

காலை 4.30 மணி முதல் 11.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. கோயில் திறந்திருக்கும் நேரம் மாற்றத்திற்கு உட்பட்டது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

யாஜ்ஞுவல்கீச்வரர்

பார்வதி தேவி கேட்டுக் கொண்டதற்கிணங்க, சிவபெருமான் காசியில் உள்ள தீர்த்தங்களைப் பற்றிக் கூறினார். (காசி காண்டம், அத்யாயம் 97).க்ருஷ்ணேச்வரருக்கு தெற்கே யாஜ்ஞுவல்கீச்வரர் வீற்றிருக்கிறார். இவரை வழிபடுபவர்கள் ப்ரஹ்ம தேஜஸ் பெறுவர்.

இருப்பிடம்

C/K 7/159 என்ற எண்ணில் க்ருஷ்ணேச்வரருக்கு அருகில் உள்ளது. கிழக்குத் திசையை நோக்கிக் கொண்டிருக்கும் இந்த சிவலிங்கம் கட்டிடத்தின் மூலையில் உள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சென்று, அங்கிருந்து ஸங்கட தேவி கோயில் வழியாக நடந்து செல்லலாம். அல்லது ஸங்கட காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

காசி காண்டத்தின் 100வது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிவன் கோயில்கள்

ஆதி வராஹேச்வரர்

காசியில் உள்ள பல்வேறு கோயில்களுக்கு மேற்கொள்ளப்படும் யாத்திரையைப் பற்றிக் காசி கண்டத்தின் 100வது அத்யாயம் விவரிக்கிறது. இதற்கு அந்தர்க்ருஹி யாத்திரை என்று பெயர். இது நாள்தோறும் செய்யப்பட வேண்டியதாகும்.

இந்த யாத்திரையில் தரிசிக்கப்படும் தெய்வத் திருவுருவங்களில் ஒன்று, ஸ்ரீஆதி வராஹேச்வரர் சிவலிங்கமாகும். இவரை வழிபடும் அன்பர்களுக்குக் கவலையோ, பயமோ ஏற்படாது.

இருப்பிடம்

D17/111, ராம் மந்திர் உட்புறம், தசாச்வமேத காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. ராம லக்ஷ்மண விக்ரஹங்களுக்கு பின்புறத்தில் ஆதிவராஹேச்வரர் லிங்கம் இருக்கிறது. அன்பர்கள் தசாச்வமேத் வரை ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து நடந்து செல்லலாம். அல்லது படகில் தசாச்வமேத காட் வரை சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்று அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 9.30 மணி வரையிலும் திறந்திருக்கிறது. கோயில் திறந்திருக்கும் நேரம் மாற்றத்திற்குட்பட்டது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீராம் ப்ரஸாத் கோயில் வளாகத்தில் உள்ளார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9889660341 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அக்னி துருவேச்வரர்

அன்பர்கள் மேற்கொள்ள வேண்டிய ஏகாதச மஹா ருத்ர யாத்ராவைப் பற்றி காசி காண்டத்தின் 100 வது அத்யாயம் விவரிக்கிறது. அடிக்கடி முடிந்த போதெல்லாம் இந்த யாத்திரையை மேற்கொள்ள வேண்டும். பதினொரு லிங்கங்களுள் முதலாவதாக வழிபட வேண்டியது அக்னி துருவேச்வரர் ஆகும்.

அக்னி துருவேச்வரரை வழிபடுபவர்கள் ருத்ர பதவி பெறுவார்கள்.

இருப்பிடம்

அக்னி துருவேச்வரர் ஜகேச்வர் மஹாதேவ் என்றும் அழைக்கப்படுகிறார். J 66/4, ஈச்வர் கங்கி என்ற இடத்தில் அமைந்துள்ளது. (பார்க்க : பண்டித் கேதார்நாத் வ்யாஸ் அவர்களின் புத்தகம்).

புகழ்பெற்ற இந்த ஈச்வர் கங்கி/ஜகேச்வர் கோயிலுக்கு ரிக்ஷா அல்லது ஆட்டோவில் செல்லலாம். அக்னி துருவேச்வரர் பெரிய லிங்கத் திருவுருவமாகும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 4.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலை 5.00 மணிக்கு மங்கள ஆரத்தியும், நண்பகல் 12.00 மணிக்கு போக் ஆரத்தியும், இரவு 7.00 மணிக்கு மாலை ஆரத்தியும் நடைபெறுகின்றன.

கோயிலின் அர்ச்சகர்கள்

விசேஷ பூஜைகள் செய்ய கோயிலில் உள்ள ஸ்ரீவிமல் குமார் பாண்டே அவர்களை (0)9889918110 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

ஹரிகேசேச்வரர்

அன்பர்கள் காசியில் நாள்தோறும் மேற்கொள்ள வேண்டிய அந்தர்க்ருஹி யாத்திரையைப் பற்றி காசி காண்டத்தின் 100வது அத்யாயம் குறிப்பிடுகிறது.

இந்த யாத்திரையில் அகஸ்த்யேச்வரருக்கு அருகில் வீற்றிருக்கும் ஹரிகேசேச்வரரைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

ஹரிகேசேச்வரரை வழிபடுபவர்கள் வாழ்வில் அன்பர்கள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மகிழ்ச்சியும், மோக்ஷமும் அடைவர்.

இருப்பிடம்

விமல ஆதித்யருக்குப் பக்கத்தில், காரி கௌளன் னிற்கு பின்புறம், 35/273 என்ற எண்ணுடைய வீட்டின் அருகில் உள்ள நடைமேடையில் அமைந்துள்ளார். ஸோனர்புராவிலிருந்து கோடவ்லியா செல்லும் வழியில், ஜங்கம்பரி மடத்திற்குப் பிறகு, காரி கௌளன் செல்ல இடதுபுறம் ஒரு பாதை திரும்பும். இடது புறம் அந்தப் பாதையில் சென்று ஒரு 100 கஜ தூரம் நடந்த பிறகு, வலதுபுறம் திரும்ப வேண்டும். அருகில் உள்ளவர்களிடம் விமல ஆதித்யர் என்ற ஸூர்யன் கோயில் பற்றி விசாரித்துச் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

ஹாட்கேச்வரர்

அன்பர்கள் நாள்தோறும் மேற்கொள்ள வேண்டிய அந்தர்க்ருஹி யாத்திரையைப் பற்றி காசி காண்டத்தின் 100 வது அத்யாயம் கூறுகிறது.

இந்த யாத்திரையில் வழிபட வேண்டிய மூர்த்திகளுள் ஹாட்கேச்வரர் லிங்கமும் ஒன்று.

ஹாட்கேச்வரரை வழிபடுபவர்கள் காசியில் முக்தியடைவார்கள்.

இருப்பிடம்

C/K 43/189, ஹர்ஹா ஸரய், துளசி மார்க்கெட் அருகில் என்ற இடத்தில் அமைந்துள்ளது. ராஜா தர்வாஜாவின் உட்புறத்தில் 150 கஜ தூரத்தில் அமைந்துள்ளது. (பார்க்க : பாரபூதேச்வரர்). ஹர்ஹா ஸரய் சென்றவுடன், அருகில் உள்ளவர்களிடம் வழிகேட்டுச் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 7.00 மணி முதல் காலை 10.00 மணி வரை திறந்திருக்கிறது. மற்ற நேரங்களில் அன்பர்கள் கம்பிக் கதவுகள் வழியாகத் தரிசிக்கலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஹிரண்ய கர்பேச்வரர்

காசியில் உள்ள பல்வேறு தீர்த்தங்களுக்கு மேற்கொள்ள வேண்டிய யாத்திரையைப் பற்றி காசி கண்டத்தின் 100வது அத்யாயம் விளக்குகிறது.

அன்பர்கள் வருணனும், கங்கையும் ஸங்கமிக்கும் இடத்தில் ஸ்நானம் செய்து, பல கோயில்களுக்குச் சென்று வழிபட வேண்டும். பிறகு, ஹிரண்ய கர்ப தீர்த்தத்தில் நீராடி, ஹிரண்ய கர்பேச்வரரை வழிபட வேண்டும். இவ்வாறு செய்வதால், அன்பர்கள் தங்கள் வாழ்வில் தோன்றும் இடர்கள் எல்லாம் நீங்கி, மோக்ஷத்தை அடைவர்.

ஹிரண்ய கர்ப தீர்த்தம் தற்போது இல்லை. இந்த இடம் தற்போது கங்கையில் த்ரிலோசன கட்டத்தில் அமைந்துள்ளது. நாள்தோறும், பல பக்தர்கள் த்ரிலோசன கட்டத்தில் நீராடி, ஹிரண்ய கர்பேச்வரரை வழிபடுகின்றனர்.

இருப்பிடம்

த்ரிலோசன கட்டத்திற்கு மேலே உள்ள படிகளில் ஹிரண்ய கர்பேச்வரர் வீற்றிருக்கிறார். அன்பர்கள் மச்சோதரியைக் கடந்து, பிர்லா ஹாஸ்பிடல் வரை சென்று, வலதுபுறம் திரும்ப வேண்டும். த்ரிலோசன் கோயில் மிகவும் புகழ்பெற்றதாகும். இங்கிருந்து வழிகேட்டு, த்ரிலோசன கட்டத்தை அடையலாம். அல்லது த்ரிலோசன் கட்டம் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீசந்த்ர கேசவ ஓஜா (சனியா மஹராஜ்) கோயிலின் அருகில் உள்ளார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9026940818 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

காச்யபேச்வரர்

பக்தர்கள் மேற்கொள்ள வேண்டிய அந்தர்க்ருஹி யாத்திரையைப் பற்றி காசி காண்டத்தின் 100வது அத்யாயம் கூறுகிறது. காசியின்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உட்பகுதியில் உள்ள பல்வேறு கோயில்களுக்குச் சென்று தரிசிப்பது இதன் சிறப்பு.

இந்த யாத்திரையில், ஹரிகேசேச்வரருக்கு அருகில் உள்ள காச்யபேச்வர லிங்கத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது காசி கண்டம். காச்யபேச்வரரை வழிபடும் அன்பர்கள் காசியில் முக்தி அடைவர்.

இருப்பிடம்

D 35/79, ஜங்கம்பரி மடத்திற்கு அருகில், ஜங்கம்பரி, வாராணசி என்ற இடத்தில் அமைந்துள்ளது. புகழ்பெற்ற இந்த இடத்தை ரிக்ஷாவில் சென்று அடைய முடியும். ஸோனர்புராவிலிருந்து கோடவ்லியாவிற்குச் செல்லும் வழியில், ஜங்கம்பரி மடத்தைக் கடந்தவுடன், ராஜ் வர்னிஷர்ஸ், ஆகாஷ் ட்ராவல்ஸ் இரண்டிற்கும் இடையில் சில படிகள் மேலே செல்கின்றன. படிகள் ஏறிச் சென்றால், இடதுபுறம் காச்யபேச்வரர் வீற்றிருக்கிறார்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 7.30 மணி முதல் காலை 9.00 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் 7.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலையில் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீஅபிஜீத் ஜோஷி கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9628060779 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

மத்யமேச்வரர்

மந்தாகினி தீர்த்தத்தில் நீராடி, மத்யமேச்வரரை வழிபட வேண்டும் என்று காசி காண்டத்தின் 100வது அத்யாயம் குறிப்பிடுகிறது. அஷ்டமி மற்றும் சதுர்தசி நாட்களில் வழிபடுவது மிகுந்த சிறப்பு வாய்ந்ததாகும்.

முற்காலத்தில் காசியின் மத்திய பகுதியில் மத்யமேச்வரர் லிங்கம் இருந்தது. தற்போது இடரீதியான மாறுபாடுகளால், தற்போது அது காசியின் மத்திய பகுதியில் இல்லை. க்ருத்தி வாஸேச்வரர் என்ற சக்தி பீடத்திற்கு அருகில் இருப்பதால் இந்தக் கோயில் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. கூர்ம புராணத்தின்படி, மந்தாகினி தீர்த்தத்தில் நீராடி, மத்யமேச்வரரைப் பூஜித்து, பித்ருக்களுக்குரிய ச்ராத்த காரியங்களைச் செய்பவர்கள், இறந்த பிறகு ஸ்வர்கத்தை அடைகின்றனர். மந்தாகினி தீர்த்தத்தைப் பற்றி லிங்க புராணத்தில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கூறப்பட்டுள்ளது. மந்தாகினியில் நீராடி, பித்ரு காரியங்களைச் செய்பவர், பித்ருக்களுக்கு உயர்ந்த ஸேவையைச் செய்கின்றனர்.

இருப்பிடம்

கே 53/63, தாராநகர் என்ற இடத்தில் அமைந்துள்ளது. மந்தாகினி தீர்த்தம் தற்போது முற்றிலும் வற்றிவிட்டது. மைதாகின் பகுதியில் கம்பெனி பாக் கார்டனில் மந்தாகினி குளம் இருக்கிறது. மந்தாகினியின் திரிபே மைதாகின் ஆகும். பிச்வேச்வர் கஞ்ஜ் என்ற இடத்திலிருந்து அன்பர்கள் இந்த இடத்திற்கு ரிக்ஷாவில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் பகல் 12.00 மணி வரையிலும், மாலை 5.30 மணி முதல் இரவு 11.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது. அஷ்டமி மற்றும் சதுர்தசி நாட்களில் வழிபடுவது மிகச் சிறப்பு வாய்ந்தது. மேற்குறிப்பிட்ட நாட்களில் வ்ரதமிருந்து மத்யமேச்வரரைப் பூஜித்தால் மிக உயர்ந்த இன்பங்களை அடைவர்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீதுக் ஹரன் ஜா கோயிலின் அர்ச்சகராவார்.

நாகேச்வரர்

காசியில் மேற்கொள்ள வேண்டிய யாத்திரைகள், குறிப்பாக அந்தர்க்ருஹி யாத்திரையைப் பற்றி காசி கண்டத்தின் 100 வது அத்யாயம் விவரிக்கறது.

இதில் வழிபடப்படும் லிங்கங்களுள் ஒன்று நாகேச்வரர். நாகேச்வரர் பன்னிரு ஜ்யோதிர் லிங்கங்களுள் ஒருவராவார். மஹாராஷ்டரம், த்வாரகை ஆகிய இரண்டு இடங்களிலும் நாகேச்வர ஜ்யோதிர்லிங்கம் உள்ளது.

வாராணஸியில் உள்ள நாகேச்வரரும் ஜ்யோதிர்லிங்கமாக வழிபடப்படுகிறார். மேலே குறிப்பிட்ட இரண்டு கோயில்களில் வழிபடும் அதே பலன், காசியில் உள்ள நாகேச்வரரை வழிபடுவதாலும் கிடைக்கும். அன்பர்கள் தெரிந்தோ, தெரியாமலோ செய்த அனைத்துப் பாவங்களையும் நீக்க வல்லவர் ஸ்ரீநாகேச்வரர்.

இருப்பிடம்

C/K 1/21, படனி டோலா, போசலா காட் என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அங்கிருந்து ஸங்கட தேவி கோயில் வழியாக நடந்து செல்லலாம். அன்பர்கள் போசலா காட் வரை படகில் சென்று அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 7.00 மணி முதல் 9.00 மணி வரையிலும், மாலை 7.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம். கோயில் மூடியிருந்தாலும், வெளியிலிருந்து தரிசனம் செய்யலாம். இந்தக் கோயிலில் பூஜை செய்வதால் கால ஸர்ப்ப தோஷம் அகலும் என்று கோயிலின் அர்ச்சகர் தெரிவிக்கிறார்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீஸஞ்ஜய் மஹராஜ் கோயிலின் அர்ச்சகராவார். (0)9307701997 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

பார்வதேச்வரர்

காசியில் அன்பர்கள் மேற்கொள்ள வேண்டிய பல்வேறு யாத்திரைகளைப் பற்றி காசி காண்டத்தின் 100வது அத்யாயம் கூறுகிறது.

காசி காண்டத்தின்படி, அன்பர்கள் நாள்தோறும் அந்தர்க்ருஹி யாத்திரையை மேற்கொள்ள வேண்டும். இந்த யாத்திரையில் வாஸுகீச்வரரை வழிபட்ட பிறகு, அன்பர்கள் பார்வதேச்வரரை வழிபட வேண்டும், இதனால் அவர்கள் மகிழ்ச்சியும், வளமும் பெறுவர்.

இருப்பிடம்

கே 7/156, ஸிந்தியா காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து ஆத்ம வீரேச்வரர் கோயில் வழியாக நடந்து செல்லலாம். அல்லது, ஸிந்தியா காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச்சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.30 மணி முதல் 11.00 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் 9.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது.

கோயிலின் அர்ச்சகர்

பாபா ஹேமந்த் பர்தி கோயிலின் பொறுப்பாளராக, கோயில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வளாகத்தில் உள்ளார்.

ஸோமேச்வரர்

காசியில் அன்பர்கள் மேற்கொள்ள வேண்டிய யாத்திரைகளைப்பற்றி காசி காண்டத்தின் 100 வது அத்யாயம் கூறுகிறது.

யாத்திரையில் ஸோமேச்வரர் லிங்கத்தை வழிபட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. ஸோமேச்வரர் லிங்கம், ஸௌராஷ்ட்ரத்தில் உள்ள ஸோம்நாத் ஜ்யோதி லிங்கத்தைக் குறிப்பதாகும்.

இந்த லிங்கத்தை வழிபடுபவர்கள் வாழ்வில் வளமும், நலமும் பெறுவர். அன்பர்கள் காசியிலேயே பன்னிரெண்டு ஜ்யோதிர்லிங்க யாத்திரையை மேற்கொள்ளலாம். காசியிலிருந்து ஸோம்நாத் செல்ல முடியாதவர்கள், காசியில் உள்ள இந்த லிங்கத்தை வழிபடுவதாலேயே ஸோமநாதரை வழிபட்டதன் பலனை அடைகின்றனர்.

இருப்பிடம்

டி 16/34 என்ற எண்ணில் மன்மந்திர் காட் என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் தசாச்வமேத் விச்வநாத் கல்லி வரை ரிக்ஷாவில் சென்று, உடனே வலதுபுறம் திரும்பி 150 கஜ தூரம் நடக்க வேண்டும். அருகிலுள்ளவர்களிடம் வாராஹி கோயிலுக்குச் செல்லும் வழி கேட்டுத் தொடர்ந்து செல்லலாம். ஸோமேச்வரர் வாராஹி கோயிலின் அருகில்தான் வீற்றிருக்கிறார்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் 9.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை. கோயில் மூடப்பட்டிருக்கும் நேரத்தில் வெளியிலிருந்து அன்பர்கள் தரிசிக்கலாம்.

ஸ்வரலீனேச்வரர்

காசியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு யாத்திரைகளில், பதினான்கு லிங்கங்களுள் மூன்றாவதாகக் குறிப்பிடப்படுவது ஸ்வரலீனேச்வரர் லிங்கமாகும். (காசி காண்டம், அத்யாயம் 100). அன்பர்கள் வருண் நதியில் நீராடி, சைலேச்வரரை வழிபட வேண்டும், பிறகு வருண கங்கா ஸங்கமத்தில் நீராடி வருண ஸங்கமேச்வரரை வழிபட வேண்டும் என்று கூறப்படுகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இதற்குப் பிறகு, ஸ்வரலீன தீர்த்தத்தில் (குளத்தில்) நீராடி, ஸ்வரலீனேச்வரரை வழிபட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

சிவபெருமான் பக்தர்களுக்கு அருள்செய்வதற்காக மூழ்கியுள்ள லிங்கம் ஸ்வரலீனேச்வரர் என்று காசி காண்டத்தின் 33 வது அத்யாயம் கூறுகிறது.

இருப்பிடம்

ஏ-11/30, நயா மஹாதேவ், பஞ்சாக்னி அகாடா, ராஜ் காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் ப்ரஹ்லாத காட் சௌராஹா வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று இந்த இடத்தை அடையலாம். அல்லது ராஜ் காட் (பஞ்சாக்னி அகாடா காட்) வரை படகில் சென்று அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை திறந்திருக்கிறது. இரவு 7.00 மணிக்கு ஆரத்தி நடைபெறுகிறது. கங்கை ஜலத்தால் அபிஷேகம் நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீசங்கரானந்த் கோயிலின் அர்ச்சகர் ஆவார்.

பிற சிவன் கோயில்கள்

ஆதி மஹாதேவர் (மஹாதேவ லிங்கம்)

காசி காண்டம் அத்யாயம் 68ல் முக்கியமான சிவலிங்கங்களைப் பற்றி கார்த்திகேய பெருமான் கூறியுள்ளார்.

ஸத்ய யுகத்தில், தேவர்கள் மற்றும் ரிஷிகளின் வேண்டுதலுக்கிணங்க, பூமியிலிருந்து ஒரு லிங்கம் தோன்றியது. அதுவே மஹாதேவ லிங்கம் எனப்படுகிறது. காசியை முக்தி க்ஷேத்திரமாக ஆக்கியது இந்த லிங்கமே ஆகும். இந்தக் கோயிலில் பக்தி சிரத்தையுடன் பூஜைகளும் அர்ச்சனைகளும் செய்பவர், அவர் காசியைத் தவிர வேறு இடத்தில் இறந்தாலும் சிவலோகத்தை அடைவார்.

காசியில் உள்ள மஹாதேவரை வழிபடுவதால் உலகில் உள்ள அனைத்து லிங்கங்களையும் வழிபட்ட புண்ணியம் கிடைக்கும். ஒருமுறை மஹாதேவர் கோயிலில் வழிபட்டாலும் அவர் இறந்த பிறகு சிவலோகம் செல்லும் பாக்கியத்தைப் பெறுவார் (காசி காண்டம்).

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ச்ரவண மாதத்தில் (ஜுலை-ஆகஸ்ட்) அமாவாஸ்யைக்குப் பிறகு வரும் சதுர்தசி தினத்தன்று யஜ்ஞோபவீதம் (பூணூல்) வழங்குவது சிறப்பாகக் கருதப்படுகிறது. (காசி காண்டம்) தற்போது இக்கோயில் ஆதி மஹாதேவர் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

இருப்பிடம்

ஏ 3/92, த்ரிலோசன் கோயில் பின்புறம் என்ற முகவரியில் அமைந்துள்ளது. பிர்லா ஹாஸ்பிடலைக் கடந்து மச்சோதரிக்கு அருகில் உள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை ரிக்ஷா அல்லது ஆட்டோவில் செல்லலாம். அல்லது த்ரிலோசன் காட் வரை படகில் சென்று அங்கிருந்து படிகள் ஏறிச் சென்று அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை கோயில் திறந்திருக்கிறது. காலை 5.00 மணிக்கு மங்கள ஆரத்தியும், 6.30 மணிக்கு ச்ருங்கார் ஆரத்தியும், இரவு 7.00 மணிக்கு ஆரத்தியும் நடைபெறுகின்றன.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீகிரீஷ் சந்த் மெஹ்ரோத்ரா கோயிலின் அர்ச்சகராவார்.

அக்னீச்வரர்

முன்னொரு காலத்தில் விச்வனர் என்ற அந்தணர் தம் மனைவி சுசிஷ்மதியுடன் வாழ்ந்து வந்தார். அவர்களுக்கு இறையருளால் ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. க்ரஹபதி என்று அந்த குழந்தைக்குப் பெரியோர்கள் பெயரிட்டு மகிழ்ந்தனர்.

குழந்தைக்குரிய ஸம்ஸ்காரங்களை முறையாகச் செய்து வைத்தார் விச்வனர். க்ரஹபதிக்கு தந்தை விச்வனர் ஐந்து வயதில் உபநயன ஸம்ஸ்காரத்தைச் செய்து வைத்தார். குழந்தையான க்ரஹபதி தன் தந்தையிடமிருந்தே வித்தைகளை முறையாகக் கற்று வந்தார்.

ஒரு நாள் நாரத முனிவர் விச்வனரின் இல்லத்திற்கு வருகை புரிந்தார். விச்வனரின் விருந்தோம்பலில் நாரத முனிவரின் அகமும் முகமும் குளிர்ந்தது. குழந்தை க்ரஹபதியைத் தம் மடியில் வைத்துக் கொண்டு, அவனை உற்றுக் கண்காணித்த நாரதர், அவனிடம் ராஜயோகத்திற்குரிய லக்ஷணங்கள் நிறைந்திருப்பதாகக் கூறினார். ஆனால் அவனது பன்னிரண்டாவது வயதில் அவனுக்கு அக்னியால்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(மின்னல்) ஒரு ஆபத்து ஏற்பட இருக்கிறது என்றும் கூறினார். இதனைக் கூறிவிட்டு நாரதர் சென்றுவிட்டார்.

செய்தியைக் கேட்ட விச்வனர் மயங்கினார்; அவரது மனைவி கதறி அழத் தொடங்கினாள். பெற்றோர்களின் துயரத்தைக் கண்ட க்ரஹபதி, தான் காசிக்குச் சென்று ம்ருத்யுஞ்ஜய சிவபெருமானை சிவலிங்க வடிவில் வழிபடுவதாகக் கூறினான். காசியை அடைந்து, மணிகர்ணிகையில் நீராடி, விச்வநாதரை வழிபட்டான்.

சிவலிங்கம் ஒன்றை ஸ்தாபித்து வழிபடத் தொடங்கினான். 108 முறை கங்கை நீரால் அபிஷேகம் செய்தான். மலர்களைக் கொண்டு அர்ச்சனை செய்தான். பல மாதங்கள் தொடர்ந்து விரதமிருந்து வந்தான். அவனுக்குப் பன்னிரண்டு வயதானது.

இந்திரன் க்ரஹபதியின் முன்பு தோன்றி, அவன் வேண்டிய வரத்தை அளிப்பதாகக் கூறினார். க்ரஹபதி மிகுந்த மரியாதையுடன், தமக்கு வரமளித்து அருள்புரியக் கூடியவர் சிவபெருமான் ஒருவரே என்று பதிலளித்தான். தாம் ஒருவரே வரமளிக்கும் கடவுள் என்றார் இந்திரன். தான் கூறியதையே மீண்டும் அதே பணிவுடன் கூறினான் க்ரஹபதி. இந்திரன் தமது வஜ்ராயுதத்தை ஓங்கி, க்ரஹபதியை (இடி போல) தாக்கினார். இதனால் க்ரஹபதி மயங்கி நினைவற்று கீழே விழுந்தான்.

பிறகு, சிவபெருமான் அவன் முன் தோன்றி, காட்சி கொடுத்தார். ஆழ்ந்த உறக்கத்திலிருந்து எழுந்தவன் போல, விழித்தெழுந்து தன் முன் தோன்றிய சிவபெருமானைத் தரிசித்தான் க்ரஹபதி. க்ரஹபதியை; தாம் சோதித்ததாகக் கூறினார் சிவபெருமான். தாம் எப்பொழுதும் பாதுகாத்து வருவதால் சிவபக்தர்கள் எவரைக் குறித்தும் அஞ்ச வேண்டியதில்லை என்று கூறினார். க்ரஹபதி தேவனாவான் என்று கூறி அருள்புரிந்தார்.

க்ரஹபதி ஸ்தாபித்த லிங்கம் அக்னீச்வரர் லிங்கம் என்று அழைக்கப்படுகிறது. அக்னீச்வரரை வழிபடும் அன்பர்கள் நெருப்பையோ மின்னலையோ கண்டு பயப்பட மாட்டார்கள். அவர்களுக்கு அகால மரணம் ஏற்படாது. காசியில் உள்ள அக்னீச்வரரை வழிபட்ட ஒருவர், வேறு எங்கு இறந்தாலும் அக்னி லோகத்திற்குச் செல்கிறார். இவற்றைக் கூறிய பிறகு, விச்வேச்வரர் அக்னீச்வரர் லிங்கத்திற்குள் சென்று மறைந்தார். (காசி காண்டம், அத்யாயம் 11)

இருப்பிடம்

C/K 2/1, படனி டோலா, போசலா காட், வாராணஸி என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அங்கிருந்து புகழ்பெற்ற சங்கட தேவி கோயில் வழியாக நடந்து செல்லலாம். அல்லது மேத்தா ஹாஸ்பிடல் அருகிலுள்ள போசலா காட்/கணேஷ் காட் வரை படகில் சென்று அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 7.00 மணி முதல் 9.00 மணி வரையிலும், மாலை 6.00 முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. சிவராத்ரி, ஏகாதசி முதலிய நாட்களில் விசேஷ வழிபாடுகள் நடக்கின்றன. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் தாங்களே வழிபடலாம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீகோபிநாத் தீக்ஷித் கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய 0542-2390795 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

அச்வினி குமாரேச்வரர்

காசி காண்டத்தில் அச்வினி குமாரேச்வரர் என்ற பெயரில் இரண்டு லிங்கங்கள் குறிப்பிடப்படுகின்றன. காசி காண்டத்தின்படி. காச்யபருக்கும், தாக்ஷாயிணிக்கும் பிறந்தவர் ஸூர்ய பகவான். ஸூர்ய பகவான் ஸங்க்யா தேவியை மணந்தார். ஸங்க்யாதேவி சிறந்த பத்தினியாகத் திகழ்ந்தாள்.

காலகட்டத்தில், அவர்களுக்கு இரண்டு மகன்களும், ஒரு மகளும் பிறந்தனர். முதல் மகன் வைச்வதமனு, இரண்டாவது மகன் யமன், மூன்றாவதாகப் பிறந்த மகள் யமுனா. சிறிது காலத்திற்குப் பிறகு, ஸங்க்யா தேவியால், ஸூர்ய பகவானிடமிருந்து வெளிப்பட்ட வெப்பத்தைத் தாங்க முடியவில்லை.

ஸங்க்யாதேவி தன்னைப் போலவே தன்னுடைய நிழலான சாயா தேவியைப் படைத்தாள். சாயாதேவி தான் யார் என்பதை வெளிப்படுத்திக் கொள்ளாமல் ஸூர்ய பகவானுடன் வாழ்க்கை நடத்த வேண்டும். குழந்தைகளையும் நல்ல முறையில் பேண வேண்டும் என்ற உறுதிமொழிகளைப் பெற்றுக்கொண்டு ஸங்க்யாதேவி தன் பிறந்தகத்திற்குச் சென்றுவிட்டாள்.

சில காலம் கழித்து, சாயாதேவிக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன. அவற்றுள் இரண்டாவது குழந்தைதான் சனைச்சரர். தனக்குக் குழந்தைகள் பிறந்தவுடன், மற்ற குழந்தைகள்மீது சாயாதேவி காட்டி வந்த அக்கறை நாளடைவில் குறைந்தது. இது தெரியவந்ததும், ஸூர்ய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பகவானுக்கு மிகுந்த கோபம் வந்தது. சாயாதேவி உண்மையைக் கூறினாள். அவளுடைய குற்றத்தை மன்னித்தார் ஸூர்ய பகவான்.

கடும்தவம் இயற்றி வந்த ஸங்க்யாதேவியைத் தேடிச் சென்றார் ஸூர்ய பகவான். உணவின்றி கடும்தவம் செய்ததால், ஒரு பெண் குதிரையின் உருவத்தைப் பெற்றிருந்தாள் ஸங்க்யா. ஸூர்ய பகவானும் (அச்வ) குதிரை வடிவெடுத்தார். இந்நிலையில் அவர்களுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. அவர்களே அச்வினிகுமாரர்கள். அவர்களே தேவ வைத்தியர்களாகக் கருதப்படுகிறார்கள். ஸூர்ய பகவான் பின்பு ஸங்க்யாதேவியையும் மன்னித்தார். (காசி காண்டம், அத்யாயம் 17)

அச்வினிகுமாரர்கள் இரண்டு லிங்கங்களை ஸ்தாபித்தனர். அவைகளே அச்வினியேச்வரர் அல்லது அச்வினிகுமாரேச்வரர் என்று வழங்கப்படுகின்றன. இந்த லிங்கங்களை வழிபடுபவர்கள் வாழ்வில் அனைத்து வளங்களும் பெறுவர். (காசி காண்டம், அத்யாயம் 97)

இருப்பிடம்

C/K 2/26, கங்கா மஹாலுக்கு எதிர்ப்புறம், போசலா காட், வாராணசி என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை சைக்கிள் ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து புகழ்பெற்ற ஸங்கட தேவி கோயில் வழியாக நடந்து செல்லலாம். அல்லது போசலா காட் வரை படகில் சென்று அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை கோயில் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் வழக்கம்போல் சென்று வழிபடலாம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீஉபேந்த்ர த்ரிபாதி கோயிலின் அர்ச்சகராவார்.

அவிமுக்தேச்வரர் கோயில்

வாராணசி அல்லது காசிக்கு அவிமுக்த க்ஷேத்ரம் என்று பெயர். இங்கு இறக்கும் மனிதன் மறுபடி பிறப்பதில்லை, அவன் மோக்ஷத்தை அடைகிறான். அவிமுக்தேச்வரர் கோயிலா அல்லது விச்வநாதர் கோயிலா? காசியின் முக்கிய கோயில் எது என்ற விஷயத்தில் ஏகப்பட்ட சர்ச்சைகள் எழுந்துள்ளன. பழைமையான க்ரந்தங்களில் அவிமுக்தேச்வரர் கோயிலுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அவிமுக்தேச்வர லிங்கத்தை வழிபடுவதால், பல பிறவிகளில் செய்த பாவங்கள் அகலும், மறுபிறவி இருக்காது என்று புராதன நூல்கள் கூறுகின்றன. பகவான் விச்வநாதர் நாள்தோறும் அவிமுக்தேச்வரரைப் பூஜிக்கிறார். லிங்க புராணம், காசி கண்டம், ப்ரஹ்ம வைவச்வத புராணம் ஆகிய அனைத்திலும் அவிமுக்தேச்வர லிங்கத்தின் சிறப்பு கூறப்பட்டுள்ளது.

புராணகால சாட்சியங்களின்படி, அவிமுக்தேச்வர லிங்கத்திற்கு ஓர் அற்புதமான கோயில் இருந்தது. அதில் விச்வநாதர் ஸந்நிதியும் இருந்தது என்று கூறப்படுகிறது. அன்பர்கள் ஒரே இடத்தில் இரண்டு லிங்கங்களையும் தரிசித்து வந்தனர். ஆனால் மொகலாயர் படையெடுப்பின்போது கோயில் தகர்க்கப்பட்டது. எனவே காசி காண்டத்தில் கூறப்பட்டுள்ள இடத்தில் தற்போது அவிமுக்தேச்வர லிங்கம் இல்லை.

இருப்பிடம்

விச்வநாதர் கோயில் அமைந்துள்ள அதே இடத்தில்தான் அவிமுக்தேச்வர லிங்கமும் அமைந்துள்ளது. 25/19, சௌக், வாராணசி என்ற முகவரியில் அமைந்துள்ளது. (பார்க்க : விச்வநாதர் கோயிலுக்குச் செல்லும் வழி).

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. பல்வேறு நேரங்களில் ஆரத்தி நடைபெறுகிறது.

1983ஆம் வருடத்திலிருந்து கோயில் மாவட்ட ஆட்சித்துறையினரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மிகவும் நெருக்கடியான இடத்தில் கோயில் இருப்பதால், அன்பர்கள் தரிசனம் செய்ய வசதியாக, சுற்றுச்சுவர் ஒன்று இடிக்கபட்டுள்ளது.

பால்மீகேச்வரர்

காசி காண்டத்தின் 75வது அத்யாயத்தில், சிவபெருமான் த்ரிலோசன லிங்கத்தின் பெருமையைக் கூறும்பொழுது, அருகிலுள்ள பிற லிங்கங்களின் சிறப்பையும் கூறுகிறார்.

த்ரிலோசன லிங்கத்திற்கு அருகில் பால்மீகேச்வரர் என்றொரு பெரிய லிங்கம் இருக்கிறது. பால்மீகேச்வர லிங்கத்தை வழிபடுபவர்கள் தங்கள் கவலைகளிலிருந்தும், துயரங்களிலிருந்தும் விடுபடுவர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருப்பிடம்

ஏ 2/80, த்ரிலோசனேச்வரர் கோயில் உள்ளே, த்ரிலோசன் காட் என்ற இடத்தில் அமைந்துள்ளது. இந்த இடம் மச்சோதரிக்கு அருகில் உள்ளது. மச்சோதரியைக் கடந்து பிர்லா மருத்துவமனை வரை சென்று வலதுபுறம் திரும்ப வேண்டும். அன்பர்கள் இந்த இடம் வரை ரிக்ஷா அல்லது ஆட்டோ ரிக்ஷாவில் செல்லலாம். அல்லது த்ரிலோசன் காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

ஹேரம்ப விநாயகருக்கு சமீபத்தில் மற்றொரு பால்மீகேச்வர லிங்கம் இருக்கிறது. ஆனால் காசி கண்டத்தில் குறிப்பிடப்படுவது, த்ரிலோசனேச்வரருக்கு அருகிலுள்ள இந்த லிங்கத்தைத்தான்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.30 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 11.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலை 5.30 மணிக்கு மங்கள ஆரத்தியும், இரவு 11.00 மணிக்கு சயன ஆரத்தியும் நடைபெறுகின்றன.

பாதோதக தீர்த்தத்தில் அக்ஷய த்ருதீயை அன்று நீராடி, த்ரிலோசனேச்வரர் முதலிய லிங்கங்களைத் தரிசித்து வழிபடுதல் மிகுந்த புண்ணிய காரியமாக அன்பர்களால் கருதப்படுகிறது. ஆதலால் இன்றளவும் அக்ஷய த்ருதீயை அன்று மிகுந்த கூட்டம் காணப்படுகிறது. அக்ஷய த்ருதியை அன்று நடைபெறும் ஜல் ச்ருங்கார் என்ற நிகழ்ச்சியிலும் திரளான அன்பர்கள் கலந்துகொள்கின்றனர்.

விசேஷ பூஜைகள் செய்ய அர்ச்சகரை முன்பே தொடர்புகொள்ளுதல் நலம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீ லல்லு பாண்டே கோயிலின் அர்ச்சகர். விசேஷ பூஜைகள் செய்ய 9307967228 என்ற எண்ணில் அவரை தொடர்பு கொள்ளலாம்.

பாகீரதேச்வரர்

காசியில் உள்ள பல்வேறு தீர்த்தங்களைப் பற்றி மஹாவிஷ்ணு பிந்து மஹரிஷிக்குக் கூறுகிறார். (காசி கண்டம், அத்யாயம் 61)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அன்பர்கள் பகீரத தீர்த்தத்தில் நீராடி, முன்னோர்களுக்குரிய கடன்களைச் செய்துமுடித்த பின், அருகிலுள்ள பாகீரதேச்வரரை தரிசிக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதால், மிக மோசமான பாவங்களும் நீங்கும். பாகீரத தீர்த்தம் தற்போது இல்லை.

இருப்பிடம்

C/K 11/11, தேவானந்த் சதுர்வேதியின் இல்லத்திற்குள், ப்ரஹ்மணாளுக்கு அருகில் உள்ளது. வாணி விட்டன் சிசு மந்திருக்கு எதிர்புறத்தில் இந்த இடம் அமைந்துள்ளது. திவான் பால் முகுந்த் சந்து என்று பொறிக்கப்பட்ட கல் ஒன்று வழித்தடத்தில் உள்ளது. இந்தக் கல்லிற்குக் குறுக்கே, மேற்கூறிய வீடு இருக்கிறது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து ப்ராஹ்மணாள் வழியாக நடந்து செல்லலாம். அல்லது, மணிகர்ணிகா கட்டம் வரை படகில் சென்று அங்கிருந்து படிகள் ஏறிச்சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

சக்தி வாய்ந்த இந்த லிங்கம், ஒரு தனியாரின் வீட்டிற்குள் உள்ளது. அன்பர்கள் சென்று தரிசிக்கலாம். விசேஷ பூஜைகள், ருத்ரம் முதலியவற்றைச் செய்ய ஸ்ரீதேவானந்த் சதுர்வேதியை 0542-2397091 அல்லது (0)9451895699 என்ற எண்ணில் அணுகலாம்.

ப்ரஹ்மேச்வரர்

சிவபெருமானின் திருவுள்ளப்படி காசிக்கு வந்த ப்ரஹ்மதேவர், மன்னன் திவோதாஸிடம் தாம் அச்வமேத யாகம் செய்ய விரும்புவதாகக் கூறினார். யாகத்திற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்வதாக, மன்னன் ஒப்புக்கொண்டான். (பார்க்க : திவோதாஸேச்வரர்).

மன்னன் திவோதாஸின் உதவியுடன் ப்ரஹ்மதேவர் ஒன்றல்ல, பத்து அச்வமேத யாகங்கள் செய்தார். அவர் பத்து அச்வமேத யாகங்கள் செய்த இடமே தற்போது தசாச்வமேத தீர்த்தம் என்று வழங்கப்படுகிறது. இதற்கு முன்பு இந்த இடம் ருத்ர ஸரோவரம் என்று அழைக்கப்பட்டது.

ப்ரஹ்மதேவர் தசாச்வமேதேச்வரர் என்ற பெயரில் லிங்கம் ஒன்றை ஸ்தாபித்து, காசியிலேயே தங்கிவிட முடிவுசெய்தார். மன்னன் திவோதாஸின் ஆட்சியில் ப்ரஹ்மதேவரால் எந்தக் குறையையும் காண முடியவில்லை. அவரைப் பற்றி சிவபெருமானிடம் ஒரு புகாரும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கூறுவதற்கில்லை. ஆகவே, ப்ரஹ்மதேவர், விச்வேச்வரரை வணங்கி, ப்ரஹ்மேச்வரர் என்ற லிங்கத்தை ப்ரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தார். ப்ரஹ்மேச்வரர் லிங்கத்தை பூஜிப்பதால், சிவபெருமான் தன் மீது கோபம் கொள்ள மாட்டார் என்பது ப்ரஹ்மதேவரின் நம்பிக்கை.

ப்ரஹ்மேச்வரரை வழிபடும் அன்பர்கள் ப்ரஹ்மாவின் அருளுக்குப் பாத்திரமாகி, ப்ரஹ்மலோகத்தை அடைவர்.

இருப்பிடம்

கே 22/82, துர்கா காட், ப்ரஹ்மசாரிணீ கோயில் உள்ளே என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் பைரோநாத் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து ப்ரஹ்மேச்வரர் கோயில் வரை நடந்து செல்லலாம். அல்லது அன்பர்கள் துர்கா காட் அல்லது ப்ரஹ்ம காட் வரை படகில் சென்று அங்கிருந்து படிகள் ஏறிச்சென்றும் அடையலாம்.

D-33/66, 67 காலிஸ்புரா (தசாச்வமேத் அருகில்) என்ற முகவரியில் மற்றொரு ப்ரஹ்மேச்வர லிங்கம் உள்ளது. இரண்டும் ஸமமான சிறப்பு வாய்ந்தவையே ஆகும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் பகல் 1.30 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 11.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலை 6.00 மணி, மாலை 4.00 மணி மற்றும் இரவு 11.00 மணிக்கு ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீராஜேஷ் ஸகர்க்கர் கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய 0542-2437004 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

சண்டீச்வரர்

காசியில் உள்ள பல்வேறு லிங்கங்களின் தெய்வீக ஆற்றலைப் பற்றி சிவபெருமான் கூறினார். லிங்கங்களை பதினான்கு பதினான்காகப் பிரித்துக் கூறினார். (காசி காண்டம் 73)

அவற்றுள் இரண்டாவதாகச் சொல்லப்பட்ட பதினான்கு லிங்கங்களில் பதினோராவது லிங்கம் சண்டீச்வர லிங்கமாகும். இந்த லிங்கத்தை வழிபடுவதன் முக்கியத்துவத்தைப் பற்றி சிவபெருமான் விரிவாகக் கூறியிருக்கிறார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சண்டீச்வர லிங்கத்தை வழிபடும் அன்பர்களுக்கு மறுபிறவியில்லை. அரிய பொக்கிஷங்களான இந்த லிங்கங்களை வழிபடும் அன்பர்கள் அனைத்துவிதமான துன்பங்களிலிருந்தும், ஆபத்துக்களிலிருந்தும் விடுபடுவர்.

தாம் எப்பொழுதும் சண்டீச்வர லிங்கத்தில் உறைவதாகவும், தன்னை வழிபடும் அன்பர்கள் முக்தி அடைவார்கள் என்றும் சிவபெருமான் கூறுகிறார். அவிமுக்த க்ஷேத்திரமாகிய காசிக்கு வந்து சண்டீச்வரரை வழிபடும் அன்பர்கள் முக்தி அடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

இருப்பிடம்

இந்தக் கோயில் ஸதர் பஜாரில் அமைந்துள்ளது. கண்டொன்மெண்ட் பகுதியில், ராடிஸன், ஐடியல் டவர்ஸ், ஹோட்டல் க்ளார்க்ஸ், ஜே.ஹெச்.வி மால் முதலிய பெரிய ஹோட்டல்களைக் கடந்து மேலும் சென்றால், கரியப்ப மார்க் என்ற பகுதியை அடையலாம். அங்கு வலதுபுறத்தில் பீஷ்ம சண்டீ தேவி கோயில் என்றொரு பலகை இருக்கும். வலப்புறம் திரும்பிச் சென்றால், சண்டீ தேவி கோயிலுக்கு எதிரில் சண்டீச்வரர் கோயில் உள்ளது.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

சித்ராங்கதேச்வரர்

கேதாரேச்வர லிங்கத்திற்குக் காசி காண்டம் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. (பார்க்க : கேதாரீச்வரர் கோயில்). காசி காண்டம், அத்யாயம் 77 ன்படி, கேதாரீச்வரர் கோயிலுக்கு வடக்குப்புறத்தில் சித்ராங்கதேச்வரர் லிங்கம் அமைந்துள்ளது.

சித்ராங்கதேச்வரரை வழிபடும் அன்பர்கள் ஒவ்வொரு நாளையும் ஸ்வர்கத்தில் கழிப்பர். அல்லது. இறந்த பின் ஸ்வர்கத்தை அடைவர்.

இது மிகவும் சக்தி வாய்ந்த லிங்கமாகப் பக்தர்களால் கருதப்படுகிறது. இந்த லிங்கத்தை வழிபடுவதால் வாழ்வில் மகிழ்ச்சியும், வளமும் பெருகும்.

இருப்பிடம்

B-14/118, கேதார் காட் தபால் நிலையம் அருகில், கேதார் காட்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வாராணசி என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் கேதாரீச்வரர் கோயில் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து கேதார் காட் தபால் நிலையம் வரை நடந்து செல்லலாம். இந்தக் கோயில் டாக்டர். ஆர்.சி. கௌடியின் க்ளினிக் கிற்கு முன்பாக, சாலையின் இடதுபுறத்திலேயே அமைந்துள்ளது.

இந்தக் கோயில் சித்ரக்ரீவா தேவி என்றொரு தேவி வீற்றிருக்கிறாள். (காசி காண்டம், அத்யாயம் 70)

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

தண்டபாணி

வெகு காலத்திற்கு முன்பு ரத்னபத்ரன் என்றொரு யக்ஷன் இருந்தான். அவனுக்கு பூர்ணபத்ரன் என்றொரு மகன் இருந்தான். ரத்னபத்ரன் இறந்த பிறகு, பூர்ணபத்ரன் ஸுகமாக வாழ்ந்து வந்தான், இருப்பினும் தனக்குக் குழந்தை இல்லையே என்ற குறை அவன் உள்ளத்தை வாட்டியது.

அவன் தன் மனைவி கனக குண்டலையிடம் இதுபற்றி கூற, அவள் காசிக்குச் சென்று சிவபெருமானை வழிபடும்படி யோசனை கூறினாள். மனைவியின் வேண்டுகோளுக்கிணங்க, காசிக்குச் சென்று இறைவனைப் போற்றி வணங்கியதும், அவனுக்கு ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு ஹரிகேஷ் என்று பெயரிட்டான்.

ஹரிகேஷ் எட்டு வயதிலேயே ஆன்மிகத்தில் நாட்டமுடையவனாக இருந்தான். களிமண்ணால் சிவலிங்கங்கள் செய்து, சிவபெருமானை வழிபட்டு வரலானான். அவனுடைய நண்பர்களைக் கூட, சந்த்ரசேகரன், ம்ருத்யுஞ்ஜயன், த்ரிலோசனன், நீலகண்டன் என்று சிவபெருமானுடைய பெயர்களாலேயே அழைப்பான். பல்வேறு சிவத்தலங்களுக்குத் தவறாமல் சென்று வழிபட்டு வந்தான்.

சிறு வயதிலேயே ஆன்மிகத்தில் மிகுந்த நாட்டம் கொண்டிருந்த ஹரிகேஷை எண்ணிக் கவலையில் ஆழ்ந்தான் பூர்ணபத்ரன். உலகியல் வாழ்க்கையில் ஈடுபடும்படி அவனை வற்புறுத்தினான், ஆனால் மகன் கேட்பதாக இல்லை. ஒரு நாள், வீட்டில் சொல்லிக் கொள்ளாமல் ஹரிகேஷ் கிளம்பிவிட்டான். இலக்கின்றி எங்கெங்கோ அலைந்தான். யாரோ ஒரு ரிஷி சில காலம் முன்பு தன்னுடைய தந்தையிடம், கதியில்லாதவர்களுக்கு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வாராணசிதான் கதி என்று கூறியது அவன் நினைவுக்கு வந்தது.

காசிக்கு வந்து பகவான் விச்வேச்வரரை வழிபட்டான் ஹரிகேஷ். அப்போது சிவபெருமானும், பார்வதி தேவியும் ஆனந்த வனத்தில் இருந்தனர். காசியின் பல்வேறு அம்சங்களைப் பற்றி சிவபெருமான் பார்வதிதேவிக்கு விளக்கிக் கொண்டிருந்தார். காசியில் வாழ்பவர்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள், காசியில் இறப்பவர்களுக்கு மறுபிறவி இல்லை என்று கூறினார். அவர்கள் போற்றுதலுக்குரியவர்கள். (காசி காண்டம், அத்யாயம் 32 சிவபெருமான் பார்வதி தேவிக்கு காசியின் அழகை வர்ணித்துக் கூறியதை விளக்குகிறது).

சிவபெருமான் பார்வதிதேவியிடம் பேசிக் கொண்டிருந்தபோது, எலும்பும் தோலுமாக இருந்த ஹரிகேஷைப் பார்த்தார். அவனது பக்தியைக் கண்டு உள்ளம் குளிர்ந்த பார்வதி தேவி அவனுக்கு அருள் செய்யும்படி சிவபெருமானிடம் வேண்டினாள். சிவபெருமான் அவன் அருகில் சென்று அவனைத் தொட்டார். கோடி ஸூர்யன்களின் ஒளியுடன் ப்ரகாசித்த இறைவனைக் கண்டு மகிழ்ந்தான் ஹரிகேஷ். சிவபெருமானைப் போற்றித் துதிக்கத் தொடங்கினான்.

ஹரிகேஷ் காசியில் தன்னுடைய ஏவலாளாக அவன் இருப்பான் என்று கூறி ஆசி வழங்கினார் சிவபெருமான். அவன் காசியில் இருந்துகொண்டு, தீய சக்திகளைத் தன்னுடைய தெய்வீக ஆற்றலால் விரட்டியடிப்பான் என்று கூறினார். ஹரிகேஷ் என்ற யக்ஷனுடன், தன்னுடைய சிவகணங்களுள் இருவரான ஸம்பரம், உத்பரம் எப்பொழுதும் இருப்பர் என்று கூறினார். யக்ஷராஜனான ஹரிகேஷை வழிபடாதவர்கள் காசியில் முக்தி என்கின்ற பலனை அடைய மாட்டார்கள் என்றும் சிவபெருமான் கூறினார். ஹரிகேஷ் (கையில் தண்டத்துடன் கூடிய) தண்டபாணி என்று பெயர் பெற்றார்.

சிவபெருமான் மேலும் கூறினார் : ஞான வாபி தீர்த்தத்தில் நீராடி, நீத்தார் கடன்களைச் செய்து முடித்து, தண்டபாணியை வழிபடுபவர்கள் பாக்யவான்கள், அவர்கள் என்னுடைய அருளுக்கு பாத்திரமாவார்கள்.

தண்டபாணி விச்வேச்வரருக்குத் தெற்குத் திக்கில் நின்றபடி, காசிக்கு வரும் தீய சக்திகளை அழித்து, நல்லவர்களை மட்டுமே உள்ளே அனுமதிப்பார் என்று காசி காண்டம் கூறுகிறது.

காசியில் உள்ள தண்டபாணியை வழிபடுபவர்கள் வாழ்வில் அனைத்து இடர்களும் நீங்கி, மகிழ்ச்சியாக வாழ்வர். நிச்சயமாக முக்தியும் அடைவர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருப்பிடம்

C/K 36/10, துண்டிராஜ் கல்லி, பஜார் (ஞான வாபி பின்புறம்) என்ற இடத்தில் அமைந்துள்ளது. சௌக் அருகில் உள்ள ஞான வாபி வரை ரிக்ஷாவில் சென்று விட்டு, அங்கிருந்து படிகள் இறங்கிச் சென்று வலதுபுறம் திரும்ப வேண்டும். (சௌக் பகுதியிலிருந்து நேர் எதிரில் இடதுபுறம் சென்று கொண்டேயிருந்தால் ஞான வாபியை அடைந்துவிடலாம்). அருகிலுள்ள துணி வியாபாரிகள் வழி காட்டுவார்கள். (கால பைரவர் கோயிலுக்கு அருகில் உள்ள தண்டபாணியுடன் இவரைக் குழப்பிக் கொள்ளக் கூடாது).

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. கம்பிக் கதவுகள் வழியாக அன்பர்கள் தரிசனம் செய்யலாம்.

தசாச்வமேதேச்வரர்

அரசன் திவோதாஸின் ஆட்சியில் கலகத்தை ஏற்படுத்துவதற்காக, சிவபெருமான் ப்ரஹ்மதேவரைக் காசிக்கு அனுப்பினார். (பார்க்க : திவோதாசேச்வரர்). ப்ரஹ்மதேவர் ஒரு வயதான அந்தணர் வடிவில் காசிக்கு வந்து மன்னனைச் சந்தித்தார். மன்னன் மிகுந்த மரியாதையோடு அவரை வரவேற்று, அவருக்குத் தான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டான். தாம் அச்வமேத யாகம் செய்த விரும்புவதாகவும், அதற்குரிய பொருட்களையும், ஏற்பாடுகளையும் செய்துதரும்படி ப்ரஹ்மதேவர் கேட்டார். மன்னன் திவோதாஸின் பேராதரவுடன், ப்ரஹ்மதேவர் ஒன்றல்ல, பத்து அச்வமேத யாகங்கள் செய்தார். இந்த யாகங்கள் நடைபெற்ற இடத்திற்குத் தசாச்வமேத தீர்த்தம் (கட்டம்) என்று பெயர். இதற்கு முன் இந்த இடத்திற்கு ருத்ர ஸரோவரம் என்று பெயர் இருந்தது.

ப்ரஹ்மதேவர், அங்கு தசாச்வமேதேச்வரர் என்ற லிங்கத்தை ஸ்தாபித்து, காசியிலேயே இருந்துவிட எண்ணினார். மன்னன் திவோதாஸிடம் எந்த குறைப்பாட்டையும் காண முடியவில்லை, ஆதலால் சிவபெருமானிடம் என்ன சொல்வது என்றும் அவருக்குத் தெரியவில்லை.

காசி காண்டத்தின் 52வது அத்யாயத்தின்படி, தசாச்வமேத கட்டத்தில் நீராடி, தசாச்வமேதேச்வரரை வழிபடும் அன்பர்கள் அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுபடுவர். ஆடி மாதத்தில் அமாவாஸ்யைக்கு அடுத்துள்ள ப்ரதமை அன்று அவ்வாறு செய்யும் அன்பர்கள் மிக உயர்ந்த புண்யத்தை அடைவர். இரண்டு தலைமுறைகளுக்கும் மேலாக அவர்கள் சேர்த்து வைத்தப் பாவங்கள் எல்லாம் அகன்றுவிடும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருப்பார்கள். அவர்களுக்கு மறுபிறவி இல்லை. ஆடி மாதத்தில் உள்ள பத்து நாட்கள், மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.

இருப்பிடம்

D 18/19 சீதலா மந்திர் உட்புறம், தசாச்வமேத் கட்டம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை ரிக்ஷாவில் செல்லலாம். தசாச்வமேத கட்டம் வரை படகில் சென்று அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் கோயிலை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீஅஜய் சங்கர் பாண்டே கோயிலின் அர்ச்சகராவார். (0)9450933866 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

த்ருவேச்வரர்

முன்னொரு காலத்தில் உத்தானபாதன் என்ற அரசன் ஒரு சிறிய ராஜ்ஜியத்தை ஆண்டு வந்தான். அவனுக்கு ஸுருசி, ஸுநீதி என்ற மனைவியர் இருந்தனர். ஸுருசிக்கு உத்தமன் என்ற மகனும், ஸுநீதிக்கு த்ருவன் என்ற மகனும் இருந்தனர்.

ஒருநாள் அரசன் தர்பாரில் வீற்றிருக்கும்போது, உத்தமன் தந்தையின் மடியில் ஏறி அமர்ந்தான். அதைக் கண்டவுடன் த்ருவனும் அவ்வாறே தந்தையின் மடியில் உட்கார முற்பட்டபோது, ஸுருசி தகாத வார்த்தைகளால் அவனைத் திட்டிவிட்டாள். அரசனும் ஏதும் சொல்லவில்லை ஆதலால், த்ருவன் மிகுந்த துயரத்துடன் தன் தாயிடம் சென்றான்.

கண்களில் கண்ணீர் பெருக, த்ருவன் தன் தாயிடம் ஓடிச் சென்றான். ஸுருசி, ஸுநீதி இருவருமே தந்தைக்கு மனைவியர் எனில், தனக்குத் தந்தை மடியில் உட்கார உரிமையில்லையா? தான் ஏன் இவ்வாறு தாழ்த்தப்படுகிறோம் என்றெல்லாம் தாயிடம் கேட்டான்.

ஸுநீதி கூறினாள் : ஸுருசி முற்காலத்தில் நிறைய புண்ணியக் காரியங்கள் செய்திருக்கக் கூடும். அவ்வாறு புண்ணிய காரியங்கள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

செய்பவர்களுக்கு அடுத்த பிறப்பு நற்பிறவியாக வாய்க்கிறது. இன்று அவர்கள் அனுபவிக்கும் ஸுகங்கள் எல்லாம், சென்ற பிறவிகளில் அவர்கள் செய்த புண்ணியத்தின் பலனே ஆகும். ஸுருசி பட்டமகிஷி ஆவாள். அவளது சொல்படித்தான் மற்ற அரசியர் நடந்துகொள்ள வேண்டும்.

இவற்றையெல்லாம் தன் தாயிடமிருந்து கேட்டு, புண்ணியத்தின் சிறப்பை உணர்ந்துகொண்ட த்ருவன், இறைவனை நோக்கிக் கடுந்தவம் இயற்றுவதற்குத் தன் தாயிடம் அனுமதி வேண்டினான். மிகச் சிறிய வயதினனாக இருந்தபோதிலும், த்ருவனுக்கு அவனுடைய தாய் அனுமதி வழங்கினாள். வீட்டை விட்டுக் கிளம்பிய த்ருவன் தவம் செய்வதற்கு ஒரு தகுந்த இடத்தைத் தேடியலைந்தான்.

ஓரிடத்தில் அமர்ந்து ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். கண்களைத் திறந்தபோது, ஸப்தரிஷிகள் அந்த வழியாகச் சென்று கொண்டிருந்ததைப் பார்த்தான். உடனே த்ருவன் அவர்களைப் பணிந்து வணங்கி, தனது எண்ணத்தை வெளியிட்டான். இறைவனைக் குறித்துத் தான் தவம் இயற்ற விரும்புவதாகவும், மாற்றாந்தாய் மகனான உத்தமனே தன் தந்தைக்கு வாரிசாக அரசாட்சி புரியட்டும் என்றும் கூறினான். தனக்கு உரிமையில்லாததைப் பெற அவன் விரும்பவில்லை. இவ்வாறு கூறித் தனக்கு நல்வழி காட்டும்படி வேண்டினான்.

ஏழு ரிஷிகளும் ஒரே பதிலைக் கூறினார்கள். ஒவ்வொருவரும் மஹாவிஷ்ணுவை வழிபடும்படி கூறினர். ஒவ்வொருவரும் மஹாவிஷ்ணுவின் ஒவ்வொரு வடிவத்தைக் காட்டி, வழிபாட்டு முறைகளையும் விளக்கிக் கூறினர். சில மந்த்ரங்களையும் உபதேசித்தனர். நல்ல அறிவுரைகள் கூறிய பின்னர் அவர்கள் அந்த இடத்தை விட்டு அகன்றனர்.

யமுனைக்கரைக்குச் சென்ற த்ருவன், மஹரிஷிகள் கற்றுக்கொடுத்த மந்த்ரங்களை ஜபிக்கத் தொடங்கினான். இந்த்ரன் முதலான தேவர்களே வியக்கும்படி அவனுடைய தவம் இருந்தது. அவர்கள் த்ருவனுடைய தவத்தைக் கலைக்க முற்பட்டுத் தோல்வியடைந்தனர். காசி காண்டத்தின் 20வது அத்யாயம், த்ருவன் செய்த தவத்தையும், அதனைக் கலைக்கத் தேவர்கள் மேற்கொண்ட முயற்சிகளையும் பற்றி விவரமாகக் கூறுகிறது.

இந்திரன், மற்ற தேவர்களுடன் சேர்ந்து ப்ரஹ்மதேவரை அணுகி, த்ருவன் செய்கின்ற தவத்தைப் பற்றிக் கூறி, தனது பதவிக்கே ஆபத்து வந்துவிட்டதைத் தெரிவித்தான். ப்ரஹ்மதேவர் அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது என்று கூறி தேவர்களை ஸமாதானப்படுத்தினார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

த்ருவனுடைய தவத்தை மெச்சிய மஹாவிஷ்ணு அவனுக்குக் காட்சி கொடுத்தார். அவரைத் தரிசித்த மகிழ்ச்சயில் த்ருவன் அழ ஆரம்பித்தான். பல்வேறு ஸ்தோத்திரங்களால் அவரைத் துதித்தான். மஹாவிஷ்ணு எப்பொழுதும் த்ருவன் தன்னுடைய தாயுடன் இருப்பான் என்று வரமருளினார்.

மஹாவிஷ்ணு தாம் சிவபெருமானின் இருப்பிடமான காசிக்குச் சென்று கொண்டிருப்பதாகக் கூறினார். காசி க்ஷேத்திரத்தின் சிறப்பையும், விச்வேச்வரர் அருள்புரியும் பாங்கையும் பற்றிக் கூறினார். மஹாவிஷ்ணு தன்னுடைய கருட வாகனத்தில் த்ருவனை அமர வைத்துக் காசிக்கு அழைத்துச் சென்றார். அது கார்த்திகை மாதம் பௌர்ணமி தினம். கார்த்திகை மாதம், சுக்ல சதுர்தசி அன்று கங்கையில் நீராடி, விச்வேச்வரரை வழிபடுபவர்கள் மோக்ஷத்தை அடைவார்கள் என்று மஹாவிஷ்ணு கூறினார்.

காசியை அடைந்தவுடன், லிங்கம் ஒன்றை ப்ரதிஷ்டை செய்து சிவபெருமானை வழிபடும்படி மஹாவிஷ்ணு த்ருவனிடம் கூறினார். காசியில் ஒரு லிங்கம் ஸ்தாபிப்பது, பிற இடங்களில் ஒரு கோடி லிங்கங்கள் ஸ்தாபிப்பதற்கு நிகரானது என்று கூறினார். காசியில் ஒரு கோவிலைக் கட்டினாலோ, புதுப்பித்தாலோ ஸுமேரு மலையைத் தானம் செய்த பலன் கிடைக்கும் என்றும் கூறினார். பல நல்ல அறிவுரைகளைக் கூறிவிட்டு மஹாவிஷ்ணு மறைந்தார்.

மிகுந்த பக்தியுடன் த்ருவன் ஒரு குண்டத்தை வெட்டி, சிவலிங்கத்தை ப்ரதிஷ்டை செய்து பக்தியுடன் வழிபட்டு பின்னர் வீடு சென்றான்.

காசி காண்டத்தின்படி, த்ருவேச்வரரை வழிபடும் அன்பர்கள் வாழ்வில் மிகுந்த மகிழ்ச்சி அடைவர், இறந்த பின் த்ருவ லோகம் (ஸ்வர்க்கம்) செல்வர். வாழும் காலத்தில் அந்த பக்தர் எப்பொழுதும் வளமோடு வாழ்வார். த்ருவனைப் பற்றிய விவரங்களை காசி கண்டம் 19 முதல் 21 வரை உள்ள அத்யாயங்களில் காணலாம். த்ருவனுடைய கதையைப் படித்து, கேட்பவர்கள் அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுபடுவர், இறந்த பிறகு விஷ்ணுவின் திருவடியை அடைவர்.

இருப்பிடம்

ஸநாதந தர்ம கல்லூரி, நை ஸரக், வாராணசி என்ற முகவரியில் அமைந்துள்ளது. புகழ்பெற்ற இந்த இடத்திற்கு அன்பர்கள் ரிக்ஷா அல்லது ஆட்டோவில் செல்லலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பிதா மஹேஸ்வரர்



பித்ரேஸ்வரர்

ப்ரஹ்லாதேஸ்வரர்



ப்ரயாகேஸ்வரர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பசுபதேச்வரர்

க்ருத்தி வாஸேச்வரர்

அகஸ்த்யேச்வரர்

பார பூதேச்வரர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் 10.00 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் இரவு 8.00 வரை கோயில் திறந்திருக்கிறது. திறந்திருக்கும் நேரம் மாற்றத்திற்கு உட்பட்டது.

திவோதாஸேச்வரர்

சிவபெருமான் மந்தராசலத்தில் வீற்றிருந்தார். திவோதாஸ் என்ற பண்பும், பக்தியும் நிறைந்த மன்னன் ஒருவன் காசியை ஆண்டு வந்தான். அவனுடைய அரசாட்சியில் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருந்தனர்; நாட்டில் வளம் ஓங்கியிருந்தது. அரசனுக்கு ப்ரஹ்மதேவனுடன் ஓர் உடன்படிக்கை இருந்தது : அவன் அரசாளும் காலம் வரை தேவர்களும் மற்றவர்களும் காசியிலிருந்து விலகியிருக்க வேண்டும்; காசிக்கு எந்த தொந்தரவும் தரக்கூடாது என்பதே அது.

ப்ரஹ்மதேவன் இதற்கு ஒப்புக்கொண்டார். ஆனால் ஒரு நிபந்தனை : அரசன் திவோதாஸ் தன்னை மிகச் சிறந்த ஆட்சியாளனாக நிரூபிக்க வேண்டும்; காசியில் வசிப்பவர்களும், காசிக்கு வருபவர்களும் தங்களது ஆன்மிக ஸாதனைகளைச் சிறந்தமுறையில் மேற்கொள்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதே அது. அரசன் இந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டு சிறந்தமுறையில் அரசாட்சி புரிந்துவந்தான்.

சிவபெருமான் வெகு காலமாக காசிக்கு வராமல் இருந்தார். திருவிளையாடலாக அரசன் திவோதாஸை குற்றம் இழைக்கும்படி செய்தார். ஏதேனும் இடைஞ்சல் ஏற்படுத்துவதற்காக அறுபத்து நான்கு யோகினிகளை அங்கு அனுப்பினார். அவர்கள் ஸ்வர்க்கபுரியாகக் காட்சியளித்த காசி மாநகரின் அழகிலும், அமைதியான சூழ்நிலையிலும் கவரப்பட்டு, அங்கேயே தங்கிவிட முடிவுசெய்து அங்கேயே இருந்துவிட்டனர்.

யோகினிகள் திரும்பி வராததை அறிந்த சிவபெருமான், காசியில் ஏதேனும் கலகத்தை ஏற்படுத்துவதற்காக ஸூர்ய பகவானை அங்கு அனுப்பினார். ஸூர்ய பகவான் காசிக்கு வந்து, அங்கு ஜோதிடராக, பண்டிதராக, மத போதகராக, வணிகராக, ப்ராஹ்மணராகப் பல்வேறு வடிவங்கள் எடுத்துக் கொண்டார். அவரால் காசியிலோ, அரசன் திவோதாஸின் அரசாட்சியிலோ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எந்தவிதமான குறைபாட்டையும் காண முடியவில்லை. ஸூர்ய தேவனும் காசி மாநகரின் அழகினால் கவரப்பட்டார். சிவபெருமான் தனக்கு இட்ட பணியை முடிக்காமல் மந்தராசலத்திற்குச் சென்றால், சிவபெருமான் கோபித்துக் கொள்வார் என்றும் அவர் நினைத்தார்.

கடைசியில், ஸூர்ய தேவன் காசியிலேயே தங்கிவிட முடிவுசெய்தார். அவர் பின்வருமாறு தமக்குள் சொல்லிக் கொண்டார்: சிவபெருமானுக்கு கீழ்ப்படியாமல் இருப்பது பாவமாகும். ஆனால், காசியில் இருந்து ஆன்மிக ஸாதனைகளைப் பழகுவதன் மூலம் அந்த பாவங்களிலிருந்து விடுபட முடியும். இவ்வாறு கருதிய ஸூர்ய பகவான், பன்னிரெண்டு ரூபங்கள் எடுத்துக் கொண்டு, காசியின் பல்வேறு இடங்களில் தம்மை இருத்திக் கொண்டார்.

சிவபெருமான் தம்முடைய சிவகணங்களை அனுப்பினார். அவர்களும் காசியில் அழகில் மயங்கி அங்கேயே தங்கிவிட்டனர். கடைசியில், சிவபெருமான் தம்முடைய மகனான விநாயகப் பெருமானை, காசியில், அரசன் திவோதாஸின் ஆட்சியில் ஏதேனும் கலகத்தை உருவாக்க வேண்டும் என்று விசேஷமாகச் சொல்லி அனுப்பினார்.

விநாயகப் பெருமான், காசியை அடைந்து, ஓர் வயதான ஜோதிடர் வடிவம் எடுத்துக் கொண்டார். அவர் மக்களுக்கு சில கனவுகள் தோன்றச் செய்து, அவர்களைக் காலையில் சந்தித்து, கனவின் பலன்களைக் கூறத் தொடங்கி, மக்களைத் தம் பக்கம் இழுக்கத் தொடங்கினார். அவர்களது ஜாதகத்தில் உள்ள க்ரஹ நிலைகளைக் கூறி அவர்களைப் பயமுறுத்தினார். மக்கள் காசியை விட்டு பயந்து ஓடும்படி செய்தார்.

கால க்ரமத்தில், அரசனுடைய அரண்மனைக்குள் புகுந்து, அந்தப்புரத்தில் இருந்த பெண்களிடத்தில் தம்முடைய செல்வாக்கை நிலைநாட்டினார். நாட்கள் செல்லச் செல்ல, அரசியின் நன்மதிப்பைப் பெற்றார். அரசி, வயதான ஜோதிடரைப் பற்றி அரசனிடம் தெரிவித்து, அரசன் அவருக்கு மரியாதை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டாள். அரசனுடைய அனுமதி பெற்று, ஜோதிடருக்குச் சொல்லி அனுப்பினாள்.

அரசன் மிகப் பணிவுடன் ஜோதிடரை வரவேற்றான். ஜோதிட வடிவத்தில் இருந்த விநாயகப் பெருமானும் மரபுப்படி அரசனை வாழ்த்தினார். அரசன் வருங்காலத்தைப் பற்றிக் கூறுமாறு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கேட்டான். மிகுந்த யோசனைக்குப் பிறகு, அரசனைப் பற்றியும், அரசாட்சியைப் பற்றியும் பல்வேறு விஷயங்களை ஜோதிடர் கூறினார். அன்றிலிருந்து பதினெட்டாவது நாள் ஓர் அந்தணர் வந்து, ஓர் முக்கியமான அறிவுரை வழங்குவார், அதனை அரசன் கண்டிப்பாகக் கடைப்பிடித்தாக வேண்டும் என்று கூறிவிட்டு, ஜோதிடர் அங்கிருந்து விடைபெற்றுக் கொண்டார்.

விநாயகப் பெருமான் தம்முடைய தந்தையின் எண்ணத்தைப் பூர்த்திசெய்து, காசியில் பல்வேறு வடிவங்களில் எழுந்தருளினார்.

இறுதியாக, மஹாவிஷ்ணு காசிக்குச் சென்று, அரசனை ஒரு அந்தணர் வடிவில் அணுகினார். அரசர் சகல மரியாதைகளுடன் அவரை வரவேற்றான். அவனுக்குத் தர்மங்களை எடுத்துக் கூறினார் மஹாவிஷ்ணு. தன்னுடைய ஆட்சியில் அனைவரும் நலமாக இருப்பதாகவும், மக்களிடையே பக்தி செழிப்பதாகவும் அரசன் கூறினான்.

அந்தணர் வடிவில் தோன்றிய மஹாவிஷ்ணு அரசனை ஒரு சிவலிங்கத்தை ப்ரதிஷ்டை செய்யும்படி அறிவுறுத்தினார். சிவலிங்கத்தை ப்ரதிஷ்டைசெய்த ஏழாவது நாளில் விண்ணிலிருந்து வரும் தெய்வீக விமானம் ஒன்று அவனை சிவலோகத்திற்கு எடுத்துச் செல்லும் என்று கூறினார். இதனைக் கேட்டு அரசன் மிகவும் மனம் மகிழ்ந்தான். ராஜ்ஜியத்தை ராஜகுமாரன் ஸமரஞ்ஜயனிடம் ஒப்படைத்துவிட்டு, சிவலிங்கத்தை ப்ரதிஷ்டை செய்தான். குறிப்பிட்ட ஏழாவது நாளில், குறிப்பிட்ட முறைப்படி சிவலோகத்தை அடைந்தான்.

திவோதாஸேச்வரரை வழிபடுவர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பர். அவர்கள் அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுபடுவர். அவர்கள் யுத்தத்தில் ஜெயிப்பார்கள்.

இருப்பிடம்

டி 2/13, விச்வபுஜ கௌரி (தர்மேச்வரர்/விஸாலாக்ஷி கௌரிக்கு அருகில்) என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் தசாச்வமேத் விச்வநாத் கல்லி/பன்ஸ்படக் விச்வநாத் கல்லி வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து இந்த இடத்திற்கு நடந்து செல்லலாம். அன்பர்கள் விச்வேச்வரர்–அந்நபூரணி தரிசனத்துடன் இதனையும் இணைத்துக் கொள்வது வழக்கம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழக்கம்போல் சென்று வழிபடலாம்.

கங்கேச்வரர்

ஸ்கந்தப் பெருமான், அகஸ்த்ய முனிவருக்குக் காசியில் நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளை விவரித்தார். கங்கை நதி, காசியினுள் நுழைந்து மிகுந்த வேகத்துடன் பாய ஆரம்பித்தாள். கங்காதேவி புனிதமே வடிவெடுத்தவள். அவள் விச்வேச்வரருக்குக் கிழக்குப்புறத்தில் ஒரு லிங்கத்தை ஸ்தாபித்தாள்.

கங்கேச்வரரைத் தரிசிப்பது சற்று கடினம். தசரா சமயத்தில் (விஜயதசமி அன்று), ஒருவர் கங்கேச்வர லிங்கத்தை வழிபட்டால் பல காலமாக அவர் சேர்த்து வைத்த பாவங்கள் அழியும். கங்கேச்வர லிங்கத்தைத் தரிசித்து வழிபடுவது, அவ்வளவு ஏன், அவரைப் பற்றிப் படித்தாலும், கேட்டாலும் கங்கா ஸ்நான பலன் உண்டாகும். (காசி காண்டம், அத்யாயம் 91).

காசி காண்டமும், பிற நூல்களும் கங்கா ஸ்நானத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கின்றன. கங்கேச்வரரை வழிபடும் அன்பர்கள் இறந்த பிறகு, ஸ்வர்க்கத்தை அடைவார்கள். அவர்களது விருப்பங்கள் எல்லாம் நிறைவேறும்.

இருப்பிடம்

C/K 13/78 என்ற எண்ணில் சௌக் பகுதியில் அமைந்துள்ளது. (ஆதாரம் : வாராணசி வைபவ் - பண்டித குபேரநாத் சுகுல்). பசுபதேச்வரர் கோயிலிலிருந்து ஸங்கட தேவி கோயிலுக்குச் செல்லும் வழியில், வலப்புறம் திரும்பினால், 13/68 என்ற எண்ணுடைய வீட்டிற்கு எதிர்ப்புறத்தில் முனைப்பகுதியில் கங்கேச்வர லிங்கம் உள்ளது. கவனமாகப் பார்க்காவிட்டால், இந்த இடத்தைத் தவற விட வாய்ப்பிருக்கிறது.

இதனைத் தரிசிப்பது கடினம் என்று காசி காண்டமும் கூறுகிறது!

வழிபாட்டு முறைகள்

கம்பிக் கதவுகள் வழியாக அன்பர்கள் நாள் முழுவதும் தரிசிக்கலாம். கோயிலுக்கென்று தனி அர்ச்சகர் எவரும் இல்லை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கருடேச்வரர்

கருடன் தன் அன்னையான வினதையை அடிமைத்தளைகளிலிருந்து விடுவித்தார். (பார்க்க : காகோல்க் ஆதித்யர்). தான் ஏதோ பாவம் செய்திருக்க வேண்டும், அதனால்தான் தனக்கு அடிமையாக இருக்கும் தன்மை ஏற்பட்டது என்று வினதை கூறினாள். அவள் தன் பாவங்களை நீக்கிக் கொள்ள காசிக்குச் செல்ல விரும்பினாள். கருடன் அவளைக் காசிக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஒரு சிவலிங்கத்தை ப்ரதிஷ்டை செய்து வழிபடத் தொடங்கினார். சிவபெருமான் அவருக்குக் காட்சிகொடுத்து, அருள்புரிந்ததுடன், மஹாவிஷ்ணுவிற்கு வாகனமாக இருக்கும் பாக்கியத்தையும் தந்தருளினார்.

இந்த லிங்கத்தை வழிபடுபவர்கள் பரிபூரண ஞானத்தை அடைவர் என்றும் சிவபெருமான் கருடனிடம் கூறினார். (காசி காண்டம் : அத்யாயம் 50)

இருப்பிடம்

டி-31/43, ஜங்கம்பாடி தெலியானா என்ற முகவரியில் அமைந்துள்ளது. கோடுவ்லியா க்ராஸ் ரோட்டிலிருந்து (சௌராஹா) ஸோனர்புராவிற்குச் செல்லும் வழியில் பெங்காலி தோலா போஸ்ட் ஆபீஸ் தாண்டிய பிறகு, இடதுபுறம் திரும்ப வேண்டும். ஜங்கம்பாடி புராண துர்கா பாடிக்கு அருகில் கருமேச்வரர் வீற்றிருக்கிறார். அன்பர்கள் ஜங்கம்பாடி வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று கோயிலை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 7.00 மணி முதல் இரவு 7.30 மணி வரை கோயில் திறந்திருக்கிறது. விசேஷ பூஜைகள் செய்ய அர்ச்சகரை முன்பே தொடர்பு கொள்ளுதல் நலம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீஸுரேந்த்ர ப்ரஸாத் பாண்டே கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய 0542-2454732 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

ஞானேச்வரர்

காசி கண்டம், அத்யாயம் 73 ன்படி, சிவபெருமான் பார்வதி தேவியிடம், காசியில் ஆயிரக்கணக்கான சிவலிங்கங்கள் இருப்பதாகவும், அவற்றில் சில ஸ்வயம்பூ, மற்றவையெல்லாம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தேவர்களாலும், க்ரஹங்களாலும், பக்தர்களாலும் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது என்று கூறினார்.

சிவபெருமான் அவற்றுள் முக்கியமான பதினான்கு லிங்கங்களைப் பற்றிக் கூறினார். அவற்றுள் ஒன்று ஞானேச்வரர். பதினான்கு லிங்கங்களும் அரிய பொக்கிஷங்களாகும்.

ஞானேச்வரரை வழிபடும் அன்பர்கள் வாழ்வில் மகிழ்ச்சியும், நிறைஞானமும், மோக்ஷமும் அடைவர். இந்த லிங்கங்களின் பெயர்களைச் சொல்வதாலேயே தெரிந்தோ தெரியாமலோ செய்த அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுபடுவர்.

இருப்பிடம்

ஞானேச்வர் சில்க் ஃபாக்டரி வளாகத்தில், லாஹோரி தோலா வில் D 10/32 என்ற எண்ணில் அமைந்துள்ளது. தரைமட்டத்திற்குக் கீழ் லிங்கம் அமைந்திருப்பதால் அன்பர்கள் படிகள் இறங்கிச் செல்ல வேண்டும். இந்த வழிபாட்டு இடம் நன்கு பராமரிக்கப்படுகிறது. அன்பர்கள் தசாச்வமேத் விச்வநாத் கல்லி வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து இந்த இடத்திற்கு நடந்து செல்லலாம். லாஹோரி தோலா ஓர் முக்கியமான இடமாகும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் 11.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டது.

ஹரிசந்த்ரேச்வரர்

பல்வேறு புண்ணிய தீர்த்தங்களைப் பற்றி மஹாவிஷ்ணு பிந்து மஹரிஷிக்குக் கூறினார். (காசி காண்டம், அத்யாயம் 61). மணிகர்ணிகாவின் எல்லையைக் கிழக்கில் உள்ள கங்கை வரையிலும், மேற்கில் ஸ்வர்க த்வாரம் வரையிலும், தெற்கில் கங்கா கேசவ் வரையிலும், ஹரிச்சந்த்ர மண்டபம் வரை வடக்கிலும் விவரித்துக் கூறுகிறார் மஹாவிஷ்ணு.

ஹரிச்சந்த்ர தீர்த்தத்தில் நீராடி, பித்ரு காரியங்களைச் செய்வது மனத் தூய்மைக்கு வழிவகுக்கும். அருகில் உள்ள ஹரிச்சந்த்ரேச்வரரை வழிபடுபவர்கள் எப்பொழுதும் உண்மையில் நிலைத்திருப்பார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தத்துவ ரீதியாகப் பார்த்தால், வாழ்வில் முடிவான உண்மையைப் பற்றிய வாதம் எப்பொழுதும் நடந்து கொண்டிருக்கிறது. ஸத்ஸங்கத்தின் விளைவாக, ஒருவர் தெரிந்து கடைப்பிடிக்க வேண்டிய ஒரு முக்கியமான பண்பு ஸத்யமாகும்.

காசியில் இரண்டு எரி கட்டங்கள் இருக்கின்றன. (மணிகர்ணிகா மற்றும் ஹரிச்சந்த்ர கட்டம்). இது ராஜா ஹரிச்சந்த்ரனோடு தொடர்புடைய இடம் என்று மக்கள் நினைக்கிறார்கள். இது ஏற்புடையதல்ல. ஹரிச்சந்த்ர கட்டம் பிற்காலத்தில் தோன்றியது. அவருடன் தொடர்புடைய மயானம் மணிகர்ணிகா அருகில் உள்ளது. அவர் ப்ரதிஷ்டை செய்த லிங்கம் ஹரிச்சந்த்ரேச்வரர் அங்கு உள்ளது.

இருப்பிடம்

C/K7/66, ஸங்கட காட் டில் பெரிய சிவலிங்கமாக ஹரிச்சந்த்ரேச்வரர் வீற்றிருக்கிறார். அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து ஸங்கட தேவி கோயில் வழியாக நடந்து செல்ல வேண்டும். ஸங்கட கட்டம் வரை படகில் சென்று அங்கிருந்து படிகள் ஏறிச்சென்றும் இவ்விடத்தை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

இந்தச் சிவலிங்கம் ஒரு தனியாரின் வீட்டினுள் உள்ளது. அன்பர்கள் சாளரம் வழியாகத் தரிசிக்கலாம்.

ஜய்கீஷேச்வரர்

சிவபெருமான் மந்தராசலத்தில் நீண்ட காலம் இருந்தார். சிவபெருமான் காசிக்குத் திரும்பி வர வேண்டும் என்பதற்காக ஜயகீஷ் என்ற பெயருடைய ஒரு முனிவர் ஒரு குகையில் அமர்ந்து தவம் புரிந்தார். முடிவில் அரசன் திவோதாஸ் காசியை விட்டுச் சென்ற பிறகு, சிவபெருமான் காசிக்குத் திரும்பி வந்தார். (பார்க்க : திவோதாஸேச்வரர்). கடுமையான தவத்தினாலும், வ்ரதத்தினாலும் அந்த ரிஷி நினைவிழந்திருந்தார்.

காசிக்கு வந்தவுடன், சிவபெருமான் ஒரு தெய்வீகத் தாமரையை நந்திதேவரிடம் கொடுத்து, அதனைக் கொண்டு அந்த ரிஷியைத் தொடுமாறு பணித்தார். நினைவு பெற் ரிஷி நந்திதேவருடன் சிவபெருமானையும், பார்வதியையும் வணங்கி பல்வேறு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்தோத்ரங்களினாலும், மந்த்ரங்களாலும் போற்றி வணங்கினார். அவரது பக்தியால் மனம் மகிழ்ந்த சிவபெருமான் அவருக்குத் தெய்வீக வரம் ஒன்றை அளித்தார். தாம் ப்ரதிஷ்டை செய்யக்கூடிய லிங்கத்தில் சிவபெருமான் எப்போதும் வீற்றிருந்து அருள்புரிய வேண்டும் என்ற வரத்தை வேண்டினார் ரிஷி. இறைவன் அதனை ஏற்றுக் கொண்டார்.

மேலும் சிவபெருமான் முனிவர் தவம் செய்த குகையில் யோகத்தை மேற்கொள்பவர்கள் ஸித்தியடைவர் என்று கூறினார். அன்பர்கள் அந்தக் குகைக்குச் சென்று வழிபட வேண்டும். முனிவரால் ப்ரதிஷ்டை செய்யப்பெற்ற (ஜ்யேஷ்டேச்வரருக்கு அருகில் உள்ள) ஜயகீச்வரரை வழிபடுபவர்கள் எல்லா பாவங்களிலிருந்தும் விடுபடுவர். ஜ்யேஷ்டேச்வர க்ஷேத்திரத்தில் ஒரு சிவபக்தருக்கு உணவளித்தால், அது ஒரு கோடி மக்களுக்கு உணவளித்ததற்குச் சமமாகும்.

இருப்பிடம்

ஜயகீஷ் முனிவர் தவம் செய்த குகை கே 66/3, ஈச்வர கங்கி (அக்னி குண்டம்) என்ற இடத்தில் அமைந்துள்ளது. இந்த இடத்தை அடைவதற்கு அக்னி த்ருவேச்வரர் கோயிலுக்குச் செல்லும் வழியைப் பார்க்கவும். முனிவரால் ப்ரதிஷ்டை செய்யப்பெற்ற லிங்கம் கே 63/27, பூத் பைரவர் (ஜ்யேஷ்ட கௌரி அருகில்) என்ற இடத்தில் அமைந்துள்ளது. இந்த இடத்திற்குச் செல்ல ஜ்யேஷ்ட கௌரி கோயிலுக்குச் செல்லும் வழியைப் பார்க்கவும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

ஜ்யேஷ்டேச்வரர்

காசி காண்டத்தின் 63வது அத்யாயத்தில் ஜ்யேஷ்டேச்வரரின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. ஜ்யேஷ்ட மாதத்தில் பௌர்ணமிக்கு முன்பு வரும் சுக்லபக்ஷ சதுர்தசியன்று ஜ்யேஷ்டேச்வரரை வழிபடுபவர்கள் வாழ்வில் ஏற்றமும், மகிழ்ச்சியும் பெறுவர். இறந்த பிறகு ஸ்வர்கத்தை அடைவர் என்று சிவபெருமானே கூறியிருக்கிறார். திங்கட்கிழமை அன்று அநுஷ நக்ஷத்திரமும் சேர்ந்திருந்தால் மிகவும் விசேஷமாகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸூர்யனைக் கண்டவுடன் பனி விலகுவதுபோல், பல வருடங்களாகச் சேர்த்து வைத்தப் பாவங்கள் எல்லாம் ஜ்யேஷ்டேச்வர லிங்கத்தைத் தரிசித்த மாத்திரத்தில் நீங்கும். ஜ்யேஷ்டேச்வர லிங்கத்திற்கு அருகில் நெய் கொண்டு தம் பித்ருக்களுக்கு ச்ரார்த்தம் முதலிய கர்மாக்களைச் செய்பவர்கள் தங்களுடைய பித்ருக்களுக்கு மிகப்பெரிய நன்மையைச் செய்தவர்கள் ஆகிறார்கள். ஜ்யேஷ்டேச்வரருக்கு பூஜை செய்து, சிவனடியார்களுக்கு அன்னதானம் முதலியவற்றைச் செய்பவர்கள் ஒரு கோடி மக்களுக்கு உணவளித்த புண்ணியத்தைப் பெறுவர். (காசி காண்டம்)

இருப்பிடம்

கே 62/144, ஸப்த ஸாகர் மொஹல்லா என்ற இடத்தில் அமைந்துள்ளது. இந்தக் கோயிலை மைதாகின் என்ற இடத்திலிருந்து அடையலாம். அன்பர்கள் மைதாகின் வரை ரிக்ஷா அல்லது காரில் செல்லலாம். மைதாகின் பகுதியிலிருந்து நடந்து செல்வதே சிறந்தது. அருகில் உள்ள புகழ்பெற்ற கோயில் காசி தேவி கோயிலாகும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.30 மணி முதல் 12.30 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலையிலும் மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது. கோயில் திறந்திருக்கும் நேரம் மாறுதலுக்கு உட்பட்டது.

காமேச்வரர்

கந்தப் பெருமான் (முருகர்) காசி மாஹாத்மியத்தை அகஸ்த்ய முனிவருக்கு எடுத்துக் கூறிக் கொண்டிருந்தார். (காசி காண்டம்). அவர் கூற்றுப்படி, உலகம் முழுவதும் சஞ்சரித்த துர்வாஸ முனிவர் காசிக்கு வந்தார். குளம் ஒன்றை ஏற்படுத்தி, அருகிலேயே சிவலிங்கம் ஒன்றை ஸ்தாபித்து, நாள்தோறும் பூஜையும் அர்ச்சனையும் செய்து வந்தார்.

சில காரணங்களால் கோபமடைந்த அவர் காசியையும், அங்கு வாழ்வோரையும் சபிக்க முனைந்தார். அந்த நேரத்தில் சிவபெருமான் அவருக்குக் காட்சி கொடுத்தார். துர்வாஸரின் கோபம் மறைந்தது. சிவபெருமான் அவருக்குத் தெய்வீக வரம் ஒன்றையும் அளித்தார். துர்வாஸர் தன்னால் ஏற்படுத்தப்பட்ட குளம் காமகுண்டம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

என்றும், லிங்கம் காமேச்வர லிங்கம் என்றும் அழைக்கப்பட வேண்டும் என்று வேண்டினார். சிவபெருமானும் அவ்வாறே வரமளித்தார்.

சிவபெருமான் மேலும் கூறினார் : சனிக்கிழமை, த்ரயோதசி, ப்ரதோஷம் மூன்றும் கூடுகின்ற நாளில் காமகுண்டத்தில் நீராடி, காமேச்வரரை வழிபடுபவர்கள் அனைத்துவித பாவங்களிலிருந்தும் விடுபடுவர். அவர்களது எண்ணங்கள் எல்லாம் ஈடேறும், இறந்த பிறகு அவர்கள் ஸ்வர்கத்தை அடைவர். (காசி காண்டம், அத்யாயம் 85)

காமகுண்டம் தற்போது முழுவதும் வற்றிவிட்டது, அதன் மீது கட்டிடங்கள் எழுப்பப்பட்டுவிட்டன. காமகுண்டத்திற்குப் பதிலாக மக்கள் தற்போது கங்கையில் நீராடுகிறார்கள். காசி காண்டத்தில் துர்வாஸேச்வரரைப் பற்றியும், காமேச்வரரைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பிடம்

த்ரிலோசனுக்கு வடக்கில் ஏ -2/9 என்ற எண்ணில் அமைந்துள்ளது. இந்தக் கோயில் புகழ்பெற்ற (மச்சோதரியைக் கடந்த பிறகு வருகின்ற) ப்ரஹ்லாத கட்டத்திற்கு அருகில் உள்ளது. அன்பர்கள் ப்ரஹ்லாத காட் சௌராஹா வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று இந்த இடத்தை அடையலாம். கோயிலில் இரண்டு லிங்கங்கள் உள்ளன. பெரிய லிங்கம் துர்வாஸேச்வரர் என்றும், சிறிய லிங்கம் காமேச்வரர் என்றும் அழைக்கப்படுகிறது. துர்வாஸேச்வரர் லிங்கம் பக்தியையும், காமேச்வர லிங்கம் சக்தியையும் குறிக்கின்றன.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் பகல் 12.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலை 5.30 மணிக்கு மங்கள ஆரத்தி நடைபெறுகிறது, இரவு 9.30 மணிக்கு சயன ஆரத்தி நடைபெறுகிறது.

செவ்வாய் தோஷத்தால் ஒருவர் அடிக்கடி கோபத்திற்கு ஆட்பட்டால், இங்கு வந்து பூஜைகள், பரிஹாரங்கள் முதலியவற்றைச் செய்தால் அந்த தோஷம் நீங்கும் என்று கோயிலின் அர்ச்சகர் தெரிவிக்கிறார். விசேஷ பூஜைகள் செய்ய அர்ச்சகரை முன்பே தொடர்பு கொள்ளுதல் நலம்.

கோயிலின் அர்ச்சகர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீராஜேஷ் கிரி கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9839703054 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

கந்துகேச்வரர்

சிவபெருமான் ஒருமுறை தோட்டத்தில் அமர்ந்திருந்தார். பார்வதி தேவி பந்து விளையாடிக் கொண்டிருந்தாள். தன்னை மறந்து, சுற்றுப்புறத்தை மறந்து அன்னை விளையாட்டில் ஈடுபட்டிருந்தாள்.

பார்வதி தேவி ஒப்பற்ற அழகு பொருந்தியவள். அவளது அழகை காசி காண்டத்தின் 65வது அத்யாயம் விவரிக்கிறது. அவள் மேலும் கீழும் குதிக்கும்பொழுது, அவளது கூந்தலும் ஆட ஆரம்பித்தது. பந்தின் அசைவிற்கேற்ப அன்னையின் புருவங்களும அசைந்தன. அந்த நேரத்தில் ஆகாயத்தில் சென்று கொண்டிருந்த இரண்டு ராக்ஷஸர்கள் அன்னையைக் கண்டு தவறான எண்ணத்துடன் அவளை நோக்கி வந்தனர்.

பூமிக்கு வந்ததும், சிவகணங்கள் போன்று வேடமிட்டுப் பார்வதிக்கு அருகில் வந்தனர். இவை அத்தனையையும் கவனித்துக் கொண்டிருந்த சிவபெருமான் பார்வதி தேவிக்கு ஸமிஜ்ஞை செய்தார். அதனைப் புரிந்துகொண்ட பார்வதி தேவி மிகுந்த வேகத்துடன் அவர்கள் மீது பந்தை விட்டெறிந்தாள், ராக்ஷஸர்கள் அந்தக்கணமே இறந்தனர்.

ராக்ஷஸர்களை அழித்துவிட்டுப் பூமிக்கு வந்த பந்து சிவலிங்கமாக உருவெடுத்தது. அந்த லிங்கம் கந்துகேச்வரர் என்று அழைக்கப்பெறுகிறது. கந்துகேச்வரரை வழிபடுபவர்கள் பார்வதிதேவியின் பேரருளுக்குப் பாத்திரமாவார்கள் என்று காசி காண்டத்தின் 65வது அத்யாயம் கூறுகிறது. மேலும், பார்வதி தேவியே அந்த லிங்கத்தை நாள்தோறும் வழிபடுகிறாள். கந்துகேச்வரரை வழிபடும் அன்பர்களுக்கு சிவபெருமான், பார்வதி தேவி இருவருமே அருள்புரிகின்றனர்.

இருப்பிடம்

கே 63/29, பூத பைரவர் என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் காசி தேவி கோயில்/பூலா நலா/லோஹாட்டியா வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து ஜ்யேஷ்ட கௌரி/பூத பைரவர் வரை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நடந்து சென்று அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் 10.00 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை. கோயில் மூடியிருந்தால், பூத பைரவர் கோயிலில் உள்ள அர்ச்சகரிடம் கேட்டுத் திறக்கச் சொல்லலாம். அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் தாங்களே வழிபடலாம்.

கபர்தீச்வரர்

விமல குண்டத்திற்கு அருகில் கபர்தி என்ற சிவகணத்தால் கபர்தீச்வர லிங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. காசி கண்டத்தின்படி, முன்னொரு காலத்தில் வால்மீகி என்ற பெயருடைய கபர்தீச்வரரின் பக்தர் ஒருவர் அருகில் வாழ்ந்து வந்தார். ஒரு முறை பிசாசு ஒன்று அவர் முன் தோன்றி, தான் பெரிய பாவங்கள் செய்திருப்பதாகவும், கோதாவரி நதிக்கரையில் முன்பு வசித்து வந்ததாகவும் தெரிவித்தது. புண்ணிய ஸ்தலங்களில் இருந்துகொண்டு பாவங்கள் செய்பவர்கள் பிசாச யோனிகளை அடைவர் என்று கேள்விப்பட்டிருக்கிறார். வால்மீகியிடம் தனக்கு உதவுமாறு அவன் வேண்டிக்கொண்டான்.

வால்மீகி சிவ ஸஹஸ்ரநாமத்தை ஓதிக்கொண்டிருந்தார். விமல குண்டத்தில் நீராடி, கபர்தீச்வரரை வழிபடுமாறு அந்தப் பிசாசிடம் அவர் கூறினார். பிசாசு அதுபோவே செய்து, விமோசனம் பெற்றது. அதன் பிறகு வால்மீகி அவனுக்குத் திருநீறு அளித்து அறிவுரை கூறினார். திருநீறு அணிந்துகொள்வதன் முக்கியத்துவத்தை காசி கண்டம் நன்கு எடுத்துக் கூறுகிறது. நெற்றியில் திருநீறு அணிந்துகொள்பவன் அகால மரணத்திலிருந்தும், துன்பங்களிலிருந்தும் விடுபடுகிறான்.

பிசாசு விடுதலை அடைந்தபிறகு, அந்த குண்டம் பிசாச்மோசன் குண்டம் என்று அழைக்கப்படுகிறது. (காசி காண்டம், அத்யாயம் 54). இந்தப் பெரிய குளம் தற்போது நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

கபர்தீச்வரரிடம் வேண்டிக்கொள்பவர்கள், தங்கள் உணர்ச்சிகளை, குறிப்பாகக் கோபத்தை வெல்லும் ஆற்றல் பெறுவார்கள். அவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து விடுபடுவார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருப்பிடம்

ஸி – 21/40, பிசாச்மோசன் என்ற இடத்தில் அமைந்துள்ளது. வாராணசியில் இது மிகவும் ப்ரஸித்திபெற்ற இடமாகும். செட்கஞ்ஜ்/மல்தஹியா/ஃபாட்மன் ரோடு(ஸிக்ரா) விலிருந்து இந்த இடத்தை சைக்கிள் ரிக்ஷா அல்லது ஆட்டோ ரிக்ஷாவில் அடையலாம். பிண்ட தானத்திற்காக மக்கள் பிசாச்மோசன் குண்டிற்குச் செல்கிறார்கள். மாக மாத சுக்லபக்ஷ சதுர்தசியன்று இந்த இடத்தைத் தரிசித்தல் மிக விசேஷம் என்று கூறப்படுகிறது.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. விசேஷ பூஜைகள் செய்ய அர்ச்சகரை முன்பே தொடர்பு கொள்ளுதல் நலம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீகமலேஷ் திவாரி கோயிலில் உள்ளார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9918989066 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம். பிசாச்மோசன் குண்டில் பித்ரு காரியங்களைச் செய்ய வருபவர்களுக்கும் அவர் உதவி வருகிறார்.

கார்கோடக நாகேச்வரர்

ஜ்யேஷ்டேச்வர லிங்கத்தைச் சுற்றி உள்ள பல்வேறு தீர்த்தங்களையும், லிங்கங்களையும் பற்றி காசி காண்டத்தின் 66வது அத்யாயம் கூறுகிறது. கந்தர்வேச்வரருக்கு கிழக்குப் பக்கத்தில் கார்கோடக நாகரும், கார்கோடக வாபியும் (கிணறும்) உள்ளன.

கார்கோடக கூபத்தில் நீராடி கார்கோடக நாகேச்வரரை வழிபடுபவர்களுக்கு எவ்வித விஷத்தினாலும் மரணம் ஏற்படாது. அவருடைய உடலில் எந்த விஷமும் ஏற முடியாது.

கார்கோடக கூபத்தில், கார்கோடக நாகேச்வர லிங்கம் மூழ்கியுள்ளது. நீர் குறையும்போதோ அல்லது தூய்மைப்படுத்துவதற்காக நீரை இறைக்கும்போதோ லிங்கத்தைத் தரிசிக்க முடியும். லிங்கம் நீரில் மூழ்கியிருக்கும்போது, அதன் தெய்வீகத்தன்மை முழுமையாக இருக்கிறது. அன்பர்கள் மிகுந்த நம்பிக்கையுடன் வந்து தரிசித்துவிட்டுச் செல்கின்றனர்.

நுழைவாயிலில், நாக கௌனுக்குச் செல்லும் முன்னால் நாகேச்வரர் என்ற சிவலிங்கம் இருக்கிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருப்பிடம்

ஜே-26/206, நாக கௌன், ஜயத்புரா என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் ஜயத்புரா காவல் நிலையம் வரை சென்று, நாக் கௌனுக்குச் செல்லும் வழியை விசாரித்துச் செல்லலாம். நாக கௌனில் நீர் அளவுக்கு மேல் ஒரு கார்கோடக லிங்கம் இருக்கிறது, அதில் ஒரு பாம்பு உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. அன்பர்கள் இந்த லிங்கத்தையும் வழிபடுகின்றனர்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.30 மணி முதல் பகல் 12.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

ச்ரவண மாதத்தில், நாக பஞ்சமி அன்று கோயிலில் மிகுந்த கூட்டம் காணப்படுகிறது. முன்பெல்லாம், நிறைய பாம்புகள் இந்தக் கோயிலில் இருக்கும், தற்போது மக்கள் கூட்டம் அதிகரித்துவிட்டதால் பாம்புகள் வருவதில்லை.

கால ஸர்ப்ப தோஷம் நீங்குவதற்காக இங்குள்ள அர்ச்சகரால் விசேஷ பூஜைகள் செய்யப்படுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீ துளஸி பாண்டே கோயிலின் அர்ச்சகராவார். (0)9889772817 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

குபேரேச்வரர்

காசி காண்டத்தின் 13வது அத்யாயத்தின்படி, கம்பில்யா என்ற இடத்தில் யாக தத்தர் என்ற பெயருள்ள ஒரு தீக்ஷிதர் வசித்து வந்தார். வேத சாஸ்த்ரங்களிலும், சடங்குககளிலும் அவர் வல்லவராகத் திகழ்ந்தார். அவருக்கு மிக அழகான ஒரு மகன் இருந்தான், அவனுக்கு அவர் பூணூல் சடங்கை செய்து வைத்தார்.

ஆனால் குணநிதி என்ற பெயருடைய அந்த மகன் ஸந்த்யா வந்தனம் உட்பட ஒரு ப்ரஹ்மசாரீ செய்ய வேண்டிய எந்த சடங்கையும் செய்யவில்லை. தீயோர் சேர்க்கையினால் சூதாட்டம் முதலிய தீய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பழக்கங்களில் ஈடுபட்டான். மகன் நல்வழியில்தான் சென்று கொண்டிருக்கிறான் என்று யாக தத்தரின் மனைவி அவரிடம் மகனுக்காகப் பரிந்து பேசியும், பொய்கள் உரைத்தும் வந்தாள்.

சூதாட்டத்தில் தொடர்ந்து பணத்தை இழந்து வந்த குணநிதி, அதற்காக வீட்டில் உள்ள பொருட்களை எல்லாம் விற்க ஆரம்பித்தான். அவன் தாய்க்குச் சொந்தமான ஒரு வைர மோதிரத்தையும் விற்றுவிட்டான். ஒரு நாள் யாக தத்தர் ஒரு வழிப்போக்கன் அந்த மோதிரத்தை அணிந்திருந்ததைப் பார்த்துவிட்டார். விசாரித்துப் பார்த்ததில் குணநிதி அதனைச் சூதாட்டத்தில் தோற்றுப்போய்க் கொடுத்தது என்று அவருக்குத் தெரிய வந்தது. தன்னுடைய மனைவியும், மகனும் தன்னை இத்தனை காலமாக ஏமாற்றி வந்ததை அறிந்தார்.

வீட்டிற்குச் சென்ற யாகதத்தர் மனைவியையும், மகனையும் துறந்தார். பண்டிதர் ஒருவரின் மகளை மணந்து, கண்காணாத இடத்திற்குச் சென்றுவிட்டார்.

குணநிதி செய்வதறியாது, அங்கும் இங்கும் சுற்றி அலைந்தான். தன் வாழ்க்கையை வீணாக்கிவிட்டதை அவன் உணர ஆரம்பித்தான். ஒரு நாள் ஓரிடத்தில் சிவபக்தர்கள் சிலர் கோயிலை நோக்கிச் சென்று கொண்டிருப்பதைப் பார்த்தான். அவனுக்கு மிகவும் பசியாக இருந்தது, அவர்களுடன் சென்றால் உணவு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவன் அவர்களைத் தொடர்ந்து கோயிலுக்குச் சென்றான். அன்று சிவராத்திரி என்பதை அவன் அறியவில்லை. இரவு முழுவதும் பக்தர்கள் இறைவனை வழிபட்டு, பஜனைப் பாடல்களைப் பாடினர். உணவு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் குணநிதியும் விழித்திருந்தான்.

பின்னிரவில், பக்தர்கள் கண்ணயர்ந்த சமயத்தில், ஏதாவது ப்ரஸாதம் கிடைக்கும் என்ற நப்பாசையில் அவன் கர்ப்பக்ருஹத்திற்குள் சென்றான். மிகவும் இருட்டாக இருந்ததால், தான் உடுத்தியிருந்த துணியிலிருந்து சிறிது கிழித்துத் திரிபோன்று செய்து அதனை ஏற்றினான். அந்தச் சிறிய வெளிச்சத்தைக் கொண்டு சிறிதளவு உணவை எடுத்துக்கொண்டு அங்கிருந்து ஓட ஆரம்பித்தான். ஓடும்பொழுது, ஒரு பக்தரின் மீது இடறிவிட்டான், அவர் எழுந்து சத்தம் போடத் துவங்கினார். வேறொரு பக்தர் குணநிதியை தலையில் அடிக்க அவன் அந்த இடத்திலேயே இறந்து

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

போனான்.

பல்வேறு பாவங்களைச் செய்த குணநிதியை யமலோகத்திற்கு எடுத்துச் செல்வதற்காக யமதூதர்கள் வந்தனர். அதே இடத்தில் சில சிவகணங்களும் தோன்றினர். யமதூதர்கள், சிவன் கோயிலில் திருடியது உட்பட குணநிதி செய்த எல்லாப் பாவங்களையும் பட்டியலிட்டுக் கூறினர். சிவ நிர்மால்யத்தைக் கோயிலிலிருந்து எடுத்துச் செல்வது மிகப் பெரிய பாவமாகும்.

அவன் செய்த பாவங்களெல்லாம் அவனையும் அறியாமல் அவன் செய்த சில நல்ல காரியங்களால் நீங்கிவிட்டன என்று சிவகணங்கள் கூறினர். "சிவராத்திரி இரவன்று விழித்திருந்து. சிவ பூஜையை தரிசித்திருக்கிறான், சிவனைப் பற்றிய பஜனைப்பாடல்களைக் கேட்டிருக்கிறான், சிவலிங்கத்திற்கு அருகில் விளக்கேற்றி இருளை நீக்கியிருக்கிறான். எனவே அடுத்தப் பிறவியில் அவன் கலிங்க தேசத்து ராஜகுமாரனாகப் பிறப்பான்."

அவன் அடுத்த பிறவியில் தமன் என்ற பெயருடன் பிறந்து, விரைவில் கலிங்க தேசத்தின் அரசனாகி, எல்லா மக்களையும் சிவன் கோயில்களில் விளக்கேற்றும்படித் தூண்டினான். அவன் இடைவிடாது இந்தப் புண்ணியக் காரியத்தைச் செய்துவந்ததால் சிவபெருமானின் திக்பாலகர்களில் ஒருவரான குபேரர் ஆகிவிட்டான்.

குபேரனுக்குத் தன்னுடைய உள்ளுணர்ச்சியால் தான் முற்பிறவியில் செய்த தவறுகள் தெரிந்தன. அவன் காசிக்கு வந்து, மலர்களால் ஒரு சிவலிங்கத்தைச் செய்து, விளக்கேற்றி வழிபடத் தொடங்கினான். வெகு காலம் இவ்வாறு உருக்கமாக ப்ரார்த்தனை செய்து வந்தான். அவனது தவத்தை மெச்சிய சிவபெருமான், பார்வதி தேவியுடன் அவனுக்குக் காட்சியளித்தார். குபேரன் ஒளி வெள்ளத்திற்கிடையில் இறை தரிசனத்தால் மனம் மகிழ்ந்தான். பார்வதி தேவியின் அழகைக் கண்டு வியந்து இடது கண்ணைச் சிமிட்டினான். அக்கணமே அக்கண்ணில் பார்வை பறிபோனது.

நிகழ்ந்தவற்றை அறிந்தவரான சிவபெருமான் குபேரனுக்கு எல்லாவித வளங்களும், மகிழ்ச்சியும் அளித்து, தாம் எப்பொழுதும் அவனுடன் இருப்பதாகக் கூறினார். அவன் சிவபெருமானையும், பார்வதி தேவியையும் வணங்கினான். பார்வதி தேவியும் அவனுக்கு அருள்புரிந்தாள். அவனால் ஏற்படுத்தப்பட்ட லிங்கம் குபேரேச்வரர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

என்று அழைக்கப்படும் என்றும், அதனை வழிபடுபவர்கள் வாழ்வில் எல்லாவித ஸித்திகளும், மோக்ஷமும் பெறுவர் என்றும் கூறி அருளினாள்.

சிவன் கோயில்களில் விளக்கேற்றுவதன் சிறப்பை இந்தப் பகுதி கூறுகிறது. சிவன் கோயில் மட்டுமல்ல, உலகெங்கிலும் எல்லாக் கோயில்களிலும் காலையிலும், மாலையிலும் விளக்கேற்றி வழிபட வேண்டும் என்பது கருத்து.

இருப்பிடம்

D 9/1 என்ற எண்ணில், அந்நபூரணி தேவிக்கு வடக்குப்புறத்தில், அந்நபூரணி கோயிலின் உட்புறத்தில் அமைந்துள்ளது. கோயிலில் நுழைந்தவுடன், இடதுபுறம் திரும்பிச் சென்றால், அன்னதானத்திற்குரிய அலுவலகம் இருக்கும். அதற்கடுத்து மறுபடி இடதுபுறம் திரும்பிச் சென்றால் குபேரேச்வரரை தரிசிக்கலாம்.

பார்க்க : விச்வேச்வரர் கோயிலுக்குச் செல்லும் வழி

கோயிலின் அர்ச்சகர்

கோயிலுக்கென்று தனியாக அர்ச்சகர் எவரும் இல்லை. கோயிலில் ஸ்ரீபவன் ஜா உள்ளார். விசேஷ பூஜைகள் செய்ய 0542-2392619 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

மார்க்கண்டேச்வரர்

காசியில் உள்ள பல்வேறு வழிபடு ஸ்தலங்கள் குறித்து மஹாவிஷ்ணு பிந்து மஹரிஷியிடம் கூறி வந்தார். (காசி காண்டம், அத்யாயம் 61)

அதன்படி அன்பர்கள் மார்க்கண்டேய தீர்த்தத்தில் நீராடி, பித்ரு கடன்களைச் செய்து முடித்து, அருகிலுள்ள மார்க்கண்டேச்வரரை வழிபட வேண்டும். இவ்வாறு செய்வதால், எப்பேர்ப்பட்ட பாவங்களும் விலகிவிடும்.

மார்க்கண்டேய தீர்த்தம் தற்போது இல்லை.

C/K 36/10 என்ற எண்ணில், ஞானவாபிக்குப் பின்புறம் உள்ள பஜாரில் உள்ளது. அன்பர்கள் சௌக் அருகிலுள்ள ஞானவாபி வரை ரிக்ஷாவில் சென்று, வலப்புறம் திரும்பி, படிகள் இறங்கிச் சென்று, மறுபடி வலப்புறம் திரும்ப வேண்டும். (இடதுபுறம் குறுக்காகச்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சென்றால் ஞான வாபி பகுதியை அடையலாம்). சில கஜங்கள் நடந்த பிறகு, மார்க்கண்டேச்வரரை தரிசிக்கலாம். ஜலன்ஸ் என்ற துணி வியாபாரிகளின் கடை ஒன்று அருகில் உள்ளது.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் 9.00 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. அன்பர்கள் நாள் முழுவதும் வெளியிலிருந்து தரிசனம் செய்யலாம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீஸஞ்ஜய் மிச்ரா கோயிலின் அர்ச்சகராவார். (0)9739712012.

நர்மதேச்வரர்

ஒரு முறை, நதிகளில் மிகவும் தெய்வீகமானது எது என்று ரிஷிகளுக்கிடையில் ஒரு சர்ச்சை எழுந்தது. கங்கை, யமுனை, ஸரஸ்வதி, நர்மதை ஆகிய நான்கும் முக்கியமான நதிகளாகும். கங்கையே மிகச் சிறந்த தெய்வீகம் பொருந்தியது என்பது அனைவரின் கருத்தாகும். கங்கை ரிக் வேதத்தையும், யமுனை யஜுர் வேதத்தையும், நர்மதை ஸாம வேதத்தையும் குறிக்கிறது.

முன்னொரு காலத்தில் நர்மதை ப்ரஹ்மதேவரைக் குறித்துக் கடுந்தவம் இயற்றினாள். ப்ரஹ்மதேவர் அவளுக்குக் காட்சி கொடுத்தார். கங்கைக்கு ஸமமாகத் தன்னைக் கருத வேண்டும் என்று வேண்டினாள் நர்மதை. இதைக் கேட்ட ப்ரஹ்மதேவர் அதிர்ந்தார், சிவபெருமானுக்கு இணையான கடவுள் இல்லை, மஹாவிஷ்ணுவுக்கு இணையான புருஷன் இல்லை, கங்கைக்கு நிகரான நதி இல்லை என்று கூறினார். நர்மதை இந்தப் பதிலில் த்ருப்தி அடையவில்லை.

பிப்பில தீர்த்தத்திற்கு அருகில், த்ரிலோசனேச்வரருக்கு அருகில், லிங்கம் ஒன்றை ஸ்தாபித்து வழிபடத் தொடங்கினாள். சிவபெருமான் அவளுடைய தவத்திற்கு இரங்கி, காட்சி கொடுத்தார். நர்மதை இறை தரிசனம் மட்டுமே வேண்டினாள், அவளுக்குத் தற்போது வேறு எந்த ஆசையும் இல்லை.

அவளது பக்தியால் உள்ளம் குளிர்ந்த சிவபெருமான், நர்மதையில் உள்ள கற்கள் அனைத்தும் சிவலிங்கங்களாகக்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கருதப்படும் என்று கூறியருளினார். கங்கையில் குளிப்பவருடைய பாவங்கள் அகலுகின்றன. யமுனையில் ஒரு வாரமும், ஸரஸ்வதியில் மூன்று நாட்களும் குளிப்பதால் பாவங்கள் அகன்று தூய்மை பெறலாம். ஆனால் நர்மதையைப் பார்த்த மாத்திரத்தில் பாவத்திலிருந்து விடுபடலாம்.

நர்மதையால் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கம் நர்மதேச்வரர் என்று அழைக்கப்படும் என்றும் சிவபெருமான் கூறினார். அன்பர்களுக்கு முக்தியளிக்கும் ஆற்றல் படைத்தது இந்த லிங்கம். இந்த லிங்கத்தைத் தரிசனம் செய்த மாத்திரத்தில் பக்தர்களின் பாவங்கள் எல்லாம் அகலும். இவ்வாறு கூறிய பிறகு, சிவபெருமான் இந்த லிங்கத்திற்குள் மறைந்துவிட்டார். (காசி காண்டம், அத்யாயம் 92).

ஸ்கந்தப் பெருமான், அகஸ்த்ய முனிவரிடம் பின்வருமாறு கூறினார் : இந்த மஹாத்மியத்தைப் படிக்கும்/கேட்கும் பெண் ஸகல பாவங்களிலிருந்தும் விடுபடுவாள்.

இருப்பிடம்

ஏ 2/79, த்ரிலோசன் பின்புறம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் ப்ரஹ்லாத் காட் சௌராஹா வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து த்ரிலோசன் வழியாகச் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் 9.30 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் 7.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. மாலையில் ஆரத்தி நடைபெறுகிறது.

பஞ்ச க்ரோஷ கோயில்

காசியில் பஞ்ச க்ரோஷ க்ஷேத்திரம் என்ற புனிதமான பகுதியைப் பற்றிக் காசி காண்டம் குறிப்பிடுகிறது. 26வது அத்யாயத்தில், இந்தப் பகுதிதான் விச்வேச்வரர் கோயில் கொண்டுள்ள அவிமுக்த க்ஷேத்திரம் என்று அழைக்கப்படுகிறது. பஞ்ச க்ரோஷ க்ஷேத்திரம் தனக்கு மிகவும் விருப்பமான இடம் என்று காசி கண்டம் கூறுகிறது. இந்த இடத்தின் பெருமை பற்றி பல்வேறு புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

காசி காண்டத்தின் 100வது அத்யாயம், சிவலிங்க யாத்திரை, ஏகாதச லிங்க யாத்திரை, அந்தர்க்ருஹி யாத்திரை, கௌரி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யாத்திரை, ஸுர்ய யாத்திரை, பைரவ யாத்திரை, விஷ்ணு யாத்திரை முதலிய பல்வேறு யாத்திரைகளைப் பற்றிக் கூறுகிறது.

காசியிலும், காசியைச் சுற்றிலும் அன்பர்கள் மேற்கொள்ள வேண்டிய முக்கியமான யாத்திரை பஞ்ச க்ரோஷ யாத்திரையாகும். இந்த யாத்திரை காசியைச் சுற்றி வலம் வருவதுபோல அமைந்திருக்கிறது. ஐந்து நாட்களில் 128 தெய்வத் திருவுருவங்களை அன்பர்கள் இதில் தரிசிக்கின்றனர். மிகவும் கடினமாக இருப்பதால், அன்பர்கள் ஒரே நாளிலும் காரில் சென்று இந்த யாத்திரையை நிறைவேற்றுகின்றனர்.

பஞ்ச க்ரோஷ யாத்திரையைப் பற்றி காசி கண்டத்தில் கூறப்படவில்லை, ப்ரஹ்ம விவர்த புராணம் (காசி ரஹஸ்யம்), கூர்ம புராணம் முதலிய நூல்களில் கூறப்பட்டுள்ளது. அன்பர்கள் பஞ்ச க்ரோஷ யாத்திரையை மிகப் புனிதமாகக் கருதுகின்றனர்.

பல்வேறு குழுவினர் இந்த யாத்திரையை மேற்கொள்கின்றனர். அனுபவம் மிக்கப் பெரியோர்கள், மற்றவர்களை வழிநடத்தி அழைத்துச் செல்கின்றனர்.

விரிவான இந்த பஞ்ச க்ரோஷ யாத்திரையை மேற்கொள்ள இயலாதவர்கள், ஒரே கோயிலில் சிறிய அளவில் உள்ள 128 தெய்வத் திருவுருவங்களும் உள்ள பஞ்ச க்ரோஷ கோயிலுக்குச் சென்று வழிபடலாம். கோயிலில் உள்ள ஸ்படிக லிங்கம், சிவன் பார்வதி இருவரையும் குறிக்கிறது. உள்ளூர் பண்டிதர்களின் கருத்துப்படி, இந்தக் கோயிலில் தரிசிப்பதால், பஞ்ச க்ரோஷ யாத்திரை செய்த பலன் கிடைக்கும்.

இருப்பிடம்

C/K 5/32, கோலா கல்லி, காஷ்மீரி மால் ஹவேலி பின்புறம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து நடந்து செல்லலாம். காஷ்மீரி மால் ஹவேலி மிக புகழ்பெற்ற இடமாகும்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் 11.00 மணி வரையிலும், மாலை 4.30 மணி முதல் 9.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

பல நூற்றாண்டுகளாக இந்தக் கோயில் இருப்பதாக,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அர்ச்சகர் தெரிவிக்கிறார்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீஉத்தம குமார் தீக்ஷித் கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9936521919 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

பார்வதீச்வரர்

காசியில் எப்பொழுதும் மகிழ்ச்சி ததும்புவதற்குரிய காரணத்தை சிவபெருமானிடம் கேட்டாள் பார்வதி தேவி. ஓரிடத்தில் சிவலிங்கம் இருந்தால், அங்கிருந்து பத்து மைல் தொலைவு வரை இன்பம் இருக்கும், காசியில் எங்கு நோக்கினும் சிவலிங்கங்கள் இருப்பதால் ஆனந்தத்திற்குக் குறைவே இல்லை என்று சிவபெருமான் பதிலளித்தார். இதனால்தான் காசி ஆனந்த வனம் என்று அழைக்கப்படுகிறது. காசியில் சிவலிங்கத்தை ஸ்தாபிப்பவர்கள் எல்லையில்லா ஆனந்தத்தை அடைகின்றனர்.

இதனைக் கேட்டவுடன், தானும் சிவலிங்கம் ஸ்தாபிப்பதற்கு சிவபெருமானிடம் அனுமதி வேண்டினாள் பார்வதி தேவி. பதிவ்ரதையான மனைவி, கணவனின் அனுமதியுடன் ஒரு காரியத்தில் இறங்கினால், அதில் நிச்சயம் வெற்றி பெறுவாள். சிவபெருமானிடம் அனுமதி பெற்று, மஹாதேவ லிங்கத்திற்கு அருகில் பார்வதீச்வரர் என்ற லிங்கத்தை ஸ்தாபித்து வழிபட்டாள்.

பார்வதீச்வரரை வழிபடுபவர்கள், ப்ரஹ்மஹத்தி தோஷத்திலிருந்தும் விடுபடுவார்கள் என்று காசி காண்டத்தின் 93வது அத்யாயம் கூறுகிறது. இந்த லிங்கத்தை வழிபடுபவர்கள், இறந்த பிறகு, காசியில் ஒரு லிங்கமாகவே மாறிவிடுவர்.

சித்திரை மாதத்தில், சுக்லபக்ஷ த்ருதீயை அன்று பார்வதீச்வரரை வழிபடுபவர்கள் வாழ்வில் எல்லையிலா வளமும், ஆனந்தமும் பெறுவர்.

இருப்பிடம்

ஏ-3/92, ஆதி மஹாதேவ், த்ரிலோசன் என்ற முகவரியில் அமைந்துள்ளது. மச்சோதரியை கடந்து பிர்லா ஹாஸ்பிடல் பகுதியிலிருந்து இங்கு செல்வது எளிது. அன்பர்கள் ஆட்டோ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அல்லது ரிக்ஷாவில் செல்லலாம். அல்லது த்ரிலோசன் காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச்சென்று அடையலாம். கோயில் ஏ-2/56 என்ற எண்ணில் இருக்கிறது, அருகில் ஒரு கை பம்பு உள்ளது.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் இரவு 9.00 வரை திறந்திருக்கிறது. காலை 5.00 மணிக்கு மங்கள ஆரத்தியும், மாலை 6.30 மணிக்கு ச்ருங்கார ஆரத்தியும் நடைபெறுகின்றன.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீகிரீஷ் சந்த்ர மெஹ்ரோத்ரா கோயிலின் அர்ச்சகராவார்.

பசுபதேச்வரர்

மணிகர்ணிகா தீர்த்தத்தைச் சுற்றியுள்ள தீர்த்தங்களையும், தெய்வங்களையும் பற்றி மஹாவிஷ்ணு கூறினார் (காசி காண்டம், அத்யாயம் 61). மணிகர்ணிகாவிற்கு வடக்குப்புறத்தில் பசுபதி தீர்த்தம் உள்ளது. அன்பர்கள் இந்தத் தீர்த்தத்தில் நீராடி, பித்ரு கடன்களைச் செய்து, பசுபதேச்வரரை வழிபட வேண்டும்.

பசுபதேச்வரர் மிகப் பெரிய ஸ்வயம்பு லிங்கமாக உள்ளார். இவரை வழிபடுபவர்கள் அனைத்துவித நலங்களும் பெற்று, தளைகளிலிருந்து விடுபடுவர்.

சித்திரை மாதத்தில் சுக்லபக்ஷ சதுர்தசி மிக முக்கியமான நாளாகக் கருதப்படுகிறது. இந்த நாளன்று வ்ரதமிருந்து பசுபதேச்வரரை வழிபடுதல் சிறப்பு.

சிவபெருமான், பல்வேறு காலங்களில் பல்வேறு லிங்கங்களில் சிறப்புடன் விளங்குவதாக காசி காண்டத்தின் 79வது அத்யாயம் கூறுகிறது. ஸந்த்யா காலங்களில் சிவபெருமான் பசுபதேச்வரர் லிங்கத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆகவே, ஸந்த்யா காலங்களில் பசுபதேச்வரரை வழிபடுதல் சிறப்பு.

இருப்பிடம்

C/K 13/66, பசுபதேச்வரர் கல்லி என்ற முகவரியில் அமைந்துள்ளது. இந்த இடத்திற்கு இந்த லிங்கத்தால் பெயர் ஏற்பட்டுள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அங்கிருந்து நடந்து சென்று இந்தக் கோயிலை அடையலாம். இது மிக ப்ரஸித்தி பெற்ற இடமாகும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. சித்திரை மாதம், சுக்ல பக்ஷ சதுர்தசியன்று விசேஷ அலங்காரம் நடைபெறுகிறது என்று காசி கண்டம் கூறுகிறது. ரங்க பரி ஏகாதசி (ஹோலிக்கு முன்பு வரும் ஏகாதசி) அன்றும் விசேஷ பூஜைகள் நடைபெறுகின்றன.

பிதாமஹேச்வரர்

காசியில் உள்ள முக்கியமான சிவலிங்கங்களைப் பற்றி கார்த்திகேயர் கூறினார். (காசி காண்டம், 68வது அத்யாயம்).

காசியில் பல்வேறு தீர்த்தங்களுடன் தானாகத் தோன்றிய லிங்கம் பிதாமஹேச்வரர் ஆவார். பிதாமஹேச்வரருக்குப் பூஜை செய்பவர், தனது 20 தலைமுறைகளுக்கு முக்திபேற்றை அளிக்கிறார். (காசி காண்டம்).

இருப்பிடம்

7/92, மொஹல்லா சீத்லா கல்லி என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

இந்த லிங்கம் மிகுந்த சக்தி வாய்ந்ததாகும். தரைமட்டத்திலிருந்து நாற்பதடி ஆழத்தில் இந்த லிங்கம் உள்ளது. அன்பர்கள் ஒரு ஓட்டை வழியாகத் தரிசிக்கலாம். மிகுந்த சக்தி வாய்ந்த லிங்கம் ஆதலால் துளை வழியாகவே தரிசிக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

வருடத்தின் குறிப்பிட்ட சில நாட்களில் மட்டுமே வழிபாடுகள் நடக்கின்றன. மற்ற நாட்கள் மக்கள் தரிசனம் செய்யலாம். ச்ரவண மாத திங்கட்கிழமைகள், சிவராத்ரி, ரங்க் பரி ஏகாதசி (ஹோலிக்கு முன்பு வருவது), மற்றும் சில ஏகாதசிகள் இங்கு வழிபட சிறப்பு வாய்ந்த தினங்களாகும்.

கோயிலின் அர்ச்சகர்

கோயிலுக்கென்று தனியாக அர்ச்சகர் எவரும் இல்லை. ஸ்ரீ சமீர் மிஷ்ரா என்பவரின் செல்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

7800970226 என்ற எண்ணில் அவரை தொடர்பு கொள்ளலாம்.

ப்ரயாகேச்வரர்

காசியில் கேசவ ஸ்வரூபமாக இருக்கும் பல்வேறு தீர்த்தங்களைப் பற்றி மஹாவிஷ்ணு காசி காண்டத்தின் 61வது அத்யாயத்தில் கூறப்பட்டுள்ளது.

ப்ரயாக தீர்த்தத்திற்கு (தசாச்வமேத்) மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ப்ரயாகேச்வரரைப் பற்றியும் முக்கியமாகக் கூறப்பட்டுள்ளது. மாக மாதத்தில், ப்ரயாகேச்வரரை வழிபடுபவர்கள் தனம், தான்யம், மக்கட்பேறு முதலிய அனைத்துப் பேறுகளும் பெற்று, மோக்ஷத்தையும் அடைவர்.

அலஹாபாத்தில் உள்ள முக்கியமான இடம் ப்ரயாகை ஆகும். ஆயிரக்கணக்கான மக்கள் மாக மாதத்தில் ப்ரயாகையில் ஸ்நானம் செய்கின்றனர். பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடக்கும் கும்பேளாவில் 70 முதல் 80 லக்ஷம் மக்கள் வரை கலந்து கொள்வர். தசாச்வமேத தீர்த்தத்தில் நீராடி, ப்ரயாகேச்வரரைத் தரிசிப்பதால், அலஹாபாத்தில் உள்ள ப்ரயாகையில் நீராடிய பலன் கிடைக்கும்.

இருப்பிடம்

D 17/100, தசாச்மேத் பண்டி தேவி கோயில் உட்புறம் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் தசாச்வமேத் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து காட் டிற்கு முன்பு வலதுபுறம் திரும்பிச் செல்ல வேண்டும். அருகிலுள்ள கடைக்காரர்களிடம் வழிகேட்டு, குறுக்கலாக உள்ள சந்துகள் வழியாகச் செல்ல வேண்டும்.

வழிபாட்டு முறைகள்

காலை 8.00 மணி முதல் 11.00 மணி வரை திறந்திருக்கிறது. அன்பர்கள் நாள் முழுவதும் கம்பிக்கதவுகள் வழியாக தரிசனம் செய்யலாம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீபாபு மஹராஜ் கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய 0542-2455042 என்ற எண்ணில் இரவு 9.00 மணிக்கு மேல் தொடர்பு கொள்ளலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ரத்னேச்வரர்

சிவபெருமானும், பார்வதி தேவியும் காசியில் ஆனந்தமாக இருந்தபடி பக்தர்களுக்கு அருள்பாலித்து வந்தனர்.

பார்வதி தேவியின் தந்தையான மலையரசன் ஹிமவான், பார்வதி தேவியிடமிருந்து செய்தி வந்து நீண்ட நாட்களாயிற்று என்று தன் மனைவியிடம் கூறினார். தன்னுடைய மகளை விட்டுப் பிரிந்திருப்பது அவருக்கு நெருப்பின் மீது அமர்ந்திருப்பதைப் போன்று இருந்தது. தன் மகளைப் பார்க்க அவர் காசிக்குச் செல்ல முடிவெடுத்தார்.

பொதுவாக, மகளைப் புகுந்த வீட்டில் காணச் செல்லும் தந்தை நிறைய பரிசுப்பொருட்கள் எடுத்துச் செல்வது வழக்கம். ஹிமவான் நிறைய ஆடைகளும், ரத்னங்களும் கொண்டு சென்றார். 8000 க்ராம் முத்துக்கள், 1000 க்ராம் வைரங்கள், பவளங்கள் மற்றும் பல நவரத்னங்களையும் எடுத்துச் சென்றதாகக் காசி காண்டம் கூறுகிறது.

ஹிமவான் காசிக்கு வந்து, அதன் அழகைக் கண்டு ப்ரமித்துப் போனார். தன்னுடைய மகளுக்கு நல்ல வாழ்வு கிடைத்திருக்கிறது, அவள் மிகுந்த பாக்யசாலி, அவள் இங்கு மகிழ்ச்சியாகத்தான் இருப்பாள் என்று நினைத்துக் கொண்டார். காசியில் ஒருவரிடம், தன்னுடைய மகள் உமாவின் வீட்டிற்குச் செல்ல வழி கேட்டார் ஹிமவான். அவர் உமாதேவியைப் போற்றி, இவ்வாறு வழிகேட்பவர் கூட விச்வேச்வரரின் பேரருளுக்குப் பாத்திரமாவார் என்று கூறினார்.

தேவசிற்பி விச்வகர்மாவால் ஏற்படுத்தப்பட்ட மிகப் பெரிய அரண்மனையில் சிவபெருமானும், பார்வதி தேவியும் வசிப்பதாகக் கூறினார். அங்கு தூண்களிலெல்லாம் முத்துக்கள் பதிக்கப்பட்டிருக்கும் என அந்த அரண்மனையின் அழகை விவரித்துக் கொண்டே போனார் அந்த காசிவாசி. ஹிமவான் இதைக் கேட்டு ஆச்சர்யமடைந்தார். சிவபெருமான் தன்னுடைய செல்வங்களையெல்லாம் பெரிய அளவில் வாரி வாரி கொடுப்பதையும் கேள்விப்பட்டார்.

விச்வநாதரின் தயாள குணம், அவரது அரண்மனையின் அழகு ஆகியவற்றைப்பற்றிக் கேள்விப்பட்ட ஹிமவான், தாம் வெறும் ரத்தினங்களைக் கொண்டு வந்ததற்காக வெட்கினார். விச்வநாதரிடம் இருக்கும் குணத்திற்கும், செல்வத்திற்கும் ஒருபோதும் அது ஈடாகாது என்று எண்ணினார். இப்படியே மாலைப்பொழுது வந்துவிட்டது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மறுநாள் பொழுது புலர்வதற்கு முன்னால், பஞ்சநத தீர்த்தத்தில் நீராடி, கால பைரவரை வழிபட்டு, தாம் கொண்டு வந்த ரத்னங்களையெல்லாம் ஓரிடத்தில் விட்டுவிட்டு, காசியை விட்டுக் கிளம்பி விட்டார். அவர் விட்டுச் சென்ற ரத்னக் குவியல் ஒரு லிங்கமாக மாறிவிட்டது.

விச்வநாதரும், பார்வதிதேவியும் வந்து அந்த லிங்கத்தைத் தரிசித்தனர். நடந்தவற்றை சிவபெருமான் தம் தெய்வீக சக்தியால் உணர்ந்தார். ஹிமவானைப் புகழ்ந்து, ரத்னேச்வரர் என்று அந்த லிங்கம் அழைக்கப்படும் என்று கூறினார்.

ரத்னேச்வரரை வழிபடும் அன்பர்கள் வாழ்வில் அனைத்து வளமும், நலமும் பெறுவர் என்று காசி காண்டத்தின் 67வது அத்யாயம் கூறுகிறது. ரத்னேச்வரரைப் பூஜிப்பவர்கள் ஒரு கோடி ருத்ர ஜபம் செய்த பலனைப் பெறுவர்.

இருப்பிடம்

கே-53/40 என்ற எண்ணில், வ்ருத்த காலேச்வரர்/ ம்ருத்யுஞ்ஜயேச்வரர் செல்லும் வழியில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை ரிக்ஷாவில் செல்லலாம். பிசேச்வர்கஞ்ஜ்/ஜி.பி.ஓ அருகில் உள்ளது.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் 11.00 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலை 10.30 மணிக்கும், இரவு 8.00 மணிக்கும் ஆரத்தி நடைபெறுகிறது. நேரங்கள் சிறிதளவு மாறுபடலாம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீ பச்சி லால் கோயிலின் பொறுப்பாளராக உள்ளார். அவரை (0)930504075 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

ஸதீச்வரர்

பலகாலம் முன்பு, ப்ரஹ்மதேவர் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்தார். சிவபெருமான் அவருக்குக் காட்சி கொடுத்து வரம் ஒன்றை அருளினார். சிவபெருமான் தன்னுடைய மகனாக வேண்டும் என்றும், பார்வதி தேவி தக்ஷனுடைய மகளாக வேண்டும் என்றும் வரம் வேண்டினார் ப்ரஹ்ம தேவர். சிவபெருமான் அவ்வாறே வரமருளினார்.

சிவபெருமான் ப்ரஹ்மதேவரின் தலையிலிருந்து ஒரு சிறுவனாக

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அவதரித்தார். அந்தச் சிறுவனுக்கு ருத்ரன் என்று ப்ரஹ்மதேவர் பெயரிட்டார். சிவபெருமான் சிறுகுழந்தையாகத் தன்னுடைய வீட்டில் உண்டு, விளையாடியதால் ஒரு மகனிடம் தந்தை பெறக் கூடிய இன்பத்தைப் பெற்றார் ப்ரஹ்மதேவர்.

பார்வதிதேவி தக்ஷனின் மகளாக ஸதிதேவியானாள். திருமண வயதை எட்டியவுடன் அவள் காசிக்கு வந்து சிவபெருமானை வழிபடத் தொடங்கினாள். ஒரு நாள் அவள் முன்பு லிங்கம் ஒன்று தோன்றியது, அதனுள்ளிருந்து சிவபெருமானின் குரல் கேட்டது.

சிவபெருமான், ஸதிதேவியின் விருப்பங்கள் யாவும் நிறைவேறும் என்றும், மேற்கொண்டு தவம் செய்யத் தேவையில்லை என்றும் கூறினார். அவள் முன் தோன்றிய லிங்கமே ஸதீச்வரர். ஸதீச்வரரை வழிபடுபவர்கள் தாங்கள் விரும்பிய நல்வாழ்க்கைத்துணையை அடையலாம். மேலும் அவர்களது விருப்பங்கள் எல்லாம் நிறைவேறும்.

தக்ஷன் ஸதிதேவியைத் தனக்குக் கன்யாதானம் செய்து கொடுப்பார் என்றும், அவளது எண்ணம் ஈடேறும் என்றும் சிவபெருமான் கூறினார். இவ்வாறு கூறிய பிறகு, சிவபெருமான் அந்த லிங்கத்திகுள் மறைந்துவிட்டார். (காசி காண்டம், அத்யாயம் 93).

இருப்பிடம்

கே-46/32, வ்ருத்த காலேச்வரர்/ம்ருத்யுஞ்ஜயேச்வரர் செல்லும் சாலையில் அமைந்துள்ளது. அன்பர்கள் பிசேச்வர்கஞ்ஜ்/ஜி.பி.ஓ வழியாக இந்த இடத்திற்கு ரிக்ஷாவில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் பகல் 2.00 மணி வரையிலும், மாலை 4.30 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது. கோயில் திறந்திருக்கும் நேரம் சிறிது மாறுபடலாம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீகிரிஜா சங்கர் பதக் கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய அவரை 0542-2440028 மற்றும் (0)9335386171 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சைலேச்வரர்

மலையரசரான ஹிமவான், தன் மகளைச் சந்திக்க மிக உயர்ந்த பரிசுப்பொருட்களுடன் காசிக்கு வந்தார். (பார்க்க : ரத்னேச்வரர்). சிவபெருமானின் தயாள குணம், செல்வம், அவரது அரண்மனையின் அழகு முதலியவற்றைக் கேள்விபட்ட ஹிமவான், தான் கொண்டு வந்த பரிசுப்பொருட்களை மிக அல்பமாகக் கருதி வெட்கமடைந்தார். தான் கொண்டு வந்த ரத்னங்கள், சிவபெருமானின் பெருமைக்கு ஈடாகாது என்பதை உணர்ந்தார். அதற்குள் மாலை நேரமாகிவிட்டது.

ஹிமவானும் சிவபெருமானுக்கென்று ஒரு கோயில் எழுப்ப வேண்டும் என்று நினைத்தார். அவர் மலையிலிருந்து சிற்பிகளை வரவழைத்து, அற்புதமான கோயில் ஒன்றை எழுப்ப முனைந்தார். இவ்வாறு கோயில் எழுப்புவதால், சிவனருள் பெற்று, அனைத்து லோகங்களிலும் தாம் மதிக்கப்படுவோம் என்றும் நினைத்தார்.

காசியில் ஒரு சிவன் கோயில் எழுப்புபவர், மூவுலகிலும் ஆலயம் எழுப்பிய பலனைப் பெறுகின்றனர் என்று காசி காண்டத்தின் 66வது அத்யாயம் கூறுகிறது. மேலும் அவர் மிகப் பெரிய யாகங்கள் செய்த பலனையும் பெறுவார். ஹிமவானின் கட்டளைப்படி, இரவு முழுவதும் ஆட்கள் வேலை செய்தனர். அதிகாலையில், வருண நதிக்கரையில் அழகிய ஆலயம் ஒன்றைக் கட்டி முடித்துவிட்டனர்.

அந்தக் கோயிலினுள் சைலேச்வரர் என்ற சிவலிங்கத்தை ஸ்தாபித்தார் ஹிமவான். பஞ்சநத தீர்த்தத்தில் நீராடி, கால பைரவரை வணங்கி, தான் கொண்டு வந்த ரத்னங்களை ஓரிடத்தில் குவித்துவிட்டு தன்னுடைய இருப்பிடமான மலைக்குச் சென்றுவிட்டார்.

இந்தக் கோயிலைக் கண்ட இரண்டு சிவகணங்கள் உடனே, சிவபெருமானிடம் விஷயத்தைக் கூறின. ஓரிரவில் எப்படி அந்த இடத்தில் ஒரு கோயில் எழும்பியிருக்க முடியும் என்று அதிசயித்தன. சிவபெருமான், பார்வதி தேவி இருவரும் சிவகணங்கள் புடைசூழ, அந்தக் கோயிலுக்கு விரைந்தனர். புதிதாக அமைக்கப்பட்டுள்ள கோயிலையும், ஒளி வீசிக் கொண்டிருந்த சிவலிங்கத்தையும் கண்டனர். சிவபெருமானும், பார்வதி தேவியும், இதனைக் கட்டியது ஹிமவான் என்பதை அறிந்து மகிழ்ந்தனர்.

பார்வதி தேவியும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தாள். இந்த லிங்கத்தில் வீற்றிருக்க வேண்டும் என்று சிவபெருமானிடம் வேண்டிக் கொண்டாள். சிவபெருமானும் ஏற்றுக் கொண்டார். வருணா நதியில் நீராடி, சைலேச்வரரை வழிபடுபவர்கள் மோக்ஷத்தை அடைவார்கள் என்று

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சிவபெருமான் கூறினார். சைலேச்வரரை வழிபடுபவர்கள் ஒருநாளும் துன்பமடைய மாட்டார்கள் என்று கூறினார். சைலேச்வரரை வழிபடுபவர்கள் அனைவரும் தன்னுடைய குழந்தைகள் ஆவர் என்று பார்வதி தேவி கூறினாள்.

இருப்பிடம்

ஏ-40/11, மர்ஹியா காட், சைலபுத்ரி என்ற முகவரியில் அமைந்துள்ளது. வாரணசி ரயில் நிலையத்திலிருந்து ஜி.டி. சாலையில் பயணித்தால், வாராணசி சிட்டி ரயில் நிலையத்திற்கு முன்பாக, இடதுபுறம் ஒரு சாலை செல்கிறது. அங்கு ஒரு லெவல் க்ராஸிங் உள்ளது. இந்தச் சாலையைக் கடந்து 2 கி.மீ. தூரம் சென்றால், இந்த இடத்தை அடையலாம். ரிக்ஷா/ஆட்டோ ரிக்ஷா ஓட்டுனர்களுக்குச் சைலபுத்ரி உள்ள இடம் நன்றாகத் தெரியும்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.00 மணி முதல் பகல் 12.00 மணி வரையிலும், மாலை 3.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது. கோயில் திறந்திருக்கும் நேரம் சிறிது மாறுபடலாம்.

கோயிலின் அர்ச்சகர்

ஆறு மாதங்களுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் பல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கோயிலில் வழிபாடுகளை நிகழ்த்தி வருகிறார்கள்.

ச்ருதீச்வரர்

காசி காண்டத்தின் 33வது அத்யாயம், காசி க்ஷேத்திரத்தில் உள்ள பல்வேறு சிவலிங்கங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. சிவலிங்கங்கள் அனைத்தும் மனித உருக்கொண்டால், ச்ருதீச்வரர் அதன் சிரோ பூஷணமாக விளங்கும் என்று கூறுகிறது.

ச்ருதீச்வரரை வழிபடுபவர்கள் மகிழ்ச்சி நிறைந்த வாழ்வும், முக்தியும் எய்துவர்.

இருப்பிடம்

கே-53/40, ரத்னேச்வரர் அருகில், வ்ருத்த காலேச்வரர்/ ம்ருத்யுஞ்ஜயேச்வரர் செல்லும் சாலையில் அமைந்துள்ளது. அன்பர்கள் பிசேச்வர்கஞ்ஜ்/ஜி.பி.ஓ வழியாக ரிக்ஷாவில் செல்லலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் பகல் 12.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலையிலும் மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது. கோயில் திறந்திருக்கும் நேரம் மாற்றத்திற்கு உட்பட்டது.

விசேஷ பூஜைகள் செய்ய, அர்ச்சகரை முன்பே தொடர்பு கொள்ளுதல் நலம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீதினேஷ் சந்த்ர கௌர் கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய 9369004142 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸித்தி அஷ்டகேச்வரர்

காசி காண்டத்தின் 67வது அத்யாயம் காசியில் உள்ள பல வழிபடு தலங்களைப் பற்றிக் கூறுகிறது.

மந்தாகினி தீர்த்தத்திற்கு வடக்கில் ஸித்தி அஷ்டகேச்வரர் வீற்றிருக்கிறது. ஸித்தி அஷ்டக குண்டமும் உள்ளது.

ஸித்தி அஷ்டகேச்வரரை வழிபடுபவர்கள் அஷ்டமாஸித்திகளும் பெறுவர். அவர்கள் வாழ்வு வளம் பெற்று விளங்கும்.

ஸித்தி அஷ்டக குண்டத்தில் தங்கள் மூதாதையர்களுக்கு நீத்தார் கடன்களைச் செய்பவர்கள் இறையருள் பெறுவர்.

இருப்பிடம்

கே 58/101, லோஹட்டியா என்ற இடத்தில் பாரா கணேஷ்ஜி வளாகத்தினுள் அமைந்துள்ளது. அன்பர்களுக்கு வலதுபுறத்திலும், கணேஷ்ஜிக்கு இடதுபுறத்திலும் லிங்கம் உள்ளது. இந்த லிங்கத்தைச் சுற்றி, சலவைக்கல்லால் தடுப்பு போடப்பட்டுள்ளது. சலவைக்கல் மீது கல்வெட்டு உள்ளது. அன்பர்கள் லொஹட்டியா வரை ரிக்ஷா அல்லது சைக்கிள் ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து கோயிலுக்கு நடந்து செல்லலாம். பாரா கணேஷ் புகழ்பெற்ற கோயிலாகும்.

வழிபாட்டு முறைகள்

பாரா கணேஷ் ஓர் தனியான கோயில் ஆகும், அன்பர்கள் பரவலாக இதில் வழிபடுகின்றனர். கோயில் காலை 4.45 மணி முதல்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இரவு 10.30 மணி வரை திறந்திருக்கிறது. காலை 4.45 மணிக்கு மங்கள ஆரத்தியும், காலை 10.30 மணிக்கு போக் ஆரத்தியும், இரவு 10.30 மணிக்கு சயன ஆரத்தியும் நடைபெறுகின்றன. முக்கியமாக, புதன்கிழமைகளில் இரவு 11.30 மணிக்கு விசேஷ ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீஸுபாஷ் சந்த்ர திவாரி கோயிலின் அர்ச்சகர்களுள் ஒருவர் ஆவார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9415446300 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

த்ரிலோசனேச்வரர்

த்ரிலோசனேச்வரரைப் பற்றி காசி காண்டத்தில் த்ரிவிஷ்டப் லிங்கம் என்று கூறப்பட்டுள்ளது. முன்னொரு காலத்தில் த்ரிலோசனேச்வரருக்குத் தென்புறத்தில், யமுனை, ஸரஸ்வதி, நர்மதை ஆகிய மூன்று நதிகளும் ஸங்கமமாயின. இந்த மூன்று நதிகளும் தங்களது நீரால் த்ரிலோசனேச்வரருக்கு அபிஷேகம் செய்தன. (காசி காண்டம், அத்யாயம் 75).

ஓங்காரேச்வரர் லிங்கம் காசியில் முக்கியத்துவம் வாய்ந்த லிங்கமாகக் கருதப்படுவதுபோலவே, த்ரிலோசனேச்வரரைத் தரிசிப்பதற்கும் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. த்ரிலோசன் ஒரு ஸ்வயம்பூ லிங்கமாகும். ஏழு பாதாள உலகங்களிலிருந்து, பூமியைத் துளைத்துக் கொண்டு வந்துள்ளது.

த்ரிலோசனேச்வரர் தரிசனம் செய்த மாத்திரத்திலேயே அல்லது அவரது பெயரைச் சொன்ன மாத்திரத்திலேயே அன்பர்கள் தங்களது பாவங்களிலிருந்து விடுபடுகின்றனர். தெரிந்தோ தெரியாமலோ, வேறு ஏதோ ஒரு இடத்தில் ஒருவர் செய்த பாவம் காசியில் நீங்குகிறது. ஆனால், காசியில் செய்யப்படும் அதே போன்ற பாவம் த்ரிலோசனேச்வரரைத் தரிசிப்பதால் அகலும். (காசி காண்டம்).

மேற்கூறிய (யமுனை, ஸரஸ்வதி, நர்மதை ஆகிய) மூன்று நதிகளும் பிப்பில தீர்த்தத்தில் ஸங்கமமாயின. பிப்பில தீர்த்தத்தில் நீராடி, த்ரிலோசனரைத் தரிசிப்பது மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

எல்லா அஷ்டமி/சதுர்தசி தினங்களில் த்ரிலோசனருக்குப் பூஜை செய்வது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. வைசாக

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மாதத்தில், சுக்ல பக்ஷ த்ருதீயை (அக்ஷய த்ருதீயை) அன்று, விரதமிருந்து, முன்னோர்களுக்குரிய சடங்குகளைச் செய்பவர்கள், பித்ருக்களின் ஆசியும், இறை அருளும் பெற்று நலமாக வாழ்வர்.

காசி காண்டத்தில் பிப்பில தீர்த்தத்தைத் தவிர, பாதோதக கூபம் (கிணறு) பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கிணறு கோயில் வளாகத்தில் இப்போதும் உள்ளது. பிப்பில தீர்த்தம் பிப்பில கூபமாகத் தற்போது த்ரிலோசன் கோயிலுக்கு அருகில் உள்ளது. கிணறு மூடப்பட்டிருக்கிறது, அருகில் ஒரு பம்பு இருக்கிறது. அதிலிருந்து நீர் எடுத்துக் கொள்ளலாம்.

இருப்பிடம்

ஏ-2/80, த்ரிலோசன் காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. பிர்லா ஹாஸ்பிடலுக்கு அடுத்து மச்சோதரிக்கு அருகில் உள்ளது. இந்த இடத்திற்கு ரிக்ஷா அல்லது ஆட்டோ ரிக்ஷாவில் செல்ல முடியும். அல்லது, த்ரிலோசன் காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம். காசி காண்டத்தில் உள்ள 33வது அத்யாயத்தில் கூறப்பட்டுள்ள வாராணசி தேவியும் இந்தக் கோயிலில் வீற்றிருக்கிறாள்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.30 மணி முதல் பகல் 12.30 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 11.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலை 5.30 மணிக்கு மங்கள ஆரத்தியும், இரவு 11.00 மணிக்கு சயன ஆரத்தியும் நடைபெறுகிறது.

அக்ஷய த்ருதீயை அன்று பாதோதக தீர்த்தத்தில் நீராடி, த்ரிலோசனருக்குப் பூஜை செய்வது மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. அந்த நாளில் கோயிலில் மிகுந்த கூட்டம் காணப்படுகிறது.

அக்ஷய த்ருதீயை அன்று மாலையில் நடைபெறும் ஜல ச்ருங்காரத்தை அன்பர்கள் தரிசிக்கின்றனர். விசேஷ பூஜைகள் செய்ய, அர்ச்சகரை முன்பே தொடர்புகொள்ளுதல் நலம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீ லல்லு பாண்டே கோயிலின் அர்ச்சகர். விசேஷ பூஜைகள் செய்ய 9307967228 என்ற எண்ணில் அவரை தொடர்பு கொள்ளலாம்.

த்ரிஸந்த்யேச்வரர்

மஹாவிஷ்ணு க்‌ஷ்ாசியில் உள்ள பல்வேறு தீர்த்தங்களைப் பற்றி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சுக்ரேஸ்வரர்



த்ரியம்பகேஸ்வரர்

த்ரிலோசனேஸ்வரர்

த்ரிபுராந்தகேஸ்வரர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வருண சங்கமேஸ்வரர்



வ்ருத்த காலேஸ்வரர்

விசாலாக்ஷீஸ்வரர்

வேதேஸ்வரர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



காசி விசாலாக்ஷி

சாமுண்டி தேவி
(மஹிஷாஸுரமர்தினி)



ஹயகண்டி தேவி



மஹாலக்ஷ்மி கௌரி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பிந்து மஹரிஷியிடம் கூறினார். (காசி காண்டம், அத்யாயம் 61).

அன்பர்கள் த்ரிஸந்தி தீர்த்தத்தில் நீராடி, ஸந்த்யா வந்தனம் செய்ய வேண்டும். பூணூல் அணிந்தவர்கள் எல்லோரும், காலை, மதியம், மாலை என மூன்று வேளைகளும் ஸந்த்யா வந்தனம் செய்ய வேண்டும். மத்யானம் செய்யப்படும் சடங்கிற்கு மாத்யான்னிகம் என்று பெயர்.

த்ரிஸந்தி தீர்த்தத்தில் நீராடி, ஸந்தியாவந்தனம் செய்தால், மூன்று வேதங்களும் கற்ற பலன் கிடைக்கும்.

வேதங்கள் நான்கு. ரிக், யஜுர், ஸாம, அதர்வண வேதத்தின் ஒரு பகுதியைக் கற்பதே பெரிய விஷயமாகும். அதிலும் மூன்று வேதங்களையும் கற்பது மிகப் பெரிய ஒன்றாகும்.

ஸந்த்யா வந்தனத்தின்போது செய்பவர் 15-20 ப்ராணாயாமங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. அது உடலுக்கு மிகவும் மிகுந்த நன்மை பயப்பதாகும். காயத்ரீ மந்த்ரத்தை ஜபித்து, ஸூர்ய பகவானுக்கு அர்க்யம் விடுதல் மிகவும் சிறந்தது. இவற்றை விடாமல் நாள்தோறும் செய்வதால், உடல் நலமும், மன நலமும் உண்டாகும்.

த்ரிஸந்தி தீர்த்தம் தற்போது வற்றிவிட்டது. அன்பர்கள் அருகில் உள்ள கங்கையில் நீராடலாம்.

இருப்பிடம்

C/K 34/10, லாஹெளரி டோலா, பூத் கணேஷ் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் தசாச்வமேத் விச்வநாத் கல்லி வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து செல்லலாம். லாஹெளரி டோலா பூத் கணேஷ் மிக ப்ரஸித்திபெற்ற இடமாகும். பூத கணேஷ் மிகப் பெரிய விக்ரஹமாகும். அதற்குப் பின்னால் த்ரிஸந்த்யேச்வரர் வீற்றிருக்கிறார்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை முதல் மாலை வரை திறந்திருக்கிறது. அன்பர்கள் தாங்களே வில்வ இலைகள் கொண்டும், கங்கை நீர் கொண்டும், அபிஷேகம், அர்ச்சனை முதலியவற்றைச் செய்யலாம்.

வருணேச்வரர்

கர்தமர் என்ற ரிஷிக்கு ஸுசிஷ்மன் என்ற மகன் இருந்தான். அவன் சிறந்த பக்திமானாகத் திகழ்ந்தான். அவன் மிகுந்த அறிவாளியாகவும், நற்பண்புகள் நிறைந்தவனாகவும் இருந்தான்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஒரு நாள் அவன் தனது நண்பர்களுடன் ஒரு ஏரியில் விளையாடிக் கொண்டிருந்தபோது, ஒரு நீர்வாழ் உயிரினம் அவனை இழுத்துக் கொண்டு போனது. அவனுடைய நண்பர்கள் பயந்துபோய் அவனது தந்தையிடம் ஓடிச் சென்று கூறினர். இதைக் கேட்ட முனிவர் ப்ரார்த்தனை செய்யத் தொடங்கினார்.

அவருடைய தெய்வீக ஆற்றலின் மூலம், அவரது மகன் ஒரு நீர்வாழ் உயிரினத்தால் இழுத்துச் செல்லப்படுவதையும், அவனைக் காப்பாற்ற ஒரு தேவதை தொடர்ந்து கொண்டிருப்பதையும் கண்டார். இதற்கிடையில், ஒருவர் கையில் திரிசூலத்துடன் அந்த நீர்வாழ் உயிரினத்தை அழித்து, அந்தப் பையனைக் காப்பாற்றி, சிவபெருமானின் திருவடியில் போட்டார். மகன் முனிவரிடம் திரும்பி வந்தான்.

கண்களைத் திறந்த முனிவரின் முன்னால் ஈரம் சொட்டச் சொட்ட மகன் நின்று கொண்டிருந்தான். தலைமுடியிலிருந்தும், கண்களிலிருந்தும் நீர் பெருக, மிகுந்த பலவீனத்துடன் நடுங்கிக் கொண்டிருந்தான். தந்தையின் முன் வணங்கினான். மகனுக்கு மறுபிறவி கிடைத்ததுபோல் இருந்தது.

உயிர் பிழைத்த ஸுசிஷ்மன் தன்னுடைய தந்தையிடம் அனுமதிபெற்றுக் காசியை அடைந்து, சிவலிங்கத்தை ஸ்தாபித்து வழிபட்டான். அவனுக்குக் காட்சி கொடுத்த சிவபெருமான் வரம் ஒன்றை வணங்கினான். நீர்வாழ் உயிரினங்கள் எல்லாவற்றிற்கும் தான் தலைவனாக இருக்க வேண்டும் என்ற வரத்தை வழங்கினார். சிவபெருமானும் அவ்வாறே வரம் அளித்தார். சிவபெருமான் மேலும், ஸுசிஷ்மன் முத்துக்கள் முதலியவற்றுக்கும், ஆறுகள், குளங்கள், கிணறுகள் முதலிய நீர்நிலைகளுக்கும், மேற்குத் திசைக்கும் தலைவனாக விளங்கி, அனைத்துத் தேவர்களாலும் நேசிக்கப்படுவான் என்று கூறினார்.

மேலும், அவனால் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கம் வருணேச்வரர் என்று அழைக்கப்படும் என்றும் கூறினார். வருணேச்வரரை வணங்குபவர்கள் மிகுந்த அறிவாளிகளாக விளங்குவர், அவர்கள் நீரைக் கண்டு பயப்படத் தேவையில்லை, நீரில்லாமல் துன்பப்பட வேண்டிய நிலையும் ஏற்படாது. அவர்கள் எப்பொழுதும் சுவையான உணவை உண்ணும் பாக்கியம் கிடைக்கும். (காசி காண்டம், அத்யாயம் 12).

இருப்பிடம்

C/K 8/8, கோமத், ஜ்யோதி ரூபேச்வரர் (அபய ஸந்யாஸ ஆச்ரமம்) என்ற இடத்தில் அமைந்துள்ளது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து செல்லலாம். அவர்கள் கோமத் பகுதியை அடைய அருகில் உள்ளவர்களிடம் வழிகேட்டுக் கொள்ளலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் தாங்களே வழிபடலாம்.

வாஸுகீச்வரர்

காசி காண்டத்தின் 66வது அத்யாயத்தின்படி, கார்த்திகேயர், ஜ்யேஷ்டேச்வர லிங்கத்திற்கு நாற்புறங்களிலும் உள்ள லிங்கங்களைப் பற்றிக் கூறினார். ஜ்யேஷ்டேச்வர லிங்கத்திற்குத் தெற்குப்புறத்தில் வாஸுகீச்வர லிங்கம் உள்ளது. லிங்கத்திற்கு அருகில் வாஸுகி குண்டம் உள்ளது.

வாஸுகி குண்டத்தில் நீராடி, வாஸுகீச்வரரை வழிபட்டு, தானங்கள் கொடுப்பதற்குக் காசி காண்டத்தில் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் அன்பர்கள் பாம்பைக் குறித்துப் பயம் நீங்கியவர்களாக இருப்பார்கள், ஸர்ப்ப தோஷம் நீங்கும்.

நாக பஞ்சமி அன்று இங்கு வழிபடுதல் மிகுந்த சிறப்பு. இந்தக் கோயிலில் வாஸுகி நாகராஜரின் விக்ரஹம் ஒன்றும் உள்ளது. தேவர்களும் அஸுரர்களும் ஸமுத்திரத்தைக் கடைந்தபோது, வாஸுகிதான் கயிறாகப் பயன்பட்டது.

வாஸுகி நாகராஜின் வியர்வையிலிருந்து தோன்றியதுதான் வாஸுகீ குண்டம். தற்போது வாஸுகி குண்டம் இல்லையெனினும், பூமிக்கடியில் உள்ளதாகப் பக்தர்கள் நம்புகிறார்கள்.

இருப்பிடம்

C/K 7/155, ஸிந்தியா காட், ப்ருஹஸ்பதீச்வரர் கோயில் அருகில், வாராணஸி என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து ப்ரஸித்திபெற்ற ஆத்ம வீரேச்வரர் கோயில் வழியாக நடந்து செல்லலாம். அல்லது அன்பர்கள் ஸிந்தியா காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திறந்திருக்கிறது. காலை 10.00 மணிக்கும், இரவு 9.00 மணிக்கும் ஆரத்தி நடைபெறுகிறது. வழக்கமான பூஜைகள் அர்ச்சகரால் செய்யப்படுகின்றன. ஏகாதசி, சிவராத்ரீ போன்ற முக்கிய தினங்களில் விசேஷ பூஜைகளும் நடைபெறுகின்றன.

இந்தக் கோயிலில் விசேஷ பூஜைகள் செய்வதால், கால ஸர்ப்ப தோஷம் அகலும்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீயதுநந்தன் மிச்ரா கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9839515195 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

விச்வகர்மேச்வரர்

முன்னொரு காலத்தில் விச்வகர்மா என்ற பெயருடைய ஒரு சிறுவன் குருகுலத்தில் பயின்று வந்தான். குருகுலத்தில் வேலைகள் செய்து, குருவுக்கும் குருபத்னிக்கும் ஸேவை செய்து வந்தான்.

ஒரு நாள் எப்பொழுதும் புதுமையாக இருக்கக்கூடிய இருப்பிடம் ஒன்றை உருவாக்குமாறு குரு விச்வகர்மாவிடம் கூறினார். குருவின் மனைவி, துணியில்லாத ஆடை ஒன்றை உருவாக்கும்படி கூறினாள். குருவின் மகன், தோலை உபயோகப்படுத்தாமல், தண்ணீரில் வேகமாக ஓடப் பயன்படும் செருப்புகள் செய்யுமாறு கூறினான். குருவின் மகள், தங்கத்தால் ஆன காதணிகள் கேட்டாள். மேலும் யானை தந்தத்தாலான விளையாட்டுப் பொருட்களும் செய்ய வேண்டும் என்று அவனிடம் கூறப்பட்டது. அவனிடம் நாளுக்கு நாள் புதிய புதிய பொருட்களைக் கேட்ட வண்ணம் இருந்தனர்.

குரு சொன்னதைச் செய்யாமல் இருப்பது பெரிய பாவமாகும். விச்வகர்மன் செய்வதறியாது, ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் குருவின் வீட்டை விட்டுக் கிளம்பி காட்டிற்குச் சென்றான். அங்கு ஒரு முனிவர் இருந்தார், அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். தனக்கு நேர்ந்த துன்பங்களையெல்லாம் அவரிடம் கூறினான். அவர் காசிக்குச் சென்று, விச்வேச்வரரை வணங்குமாறு அறிவுரை கூறினார். விச்வகர்மனுக்குக் காசிக்குச் செல்ல வழி தெரியவில்லை. முனிவர் தாமே அழைத்துச் செல்வதாகக் கூறினார்.

இருவரும் காசியை அடைந்ததும், முனிவர் சென்றுவிட்டார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முனிவராக வந்தவர் சிவபெருமானே என்பதை விச்வகர்மன் உணர்ந்தார். விச்வகர்மன் சிவலிங்கம் ஒன்றை ஸ்தாபித்துப் பல வருடங்கள் தொடர்ந்து தவம் செய்து வந்தார். சிவபெருமான் அவருக்குக் காட்சி கொடுத்து, வரம் ஒன்றை அளித்தார். விச்வகர்மன் தன் குருநாதரின் இல்லத்தில் தான் செய்து முடிக்க வேண்டிய கடமைகளைப் பற்றிக் கூறினார்.

சிவபெருமான் விச்வகர்மனின் குருபக்தியை மெச்சினார். மனித குலத்திற்குத் தேவையான அனைத்துவித இயந்திரத் தொழில்நுட்பங்களையும், ஆயுதங்களையும் உருவாக்கும் தெய்வீக ஆற்றல்களை அவனுக்கு வழங்கினார். இந்தத் தெய்வீக ஆற்றலின் மூலம் விச்வகர்மன் புதிதாகக் கோயில்களும் கட்ட முடியும், ஏற்கெனவே இருப்பனவற்றைச் சீர்படுத்தி, அழகுபடுத்தவும் முடியும்.

சிவபெருமானின் தயாள குணத்தைக் கண்டு மிகவும் மகிழ்ந்தான் விச்வகர்மன். விச்வகர்மனால் ஏற்படுத்தப்பட்ட விச்வகர்மேச்வரரை வழிபடுவதால், மோக்ஷத்தை அடையலாம் என்றும் கூறினார். தாம் எப்பொழுதும் இந்த லிங்கத்தில் வீற்றிருந்து அன்பர்களுக்கு அருள்புரிவதாக சிவபெருமான் கூறினார். (காசி காண்டம், அத்யாயம் 86). மாணவர்களுக்கு இருக்க வேண்டிய குருபக்தியைப் பற்றியும் இந்த அத்யாயம் கூறுகிறது.

விச்வகர்மா பிற்காலத்தில் தேவலோக சிற்பியானார். இப்பொழுதும், வட இந்தியாவிலும், வங்காளத்திலும் விச்வகர்ம ஜயந்தி கொண்டாடப்படுகிறது, அன்று தொழிற்சாலைகளில் இயந்திரங்களுக்கு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. பல்வேறு இடங்களிலும்/ தொழிற்கூடங்களிலும் விச்வகர்மாவின் விக்ரஹம் வைத்து பூஜிக்கப்பட்டு, பின் கங்கையில் விஸர்ஜனம் செய்யப்படுகிறது.

இருப்பிடம்

C/K 7/158, ஆத்ம வீரேச்வரர் கோயில் உட்புறம் என்ற முகவரியில் அமைந்துள்ளது. இந்த இருப்பிடம், கேதார்நாத் வ்யாஸ் அவர்களின் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது, நூலாசிரியர்களும் இதனை உறுதி செய்கின்றனர். ஆனால் பண்டித குபேர் நாத் சுகுல், வாராணசி வைபவம் என்ற தம் புத்தகத்தில் இதற்கு எதிரில் உள்ள ப்ருஹஸ்பதீச்வரர் கோயில் வளாகத்தைக் குறிப்பிடுகிறார். உள்ளூர்வாசிகளிடம் விசாரித்ததில், அவர்கள் முதலில் குறிப்பிட்ட இடத்தையே கூறுகின்றனர். அன்பர்கள் இந்த இடத்திற்குச் செல்ல ஸிந்தியா காட் வரை படகில் செல்லலாம். அல்லது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சைக்கிள் ரிக்ஷாவில் சௌக் வரை சென்று, அங்கிருந்து சந்துகளில் நடந்து செல்ல வேண்டும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் 11.30 மணி வரையிலும், பிற்பகல் 12.30 மணி முதல் இரவு 9.30 மணி வரையிலும் திறந்திருக்கிறது. இரவு 7.00 மணி முதல் 8.30 மணி வரை விசேஷ ஆரத்தி நடைபெறுகிறது. விசேஷ பூஜைகள் செய்ய அர்ச்சகரை முன்பே தொடர்பு கொள்ளுதல் நலம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீ முன் முன் குரு கோயிலின் அர்ச்சகர் ஆவார். விசேஷ பூஜைகள் செய்ய 9792820159 என்ற எண்ணில் அவரை தொடர்பு கொள்ளலாம்.

வ்யாக்ரேச்வரர்

ஒருமுறை கற்றறிந்த பண்டிதர்கள் பலர் தேவர்களை நோக்கித் தவம் செய்து வந்தனர். அப்பொழுது, ப்ரஹ்லாதனின் தாய்மாமனான துந்துபி நிஹ்ரத் தேவர்களை வெல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்டவனாக, பல தீய சக்திகளை உருவாக்கினான். முதலில் வழிபாடுகள் செய்யும் ப்ராஹ்மணர்களை அழித்துவிட்டால், வழிபாடின்றி தேவர்கள் சக்தியிழந்து விடுவர் என்று நினைத்து, ஒவ்வொரு ப்ராஹ்மணராகக் கொல்ல ஆரம்பித்தான்.

ஒரு சிவராத்ரியன்று, ஜ்யேஷ்டேச்வர லிங்கத்திற்கு அருகில் உள்ள லிங்கத்திற்கு ஒரு ப்ராஹ்மணர் பூஜை செய்து கொண்டிருந்தார். அருகில் நடப்பது எதையும் அறியாதவராக அவர் பூஜையில் ஆழ்ந்திருந்தார். துந்துபி அந்த இடத்திற்கு வந்து ஒரு புலியின் உருவம் தாங்கி, அவரைத் தாக்க ஆரம்பிக்கும்பொழுது, சிவபெருமான் லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு அவனைக் கொன்றார். இறக்கும் முன்னர் அந்தப் புலி உறுமியது உலகம் முழுவதும் எதிரொலித்தது. (காசி காண்டம், அத்யாயம் 65).

அருகிலுள்ள பக்தர்கள் அனைவரும் ஓடி வந்து, புலி இறந்ததை அறிந்து நிம்மதி அடைந்தனர். இந்த லிங்கத்தில் எப்பொழுதும் வீற்றிருக்க வேண்டும் என்று இறைவனிடம் இறைஞ்சினர். இறைவன் அந்த வரத்தை அளித்து, வ்யாக்ரேச்வரரை வழிபடும் அன்பர்களின் வாழ்வில் தோன்றும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அனைத்து இடர்களும் அழியும். அவர்களது முயற்சிகள் அனைத்தும் வெற்றிபெறும். வ்யாக்ரேச்வரரை வழிபட்ட பிறகு, போருக்குச் செல்லும் வீரன் வெற்றி பெறுவான் என்று கூறினார். இவ்வாறு கூறிய பிறகு, அந்த லிங்கத்திற்குள் மறைந்தார்.

இருப்பிடம்

கே-63/16 என்ற எண்ணில் பூத் பைரவ மொஹல்லா என்ற முகவரியில் அமைந்துள்ளது. (ஆதாரம் : பண்டித கேதார்நாத் வ்யாஸ் அவர்களின் புத்தகம்). அன்பர்கள் காசி தேவி கோயில்/புலா நலா/ லோஹட்டியா வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து ஜ்யேஷ்ட கௌரி/ பூத பைரவர் வரை நடந்து செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

அன்பர்கள் கம்பிக்கதவுகள் வழியாக நாள்தோறும் வழிபடலாம்.

யூ ட்யூப் (YOU TUBE) காணொளிகள்



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



ஸ்ரீ காசிவிசாலாக்ஷி

யூ ட்யூப் (YOU TUBE) காணொளிகள்



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காசியில் உள்ள தேவி கோயில்கள்

நவதுர்கா கோயில்கள்

சைலபுத்ரி

சைலேச்வரருக்கு அருகில் வீற்றிருக்கும் சைலேச்வரி அல்லது சைலபுத்ரி தேவியை அன்பர்கள் வழிபட வேண்டும் என்று காசி காண்டத்தின் 70வது அத்யாயம் குறிப்பிடுகிறது.

சைலபுத்ரியானவள், வலது கையில் உள்ள சிறுவிரலால், அன்பர்களின் வாழ்வில் தீய சேர்க்கையால் ஏற்படும் துயரங்கள் அனைத்தையும் போக்கக் கூடிய ஆற்றல் படைத்தவள்.

(ஒருவரது உள்நோக்கம் என்ற என்னவென்று தெரிந்துகொள்ளாமல், அவருடன் பழகும்போது அவர் தீயவராக இருந்துவிட்டால் பிரச்சனைகள் ஏற்படுகின்றது).

இருப்பிடம்

A-40/11, மர்ஹியா காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. வாராணசி ரயில் நிலையத்திலிருந்து ஜி.டி சாலை வழியாக பயணிக்கும்பொழுது, வாராணசி சிட்டி ரயில் நிலையத்திற்கு முன்னால் இடதுபுறம் ஒரு சிறிய சாலை பிரிகிறது. அங்கு ஒரு லெவல் க்ராஸிங் உள்ளது. அந்த சாலையைக் கடந்தபின், ஒரு 2 கிலோமீட்டர் பயணிக்க வேண்டும், அன்பர்கள் இந்த இடம் வரை ரிக்ஷா அல்லது ஆட்டோ ரிக்ஷாவில் செல்லலாம். ஆட்டோ ஓட்டுனர்களுக்கு சைலபுத்ரி தேவி கோயில் உள்ள இடம் தெரிந்திருக்கும்.

நவராத்திரியின் முதல் நாளில், சைலபுத்ரி தேவி விசேஷமாக வழிபடப்படுகிறாள்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையிலும், மாலை 3.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலையிலும் மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது. நேரம் சிறிது மாறுபடலாம்.

கோயிலின் அர்ச்சகர்

இக்கோயிலில் ஓர் குடும்பத்தினர் பூஜை செய்து வருகின்றனர். ஆறு மாதங்களுக்கு ஒருவர் என்று முறை இருக்கிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ப்ரஹ்மசாரிணி தேவி

ஸ்ரீப்ரஹ்மேச்வரருக்கு அருகில் ப்ரஹ்மதேவி அல்லது ப்ரஹ்மசாரிணி தேவியைக் காண முடியும் என்று காசி கண்டத்தின் 70 வது அத்யாயம் கூறுகிறது.

கமண்டலத்திலுள்ள உள்ள நீரைத் தெளித்து, எதிரிகளை முறியடிப்பவள் ப்ரஹ்மசாரிணி தேவி என்று கூறப்பட்டுள்ளது. இந்தத் தேவியை நாள்தோறும் வழிபடுபவர்கள் ப்ரஹ்ம வித்யையில் நிபுணர்கள் ஆவார்கள்.

இருப்பிடம்

K 22/72 துர்கா காட் என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் பைரோநாத் வரை ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து ப்ரஹ்மேச்வரர் கோயில் வரை நடந்து செல்லலாம். அல்லது ப்ரஹ்ம காட்/துர்கா காட் வரை படகில் சென்று, படிகள் ஏறிச் சென்றும் வழிபடலாம். செப்டம்பர்/அக்டோபர் மாதங்களில் வரும் சரத்நவராத்ரியின் இரண்டாவது நாளில் அன்பர்கள் ப்ரஹ்மசாரிணி தேவியை விசேஷமாக வழிபடுகிறார்கள்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 11.00 மணி வரையிலும் திறந்திருக்கும். காலை 6.00 மணி, மாலை 4.00 மணி, இரவு 11.00 மணிக்கு ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீராஜேஷ் சகர்கர் கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய அவரை 0542-2437004 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

சித்ர கண்டா தேவி

சித்ர கூபத்தில் நீராடி, சித்ர குப்தேச்வரரை வணங்கி, சித்ர கண்டா தேவியை வழிபடும்படி காசி கண்டம் அறிவுறுத்துகிறது.

மிகுந்த பக்தியுடன் பூஜை செய்யும் அன்பரது பெயர் சித்ர குப்தரின் ஏடுகளில் இடம் பெறாது! (அன்பர்கள் செய்யும் பல்வேறு பாபங்களை சித்ரகுப்தர் ஏட்டில் எழுதிக் கொள்கிறார், பின் அவர்கள் நரகத்திற்குச் செல்ல வேண்டியிருக்கும் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்). காசி கண்டம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இதைப் பற்றிக் கூறியிருக்கிறது.

சித்ரகுப்தரின் ஏடுகளில் பெயர் இருக்காது என்றால், தெரிந்தும் தெரியாமலும் ஒருவர் செய்த பாபங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுவிடும் என்று பொருள்.

இருப்பிடம்

C/K 23/34 சித்ர கண்டா கல்லி என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று பின் நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம். சௌக் பகுதியில் உள்ள யூகோ பேங்க் கிற்கு எதிர்புறமுள்ள சந்தில் அமைந்துள்ளது. செப்டம்பர்/அக்டோபர் மாதத்தில் வரும் நவராத்ரியின் மூன்றாவது நாளில் அன்பர்கள் இந்த தேவியை விசேஷமாக வழிபடுகிறார்கள்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் 10.00 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. அன்பர்கள் க்ரில் கதவு வழியாக நாள் முழுவதும் தரிசனம் செய்யலாம். கோயில் திறந்திருக்கும் நேரம் மாறுதலுக்கு உட்பட்டது என்று கோயிலுக்கு அருகில் உள்ளவர்கள் என்று கூறுகிறார்கள்.

துர்கா தேவி (கூஷ்மாண்ட துர்கா)

அகத்திய முனிவர், கார்த்திகேயரிடமிருந்து, அம்பிகைக்குத் துர்கா என்ற நாமம் எப்படி ஏற்பட்டது என்று தெரிந்துகொள்ள விரும்பினார். (காசி காண்டம் அத்யாயம் 71)

கார்த்திகேயர் சொல்லத் துவங்கினார். துர்காஸுரன் என்ற அஸுரன் பல ஆண்டுகள் கடும் தவம் இயற்றி, தன்னை எவரும் வெல்ல முடியாதபடி வரங்களைப் பெற்றான். இந்த பலத்தாலும் ஆணவத்தாலும், அவன் பக்தர்களைத் துன்புறுத்தத் தொடங்கினான். பூலோகம், ஸ்வர்க லோகம் போன்ற பல உலகங்களை அவன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தான்.

பல குருகுலங்களையும், யாகசாலைகளையும் அழித்தான். பல்வேறு ஆன்மிகப் பெரியோர்களையும், ரிஷி பத்தினிகளையும் சிறையில் அடைத்தான். நதிகள் தவறான திசையில் பாயத் தொடங்கின. பயிர்கள் பருவம் தப்பி விளைந்தன.

எல்லா தேவர்களும் சிவபெருமானிடம் தஞ்சம் புகுந்தனர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

துர்காஸுரனின் ஆற்றலையும், அவனை மனிதர்கள் கொல்ல முடியாது என்பதையும் அறிந்திருந்த சிவபெருமான் அம்பிகையிடம் ஏதேனும் செய்யும்படி அறிவுறுத்தினார்.

தேவி காலராத்ரியையும், வேறு சில பெண்களையும் துர்காஸுரனிடம் அனுப்பி, அவனை எச்சரித்தாள். காலராத்ரி சென்று, துர்காஸுரனைக் கண்டித்தாள். நல்லோர்களைத் துன்புறுத்துவதை நிறுத்திவிடும்படியும், அபகரித்த நிலங்களை மீண்டும் தந்துவிடும்படியும் அறிவுரை கூறினாள். இல்லையென்றால், தேவி அவனை அழித்துவிடுவாள் என்றும் எடுத்துக் கூறினாள். மிகுந்த ஆணவத்துடன் கூடிய துர்காஸுரன், தன்னுடைய பணியாள்களிடமும் காலராத்ரியை சிறைபிடிக்குமாறு ஆணையிட்டான்.

வீரர்கள் நெருங்கியவுடன், காலராத்ரி பெருமூச்சுடன் உறுமினாள். அதிலிருந்து நெருப்பு பந்துகள் வெளியாகி, ஆயிரக்கணக்கான வீரர்களை அழிந்து போயினர். இதனால் கோபமடைந்த துர்காஸுரன், மேலும் பல வீரர்களை அனுப்பினான். காலராத்ரி உடனே பறந்து சென்று, விந்திய மலைகளுக்கு அருகிலிருந்த தேவியின் இருப்பிடத்தை அறிந்து நடந்தவற்றைக் கூறினாள்.

கால ராத்ரியைத் துரத்திக்கொண்டு, தேவியின் இருப்பிடத்திற்குத் துர்காஸுரன் வந்து சேர்ந்தான். மிகப் பெரிய போர் மூண்டது. தேவி தன்னுடைய சக்திகள் அனைத்தையும் வெளிப்படுத்தினாள். அனைத்து சக்திகளும் பெண் வீராங்கனைகளின் உருவம் தாங்கி போர் புரிந்தன.

இந்த யுத்தம் காசி காண்டத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது. அளவற்ற ஆற்றல் படைத்த தேவி துர்காஸுரனையும், அவனது படைகளையும் அழித்தாள். உலகம் முழுவதும் அமைதியும் ஆனந்தமும் நிரம்பியது.

தேவர்களும், பண்டிதர்களும் தேவியை வஜ்ர பஞ்சகம் பாடித் துதித்தனர். உள்ளம் குளிர்ந்த தேவி துர்கா தேவி என்ற திருநாமம் கொண்டாள். வஜ்ர பஞ்சகத்தைப் பாடுபவர்களது வாழ்வில் தடைகள் எல்லாம் நீங்கும் என்று அருள்மொழிந்தாள்.

அஷ்டமி மற்றும் சதுர்தசியில் குறிப்பாக அதனுடன் செவ்வாய்கிழமை சேரும் அன்று அன்பர்கள் காசியில் உள்ள துர்கா தேவியை வழிபடுவது மிகச் சிறந்த பலன்களைக் கொடுக்கும். துர்கா தேவி தன்னை வழிபடும் அன்பர்களின் எண்ணத்திலும் செயல்களிலும் தூய்மையை அருள்வாள்.

அன்பர்கள் பலவிதமான பூஜைகள் செய்து, துர்காதேவியின்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திருவருளுக்குப் பாத்திரமாகலாம். சரத் நவராத்ரியிலும், வசந்த நவராத்ரியிலும் துர்கா தேவி யாத்திரையை மேற்கொள்ள வேண்டும்.

நவராத்ரி சமயங்களில் துர்கா குண்டத்தில் நீராடி, துர்கா தேவியை வழிபட வேண்டும். இதனால் வாழ்நாள் முழுவதும் செய்த பாபங்கள் எல்லாம் அகல்கின்றன.

இருப்பிடம்

பிரஸித்தி பெற்ற துர்கா குண்ட் பகுதியில் துர்கா தேவி கோயில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை கார், ஆட்டோ அல்லது ரிக்ஷாவில் செல்லலாம்.

செப்டம்பர்/அக்டோபர் மாதத்தில் வரும் நவராத்ரியின் நான்காவது நாளில் அன்பர்கள் இந்தத் தேவியை கூஷ்மாண்ட தேவியாக விசேஷமாக வழிபடுகிறார்கள். நவராத்ரியின் முதல் நாளிலிருந்து தேவி வழிபாடு துவங்கிவிடுகிறது. துர்கா தேவியின் வழிபாடு நான்காவது நாளில் நடைபெறுகிறது.

நவராத்ரி சமயங்களில் கோயிலில் மிகுந்த கூட்டம் காணப்படுகிறது.

வழிபாட்டு முறைகள்

காலை 4.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரையிலும், மாலை 3.00 மணி முதல் இரவு 11.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. லக்ஷ்மி, ஸரஸ்வதி, காளி விக்ரஹங்களுடன் கூடிய இக்கோயில் நன்கு பராமரிக்கப்படுகிறது. அடிக்கடி சண்டீ ஹோமம் நடைபெறுகிறது.

காசி காண்டம் அன்பர்கள் இக்கோயிலில் பலி கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது. சில காலம் முன்பு வரை பலி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதற்கென்று ஓர் இடமும் இருக்கிறது. ஆனால் தற்போது பலி கொடுப்பதை அரசு தடை செய்துள்ளது.

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீவிஜய் துபே கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜை, சண்டீ ஹோமம் முதலியவற்றைச் செய்ய, (0)9453365725 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்கந்த மாதா

துர்காஸுரன் தன்னிடம் இருந்த சக்திகளைக் கொண்டு, நல்லோரைத் துன்புறுத்தியபோது, அவனைக் கொல்வதற்காக, இறைவன் இறைவியை அனுப்பினார். (பார்க்க: துர்கா தேவி)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அஸுரனைக் கொன்ற பிறகு, தேவி துர்கை வடிவெடுத்து, பல்வேறு இடங்களில் பல சக்திகளாக உருவெடுத்து, காசியைப் பாதுகாத்து வருகிறாள். அவர்களுள் ஒருத்தி அச்வாரூடா. வாகீச்வரீ அமைந்துள்ள வளாகத்தில் இவள் வீற்றிருக்கிறாள். ஸ்கந்த மாதாவின் கோயிலினுள்தான், வாகீச்வரி, அச்வாரூடா ஆகிய இருவரது ஸந்நிதிகளும் இருக்கின்றன. வருடத்திற்கு இரண்டு நாட்கள்தான் வாகீச்வரீ தேவியை வழிபட முடியும்.

ஸ்கந்த மாதா மிகுந்த சக்தி வாய்ந்த தேவியாவாள்.

இருப்பிடம்

J 6/33, ஜைத்புரா என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடத்திற்கு ரிக்ஷாவில் செல்ல முடியும். செப்டம்பர்/அக்டோபர் மாதங்களில் வரும் நவராத்திரியின் ஐந்தாவது நாளில் ஸ்கந்த மாதாவைப் பக்தர்கள் விசேஷமாக வழிபடுகிறார்கள்.

அருகிலுள்ள பிற கோயில்கள்

ஜ்வரஹரேச்வரர், கார்கோடக நாகேச்வரர், கார்கோடகேச்வரர், விகட த்வஜ விநாயகர், விக்னராஜ் விநாயகர் முதலியன.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் 7.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. நேரங்கள் மாறுபடலாம். காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீமாதவி தேவி கோயிலின் அர்ச்சகராவார்.

காத்யாயனி

காசி காண்டம் அத்யாயம் 82ல் கூறப்பட்டுள்ளபடி, அமிர்தஜித் என்ற அரசன் ஒருவன் தன்னுடைய நாட்டில் சிறந்த முறையில் ஆட்சிபுரிந்து வந்தான். மஹாவிஷ்ணுவின் தீவிர பக்தனான அவன், தன்னுடைய அரசாட்சியின் கீழ் உள்ள அனைவரும் ஸ்ரீவைஷ்ணவர்களாக வேண்டும் என்று ஆணையிட்டான். ஒரு நாள் நாரத மஹரிஷி அவனுடைய அரண்மனைக்கு வருகைபுரிந்தார். அவரைத் தகுந்த மரியாதையுடன் மன்னன் வரவேற்றான்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நாரத மஹரிஷியின் அறிவுரைப்படி, மன்னன், மலையகந்தினி என்ற அழகிய பெண் ஒருத்தியைத் தீயவன் ஒருவனிடமிருந்து காப்பாற்றினான். அவளை மணந்த அரசன், அவளுடன் காசிக்கு வந்தான். எழில் வாய்ந்த காசி நகரைக் கண்டு மகிழ்ந்தான். மலையகந்தினிக்கு ஓர் அழகிய ஆண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தை பிறந்த உடனேயே பதினாறு வயதாகும் அரிய வரம் பெற்றிருந்தது. மோசமான நேரத்தில் பிறந்ததால் அந்த குழந்தையை இழந்துவிடுவதே நல்லது. இல்லையென்றால் மன்னனுடைய உயிருக்கே ஆபத்து நேரும் என்று மந்திரிமார்கள் அரசியிடம் கூறினர்.

அரசனைக் காப்பாற்றுவதற்காக, மலையகந்தினி பஞ்ச முத்ரா மஹா பீடத்தில் உள்ள விகட தேவியிடம் குழந்தையை அனுப்பி வைத்தாள். விகட தேவியானவள், மாத்ரிகா தேவியரிடம் எடுத்துச் செல்லுமாறு யோகினிகளுக்கு ஆணையிட்டாள். அவ்வாறே செய்ததும், மாத்ரிகா தேவியர் குழந்தையிடம் காணப்பட்ட தெய்வீகத்தை உணர்ந்து, பஞ்ச முத்ரா பீடத்திற்கே திருப்பி அனுப்பினர்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், அவன் ஸ்வர்கத்திற்குச் சென்று திரும்பி வந்தான்.

விகட தேவியே காத்யாயனி தேவியாக வழிபடப்படுகிறாள்.

இருப்பிடம்

C/K 7/158, ஆத்ம வீரேச்வரர் கோயிலின் உள்ளே, ஸிந்தியா காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. ஸிந்தியா காட் என்பது வாராணசியில் புகழ்பெற்ற ஓரிடமாகும். ஸிந்தியா காட் வரை படகில் செல்லலாம். அல்லது சௌக் வரை ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து நடந்து சென்றும் அடையலாம்.

இந்த இடம் முழுவதும் பஞ்ச முத்ரா மஹா பீடம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு செய்யப்படும் எந்த பூஜையும் வழிபாடும் பல மடங்கு பலன்களை அள்ளித் தருகிறது.

வழிபாட்டு முறைகள்

காலை 5.00 மணி முதல் 11.30 மணி வரையிலும், 12.30 முதல் இரவு 9.30 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. இரவு 7.00 மணி முதல் 8.30 மணி வரையில் ஆரத்தி நடைபெறுகிறது. விசேஷ பூஜைகள் செய்ய அர்ச்சகரை முன்னரே தொடர்பு கொள்வது நல்லது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீ முன் முன் குரு கோயிலின் அர்ச்சகர் ஆவார். விசேஷ பூஜைகள் செய்ய 9792820159 என்ற எண்ணில் அவரை தொடர்பு கொள்ளலாம்.

காலராத்ரி

துர்காஸுரனை அழிக்க முற்படும்போது, அம்பிகையிடமிருந்து தூதாக அனுப்பப்பட்டவள்தான் காலராத்ரி. காலராத்ரி தேவியின் மூச்சுக்காற்றிலிருந்து நெருப்பு பந்துகள் தோன்றி, அஸுரனின் படைகளை அழித்தன.

துர்காஸுரனைக் கொன்று, துர்கா தேவி என்ற உருவம் தாங்கிய பின், அம்பிகை பல்வேறு சக்திகளாக /தேவிகளாகக் காசியைக் காத்து வருகிறாள் என்று காசி காண்டம் கூறுகிறது. அந்த சக்திகளுள் ஒரு சக்தி காலராத்ரி. காலராத்ரி தேவி மிகுந்த சக்தி வாய்ந்தவள்.

இருப்பிடம்

D 8/17 காலிகா கல்லி (சந்து) என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்னபூர்ணா-விச்வநாதர் கோயிலுக்குச் செல்லும் சந்திற்கு அருகிலுள்ளது காலிகா சந்து. அன்பர்கள் தசாச்வமேத் வரை ரிக்ஷாவில் சென்று, விச்வநாதர் கோயிலுக்குச் செல்லும் வழியில் நடந்து, ஸாக்ஷி விநாயகரைக் கடந்த பிறகு, வலதுபுறம் திரும்பி, சில படிகள் ஏறினால் சுக்ரேச்வரர் வழியாக காலிகா கல்லியை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் 12.30 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 10.30 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலையிலும் மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

காலராத்ரி தேவி மிகுந்த சக்தி வாய்ந்தவள். எந்நேரமும் சில வயதானவர்கள் இந்த தேவியிடம் ப்ரார்த்தனை செய்தபடி இருப்பதைக் காண முடியும்.

அன்னபூரணி தேவி

அன்னபூரணி தேவியைக் காசி மக்கள் பவானி தேவி என்று அழைக்கிறார்கள். பகவான் விஷ்ணு பிந்து முனிவரிடம் பல்வேறு தேவதைகளையும், தீர்த்தங்களையும் பற்றி விவரித்துக் கொண்டிருந்தார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(காசி காண்டம், அத்யாயம் 61)

அன்னபூரணிதேவியை வழிபடும் பக்தர்கள் உலகில் உள்ள அனைத்து தேவிகளையும் வழிபட்ட பலன் பெறுவர். அன்பர்கள் துணிகள், பல்வகை அரிய கற்கள், மலர்கள், ஊதுபத்திகள், விளக்குகள் கொண்டு வழிபடுகிறார்கள்.

அன்பர்கள் அன்னபூரணி தேவியைச் சைத்ர மாதம் சுக்ல பக்ஷ அஷ்டமியன்று 108 முறை வலம்வந்து வழிபட வேண்டும் என்று காசி கண்டம் கூறுகிறது. இவ்வாறு செய்வதால் அனைத்து உலகிலும் உள்ள கடல்கள், மலைகள், புனிதமான இடங்கள், தீவுகள் முதலியவற்றை வலம்வந்த புண்ணியம் கிடைக்கும்.

அன்பர்கள் அன்னபூரணிதேவியை நாள்தோறும் எட்டுமுறை வலம்வந்து வழிபட வேண்டும். அன்னபூரணி தேவியின் அருளால், காசிவாழ் மக்கள் என்றென்றும் மகிழ்ச்சியில் திளைத்திருக்கின்றனர். அன்பர்கள் தங்கள் வாழ்வில் ஏதேனும் துன்பங்களைச் சந்தித்தால், அன்னபூரணி அன்னையை வழிபட்டால் இடர்கள் நீங்கி, வளம் பெறுவர்.

அன்னபூரணி தேவி (பவானி தேவி)யின் சிறப்பைக் காசி காண்டம் விரிவாக விவரிக்கிறது.

இருப்பிடம்

டி - 9/1 அன்னபூரணி கோயில் என்ற முகவரியில் அமைந்திருக்கிறது. கோயிலை நோக்கிச் செல்லும் குறுகிய சந்திற்கு விச்வநாத் கல்லி என்று பெயர்.

(விச்வேச்வரர் கோயிலுக்குச் செல்லும் வழியைப் பார்க்கவும்).

செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் வரும் நவராத்தியில் மேற்கொள்ளப்படும் நவதுர்க்கா யாத்திரையின்போது, அன்பர்கள் இந்தத் தேவியை ஒரு துர்க்கையாக வழிபடுகிறார்கள். இந்த தேவியே மஹாகௌரி தேவியாக நவராத்திரியின் எட்டாவது நாளில் வழிபடப்படுகிறாள்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை திறந்திருக்கிறது. காலையிலும் மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது. நாள்தோறும் மதிய வேளைகளில் அன்னதானம் நடைபெறுகிறது.

ஸித்தேச்வரி

காசி காண்டம், நவராத்திரியின் ஒன்பது நாட்களிலும் மேற்கொள்ளக்கூடிய துர்கா தேவி யாத்திரையைப் பற்றிக் கூறுகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

செப்டம்பர்/அக்டோபர் மாதங்களில் வரும் நவராத்திரியின் ஒன்பதாவது நாளில், பக்தர்கள் ஸித்தேச்வரி தேவி விசேஷமாக வழிபடப்படுகிறாள்.

இருப்பிடம்

C/K 7/124, ஸித்தேச்வரி மொஹல்லா என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் பகுதி வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து வழிகேட்டு நடந்து செல்லலாம்.

ஸித்தேச்வரி கோயிலின் உள்ளே, சந்த்ர கூபம் உள்ளது. சந்த்ரேச்வரர் இங்கு வீற்றிருக்கிறார். இது ஸித்த பீடம் என்று அழைக்கப்படும் சக்தி வாய்ந்த பீடமாகும். ஸித்தேச்வரி தேவிக்கு ஸித்திதாத்ரி துர்கா (ஸித்திகளை அருள்பவள்) என்ற பெயரும் உண்டு.

காலபைரவர் கோயிலுக்கு அருகில், கே 60/29, ஸித்தமாதா கல்லி என்ற முகவரியில் அமைந்துள்ள மற்றொரு கோயிலிலும் அன்பர்கள் நவராத்திரியின் ஒன்பதாவது நாளில் வழிபடலாம்.

வெள்ளிக்கிழமைகளிலும், முக்கிய தினங்களிலும் கோயிலில் திரளான கூட்டம் காணப்படுகிறது.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் 10.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. திறந்திருக்கும் நேரம் மாற்றத்திற்கு உட்பட்டது. இருந்தபோதிலும், கம்பிக் கதவுகள் வழியாக நாள் முழுவதும் தேவியை தரிசனம் செய்யலாம்.

நவ கௌரி கோயில்கள்

முகநிர்மாலிகா கௌரி

காசி காண்டம் 100வது அத்யாயம் கௌரி கோயில்களுக்குச் சென்று வழிபடும் கௌரி யாத்திரையைப் பற்றி விவரிக்கிறது. இந்த யாத்திரை சுக்லபக்ஷ த்ருதியை (அமாவாஸ்யைக்குப் பிறகு வரும் மூன்றாவது நாள்) அன்று மேற்கொள்ளப்படுகிறது.

அன்பர்கள் கோப்ரேக்ஷ தீர்த்தத்தில் நீராடி, முக்நிர்மலிகா கௌரியை வழிபட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

கோயிலின் இருப்பிடம்

K 3/42, ஹனுமான்ஜி கோயில், காய் கட்டம் (Gai ghat) என்ற

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முகவரியில் அமைந்துள்ளது. மச்சோத்ரிக்குப் பின்புறம் உள்ள காய் கட்ட பகுதி வரை ரிக்ஷாவில் சென்று, பின் அங்கிருந்து வழிகேட்டு நடந்து சென்று இந்த இடத்தை அடையலாம்.

மார்ச்/ஏப்ரல் மாதங்களில் வரும் சைத்ர நவராத்ரியின் முதல் நாளில் அன்பர்கள் இந்தக் கோயிலுக்கு வந்து, தேவியை விசேஷமாக வழிபடுகிறார்கள்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.00 மணி முதல் 8.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலையிலும் மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

செவ்வாய் தோஷத்தினால் திருமணம் தள்ளிப் போகும் நபர்கள் இக்கோயிலுக்கு வந்து தேவியை வழிபடுகிறார்கள்.

ஜ்யேஷ்ட கௌரி

காசி கண்டத்தின் 63 வது அத்யாயம் ஜ்யேஷ்ட கௌரியின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறது. ஜ்யேஷ்ட மாதத்தில் (மே 20 - ஜூன் 20) அமாவாஸ்யைக்குப் பிறகு வரும் எட்டாவது நாளில் (சுக்ல பக்ஷ அஷ்டமி தினத்தில்) மக்கள் ஜ்யேஷ்ட கௌரியை வழிபட வேண்டும் என்று சிவபெருமான் கூறியிருக்கிறார்.

மிகவும் துர்பாக்கியமான நிலையில் உள்ள ஓர் பெண், ஜ்யேஷ்ட கௌரியின் ஸந்நிதிக்குச் சென்று, உள்ளார்ந்த அன்புடன் வழிபட்டால், அவள் ஸௌபாக்யவதியாகிவிடுவாள். காசிக்கு வரும் அன்பர்கள், ஜ்யேஷ்ட கௌரியை வழிபடுவதால் வாழ்வில் உயர்நிலை அடைகின்றனர் என்று காசி கண்டம் கூறுகிறது.

ஒன்பது கௌரி கோயில்களில் ஜ்யேஷ்ட கௌரி கோயிலும் ஒன்று. மார்ச்/ஏப்ரல் மாதங்களில் வரும் வஸந்த நவராத்ரியின் இரண்டாவது நாளில் ஜ்யேஷ்ட கௌரியை சிறப்பாக வழிபடுகிறார்கள்.

இருப்பிடம்

K 63/24, ஸப்த சாகர் மொஹல்லா என்ற இடத்தில் அமைந்துள்ளது. பிரஸித்திபெற்ற மைதாகின் என்ற இடத்திலிருந்து இக்கோயிலை அடைய முடியும். ஆட்டோ, கார் அல்லது சைக்கிள் ரிக்ஷாவின் மூலம் மைதாகின் என்ற இடத்தை அடையலாம். மைதாகின்னிலிருந்த நடந்து செல்வது நல்லது. இதன் அருகில் உள்ள புகழ்பெற்ற கோயில், காசி தேவி கோயிலாகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. காலையிலும் மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது. நவராத்ரி கௌரி யாத்திரைகளின்போதும், விசேஷ தினங்களின் போதும், இங்கு சிறப்பான வழிபாடுகள் நிகழ்கின்றன.

அருகிலுள்ள பெண்மணிகள் சிலர் அவ்வபோது பஜனைகளையும், தெய்வீகப் பாடல்களையும் இங்கு அமர்வது பாடுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸௌபாக்ய கௌரி

காசி காண்டத்தின் 100 வது அத்யாயம், சுக்லபக்ஷ த்ருதீயை அன்று (அமாவாஸ்யைப் பிறகு வரும் மூன்றாவது நாளில்) மேற்கொள்ள வேண்டிய கௌரி யாத்திரையைப் பற்றிப் பேசுகிறது.

அன்பர்கள் ஞானவாபியில் நீராடி, ஸௌபாக்ய கௌரியை வழிபட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

ஸௌபாக்ய கௌரியை வழிபடும் அன்பர்கள் வாழ்வில் அனைத்து ஸௌபாக்யங்களும் பெற்று இன்புறுவர்.

இருப்பிடம்

C/K 38/8, ஆதி விச்வநாதர் கோயிலில் அமைந்துள்ளது. பன்ஷ்படக் என்ற பகுதியிலிருந்து சௌக் செல்லும்போது, இடதுபுறத்தில் உள்ள பூ மார்க்கெட்டைக் கடந்த பிறகு, சில படிகள் ஏறிச் சென்றால் ஒரு மைதானமும், சிவன் கோயிலும் தென்படும். மைதானத்தின் வலதுபுறத்தில் (வடக்கில்) அன்பர்கள் ஸௌபாக்ய கௌரியைக் காணலாம்.

மார்ச்/ஏப்ரல் மாதங்களில் வரும் சைத்ர நவராத்ரியின் மூன்றாவது நாளில் அன்பர்கள் ஸௌபாக்ய கௌரியை வழிபடுகின்றனர்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் 11.00 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை. அன்பர்கள் கம்பிக்கதவுகள் வழியாக நாள் முழுவதும் வழிபடலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ச்ருங்கார கௌரி

சுக்லபக்ஷ த்ருதீயை அன்று (அமாவாஸ்யைக்குப் பிறகு வரும் மூன்றாவது நாளில்) மேற்கொள்ளப்படும் கௌரி யாத்திரையைப் பற்றி காசி காண்டத்தின் 100வது அத்யாயம் விவரிக்கிறது.

ஸௌபாக்ய கௌரியை வழிபட்ட பிறகு, ச்ருங்கார கௌரியை வழிபட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ச்ருங்கார கௌரியை வழிபடுபவர்கள் வாழ்வில் வளங்களும், மகிழ்ச்சியும் பெறுவர்.

இருப்பிடம்

இந்தக் கோயில் ஞானவாபி மசூதிக்குப் பின்புறம் உள்ளது. வருடத்தில் இரண்டு நாட்கள் மட்டுமே இந்த கோயிலில் வழிபட முடியும். விச்வநாதர் கோயிலில் உள்ள அன்னபூரணியையே, ச்ருங்கார கௌரியாக பக்தர்கள் வழிபடுகிறார்கள்.

இந்த இடத்தை அடைய, விச்வநாதர் கோயிலுக்குச் செல்லும் வழியைப் பார்க்கவும்.

மார்ச்/ஏப்ரல் மாதங்களில் வரும் சைத்ர நவராத்திரியின் நான்காவது நாளில் அன்பர்கள் இந்த தேவியை வழிபடுகிறார்கள்.

விசாலாக்ஷி கௌரி

அகஸ்த்ய முனிவரின் வேண்டுகோளுக்கிணங்க, ஸ்கந்த மூர்த்தியானவர் காசியில் உள்ள பல்வேறு தேவியரைப் பற்றி மகிழ்வுடன் சொல்லத் தொடங்கினார்.

கங்கை நதியில் உள்ள விசால தீர்த்தத்தில், தேவி விசாலாக்ஷியாக வீற்றிருக்கிறாள். விசால தீர்த்தத்தில் நீராடி, விசாலாக்ஷி அம்மையை வழிபடும் அன்பர்கள் வாழ்வில் எல்லா வளங்களும் பெற்று இன்புறுவர்.

அச்வினி மாதத்தில் (செப்டம்பர் 23-அக்டோபர் 22) பக்தர்கள் விரதமிருந்து, த்ருதீயை அன்று இரவு விழித்திருக்க வேண்டும். காலையில் புத்தாடைகளும், மங்கல பொருட்களும் 14 கன்னிகைகளுக்குப் பக்தியுடன் வழங்க வேண்டும். கன்யா பூஜை செய்த பிறகு, அவர்கள் விரதத்தை முடித்துக் கொள்ளலாம்.

விசாலாக்ஷி தேவி கோயில் ஓர் உயர்ந்த சக்தி பீடமாகும். இந்தக் கோயிலில் செய்யப்படும், பூஜை, ஜபம், பாராயணம், தானம் முதலியவை பன்மடங்கு பலனளிக்கக் கூடியவை. விசாலாக்ஷி தேவியை வழிபடுவதால், திருமணமாகாத பெண்களுக்குத் திருமணமாகும், குழந்தையில்லாத

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தம்பதியர், மழலைச் செல்வத்தைப் பெறுவர். மிகுந்த கஷ்டத்தில் இருப்பவரையும் கரையேற்றுபவள் விசாலாக்ஷி.

காசி காண்டத்தின் 70வது அத்யாயம் விசாலாக்ஷி தேவியின் பெருமையை விரித்துக் கூறியிருக்கிறது. காசி காண்டத்தின் 100வது அத்யாயம், நவ கௌரி யாத்திரையைப் பற்றிக் குறிப்பிடுகிறது. ஒன்பது கௌரிகளுள் ஒருத்தியாக வழிபடப்படுபவள் விசாலாக்ஷி அம்மை.

தென்னாட்டவர்கள் விசாலாக்ஷி அம்மையை மிகுந்த ஈடுபாட்டுடன் வழிபடுகிறார்கள். மூன்று முக்கிய தேவியரில் ஒருத்தியாக (காஞ்சி காமாக்ஷி, மதுரை மீனாக்ஷி, காசி விசாலாக்ஷி) வழிபடுகிறார்கள்.

இருப்பிடம்

D 3/85 மிர் காட் என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் விச்வநாத் கல்லி அல்லது பன்ஷ்படக் விச்வநாத் கல்லி வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து செல்லலாம். பொதுவாக, அன்பர்கள் விச்வநாதர், அன்னபூரணியைத் தரிசிப்பதுடன் விசாலாக்ஷி தரிசனத்தையும் இணைத்துக் கொள்வர்.

ஒன்பது கௌரிகளுள் ஒருத்தியாகிய விசாலாக்ஷி கௌரி, மார்ச்/ஏப்ரல் மாதங்களில் வரும் சைத்ர நவராத்திரியின் ஐந்தாவது நாளில் வழிபடப்படுகிறாள்.

வழிபாட்டு முறைகள்

காலை 4.30 மணி முதல் 11.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

லலிதா கௌரி

கங்கா கேசவ தீர்த்தத்திற்கு அருகில் லலிதா தீர்த்தம் உள்ளது. இங்கு லலிதா கௌரி என்ற பெயரில் அம்பிகை வீற்றிருக்கிறாள்.

லலிதா கௌரியை உள்ளன்புடன் துதிக்கும் அன்பர்கள் வாழ்வில் அனைத்து வளங்களும் பெற்று இன்புறுவர். அச்வினி மாதத்தில் (செப்டம்பர்/அக்டோபர்) க்ருஷ்ணபக்ஷ த்விதீயை (பௌர்ணமிக்கு அடுத்து வரும் இரண்டாவது நாள்), ஸ்ரீலலிதா கௌரியை வழிபடுவதற்கு மிகவும் மங்களகரமான நாளாகக் கருதப்படுகிறது.

லலிதா தீர்த்தத்தில் (தற்போது லலிதா காட்) நீராடி, லலிதா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கௌரியை வழிபடுபவர்கள் வாழ்வில் அனைத்து வளங்களும் பெற்று இன்புறுவர் என்று காசி காண்டம் 70வது அத்யாயம் கூறுகிறது.

இருப்பிடம்

C/K 1/67, லலிதா காட் என்ற இடத்தில் அமைந்துள்ளது. தசாச்வமேத் வரை ரிக்ஷாவில் சென்று கட்டங்கள் வழியாக நடந்து லலிதா கட்டத்தை அடைந்து படிகள் ஏறிச் செல்லலாம். நேபாளி பசுபதி மந்திர் அருகிலுள்ள ஓர் முக்கிய அடையாளமாகும். (பசுபதி மந்திரைப் பற்றிய குறிப்புகள் காசி காண்டத்தில் இல்லை ஆதலால், அக்கோயிலைப் பற்றி இப்புத்தகத்தில் கொடுக்கப்படவில்லை).

மார்ச்/ஏப்ரல் மாதங்களில் வரும் வசந்த நவராத்ரியின்போது வழிபடப்படும் ஒன்பது கௌரிகளுள் லலிதா கௌரியும் ஒருவர்.

வழிபாட்டு முறைகள்

இந்தக் கோயிலுக்கு உள்ளேயே காசி தேவி, பாகீரதீ தேவி விக்ரஹங்களும் இருக்கின்றன. காலை 5.00 மணி முதல் 9.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 9.30 மணி வரையிலும் திறந்திருக்கிறது. இந்த நேரங்கள் மாறுதலுக்கு உட்பட்டவை. இக்கோயிலோடு சேர்த்துப் பிற கோயில்களையும் தரிசிக்கத் திட்டமிடுதல் நலம்.

பவானி கௌரீ

காசி காண்டம் 100வது அத்யாயம் கௌரி யாத்திரையைப் பற்றி விவரிக்கிறது. அமாவாஸ்யைக்குப் பிறகு வரும் த்ருதியை அன்று இந்த யாத்திரையைத் துவக்க வேண்டும்.

அன்பர்கள் பவானி தீர்த்தத்தில் நீராடி, ஸ்ரீபவானி கௌரியை வழிபட வேண்டும். ஸ்ரீபவானி தேவியை வழிபடுபவர்கள் வாழ்வில் அனைத்து வளங்களும் பெற்று இன்புறுவர்.

இருப்பிடம்

D 8/38 ராம் மந்திர் (அந்நபூர்ணா கோயில் அருகில்) என்ற முகவரியில் அமைந்துள்ளது. பவானி தேவி காளி தேவிக்கும், ஜகந்நாதருக்கும் இடையில் வீற்றிருக்கிறாள். (இந்த இடத்தை அடைய, ஸ்ரீவிச்வேச்வரர் கோயிலுக்குச் செல்லும் வழியைப் பார்க்கவும்).

மார்ச்–ஏப்ரல் மாதங்களில் வரும் சைத்ர நவராத்ரியின் ஏழாவது நாளில் அன்பர்கள், ஸ்ரீபவானி தேவியை விசேஷமாக வழிபடுகின்றனர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.30 மணியிலிருந்து 11.30 மணி வரையிலும், மாலை 5.00 மணியிலிருந்து 9.30 மணி வரையிலும் திறந்திருக்கிறது.

மங்கள கௌரி

முன்னொரு காலத்தில், சூரியதேவன் பஞ்சநத தீர்த்தத்தில் (பஞ்சகங்கா காட்) ஓர் சிவலிங்கத்தையும், அம்பாள் விக்ரஹத்தையும் ஸ்தாபித்து, சிவபெருமானை வழிபட்டு வந்தார். (பஞ்சகங்கா கட்டத்தின் சிறப்புபற்றி வேறொரு இடத்தில் கூறப்பட்டுள்ளது).

சூரியபகவான் கடும்தவம் இயற்றியவுடன், சுற்றுப்புறமெங்கும் தகிக்கத் தொடங்கியது. இதனைத் தாங்க முடியாமல் உயிரினங்கள் வாடி வதங்கின.

சிவபெருமானும் பார்வதிதேவியும் சூரியனுக்கு முன்னால் தோன்றினர். சூரியன் கண் திறந்து பார்த்து, பல துதிகளால் சிவபெருமானையும் பார்வதி தேவியையும் போற்றினான். மனம் மகிழ்ந்த சிவபெருமானும் பார்வதி தேவியும் சூரியனுக்குப் பல வரங்களை அருளினர்.

சூரியன் வழிபட்ட தேவி விக்ரஹம், பின்னாளில் மங்கள கௌரி என்ற பெயரில் அழைக்கப்படும் என்று சிவபெருமான் கூறினார். பக்தியுடன் மங்கள கௌரியை வழிபடுபவர்கள் வாழ்வில் அனைத்து வளங்களும் பெறுவர். மங்கள கௌரியை வழிபடுவதால் திருமணமாகாத கன்னிப் பெண்களுக்கு விரைவில் திருமணம் நடந்தேறும். குழந்தையில்லாத தம்பதியினர் குழந்தை பாக்கியம் பெறுவர்.

சைத்ர மாதத்தில் (மார்ச்-ஏப்ரல்) சுக்ல பக்ஷ த்ருதீயை (அமாவாஸ்யை அடுத்து வரும் மூன்றாவது நாள்) மங்கள கௌரியை வழிபடுவதற்கு விசேஷமான நாள் என்று காசி காண்டம், 49வது அத்யாயம் கூறுகிறது.

இருப்பிடம்

K 24/34, பஞ்சகங்கா கட்டம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் பைரோநாத் வரை ஆட்டோ அல்லது சைக்கிள் ரிக்ஷாவில் சென்று, பின் அங்கிருந்து நடந்து செல்லலாம். மங்கள கௌரி கோயில் ஓர் பிரசித்தி பெற்ற கோயிலாகும். அல்லது பஞ்சகங்கா கட்டம் வரை படகில் சென்று அங்கிருந்து படிகள் ஏறியும் செல்லலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழிபாட்டு முறைகள்

காலை 5.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரையிலும், மாலை 3.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. மாலையில் ஆரத்தி நடைபெறுகிறது. விசேஷ பூஜைகள் நடத்த அர்ச்சகரைத் தொடர்பு கொள்ளலாம். செவ்வாய்கிழமைகளில் மிகுந்த கூட்டம் காணப்படுகிறது. மங்கள கௌரியை வழிபட்டு, நிறைய பெண்களுக்கு திருமணம் கைகூடியிருக்கிறது என அருகில் உள்ளோர் தெரிவிக்கிறார்கள். மங்கள கௌரி நவகௌரிகளுள் ஒருவர். மார்ச்/ஏப்ரல் மாதங்களில் வரும் சைத்ர நவராத்ரியின் எட்டாவது நாளில் மங்கள கௌரி வழிபடப்படுகிறாள்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீமனோஜ் குமார் பாண்டே கோயிலின் தலைமை அர்ச்சகராவார். அவரது தொலைபேசி எண் ()9305645502. ஸ்ரீஉமேஷ் குமார் சர்மா மற்றொரு அர்ச்சகராவார். அவரது தொலைபேசி எண் () 9450284728.

மஹாலக்ஷ்மி கௌரி

காசி காண்டம் அத்யாயம் 70ல் கூறப்பட்டுள்ளபடி, லக்ஷ்மி குண்டத்திற்கு அருகில் மஹாலக்ஷ்மி வீற்றிருக்கிறாள்.

அன்பர்கள் லக்ஷ்மி குண்டத்தில் நீராடி, மஹாலக்ஷ்மியை வழிபட வேண்டும். பித்ரு காரியங்களையும், ஏழை எளியோருக்குத் தான தர்மங்களும் செய்யும் அன்பர்கள் மஹாலக்ஷ்மியின் அருள்பெறுவர்.

இந்தப் பிரதேசம் முழுவதும் சக்தி பீடம் என்று காசி கண்டம் கூறுகிறது. காசியில் பல்வேறு சக்தி பீடங்கள் இருப்பினும், மஹாலக்ஷ்மி சக்தி பீடம் மிகுந்த சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

மஹாலக்ஷ்மியைத் தொடர்ந்து வழிபடுபவர்கள் பலவித சித்திகளைப் பெறுவர். வாழ்வில் வெற்றி பெறுவர். வளங்கள் வடிவான மஹாலக்ஷ்மி அவர்களது வீட்டில் குடியிருப்பாள்.

காசி காண்டத்தின் 100வது அத்யாயம், நவ கௌரி யாத்திரையை விவரிக்கிறது. அதில் ஒன்பதாவது, மஹாலக்ஷ்மி கௌரி ஆவாள்.

இருப்பிடம்

D 52/40 லக்ஷ்மி குண்டம் என்ற முகவரியில் அமைந்துள்ளது. இது மிகப் பிரசித்தி பெற்ற இடமாகையால், அன்பர்கள் லக்ஸா வழியாக, ரிக்ஷாவில் இவ்விடத்தை அடையலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காசி காண்டம் 70வது அத்யாயத்தில் சொல்லப்பட்டுள்ள சிகி சண்டி தேவி இக்கோயிலின் பின்புறத்திலும், 45 வது அத்யாயத்தில் கூறப்பட்டுள்ள மயூரி தேவி நுழைவாயிலின் வலதுபுறத்திலும் இக்கோயிலில் வீற்றிருக்கின்றனர். அன்பர்கள் சக்தி வாய்ந்த இந்தத் தேவிகளையும் வழிபடலாம். காசி காண்டத்தில் சொல்லப்பட்டுள்ள உக்ரேச்வரர் லிங்கமும் இக்கோயிலில் உள்ளது. வெள்ளிக்கிழமைகளிலும், வசந்த (மார்ச்/ஏப்ரல்) நவராத்ரியிலும் மிகுந்த கூட்டம் காணப்படுகிறது.

வசந்த நவராத்திரியின் ஒன்பதாவது நாளில் விசேஷமாக வழிபடப்பட்டாலும், இரண்டு நவராத்திரிகளிலும், எல்லா ஒன்பது நாட்களிலும் கூட்டம் இருக்கிறது.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் நண்பகல் 1.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலையிலும் மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

பிற தேவி கோயில்கள்

பந்தி தேவி

ப்ரயாகை தீர்த்தத்திற்கருகில், பந்தி தேவீ வீற்றிருக்கிறாள் என்று காசி கண்டம், 70 வது அத்யாயம் கூறுகிறது. இந்தத் தேவியை வழிபடுபவர்கள் தங்களது தளைகளிலிருந்தும், பந்தங்களிலிருந்தும் விடுபடுவார்கள்.

செவ்வாய்க்கிழமைகள் தோறும் தவறாமல் விரதமிருந்து, ஸ்ரீ பந்தி தேவியைப் பூஜித்து வழிபடுபவர்களது வாழ்வில் வளங்களைக் காண்பர்; தடைகளிலிருந்தும் விடுபடுவர். பந்தி தேவி தம்மை வழிபடுபவர்களுக்கு மட்டுமல்லாமல், தொலைவில் வாழும் அவர்களது உறவினர்களுக்கும் அருள்புரிபவள் என்று காசி கண்டம் கூறுகிறது.

ஸ்ரீ பந்தி தேவியை வழிபடுபவர்கள், சகலவிதமான துன்பங்களிலிருந்தும் விடுபடுவர்.

இருப்பிடம்

D - 17/100, தசாச்வமேத காட் அருகில் என்ற முகவரியில் அமைந்துள்ளது. தசாச்வமேத காட் வரை ரிக்ஷாவில் சென்று, படிகள் இறங்குவதற்கு முன்னர் வலதுபுறம் திரும்ப வேண்டும். அருகிலுள்ள கடைக்காரர்களிடம் விசாரித்துக் கொண்டு செல்வது நல்லது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கோயில் திறந்திருக்கும் நேரங்கள்

காலை 8.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரை கோயில் திறந்திருக்கிறது. அன்பர்கள், கம்பிக் கதவுகள் வழியாக நாள் முழுவதும் வழிபடலாம்.

சாமுண்டா தேவி

லோலார்க் என்ற பகுதிக்கு வடக்கில், ஹயக்ரீவ தீர்த்தத்தில் ஸ்ரீசாமுண்டா தேவி வீற்றிருக்கிறாள். சாமுண்டா தேவி, சர்ம முண்டா தேவி, மஹா முண்டா தேவி ஆகியோர் க்ஷேத்ர ரக்ஷிகா (தலத்தின் பாதுகாவலர்கள்) என்று போற்றப்படுகின்றனர்.

சாமுண்டா தேவியை வழிபடுவோர் செல்வம், விவசாய செழிப்பு, குழந்தைகள், பேரன் பேத்திகள் ஆகியோரை அடைந்து இன்புறுவர் என்று காசி கஜுண்டம் 70வது அத்யாயம் கூறுகின்றது.

சாமுண்டா தேவி லோலார்க் குண்டத்தில், மஹிஷாஸுர மர்த்தினி என்ற பெயரில் ஸ்ரீசாமுண்டா தேவி அறியப்படுகிறாள். அன்பர்கள் இந்த இடம் வரை ரிக்ஷாவில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.30 மணி முதல் 11.30 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலையிலும் மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது. மாலை 7.00 மணி முதல் 7.30 வரை நடைபெறும் ஆரத்தி காண வேண்டிய ஒன்று.

சண்டி தேவி

காசி கஜுண்டம் (அத்யாயம் 83) ஏழு மாத்ரிகா தேவிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது. அவர்களுள் கடைசி சண்டிகா தேவி ஆவாள். அவர்கள் ஓர் சிறுவன் உயிர் கொடுத்ததில் பெரும் பங்கு வகித்தனர். (இதன் விவரங்களை வீரேச்வரர் பற்றிய பகுதியில் காணலாம்).

இந்த மாத்ரிகா தேவிகள் மிகுந்த சக்தி படைத்தவர்கள். அன்பர்களுக்கு ஸித்திகளை அருளக் கூடிய ஆற்றல் படைத்தவர்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காசி கண்டம் (அத்யாயம் 70) காசி க்ஷேத்திரத்தில் பல்வேறு இடங்களில் உள்ள சக்திவாய்ந்த தேவிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது. அவர்களுள் கௌர்மி சக்தியும் ஒன்று. ஸ்ரீகேதார் நாத் வ்யாஸ் என்பவர், விரிவான ஆராய்ச்சிக்குப் பிறகு, இந்த சக்தி வாய்ந்த தேவியின் பெயர் சண்டி தேவி என்று தமது புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விஷயம் ஒன்று உள்ளது. காசி கஜுண்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவதைகள் அதே இடத்தில்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. அந்நிய படையெடுப்பு முதலிய காரணங்களால் வேறு இடங்களுக்கும் இடம் பெயர்ந்திருக்கக் கூடும். காசி கஜுண்டம் குறிப்பிடும் சில கோயில்களில் சிவ லிங்கங்களையே பார்க்க முடிவதில்லை.

சண்டி தேவியின் இருப்பிடம்

சதர் பஜாரில் அமைந்துள்ளது. கன்டோன்மெண்ட் பகுதியில், பல பெரிய ஹோட்டல்கள் உள்ள பகுதியில், ராடிஸன், ஐடியல் டவர்ஸ், ஹோட்டல் க்ளார்க்ஸ், ஜே ஹெச் வி மால் முதலியவற்றைக் கடந்து, அதே சாலையில் (கரியப்பா மார்க்) தொடர்ந்து நடந்து சென்றால், வலது புறத்தில் பீஷ்ம சண்டி தேவி கோயில் என்றொரு குறியீடு இருக்கும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம். அருகிலுள்ள மக்களால் இது ஓர் ஆற்றல் மிகுந்த சக்திபீடமாகக் கருதப்படுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

பண்டித மங்கள ப்ரஸாத் சௌபே என்பவர் கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9794233442 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

சர்ம முண்டா தேவி

காசி காண்டம், 70வது அத்யாயப்படி, தர்கேச்வரர் தீர்த்தத்தில் ஸ்ரீசர்ம முண்டா தேவியைக் காணலாம். இந்தப் ப்ரபஞ்சத்தையே விழுங்கிவிடுகின்ற ஓர் மிகப்பெரிய உருவமாக சர்ம முண்டா தேவி சித்தரிக்கப்படுகிறாள். ஆயிரம் தோள்களுடன் கூடியவளாக, கையில் மண்டையோடும், கத்தியும் ஏந்தியிருக்கிறாள். அவளது கைகள் மிகப் பெரியவை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அவள் அனைத்து தீய சக்திகளையும் அழிக்கக்கூடிய ஆற்றல் படைத்தவள். இந்தப் புனிதத் தலத்தில் உள்ள தீய சக்திகள் அனைத்தையும் வாயில் போட்டு மென்றுவிடுபவள். சர்ம முண்டா தேவியை வழிபடுபவர்களது ஆன்மிக வாழ்வில் எவ்விதத் தடையும் இருக்காது.

இருப்பிடம்

B 2/62 பதைனி என்ற முகவரியில் அமைந்துள்ளது. அஸியை நோக்கி, மாதா ஆனந்தமயி மருத்துவமனையைக் கடந்து சென்றால், இடது புறத்தில் பதைனி வாட்டர் வொர்க்ஸ் என்று இருக்கும். முனையில் இருக்கின்ற B 2/61 என்ற முகவரியில் அமைந்துள்ள வீடு, கோயில் அர்ச்சகரின் வீடாகும். கோயில் சற்றே மேடான இடத்தில் அமைந்துள்ளது. அருகிலுள்ளவர்கள், நவ துர்கா கோயில் என்று இதனை அழைக்கின்றனர்.

காசி காண்டம் அத்யாயம் 70 ல் குறிப்பிடப்பட்டுள்ள மஹாமுண்டா தேவி ஸந்நிதியும் இங்குதான் இருக்கிறது.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.30 மணி முதல் 10.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலை 5.45 மணிக்கு மங்கள ஆரத்தியும், காலை 10.00 மணிக்கு போக் ஆரத்தியும், மாலை 7.30 மணிக்கு மாலை ஆரத்தியும், இரவு 10.00 மணிக்கு சயன ஆரத்தியும் நடைபெறுகின்றன.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீவிகாஸ் துபே கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9336922371 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

ஹயகண்டி தேவி

காசி காண்டம் அத்யாயம் 70 ல் கூறப்பட்டுள்ளபடி, மஹாலக்ஷ்மி தேவிக்கு அருகில், கையில் அரிவாளுடன் ஹயகண்டி என்றொரு தேவி இருக்கிறாள்.

அரிவாளைக் கொண்டு செடிகொடிகளை வெட்டி வீழ்த்துவதுபோல, ஹயகண்டி தேவி அன்பர்கள் வாழ்வில் தோன்றும் இடர்களை வெட்டி வீழ்த்துகிறாள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஹயகண்டி தேவியை உண்மையான பக்தியுடன் வழிபடும் அன்பர்களது வாழ்வில் இடர்கள் மறைந்தோடும். தெளிந்த நீரோட்டம் போன்ற வாழ்வு அமையும்.

இருப்பிடம்

D 52/35, காளி மடம், லக்ஷ்மி குண்டம் என்ற முகவரியில் அமைந்துள்ளது. லக்ஸா வழியாக இந்த இடத்தை ரிக்ஷா மூலம் அடையலாம். லக்ஷ்மி குண்டம் ஓர் ப்ரஸித்தி பெற்ற இடமாகும்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.00 மணி முதல் 11.30 மணி வரையிலும், மாலை 5.30 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலையிலும் மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது. கோயில் திறந்திருக்கும் நேரம் மாறுதலுக்கு உட்பட்டது.

காமாக்யா தேவி (காமாக்ஷி தேவி)

சிவபெருமான் மந்த்ராசலத்தில் இருந்தார். காசியைப் பண்புமிக்க மன்னனான திவோதாஸ் ஆண்டு வந்தான். அவனுடைய ஆட்சியில் வளம் கொழித்தது, மக்கள் இன்புற்று வாழ்ந்து வந்தனர். மன்னன் திவோதாஸ் ப்ரஹ்மதேவரிடம் ஓர் ஒப்பந்தம் வைத்திருந்தான் : அவன் ஆட்சிபுரியும் வரையில், தேவர்கள் காசியை விட்டு விலகியிருக்க வேண்டும், காசியில் எந்தவிதத் தொந்தரவும் செய்யக் கூடாது என்பதே அது. (காசி காண்டம், அத்யாயம் 45)

ப்ரஹ்மதேவர் ஓர் நிபந்தனையுடன் ஒருவாறு இதற்கு ஒப்புக்கொண்டார். அதாவது, காசியில் வாழ்கின்ற அனைத்து மக்களும் திவோதாஸைச் சிறந்த ஆட்சியாளனாக ஏற்றுக் கொள்ள வேண்டும், ஆன்மிக ஸாதனைகள் மேற்கொள்ளக் காசிக்கு வருகை தருவோருக்கு வேண்டிய வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்பவையே அவை. மன்னனும் இதனை ஏற்றுக்கொண்டு சிறந்த முறையில் ஆட்சிபுரிந்து வந்தான்.

நீண்ட காலம் காசியை விட்டு விலகியிருந்த சிவபெருமான், திவோதாஸை ஏதேனும் குற்றம் இழைக்கச் செய்யத் திருவுள்ளம் கொண்டார். காசியில் ஏதேனும் கலகத்தை ஏற்படுத்தும்படி அறுபத்து நான்கு யோகினிகளை அனுப்பினார். அவர்கள் அத்தனை பேரும் ஸ்வர்க

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

லோகம் போன்று காட்சியளித்த காசியின் அழகில் மனதைப் பறிகொடுத்து, காசியிலேயே தங்கிவிடத் தீர்மானித்து, க்ஷேத்திரத்தின் பல்வேறு இடங்களில் தங்களை நிலைநிறுத்திக் கொண்டனர். காமாக்யா தேவி (காமாக்ஷி தேவி) அவர்களுள் ஒருத்தியாவாள்.

இந்த யோகினிகள் நிலைபெற்றிருக்கின்ற இடங்களெல்லாம் சக்தி பீடங்கள் என்று அழைக்கப்படுகின்றன. சக்தி பீடங்களில் ப்ரார்த்தனை செய்வோர் ஆன்மிக ஆற்றல் பெறுகின்றனர். இந்த அன்பர்களுக்கு மன அமைதியும், போட்டிகளில் வெற்றிகளும், வாதங்களில் வெல்லும் திறமையும் ஏற்படுகின்றன.

காசி காண்டம் அத்யாயம் 72 ல், துர்காஸுரனுடன் யுத்தம் செய்தபோது, அம்பிகையினால் உருவாக்கப்பட்ட சக்தியே காமாக்யா என்று கூறப்பட்டுள்ளது.

இருப்பிடம்

B 21/123, காமச்சா என்ற இடத்தில் அமைந்துள்ளது. இது மிகவும் புகழ்வாய்ந்த கோயிலாகும். அருகிலுள்ள மற்றொரு புகழ்பெற்ற கோயில், படுக் பைரவர் கோயிலாகும். காமாக்யா தேவியின் பெயரைத் தொடர்ந்தே இந்த இடத்திற்கு காமச்சா என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. பேலுபுரா விலிருந்து ரத்யாத்ரா செல்லும் வழியில் காசி ராஜ் அபார்ட்மெண்ட்ஸ் என்ற கட்டிடத்திற்கு முன்னால் இடதுபுறம் திரும்பி சென்றால், இவ்விடத்தை அடையலாம். இந்தக் கோயில் மிக ப்ரஸித்தி பெற்றது ஆகையால், இது ரிக்ஷா ஓட்டுனர்களுக்கு நன்றாகத் தெரிந்த இடமாகும்.

வழிபாட்டு முறைகள்

காலை 3.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலை 5.30 மணிக்கும், இரவு 7.30 மணிக்கும் ஆரத்தி நடைபெறுகிறது. செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளிலும், நவராத்ரி காலங்களிலும் மிகுந்த கூட்டம் காணப்படுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீதிகம்பர் வீரேச்வர் புரி கோயிலின் அர்ச்சகராவார்.

மணிகர்ணிகா தேவி

பிந்து முனிவருக்கு மஹாவிஷ்ணு காசியில் தாம் வீற்றிருக்கும் வடிவங்களைப்பற்றிச் சொல்லத் தொடங்கினார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(மணிகர்ணிகா காட்) சக்ர புஷ்கரணி தீர்த்தத்திற்கு அருகிலுள்ள ஒருதேவியாக மணிகர்ணிகா தேவியை விவரிக்கிறார் மஹாவிஷ்ணு. காசி காண்டம், மணிகர்ணிகா தேவியை ஸ்படிகம் போன்ற நிறமும், மென்மையான கூந்தலும், ஒளிவீசும் அழகும் உடைய பன்னிரெண்டு வயதுப் பெண்ணாக விவரிக்கிறது.

மோக்ஷத்தை விரும்பும் அன்பர்கள் ஸ்ரீமணிகர்ணிகா தேவியிடம் ப்ரார்த்தனை செய்ய வேண்டும்.

இருப்பிடம்

C/K 7/130, ஸிந்தியா காட், ஆத்மவீரேச்வரர் கோயில் அருகில் என்ற முகவரியில் அமைந்துள்ளது. இந்த இடத்தை ஸிந்தியா காட் வழியாகப் படகில் சென்றடையலாம். அல்லது சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து ஆத்ம வீரேச்வரர் கோயில் வரை சந்துகள் வழியாக நடந்தும் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் 11.30 மணி வரையிலும், மாலை 4.30 மணி முதல் இரவு 9.30 மணி வரையிலும் திறந்திருக்கிறது. நேரம் மாற்றத்திற்கு உட்பட்டது.

ஸங்கட தேவி

காசி காண்டம் நவராத்திரியின்போது அன்பர்கள் மேற்கொள்ள வேண்டிய துர்காதேவி யாத்திரையைப் பற்றிக் கூறியிருக்கிறது.

செப்டம்பர்/அக்டோபர் மாதங்களில் வரும் நவராத்திரியின் எட்டாவது நாளில் அன்பர்கள் ஸங்கட தேவியை வழிபடுகிறார்கள்.

இருப்பிடம்

C/K 7/159, ஸங்கடஜீ என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, பின் அங்கிருந்து வழிகேட்டு நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம்.

இந்தக் கோயில் பஞ்ச முத்ரா பீடம் (ஆத்ம வீரேச்வரர் கோயில்) மற்றும் ஸித்த பீடம் (ஸித்தேச்வரி கோயில்) ஆகிய இரு சக்திவாய்ந்த சக்தி பீடங்களுக்கு அருகில் அமைந்துள்ளது. ஸங்கட தேவி மிகுந்த சக்தி வாய்ந்தவள். தன்னை வழிபடும் அன்பர்களுக்கு வாழ்வில் வளங்களையும், நிலையான ஆனந்தத்தையும் அளிப்பவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



ஆதி கேசவர்

விதார நரசிம்மர்



ச்வேத மாதவர்

தாம்ர வராஹர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



சண்ட பைரவர்



பீஷன் பைரவர்
(பூத பைரவர்)



கால பைரவர்

க்ரோதன் பைரவர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இக்கோயிலில் வெள்ளிக்கிழமைகளிலும், சில முக்கிய தினங்களிலும் கூட்டம் நிரம்பி வழிகிறது. அன்பர்களின் விருப்பத்திற்கேற்ப, இக்கோயிலில் அம்பிகைக்கு அலங்காரம் செய்விக்கப்படும். விசேஷ அலங்காரத்தில் அம்பிகையைத் தரிசிக்க விரும்பும் அன்பர்கள், முன்னரே அர்ச்சகரிடம் தெரிவிக்கலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. கோயில் திறந்திருக்கும் நேரம் மாற்றத்திற்குட்பட்டது.

ஸித்த லக்ஷ்மி தேவி

காசி காண்டம் 70வது அத்யாயம், காசியில் உள்ள தேவி கோயில்களைப் பற்றி விவரிக்கிறது. அனைவருமே சக்தி வாய்ந்த தேவியர்.

பிதா மஹேச்வரருக்கு அருகில், அம்பிகையானவள் ஸித்தலக்ஷ்மி தேவியாக வீற்றிருக்கிறாள்.

இந்தத் தேவியை வழிபடும் அன்பர்கள் ஸித்திகளையும், வேண்டிய வரங்களையும் பெறுவர். ஸித்தலக்ஷ்மியை வழிபடுவதால், வாழ்வில் வளமும் மகிழ்ச்சியும் பொங்கித் ததும்பும்.

C/K

இருப்பிடம்

8/1, ஸித்தி விநாயகர், மணிகர்ணிகா என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று இந்தக் கோயிலை அடையலாம். அல்லது படகில் மணிகர்ணிகா காட் வரை சென்று, (சக்ர புஷ்கரணி தீர்த்தம்), அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் 11.30 மணி வரையிலும், மாலை 4.30 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

த்ரைலோக்ய ஸுந்தரி

நள கூபேச்வரருக்கு அருகில் குப்ஜம்பேச்வர லிங்கம் உள்ளது என்று காசி காண்டத்தின் 70வது அத்யாயம் தெரிவிக்கிறது. அதற்கு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அருகில், த்ரைலோக்ய ஸுந்தரி வீற்றிருக்கிறாள்.

துர்காஸுரனை எதிர்த்து தேவி போரிட்டபொழுது, அவளது உடலிலிருந்து பல்வேறு சக்திகள் வெளிப்பட்டன. மிகுந்த ஆற்றல் வாய்ந்த இந்த சக்திகள் நெருப்பு பந்துகளாக வெளிப்பட்டு, அஸுரனையும், அவனது சேனைகளையும் அழித்தன. (காசி காண்டம், அத்யாயம் 72) அந்த சக்திகளுள் ஒருவர்தான் த்ரைலோக்ய ஸுந்தரி.

இந்தத் தேவியை வழிபடும் அன்பர்கள் வாழ்வில் அனைத்து வளங்களும் பெறுவர். திருமணமான பெண்கள் இந்தத் தேவியை வழிபட்டால், அவர்கள் தீர்க்க ஸுமங்கலிகளாக வாழும் பாக்யத்தை அடைவர்.

இருப்பிடம்

C/K 7/92, மொஹல்லா காஷ்மீரி மால் கீ ஹவேலி, பிதா மஹேச்வரருக்கு அருகில் என்ற முகவரியில் அமைந்துள்ளது. இந்த தேவி சீதளா தேவி என்றும் அழைக்கப்படுகிறாள். சௌக் வரை ரிக்ஷா அல்லது ஆட்டோவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீகிஷன் யஜ்நிக் மற்றும் ஸ்ரீஆசுதோஷ் யஜ்நிக் கோயிலின் அர்ச்சகர்களாவர். விசேஷ பூஜைகள் செய்ய, (0)9935277580, (0)9305761979 என்ற எண்களில் அவர்களைத் தொடர்பு கொள்ளலாம்.

த்ரிபுரா பைரவி

துர்காஸுரனை எதிர்த்துத் தேவி போரிட்டபொழுது, அவளது உடலிலிருந்து பல்வேறு சக்திகள் வெளிப்பட்டன. மிகுந்த ஆற்றல் வாய்ந்த இந்த சக்திகள் நெருப்புப் பந்துகளாக வெளிப்பட்டு, அஸுரனையும், அவனது சேனைகளையும் அழித்தன. (காசி காண்டம், அத்யாயம் 72) கடைசியில் யுத்தத்தில் தேவி வெற்றி வாகை சூடினாள். அம்பிகையிடமிருந்து நெருப்புப் பந்து வடிவில் வெளிவந்த சக்திகளுள் ஒன்று த்ரிபுரா பைரவியாக வடிவெடுத்தது. த்ரிபுரா பைரவி தேவியை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழிபடுபவர்கள் வாழ்வில் வெற்றி மேல் வெற்றி காண்பர்; அவர்களது உள்ளத்தின் உறுதி வளரும். 90 க்கும் அதிகமான சக்தியின் வடிவங்களில், சில தேவிகளைத்தான் நம்மால் தரிசிக்க முடிகிறது. சில கோயில்கள் கால வெள்ளத்தில் அழிந்துவிட்டன; சில தேவியரின் திருவுருவங்கள் தனிப்பட்ட நபர்களின் வீடுகளுக்கு உள்ளே வைத்துப் பூஜிக்கப்படுகின்றன. அங்கு பொதுமக்கள் சென்று வழிபட அனுமதிக்கப்படுவதில்லை.

இருப்பிடம்

D 5/24, மிர் காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. தசாச்வமேத விச்வநாத கல்லியிலிருந்து வந்து, முதல் சந்திப்பில் வலது பக்கம் திரும்பினால், இந்த இடத்தை அடையலாம். இது மிகவும் பிரஸித்தி பெற்ற இடமாகும். (ருத்ரேச்வரருக்கு அருகில்) த்ரிபுரேச்வரர் சிவலிங்கத்தையும் அன்பர்கள் தரிசிக்கலாம். இதுபற்றி காசி காண்டத்தின் 69வது அத்யாயம் கூறுகிறது.

வழிபாட்டு முறைகள்

காலை 5.00 மணி முதல் 10.00 வரையிலும், மாலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலையிலும் மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது. அன்பர்கள் கம்பிக்கதவுகள் வழியாக நாள் முழுவதும் தரிசனம் செய்யலாம்.

வாராஹி தேவி

காசி காண்டத்தின் 70வது அத்யாயம் வாராஹி தேவியைப் பற்றிக் கூறுகிறது. இந்தத் தேவியை வழிபடுபவர்களை ஆபத்துக்கள் நெருங்குவதில்லை.

காசி காண்டத்தின் 45வது அத்யாயம், அரசன் திவோதாஸின் ஆட்சியில் கலகத்தை ஏற்படுத்துவதற்காக, சிவபெருமான் 64 யோகினிகளைக் காசிக்கு அனுப்பிய நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுகிறது. காசியின் அழகில் மனதைப் பறிகொடுத்த யோகினிகள், இங்கேயே தங்கிவிட முடிவுசெய்தனர். அவர்களுள் ஒருவர் வாராஹி.

வாராஹி மிகுந்த ஆற்றல் வாய்ந்த தேவியாவாள்.

இருப்பிடம்

D16/84, மன்மந்திர் காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் தசாச்வமேத விச்வநாத் கல்லி வரை ரிக்ஷாவில் சென்று,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கல்லியில் (சந்தில்) நுழைந்து, உடனடியாக வலது புறம் திரும்பி நடந்தால், 150 கஜ தூரத்தில் வாராஹி கோயில் இருக்கிறது. அன்பர்கள் அருகிலுள்ளவர்களிடம் வழிகேட்டுச் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.30 மணி முதல் 7.30 மணி வரை மட்டுமே கோயில் திறந்திருக்கிறது. காலையில் ஆரத்தி நடைபெறுகிறது. ஆரத்தியின்போது முன் கதவு சாத்தப்படுகிறது. நடையின் உள்ளே இருந்தால், ஆரத்தியைத் தரிசிக்கலாம். ஆரத்திக்குப் பிறகு, சிறிது நேரம் திறந்திருக்கிறது. பிறகு நாள் முழுவதும் மூடியே இருக்கிறது.

வாராஹி மிகுந்த சக்தி வாய்ந்தவள். தரைத்தளத்திற்கு அடியில் வீற்றிருக்கிறாள். அன்பர்கள் ஒரு மார்பிள் கல் வழியாகத் தேவியைத் தரிசிக்கலாம். அர்ச்சகரைத் தவிர வேறு எவரும் தரைத்தளத்திற்குக் கீழ் உள்ள வாராஹியின் ஸந்நிதிக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

கோயிலில் வழக்கமான பூஜைகளே செய்யப்படுகின்றன. விசேஷ பூஜைகளுக்கு அனுமதி இல்லை.

விந்த்யா தேவி

காசி காண்டத்தின் 70வது அத்யாயம் காசியில் உள்ள தேவிகளைப் பற்றி விவரிக்கிறது. அனைத்தும் சக்தி வாய்ந்த தேவியர் ஆவர். அவர்களுள் விந்த்யா தேவியைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

விந்த்யா தேவியை வழிபடும் அன்பர்கள் வாழ்வில் எல்லாவித ஸித்திகளையும் அடைவர்.

இருப்பிடம்

C/K 2/33, ஸங்கட தேவி கோயிலுக்கு வெளியே என்ற முகவரியில் விந்த்யா வாஸினி என்று அழைக்கப்படும் விந்த்யா தேவி வீற்றிருக்கிறாள். ஸங்கட தேவி கோயிலை விட்டு வெளியே வந்து, கங்கா மஹாலை நோக்கி இடதுபுறம் திரும்பினால், விந்த்யா வாஸினி தேவி கோயிலை அடையலாம். சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து புகழ்பெற்ற ஸங்கட தேவி கோயில் வரை நடந்து செல்லலாம். அல்லது படகில் கங்கா மஹால் காட் வரை சென்று, படிகள் ஏறியும் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் வழக்கம்போல் சென்று வழிபடலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விச்வபுஜ கௌரி

காசி காண்டத்தின் 70வது அத்யாயம், விசாலாக்ஷி கௌரிக்கு அருகில் வீற்றிருக்கும் விச்வபுஜ கௌரி அனைத்து உலகங்களாலும் வணங்கப்படுபவள் என்று கூறுகிறது.

விச்வபுஜ கௌரி, அன்பர்கள் வாழ்வில் தோன்றும் இடர்களைக் களைகிறாள். நவராத்திரியின் எல்லா நாட்களிலும் அன்பர்கள் இந்தக் கௌரியை வழிபடுதல் சிறப்பு. வேண்டும் வரமளிப்பவள் விச்வபுஜ கௌரி.

இருப்பிடம்

D 2/15, தரம் கூபம் (தர்மேச்வரர்) என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் விச்வநாத் கல்லி அல்லது பன்ஷ்படக் விச்வநாத் கல்லி வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து செல்லலாம். பொதுவாக, அன்பர்கள் விச்வநாதர், அன்னபூரணியை தரிசிப்பதுடன் விச்வபுஜ கௌரியையும் தரிசனம் செய்வர்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் வழக்கம்போல் வழிபடலாம்.

யூ ட்யூப் (YOU TUBE) காணொளிகள்



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



ஸ்ரீ ஆதிகேசவர்

யூ ட்யூப் (YOU TUBE) காணொளிகள்



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காசியில் உள்ள விஷ்ணு கோயில்கள்

காசியில் உள்ள முக்கியமான விஷ்ணு கோயில் ஸ்ரீபிந்து மாதவர் கோயில் என்றாலும், பல்வேறு விஷ்ணு வழிபாட்டுத் தலங்கள் காசியில் உள்ளன. பாரத தேசத்தின் பல்வேறு பகுதியில் உள்ள மக்களும் காசியை ஓர் சிவ க்ஷேத்திரமாகவே கருதுகின்றனர். ஆனால் உண்மை அதுவல்ல. புராணங்களின்படி, மஹாவிஷ்ணுவானவர் காசியில் இருந்தபடி சிவனை வழிபடுகிறார். ஸ்ரீபிந்து மாதவர் கோயிலைப் பற்றி விரிவாகவும், பிற விஷ்ணு கோயில்களைப் பற்றிச் சுருக்கமாகவும் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

பிந்து மாதவர்

திவோதாஸ் என்ற அரசனைக் காசியை விட்டு அகற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன், சிவபெருமான் மஹாவிஷ்ணுவைக் காசிக்கு அனுப்பினார். (திவோதாசேச்வரரைப் பார்க்கவும்).

தன்னுடைய காரியத்தில் வெற்றி கண்டவுடன், மஹாவிஷ்ணு காசியின் அழகை ரசித்தார். பஞ்சநத தீர்த்தம், கங்கோதக தீர்த்தம் முதலிய இடங்களைப் பார்த்தார். பஞ்சநத தீர்த்தத்தில், மிகவும் மெலிந்த தேகம் உடையவராகத் தவத்தில் ஈடுபட்டிருந்த ஒரு முனிவரைப் பார்த்தார்.

அக்னி பிந்து என்ற பெயருடைய அந்த முனிவருக்குக் காட்சி கொடுத்தார் மஹாவிஷ்ணு. மஹாவிஷ்ணுவின் தரிசனத்தால் மனம் குளிர்ந்த மனிதர், அவரை நமஸ்கரித்தார். மஹாவிஷ்ணுவைத் துதித்தார்.

முனிவர் மஹாவிஷ்ணுவை முகுந்தா, மதுசூதனா, மாதவா, நாராயணா, ராமபத்ரா, சதுர்புஜா, ஜனார்தனா முதலிய பல்வேறு பெயர்களால் அழைத்துப் போற்றினார். துளசி தளங்களாலும், துளசி மாலைகளாலும், ஸ்ரீமஹாவிஷ்ணுவைப் பூஜிக்கும் பக்தர்கள், அவருடைய பேரருளுக்குப் பாத்திரமாவார்கள் என்று கூறினார்.

மஹாவிஷ்ணுவை பலவாறாகத் துதித்த பிறகு, குவித்த கரங்களுடன் மஹாவிஷ்ணுவின் திருமுன்னர் அமைதியாக நின்றார் முனிவர். வேண்டும் வரத்தைக் கேட்குமாறு மஹாவிஷ்ணு கூற, முனிவர் ஒரே ஒரு வரத்தைக் கேட்டார். பஞ்சநத தீர்த்தத்தில், மஹாவிஷ்ணு எப்பொழுதும் வாசம் செய்ய வேண்டும் என்பதே அது.

மஹாவிஷ்ணு இதற்கு இசைந்தார். மேலும், காசி ஓர் புண்ணிய க்ஷேத்திரம். இங்கு வசிக்கும் அன்பர்கள் பல்வேறு ஸித்திகளை அடைவர் என்றும் கூறினார். காசி நகரம் இருக்கும்வரை, தாம் காசியில் வசிக்கப்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

போவதாகவும், சிவபெருமானின் திரிசூலத்தின்மேல் இந்த நகரம் இருப்பதால், காசிக்கு அழிவில்லை என்றும் கூறினார். மஹாப்ரளய காலத்தில் கூட காசி அழியாது.

மஹாவிஷ்ணுவின் வரத்தால் மிகவும் மனம் மகிழ்ந்த பிந்து மஹரிஷி மேலும் ஓர் வரத்தை வேண்டினார். மஹாவிஷ்ணுவானவர் பஞ்சநத தீர்த்தத்தில், முனிவருடைய பெயருடன் விளங்க வேண்டும் என்று வேண்டினார். பஞ்சநத தீர்த்தத்தில் தொடர்ந்து நீராடிய அன்பர் வேறு எங்கேனும் இறந்தாலும் மோக்ஷம் அடைவார். பஞ்சநத தீர்த்தத்தில் நீராடி, மஹாவிஷ்ணுவை வழிபடும் அன்பர்கள் வாழ்வில் செல்வ வளம் பெறுவார்கள் என்ற வரத்தையும் பிந்து மஹரிஷி பெற்றார்.

பிந்து மஹரிஷியின் வேண்டுகோளின்படி, பஞ்சநத தீர்த்தத்தில் பிந்து மாதவர் என்ற பெயருடன் மஹாவிஷ்ணு வீற்றிருக்கிறார். அவருடைய இருப்பினால் இந்த இடம் மிகுந்த புனிதத்தை அடைந்துள்ளது. பஞ்சநத தீர்த்தத்தில் நீராடி, பண்டிதர்களைக் கௌரவிக்கும் அன்பர்கள் வாழ்வில் வளம் பெறுவர்.

தெரிந்தோ தெரியாமலோ செய்த பல்வேறு பாவங்களைப் போக்கக்கூடிய இந்தத் தீர்த்தம் பிந்து தீர்த்தம் என்று வழங்கப்படுகிறது. கார்த்திகை மாதத்தில் பஞ்சநத தீர்த்தத்தில் நீராடி, பிந்து மாதவரை வழிபடுபவர்கள் முக்தி அடைவர்.

பஞ்சநத தீர்த்தத்தில் கார்த்திகை மாதத்தில் வழிபட வேண்டியதன் முக்கியத்துவத்தைக் காசி காண்டத்தின் 60வது அத்யாயம் கூறுகிறது. ஸ்ரீவிச்வநாதரே, கார்த்திகை மாதத்தில் பஞ்சநத தீர்த்தத்தில் நீராடுகிறார்.

ஸத்ய யுகத்தில் தாம் ஆதிமாதவர் என்றும், த்ரேதா யுகத்தில் ஆனந்த மாதவர் என்றும், த்வாபர யுகத்தில் ஸ்ரீமாதவர் என்றும், கலியுகத்தில் பிந்து மாதவர் என்றும் தாம் அழைக்கப்படுவதாக மஹாவிஷ்ணு கூறியிருக்கிறார்.

மஹாவிஷ்ணுவைத் தரிசிக்கும் பாக்யம் பெற்ற பிந்து மஹரிஷி மகிழ்ச்சியுடன் அவரைப் போற்றிப் பணிந்து வணங்கினார்.

இருப்பிடம்

கே 22/37, பஞ்சகங்கா காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் பைரோநாத் வரை ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம். இது மிகவும் ப்ரஸித்தி பெற்ற கோயிலாகும். அன்பர்கள் பஞ்சகங்கா காட் வரை படகில் சென்றும்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இவ்விடத்தை அடையலாம்.

பஞ்சநத தீர்த்தம் தற்போது பஞ்சகங்கா தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. கார்த்திகை மாதத்தில் இக்கோயிலில் வழிபடுவது சிறப்பாகும். (பார்க்க : பஞ்சகங்கா தீர்த்தம்)

வழிபாட்டு முறைகள்

காலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை கோயில் திறந்திருக்கிறது. அதிகாலை 4.00 மணிக்கு, மங்கள ஆரத்தியும், காலை 8.00 மணிக்கு ச்ருங்கார ஆரத்தியும், இரவு 8.00 மணிக்கு சயன ஆரத்தியும் நடைபெறுகிறது. ப்ரபோதினி ஏகாதசி என்று அழைக்கப்படும் கார்த்திகை மாத சுக்ல பக்ஷ ஏகாதசி மிக முக்கியமான தினமாகும்.

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீஹரிஹர கணேஷ் பட்வர்தன் மற்றும் ஸ்ரீமுரளீதர கணேஷ் பட்வர்தன் ஆகியோர் கோயிலின் அர்ச்சகர்கள் ஆவர். விசேஷ பூஜைகள் நடத்த (0)9838575947 என்ற எண்ணில் அவர்களை தொடர்பு கொள்ளலாம்.

ஆதி கேசவர்

காசி காண்டத்தின் 61வது அத்யாயம், காசியில் அமைந்துள்ள பல்வேறு விஷ்ணு கோயில்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. மஹா விஷ்ணு பிந்து மஹரிஷியிடம் (பிந்து மாதவர் கோயில் பகுதியைப் பார்க்க), ஆதி கேசவரை வழிபடுபவர்களின் துன்பங்கள் எல்லாம் நீங்கி, இன்பம் பெறுவர் என்று கூறுகிறார்.

ஆதி கேசவரை வழிபடுபவர்கள் முக்தி பெறுகிறார்கள். ஆதிகேசவர் வருண கங்கை ஸங்கமத்தில் ஸங்கமேச்வரர் லிங்கத்தை ஸ்தாபித்து, அங்கு வழிபடுபவர்களுக்கு முக்தியளிக்கிறார்.

இருப்பிடம்

ஏ 37/51, ராஜ்காட் கோட்டை என்ற பகுதியில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை ஆட்டோ ரிக்ஷா, சைக்கிள் ரிக்ஷா அல்லது காரில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீ சி.பி. த்ரிபாதி என்பவரது பொறுப்பில் கோயில் இருக்கிறது. அவரது குடும்பத்தினர் பல தலைமுறைகளாகப் பூஜை செய்து வருகின்றனர். சிறப்பு பூஜைகள் நடத்த, ©9305177440.

ஆதித்ய கேசவர்

அம்பரீஷ தீர்த்தத்தில் ஆதித்ய கேசவரை வழிபடலாம் என மஹாவிஷ்ணு, பிந்து மஹரிஷியிடம் கூறுகிறார்.

ஆதித்ய கேசவரை வழிபடும் அன்பர்கள் அனைத்துப் பாவங்களிலிருந்து விடுபட்டு அருள் பெறுவர். அம்பரீஷ தீர்த்தம் இப்போது இல்லை. அன்பர்கள் கங்கையில் நீராடலாம்.

இருப்பிடம்

ஏ 37/51, ராஜ்காட் கோட்டை என்ற பகுதியில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை ஆட்டோ ரிக்ஷா, சைக்கிள் ரிக்ஷா அல்லது காரில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை.

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீ சி.பி. த்ரிபாதி என்பவரது பொறுப்பில் கோயில் இருக்கிறது. அவரது குடும்பத்தினர் பல தலைமுறைகளாகப் பூஜை செய்து வருகின்றனர். சிறப்பு பூஜைகள் நடத்த, ©9305177440.

அத்யுக்ர (அதி உக்ர) நரஸிம்ஹர்

கமலேச்வர சிவனுக்கு வடக்குப்புறத்தில் மஹாவிஷ்ணு அத்யுக்ர நரஸிம்ஹர் வடிவில் வீற்றிருக்கிறார்.

மிகுந்த சக்திவாய்ந்த அதி உக்ர நரஸிம்ஹரை வழிபடுபவர்கள் எல்லா பாவங்களிலிருந்தும் விடுபடுவர்.

இருப்பிடம்

C/K 8/21, கோமத் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று கோயிலை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அடையலாம். கோமத் புகழ்பெற்ற இடமாகும்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் 10.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தாங்களே வழிபடலாம்.

பீஷ்ம கேசவர்

வ்ருத்த காலேச்வரருக்கு அருகில் பீஷ்ம கேசவர் வீற்றிருக்கிறார்.

பீஷ்ம கேசவரை வழிபடுவதால், அன்பர்களுக்கு ஏற்படும் பயங்கரமான தடைகளும் நீங்கும்.

இருப்பிடம்

வ்ருத்த காலேச்வரருக்கு அருகில், கே 52/39. ம்ருத்யுஞ்ஜய மஹாதேவர் கோயிலினுள் அமைந்துள்ளது. கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது.

வழிபாட்டு முறைகள்

கோயிலுக்கென்று தனியாக அர்ச்சகர் எவரும் இல்லை. ஸ்ரீ நவீன் தத் வியாஸ் என்பவரின் செல் 9026667628 என்ற எண்ணில் அவரை தொடர்பு கொள்ளலாம்.

ப்ருகு கேசவர்

பார்கவ தீர்த்தத்தில் ப்ருகு கேசவர் என்ற ரூபத்தில் தாம் வீற்றிருப்பதாக மஹாவிஷ்ணு பிந்து மஹரிஷியிடம் கூறினார்.

பார்கவ தீர்த்தத்தில் நீராடி, ப்ருகு கேசவரை வழிபடும் அன்பர்கள் வாழ்வில் எல்லா வளங்களும் பெறுவர். அவர்களுக்கு ஆசைகள் பூர்த்தி அடையும். பார்கவ தீர்த்தம் தற்போது இல்லை.

இருப்பிடம்

கோலா காட் (படித்துறை) படிகளில் ப்ருகு கேசவர் வீற்றிருக்கிறார். ப்ரஹ்லாத் காட் சந்திப்பு சாலை வரை ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம். அல்லது கோலா காட் வரை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச்சென்று அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

கங்கா கேசவர்

கங்கா கேசவ தீர்த்தத்தில் மஹாவிஷ்ணு கங்கா கேசவர் என்ற பெயரில் வீற்றிருக்கிறார் எனக் காசி காண்டம் விவரிக்கிறது.

கங்கா கேசவரை வழிபடும் அன்பர்கள் (வைகுண்டத்தில்) விஷ்ணு லோகத்தில் மதிக்கப்படுவர். இந்தத் தீர்த்தத்தில் நீராடி, தகுந்த தானங்களுடன் பித்ருக்களுக்குச் சிராத்தம் செய்பவர்கள் தங்கள் முன்னோரை நூறாண்டுகள் த்ருப்திப்படுத்துகின்றனர். இந்தத் தீர்த்தம் தற்போது இல்லை. அன்பர்கள் கங்கையில் நீராடலாம்.

இருப்பிடம்

டி 1/67, லலிதா காட் என்ற முகவரியில் உள்ளது. அன்பர்கள் தசாச்வமேத காட் வரை ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து அடையலாம். சந்துகள் வழியாகச் செல்வதைக் காட்டிலும், காட் வழியாக நடந்து செல்வது எளிது. நேபாள பசுபதிநாத் கோயிலுக்குக் கீழே கங்கா கேசவர் வீற்றிருக்கிறார். கிழக்குப் பகுதியில் உள்ள சுவற்றில் சிவலிங்கத்திற்கு எதிர்புறம் கங்கே கேசவரை தரிசிக்கலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் தரிசிக்கலாம்.

கோபி கோவிந்தர்

கோபி கோவிந்த தீர்த்தத்தில் மஹாவிஷ்ணு கோபி கோவிந்தராக வீற்றிருக்கிறார்.

கோபி கோவிந்தரை வழிபடுபவர்கள் மஹாவிஷ்ணுவின் அருளுக்குப் பாத்திரமாகின்றனர். கோபி கோவிந்த தீர்த்தம் தற்போது இல்லை.

இருப்பிடம்

கே 4/24 லால் காட், பிர்லா ஸம்ஸ்க்ருத வித்யாலயா, பிர்லா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஹவுஸ் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் பைரோநாத் அல்லது மச்சோதரி வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று கோபி கோவிந்தரை அடையலாம். அல்லது லால் காட் வரை படகில் சென்று அங்கிருந்து படிகள் ஏறிச்சென்றும் அடையலாம். இக்கோயிலில் காசி காண்டம் 70வது அத்யாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நாராயணி தேவியும் (லக்ஷ்மி தேவி) வீற்றிருக்கிறாள்.

வழிபாட்டு முறைகள்

காலை 7.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை கோயில் திறந்திருக்கிறது. காலையில் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்கள்

கே. கே. மிச்ரா கோயிலுக்கு அருகில் உள்ளார். விசேஷ பூஜைகளுக்கு ஏற்பாடு செய்ய (0)9889291651 என்ற எண்ணில் அவரைத் தொடர்புகொள்ளலாம்.

ஞான கேசவர்

ஞான கேசவருக்கு அருகில் ச்வேத தீபம் என்றொரு தீர்த்தம் இருப்பதாகக் காசி காண்டம் குறிப்பிடுகிறது. ச்வேத தீபத்தில் நீராடி, ஞான கேசவரை வழிபடும் பக்தர்கள் வாழ்வில் முடிவான ஞானத்தைப் பெறுவர்.

இந்தத் தீர்த்தம் தற்போது இல்லை. ஞான கேசவரை வழிபடுவதால் ஒருவர் கல்வியில் சிறந்து விளங்குவார். தீர்த்தத்தில் வழிபடுவதற்கு பதிலாக, அன்பர்கள் தற்போது கங்கையில் நீராடுகின்றனர். ஞான கேசவர் கங்கைக்கரையில் வீற்றிருக்கிறார்.

இருப்பிடம்

ஏ 37/51, ஆதி கேசவர் கோயில், ராஜ்காட் கோட்டை என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை கார், ரிக்ஷா அல்லது ஆட்டோ ரிக்ஷாவில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை, மாலை 4.00 மணி முதல் 10.00 மணி வரை கோயில் திறந்திருக்கிறது. கோயில் திறந்திருக்கும் நேரம் மாற்றத்திற்கு உட்பட்டது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீ சி.பி.த்ரிபாதி கோயிலின் பொறுப்பாளராக இருக்கிறார். பல

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தலைமுறைகளாக அவரது குடும்பத்தினரே கோயில் பொறுப்பில் இருந்து வருகின்றனர். விசேஷ பூஜைகள் செய்ய (0)9305177440 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

ஞான மாதவர்

ஞான வாபிக்கு முன்னால் ஞான மாதவர் என்ற பெயருடன் மஹாவிஷ்ணு வீற்றிருக்கிறார். இவரை வழிபடுவதால், வாழ்வின் அனைத்து நிலைகளிலும் ஒருவர் சிறந்த அறிவாற்றலை அடையலாம்.

இருப்பிடம்

C/K 35/21, விச்வநாதர் கோயில் வளாகத்திற்குள், அக்ஷய வடத்திற்கு அருகில் ஞான மாதவர் வீற்றிருக்கிறார். இந்த கோயிலுக்குச் செல்ல விச்வநாத கல்லி என்ற குறுகிய சந்து வழியாகச் செல்ல வேண்டும். விச்வேச்வரர் கோயிலுக்குச் செல்லும் வழியைப் பார்க்கவும்.

வழிபாட்டு முறைகள்

அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

ஹயக்ரீவ கேசவர்

ஹயக்ரீவ தீர்த்தத்தில், ஹயக்ரீவ கேசவர் என்ற திருநாமத்துடன் மஹாவிஷ்ணு வீற்றிருப்பதாகக் காசி காண்டம் குறிப்பிடுகிறது.

ஹயக்ரீவ கேசவரை வழிபடும் அன்பர்கள் திருமாலின் தாமரைத் திருவடிகளை அடைகின்றனர். ஹயக்ரீவ தீர்த்தம் தற்போது இல்லை.

இருப்பிடம்

B 3/25, ஆனந்தமயி ஹாஸ்பிடல் அருகில், பதைனி என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை ஆட்டோ, கார் அல்லது சைக்கிள் ரிக்ஷாவில் செல்லலாம். ஸோனர்புரா பகுதியிலிருந்து வரும்பொழுது ஹாஸ்பிடலுக்கு முன்னரே ஹயக்ரீவ கேசவரைத் தரிசிக்கலாம். காசி கண்டம், அத்யாயம் 45 ல் கூறப்பட்டுள்ள ஹயக்ரீவ யோகினியும் இங்கு வீற்றிருக்கிறாள்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கோலாஹல நரசிம்மர்

அதியுக்ர நரசிம்மருக்கு அருகில் கோலாஹல நரசிம்மர் வீற்றிருக்கிறார். இவரை வழிபடுவதால், பாவங்கள் அழிகின்றன.

இருப்பிடம்

C/K 8/81, ஸித்தி விநாயகருக்கு மேலே, நரசிம்ம மடத்திற்குள் கோலாஹல நரசிம்மர் வீற்றிருக்கிறார். அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 4.00 மணி முதல் 11.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 9.30 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலையிலும் மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

லக்ஷ்மி நரசிம்மர்

லக்ஷ்மி நரசிம்ம தீர்த்தத்தில் நீராடி, அன்பர்கள் ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரை வழிபட வேண்டும் என்று காசி காண்டம் கூறுகிறது.

ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரை வழிபடும் அன்பர்கள் வாழ்வில் அனைத்து வளமும், நலமும், மறுபிறவியிலிருந்து விடுதலையும் அடைகின்றனர். லக்ஷ்மி நரசிம்ம தீர்த்தம் தற்போது இல்லை.

இருப்பிடம்

கே 20/159, ராஜ் மந்திர், தக்ஷிண முகி (ஒற்றைக் கண்) ஹனுமான்ஜி கோயிலின் உள்ளே என்ற இடத்தில் அமைந்திருக்கிறது. காசி வ்யாயாமசாலா/ஸுவோதினி வித்யா மந்திருக்கு அருகில் இந்த கோயில் இருக்கிறது. ராஜ் மந்திர் காய் காட்டிற்கு அருகில் உள்ளது.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் நன்பகல் 12.00 மணி வரையிலும், மதியம் 2.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீகோவிந்த துபே கோயிலின் அர்ச்சகராவார். (0)9307942323 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மஹாபல நரசிம்மர்

ஓங்காரேச்வரருக்குக் கிழக்கு திசையில், மஹாவிஷ்ணு மஹாபல நரசிம்மர் என்ற திருநாமத்துடன் வீற்றிருக்கிறார்.

மஹாபல நரசிம்மரை வழிபடும் அன்பர்கள் இறந்த பிறகு, யமதூதர்களைக் காண மாட்டார்கள்.

இருப்பிடம்

ஏ 2/9, த்ரிலோசனுக்கு வடக்கே, காமேச்வரர் கோயில் வளாகத்தில் அமைந்துள்ளது. மச்சோதரிக்கு அடுத்துள்ள ப்ரஹ்லாத் காட் என்ற புகழ்பெற்ற இடத்திலிருந்து கோயில் சமீபத்தில் இருக்கிறது. அன்பர்கள் மச்சோதரியைக் கடந்து, பிர்லா ஹாஸ்பிடல் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 9.30 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலை 5.30 மணிக்கு மங்கள ஆரத்தியும், இரவு 9.30 மணிக்கு சயன ஆரத்தியும் நடைபெறுகிறது.

விசேஷ பூஜைகள் நடத்த பூஜாரியை முன்பே தொடர்பு கொள்ளுதல் நலம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீராஜேஷ் கிரி கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9839703054 என்ற எண்ணில் அவரைத் தொடர்புகொள்ளலாம்.

நர நாராயணர்

நாராயண தீர்த்தத்தில் ஸ்ரீநர நாராயணர் வீற்றிருப்பதாகக் காசி கண்டம் கூறுகிறது.

நர நாராயணரை வழிபடுபவர்கள் ஸ்ரீமஹாவிஷ்ணுவிற்குச் சமமானவர்களாகிவிடுவார்கள். நாராயண தீர்த்தம் தற்போது இல்லை.

இருப்பிடம்

ஏ 1/72, மேதா காட் என்ற இடத்தில் பதரி நாராயணர் என்ற பெயரில் வீற்றிருக்கிறார். த்ரிலோசன் பகுதி வரை ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது.

நாரத கேசவர்

நாரத தீர்த்தத்தில், நாரத கேசவர் என்ற பெயருடன் ஸ்ரீமஹாவிஷ்ணு வீற்றிருப்பதாகக் காசி காண்டம் கூறுகிறது.

நாரத தீர்த்தத்தில் நீராடி, நாரத கேசவரை வழிபடும் அன்பர்கள், மஹாவிஷ்ணுவின் அருள்பெற்று ஞானம் பெறுவர். நாரத தீர்த்தம் தற்போது இல்லை.

ஆயிரம் அல்லது இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னால் இதுபோன்று பல தீர்த்தங்கள் இருந்திருக்கின்றன. இப்பொழுது பல வற்றிவிட்டன. காசி காண்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்த்தங்கள் தற்போது இல்லாத சூழ்நிலையில் கங்கையில் நீராடலாம்.

இருப்பிடம்

ஏ 10/80, ப்ரஹ்லாத் காட், சீத்லா மந்திருக்கு எதிர்புறத்திலுள்ள ப்ரஹ்லாதேச்வரர் கோயிலுக்குள் உள்ளது. ப்ரஹ்லாத் காட் சௌராஹா வரை ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம். ப்ரஹ்லாத் காட் வரை படகில் சென்று அங்கிருந்து நடந்து சென்று அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

ப்ரசண்ட நரசிம்மர்

சண்ட பைரவருக்குக் கிழக்கில், ப்ரசண்ட நரசிம்மர் என்ற பெயருடன் ஸ்ரீமஹாவிஷ்ணு வீற்றிருப்பதாகக் காசி காண்டம் குறிப்பிடுகிறது.

ப்ரசண்டம் என்றால் பெரிய என்று பொருள். ப்ரசண்ட நரசிம்மரை வழிபடும் அன்பர்கள் செய்த பெரிய பாவங்களும் நீங்குகின்றன.

இருப்பிடம்

B 1/151, ஜகந்நாதர் கோயில், அஸி காட் என்ற முகவரியில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை ரிக்ஷாவில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையிலும், மாலை 3.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலையிலும் மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

ப்ரஹ்லாத கேசவர்

ப்ரஹ்லாத தீர்த்தத்தில் தாம் ப்ரஹ்லாத கேசவர் என்ற பெயருடன் விளங்குவதாக, மஹாவிஷ்ணு பிந்து மஹரிஷியிடம் கூறுகிறார்.

ப்ரஹ்லாத தீர்த்தத்தில் நீராடி, ப்ரஹ்லாத கேசவரை வழிபடும் அன்பர்கள், மஹாவிஷ்ணுவின் திருவருளுக்குப் பாத்திரமாவார்கள். ப்ரஹ்லாத தீர்த்தம் தற்போது இல்லை.

இருப்பிடம்

ஏ 10/80, ப்ரஹ்லாத கட்டத்தில், ப்ரஹ்லாதேச்வரர் கோயிலுக்கு உட்புறம், கங்கையை நோக்கி வலதுபுற சுவற்றில் வீற்றிருக்கிறார். அன்பர்கள் ப்ரஹ்லாத் காட் சௌராஹா வரை ரிக்ஷாவில் சென்று அங்கிருந்து நடந்து சென்று இவ்விடத்தை அடையலாம். அல்லது ப்ரஹ்லாத கட்டம் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் 11.00 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் 7.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலையில் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீரமேஷ் சந்த் திவாரி கோயிலில் உள்ளார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9335566471 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

ப்ரயாக மாதவர்

ப்ரயாக தீர்த்தத்தில் நீராடி, ப்ரயாக மாதவரை வழிபட வேண்டும் என்று காசி காண்டம் கூறுகிறது. ப்ரயாக தீர்த்தம் தசாச்வமேத கட்டத்திற்கு வடக்கே இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

ப்ரயாக மாதவரை வழிபடும் பக்தர்களது பாவங்கள் எல்லாம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தொலைகின்றன. ப்ரயாக தீர்த்தத்தில் நீராடுவதைப் பற்றி மிக விசேஷமாகக் காசி காண்டம் பேசுகிறது. ப்ரயாக தீர்த்தம் என்ற பெயரில் தற்போது ஒன்றும் இல்லையென்றாலும், அது தசாச்வமேத கட்டத்தின் பரந்த எல்லைக்குள்தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கு ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம். ஸ்கந்த புராணத்தை, பகவான் ஸ்ரீவேத வ்யாஸர் சிந்தித்து எழுதத் துவங்கிய காலத்தில், வாராணசியில் கங்கைக்கரையில் ஐந்து தெய்வீக சிறப்புமிக்க கட்டங்களே இருந்தன. அவை அஸி, தசாச்வமேத், மணிகர்ணிகா, பஞ்சகங்கா மற்றும் வருண் முதலியவையே ஆகும். இன்றும் கூட, தென்னிந்தியாவிலிருந்து காசிக்கு வரும் பக்தர்கள் இந்த ஐந்து கட்டங்களில்தான் ச்ராத்த கர்மாக்களைச் செய்கிறார்கள். நூற்றாண்டுகளின் காலவெள்ளத்தில், பல அரசர்கள் மற்றும் அரச குடும்பங்களின் பெயர்களில் கட்டங்கள் தோன்றியுள்ளன. சொல்லப் போனால், தசாச்வமேத கட்டத்தின் எல்லைக்குள் கங்கைக்கரையில் தற்போது உள்ள பல கட்டங்கள் அடங்கிவிடும்.

ஆகவே, காசி காண்டத்தில் கூறப்பட்டுள்ள ப்ரயாக தீர்த்தம் தசாச்வமேத கட்டத்தின் ஓர் பகுதியே ஆகும். அன்பர்கள் இரண்டையும் ஒன்றாகவே கருதலாம். மாக (தை) மாதத்தில் இந்தத் தீர்த்தத்தில் நீராடி, ப்ரயாக மாதவரைத் தரிசித்தல் மிகவும் சிறப்புவாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இவ்வாறு செய்யும் அன்பர்கள் வாழ்வில் தனம், தான்யம், மகிழ்ச்சி நிறைந்த குடும்பம், மோக்ஷம் ஆகிய அனைத்து செல்வங்களும் பெறுவர்.

இருப்பிடம்

D 17/111, ராம் மந்திர் வளாகம், தசாச்வமேத கட்டம் என்ற முகவரியில் அமைந்துள்ளது. சிலர் இந்த மூர்த்தியைத் தரணி வராஹர் என்றும் குறிப்பிடுகிறார்கள். (ஆதாரம் : வாராணசி வைபவம் - பண்டித் குபேர்நாத் சுகுல்). அன்பர்கள் தசாச்வமேத கட்டம் வரை ரிக்ஷாவில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 9.30 மணி வரையிலும் திறந்திருக்கிறது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை. காலையிலும் மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீராம் ப்ரஸாத் கோயிலில் உள்ளார். விசேஷ பூஜைகள் செய்ய ()9889660341 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

ச்வேத மாதவர்

விசாலாக்ஷி தேவிக்கு அருகில் ச்வேத மாதவர் என்ற திருப்பெயருடன் ஸ்ரீமஹாவிஷ்ணு வீற்றிருப்பதாகக் காசி காண்டம் குறிப்பிடுகிறது.

ச்வேத மாதவரை வழிபடும் அன்பர்கள் இறைநிலை அடைவர்.

இருப்பிடம்

D 3/71, பெரிய ஹநுமான் கோயில், மிர் காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. கோயிலின் உள்ளே, ஹநுமான் விக்ரஹத்திற்கு எதிரில் ஸ்ரீச்வேத மாதவர் வீற்றிருக்கிறார். அன்பர்கள் தசாச்வமேத் வரை ரிக்ஷாவில் சென்று, பின் நடந்து செல்லலாம். அல்லது மிர் காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 7.00 மணி முதல் பகல் 1.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலையிலும் மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீராஜேச்வர் ப்ரஸாத் கோயிலின் அர்ச்சகராவார்.

தாம்ர வராஹர்

மஹா விஷ்ணு தாம்ர வராஹராகக் காட்சியளிக்கிறார். தாம்ர த்வீபத்திலிருந்து தோன்றியவர் தாம்ர வராஹர்.

தாம்ர வராஹரை வழிபடுவதால், அன்பர்களின் எண்ணங்கள் ஈடேறும்.

இருப்பிடம்

சௌக் பகுதியில் 33/57 என்ற எண்ணுடைய வீட்டிற்கு வெளிப்புறத்தில் நீல்கந்த் மொஹல்லா மேட்டில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து ப்ரஸித்திபெற்ற நீல்கண்ட் கோயில் வரை நடந்து செல்லலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

த்ரிபுவன கேசவர்

த்ரிலோக ஸுந்தரி வந்தி தேவியின் தெற்கு காசியில் மஹாவிஷ்ணு த்ரிபுவன கேசவர் என்ற திருப்பெயருடன் வீற்றிருக்கிறார். (காசி காண்டம் புவன கேசவர் என்று குறிப்பிடுகிறது).

ஶ்ரீத்ரிபுவன கேசவரை வழிபடும் அன்பர்கள் மறுபடி கருக்குழியில் விழமாட்டார்கள். (அவர்களுக்கு மறுபிறவி கிடையாது என்பது கருத்து).

இருப்பிடம்

D 17/100 பண்டி தேவி, தசாச்வமேத காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. காட் டிற்கு முன்னால், அன்பர்கள் வலதுபுறம் திரும்ப வேண்டும். அங்குள்ள காய்கறி மார்க்கெட்டில் விசாரித்தல் நலம். கோயிலின் அர்ச்சகர் இந்தத் தெய்வத்தைத் தரணி வராஹர் என்ற பெயர் சொல்லி அழைக்கிறார். பண்டிதர்கள் சிலர் தரணி வராஹர் D 17/111, ராம் மந்திர் என்ற முகவரியில் ப்ரயாக் மாதவர் என்ற பெயருடன் வீற்றிருப்பதாகவும் கூறுவதால் இந்த விஷயத்தில் சிறுகுழப்பம் உள்ளது.

காசி காண்டம் தெற்குக் காசியைப் பற்றி விவரிக்கிறது. காசி கண்டத்தின்படி நாம் முக்தி க்ஷேத்திரத்தை எடுத்துக் கொண்டால், மத்யமேச்வரர் நடுவில் உள்ளார். தசாச்வமேத கட்டம் தெற்கில் உள்ளது. ஆனால் தற்போது உள்ள காலகட்டத்தில், தசாச்வமேத கட்டமே பல்வேறு ஆன்மிக மற்றும் கலாசார செயல்பாடுகளின் மையமாகத் திகழ்கிறது.

கோயிலில் ஓர் சிவலிங்கமும் உள்ளது. அர்ச்சகர், அவரை ப்ரயாகேச்வரர் என்ற பெயரிட்டு அழைக்கிறார்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 8.00 மணி முதல் 11.00 மணி வரை திறந்திருக்கிறது. அன்பர்கள் கம்பிக்கதவுகள் வழியாக நாள் முழுவதும் தரிசனம் செய்யலாம்.

கோயிலின் அர்ச்சகர்

ஶ்ரீபாபு மஹராஜ் கோயிலின் அர்ச்சகராவார். விசேஷ பூஜைகள் செய்ய 0542-2455042 என்ற எண்ணில் இரவு 9.00 மணிக்கு மேல்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

த்ரிவிக்ரமர்

த்ரிலோசனுக்கு வடக்குப்புறத்தில் மஹாவிஷ்ணு த்ரிவிக்ரமர் என்ற திருநாமத்துடன் எழுந்தருளி இருக்கிறார்.

இவரை வழிபடும் அன்பர்கள் வாழ்வில் பாபங்கள் நீங்கப்பெற்று லக்ஷ்மியை (நீங்காத செல்வத்தை) அடைவர்.

இருப்பிடம்

ஏ-2/80, த்ரிலோசனேச்வரர் கோயில் என்ற முகவரியில் அமைந்துள்ளது. இந்த விக்ரஹத்திற்கு மேல் வீற்றிருப்பவர் ப்ருஹஸ்பதியாவார். மச்சோதரியைக் கடந்து, பிர்லா ஹாஸ்பிடல் வரை சென்றால், அங்கிருந்து அருகே உள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை ஆட்டோ அல்லது ரிக்ஷாவில் செல்லலாம். அல்லது த்ரிலோசன் காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.30 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 11.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது. காலை 5.30 மணிக்கு மங்கள ஆரத்தியும், இரவு 11.00 மணிக்கு சயன ஆரத்தியும் நடைபெறுகின்றன. விசேஷ பூஜைகள் செய்ய, அர்ச்சகரை முன்பே தொடர்பு கொள்ளுதல் நலம்.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீ லல்லு பாண்டே கோயிலின் அர்ச்சகர். விசேஷ பூஜைகள் செய்ய 9307967228 என்ற எண்ணில் அவரை தொடர்பு கொள்ளலாம்.

வைகுண்ட மாதவர்

வைரோசனேச்வரருக்குக் கிழக்குப்புறத்தில் மஹாவிஷ்ணு வைகுண்ட மாதவர் என்ற பெயருடன் வீற்றிருக்கிறார்.

பக்தியுடன் வைகுண்ட மாதவரை வழிபடுபவர்கள், வைகுண்டத்தில் விஷ்ணுவை வழிபட்ட பலனைப் பெறுவர். இறந்த பிறகு, அவர்கள் வைகுண்ட பதவி பெறுவர்.

இருப்பிடம்

7/165, ஹரிச்சந்த்ரேச்வரர், ஸிந்தியா காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அங்கிருந்து ப்ரஸித்திபெற்ற ஸங்கடதேவி கோயில் வழியாக நடந்து சென்று அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள்முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பப்படி வழிபடலாம்.

வாமன கேசவர்

வாமன தீர்த்தத்தில் தாம் வாமன கேசவர் என்ற பெயருடன் வீற்றிருப்பதாக ஸ்ரீமஹாவிஷ்ணு குறிப்பிடுகிறார்.

வாமன தீர்த்தத்தில் நீராடி, வாமன கேசவரை வழிபடும் அன்பர்கள் வாழ்வில் அனைத்து நலன்களும் பெறுவர். வாமன தீர்த்தம் தற்போது இல்லை.

இருப்பிடம்

ஏ 2/29, த்ரிலோசன் என்ற முகவரியில் அமைந்துள்ளது. மச்சோதரியைக் கடந்து பிர்லா மருத்துவமனைக்கு அருகில் உள்ளது. இந்த இடம் வரை ஆட்டோ அல்லது ரிக்ஷாவில் செல்லலாம்.

அல்லது த்ரிலோசன் காட் வரை படகில் சென்று அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

ஸ்ரீவாமன கேசவர் மதுசூதனர் என்ற பெயராலும் அழைக்கப்படுகிறார். அக்ஷய த்ருதியை அன்று அன்பர்கள் இவரை வழிபட்டு, வெண்ணெய் ஸமர்ப்பிக்கின்றனர்.

வழிபாட்டு முறைகள்

காலை 5.30 மணி முதல் பகல் 1.00 மணி வரையிலும், மாலை 3.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கிறது.

கோயிலின் அர்ச்சகர்கள்

ஸ்ரீசந்தோஷ் குமார் மித்ரா கோயிலில் உள்ளார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9335460883 என்ற எண்ணில் அவரைத் தொடர்புகொள்ளலாம்.

வீர மாதவர்

வீரேச்வரருக்கு வடக்கே வீர மாதவர் என்ற திருநாமத்துடன் மஹாவிஷ்ணு வீற்றிருக்கிறார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விரதமிருந்து வீர மாதவரை வழிபடும் அன்பர்கள் எமவாதனைக்கு உட்பட மாட்டார்கள்.

இருப்பிடம்

வீர மாதவர் இரண்டு இடங்களில் வீற்றிருக்கிறார். ஒன்று, 7/158, ஆத்மவீரேச்வரர் கோயில் கதவுக்கு அருகிலும் (ராஹு விக்ரஹம்), மற்றொன்று அதற்கு எதிர்புறத்தில் 7/30 என்ற இடத்தில் ஜன்னல் வழியாகவும் தரிசிக்கலாம்.

அன்பர்கள் சௌக் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து ப்ரஸித்திபெற்ற ஸங்கடதேவி கோயில் வழியாக நடந்து சென்று அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

விதர நரஸிம்ஹர்

விதர நரஸிம்ஹர் விதர தீர்த்தத்தில் வீற்றிருக்கிறார். விதர நரஸிம்ஹரை வழிபடும் அன்பர்கள் வாழ்வில் அனைத்துவித தடைகளும் நீங்கிவிடும். விதர தீர்த்தம் தற்போது இல்லை.

இருப்பிடம்

ஏ 10/80, ப்ரஹ்லாத் காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. மச்சோதரியைக் கடந்து பிர்லா ஹாஸ்பிடல் வரை ரிக்ஷாவில் சென்று, அங்கிருந்து நடந்து சென்று இந்த இடத்தை அடையலாம். அல்லது ப்ரஹ்லாத் காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 4.30 மணி முதல் பகல் 12.00 வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை கோயில் திறந்திருக்கிறது. வைசாக சுக்ல த்ரியோதசி அன்று ந்ருஸிம்ஹ ஜயந்தீ உத்ஸவம் வெகு சிறப்பாக நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீரமேஷ் சந்த் திவாரி கோயிலுக்கு அருகில் உள்ளார். விசேஷ பூஜைகள் செய்ய (0)9335566471 என்ற எண்ணில் அவரைத் தொடர்புகொள்ளலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விடங்க நரஸிம்ஹர்

காசி காண்டம் 61வது அத்யாயம், விடங்க ந்ருஸிம்ஹரைப் பற்றிக் கூறுகிறது.

இவரை வழிபடும் அன்பர்கள் உள்ளத்தில் உறுதியும், வீரமும், ஆற்றலும் பெறுவர்.

இருப்பிடம்

கேதாரேச்வரர் கோயிலின் கிழக்குக் கதவுக்கு வெளியே, A 6/102 என்ற எண்ணில் அமைந்துள்ளது. இந்தக் கதவு கங்கையை நோக்கியபடி உள்ளது. விடங்க ந்ருஸிம்ஹரின் விக்ரஹம் கேதார் கட்டத்தின் படிகளில் இடதுபுறம் உள்ளது. ப்ரஸித்தபெற்ற கேதாரீச்வரர் கோயில் வரை ரிக்ஷாவில் செல்லலாம். அல்லது கேதார் காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறியும் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

யக்ஞ வராஹர்

யாக்ய வராஹ தீர்த்தத்தில் யாக்ய வராஹர் என்ற திருநாமத்துடன் ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர் வீற்றிருப்பதாகக் காசி காண்டம் கூறுகிறது.

யக்ஞ வராஹரை வழிபடும் அன்பர்கள் யாகம் செய்த பலனை அடைவர். யாக்ய தீர்த்தம் தற்போது இல்லை.

இருப்பிடம்

A 11/30, ஸ்வரலீனேச்வரர் அருகில், பஞ்ச அக்னி அகட காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் ஆட்டோ அல்லது சைக்கிள் ரிக்ஷாவில் செல்லலாம். அல்லது பஞ்ச அக்னி அகட காட் வரை படகில் சென்று அங்கிருந்து படிகள் ஏறிச் சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை கோயில் திறந்திருக்கிறது. இரவு 7.00 மணிக்கு ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

ஸ்ரீசங்கரானந்தர் கோயிலின் அர்ச்சகராவார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ பீஷன்பைரவர்
(பூத பைரவர்)

யூ ட்யூப் (YOU TUBE) காணொளிகள்



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காசியில் உள்ள பைரவர் கோயில்கள்

அம்பிகை துர்காஸுரனை வதம் செய்த பிறகு (பார்க்க : துர்கா தேவி), ஒன்பது சக்திளைப் படைத்தாள். அவர்கள் காசியின் பல்வேறு இடங்களில் இருந்து காசி நகரைக் காப்பாற்றி வருகின்றனர். (காசி காண்டம், அத்யாயம் 72).

அதே போன்று எட்டு பைரவர்கள் காசியில் பல்வேறு இடங்களில் இருந்துகொண்டு காவல் புரிந்து வருகின்றனர். இவர்கள் அன்பர்களின் கஷ்டங்களை நீக்கி, அவர்களுக்கு எல்லாவிதமான நன்மைகளையும் அருள்கிறார்கள்.

பைரவரை வழிபடும் அன்பர்கள் உறுதியான உள்ளம் படைத்தவர்களாகவும், தைரியசாலிகளாகவும் திகழ்வர்.

அஸிடாங்க் பைரவர்

K 52/39 என்ற எண்ணில், வ்ருத்த காலேச்வரர் அருகில், மஹா ம்ருத்யுஞ்ஜய கோயிலில் உள்ளார். அன்பர்கள் பிஷேச்வர் கஞ்ஜ் ஜி.பி.ஓ வழியாக ரிக்ஷாவில் செல்லலாம். ம்ருத்யுஞ்ஜய கோயில் புகழ்பெற்ற இடமாகும்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

கோயிலின் அர்ச்சகர்

கோயிலுக்கென்று தனியாக அர்ச்சகர் எவரும் இல்லை. அன்பர்கள் கோயில் வளாகத்தில் உள்ள ஸ்ரீ ஹௌஸிலா ப்ரஸாத் மிச்ரா அவர்களை இரவு 7.00 மணிக்கு மேல் (0)9336761783 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

பீஷன் பைரவர்

K 63/28, பூத பைரவர், ஜ்யேஷ்டேச்வரர் அருகில் என்ற முகவரியில் அமைந்துள்ளது. இவர் பூத பைரவர் என்றும் அழைக்கப்படுகிறார். அன்பர்கள் இந்த இடம் வரை ஸப்த ஸாகர் அல்லது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காசிபுரா வழியாக ரிக்ஷாவில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் 10.00 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை.

சண்ட பைரவர்

B-27/2 என்ற எண்ணில் துர்கா தேவி கோயிலினுள் சண்ட பைரவர் வீற்றிருக்கிறார். புகழ்பெற்ற இந்த இடத்திற்கு அன்பர்கள் ரிக்ஷா அல்லது காரில் செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

கால பைரவர்

வெகு காலத்திற்கு முன்பு, ஸுமேரு மலையின் உச்சியில் வீற்றிருந்த முனிவர்கள் யார் அழிக்க முடியாத, முழுமுதற் கடவுள் என்று ப்ரஹ்ம தேவரிடமிருந்து அறிய விரும்பினர். ப்ரஹ்மதேவர் தாமே முழுமுதற்கடவுள் என்று கூறினார். இதைக் கேட்டதும், நாராயண ஸ்வரூபமான யஜ்ஞேச்வரர் அவசரப்பட்டு அவ்வாறு கூறியதற்காக ப்ரஹ்மாவைக் கண்டித்தார்.

இந்த கேள்வி நான்கு வேதங்களிடமும் கேட்கப்பட்டது. அனைத்து உயிர்களையும் அடக்கி ஆள்கின்ற ஆற்றல் படைத்த ருத்ரனே முழுமுதற்கடவுள் என்று ரிக் வேதம் கூறியது. யாகங்கள் மற்றும் சடங்குகள் மூலம் நாம் வழிபடும் சிவபெருமானே முழுமுதற்கடவுள் என்று யஜுர் வேதம் கூறியது. யோகிகளால் வழிபடப்படுபவரும், உலகை அடக்கி ஆள்பவருமான த்ரியம்பகரே முழுமுதற்கடவுள் என்று ஸாம வேதம் கூறியது. அனைத்து உயிர்களும் பக்தி மார்க்கத்தின் மூலமாகவே இறைவனை அடைய முடியும். மனிதர்களின் மனக்கவலைகளைத் தீர்க்கின்ற சங்கரனே முழுமுதற்கடவுள் என்று அதர்வண வேதம் கூறியது. இவ்வாறு நான்கு வேதங்களும் சிவபெருமானே முழுமுதற்கடவுள் என்று கூறின.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இதைக் கேட்ட ப்ரஹ்ம தேவரும், யஜ்ஞ நாராயணரும் நம்பாமல் சிரித்தனர். அவர்கள் முன்னிலையில் ஓர் தெய்வீக ஒளிப் பிழம்பாக சிவபெருமான் தோன்றினார். ப்ரஹ்மதேவர் தமது ஐந்தாவது முகத்தினால் அவரைப் பார்த்து முறைத்தார். சிவபெருமான் உடனடியாக ஓருயிரைத் தோற்றுவித்தார். அந்த உயிரே காலத்திற்குத் தலைவனாக இருக்கக் கூடிய கால பைரவராகும். கால பைரவர் எப்பொழுதும் காசியில் இருந்துகொண்டு, அன்பர்களின் பாவங்களை நீக்குவார் என்று சிவபெருமான் கூறினார். கால பைரவர் பாப பக்ஷகர் எனப்படுகிறார்.

இதைக் கேட்ட பின்னரும் ப்ரஹ்ம தேவரின் ஐந்தாவது முகம் கோபத்தில் சிவந்தது. கால பைரவர், அந்த ஐந்தாவது தலையைப் பிடுங்கி எறிந்தார். உடனே, மக்கள் சிவபெருமானைக் குறித்துப் போற்றிப் பாடத் துவங்கினர். சிவபெருமான் கால பைரவரைப் பல்வேறு இடங்களுக்குச் செல்லுமாறு கூறினார். ஆனால் ப்ரஹ்மஹத்தி தோஷம் அவரைப் பின் தொடர்ந்துகொண்டே இருந்தது. சிவபெருமான் ப்ரஹ்ம ஹத்யா என்ற பெயருடைய ஒரு பயங்கரமான பெண்ணுருவைப் படைத்து, கால பைரவரைத் தொடருமாறு செய்தார்.

ப்ரஹ்மாவின் ஐந்தாவது தலையுடன் கால பைரவர் பல்வேறு புனிதத் தலங்களுக்குச் சென்றார். பல்வேறு தீர்த்தங்களில் நீராடினார், பல்வேறு கடவுளரை வழிபட்டார். ஆனால் ப்ரஹ்ம ஹத்யா அவரைத் தொடர்ந்து கொண்டே இருந்தாள்.

இறுதியாக, கால பைரவர் மோக்ஷபுரியாகிய காசியை அடைந்தார். கால பைரவர் காசிக்குள் நுழைந்தவுடன், கத்தி அலறியபடி ப்ரஹ்ம ஹத்யா மறைந்தாள். ப்ரஹ்மாவின் தலை கீழே விழுந்தது, அந்த இடத்திற்குக் கபால மோசன் என்ற பெயர் ஏற்பட்டது. அருகில் உள்ள தீர்த்தம் கபால மோசன தீர்த்தமாயிற்று. அதன் பிறகு, கால பைரவர் காசியிலேயே இருந்துகொண்டு அன்பர்களுக்கு அருள்புரியத் தொடங்கினார். காசியில் வாழ்பவர்களும், காசிக்கு வருபவர்களும் கால பைரவரைத் தரிசிக்க வேண்டும். அவர் அனைவருக்கும் அபயம் அளிப்பார்.

மார்கசீர்ஷ மாதத்தில், க்ருஷ்ண பக்ஷ அஷ்டமி தினம் கால பைரவரை வழிபட உகந்த நாளாகும். இது தவிர, ஞாயிற்றுக்கிழமைகள், செவ்வாய்கிழமைகள், அஷ்டமி மற்றும் சதுர்தசி தினங்கள் கால பைரவரை வழிபடச் சிறந்த நாட்களாகும். கால பைரவரை எட்டு முறை ப்ரதக்ஷிணம் செய்பவரது எல்லாப் பாவங்களும் நீங்குகின்றன. கால பைரவரைத் தொடர்ந்து ஆறு மாதங்கள் வழிபடுபவர் எல்லாவிதமான ஸித்திகளும் பெறுவார். (காசி காண்டம், அத்யாயம் 31).

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காசியில் உள்ளவர்கள் வேறு ஊர்களுக்குச் செல்வதற்கு முன்னால் கால பைரவரை வழிபட்டு, அவரது அனுமதியைப் பெற்றுச் செல்வார்கள். திரும்பி வந்ததும் கால பைரவரை வழிபடுவார்கள்.

இருப்பிடம்

கே - 32/22, பைரோநாத் என்ற முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை பிஷேச்வர் கஞ்ஜ் க்ராஸ் ரோடு அல்லது கோல்ஹார் (மைதாகின்) வழியாக ரிக்ஷாவில் செல்லலாம். இது மிகப் புகழ்பெற்ற கோயில் ஆகையால், அருகில் உள்ளவர்கள் வழி காட்டுவார்கள்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் பகல் 1.30 மணி வரையிலும், மாலை 4.30 மணி முதல் இரவு 9.30 மணி வரையிலும் திறந்திருக்கிறது. செவ்வாய்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மிகுந்த கூட்டம் காணப்படுகிறது.

கபால பைரவர் (லாட் பைரவர்)

கபால பைரவர் A-1/123, அலைபூர் என்ற முகவரியில் வீற்றிருக்கிறார். இந்தக் கோயில் வாராணசியின் வடகிழக்கு எல்லையில் அமைந்துள்ளது. அன்பர்கள் ரிக்ஷா அல்லது ஆட்டோவில் இந்த இடம் வரை செல்லலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 6.00 மணி முதல் 11.00 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் திறந்திருக்கிறது. நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் வழிபடலாம்.

க்ரோதன் பைரவர்

க்ரோதன் பைரவர் ஆதி பைரவர் எனப்படுகிறார். B 31/126, படுக் பைரவர் கோயில் காமச்சா, வாராணசி என்ற முகவரியில் வீற்றிருக்கிறார். அன்பர்கள் காசியின் எந்த இடத்திலிருந்தும் காமச்சா/படுக் பைரவர் கோயில் வரை ரிக்ஷாவில் செல்லலாம். இவை புகழ்பெற்ற இடங்களாகும். அருகில் உள்ள காமாக்யா கோயிலுக்கு அருகில் உள்ள சிறிய பைரவரே க்ரோதன் பைரவர் என்று சிலர் கூறுகிறார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் பகல் 12.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 12.00 மணி வலையிலும் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

கோயிலின் அர்ச்சகர்

மஹாந்த் விஜய் புரி மற்றும் ஆசார்ய சாம்பு சரண் கோயில் வளாகத்திற்கு அருகில் உள்ளனர். (0)9839152539 என்ற எண்ணில், காலை 6.00 மணி முதல் 12.00 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் தொடர்பு கொள்ளலாம். ராகு சாந்தி, கால ஸர்ப்ப தோஷ நிவ்ருத்தி, தந்த்ர நிவாரணம் முதலியவற்றுக்குக் கோயிலில் விசேஷ ஜபங்கள் செய்யப்படுகின்றன. அவற்றைப் பற்றித் தகவல் அறிய கோயில் அதிகாரிகளை அணுகுமாறு மஹாந்த விஜய் புரி தெரிவிக்கிறார்.

ருரு பைரவர்

B 4/16, ஹநுமான் காட், ஹநுமான் கோயில் அருகில் என்று முகவரியில் அமைந்துள்ளது. அன்பர்கள் இந்த இடம் வரை ரிக்ஷாவில் செல்லலாம். ஹநுமான் காட், மயானப் பகுதியான ஹரிச்சந்த்ரா கட்டத்திற்கு அருகில் உள்ளது. அன்பர்கள் ஹநுமான் கட்ட ப்ரதான சாலையில் இறங்கிக்கொண்டு, அங்கிருந்து அருகில் உள்ளவர்களிடம் வழிகேட்டுச் செல்லலாம். ஹநுமான் கட்டம் புகழ்பெற்ற இடமாகும், இது தென்னிந்தியர்கள் அதிகம் வாழும் பகுதியாகும். காசி யாத்திரை வரும் தென்னிந்தியர்கள் பெரும்பாலும் இங்குதான் தங்குகின்றனர்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் 10.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 9.30 மணி வரையிலும் திறந்திருக்கிறது. காலையிலும், மாலையிலும் ஆரத்தி நடைபெறுகிறது.

ஸம்ஹார பைரவர்

மேலே குறிப்பிட்டத் தகவல் தவிர, ஸம்ஹார பைரவரைப் பற்றி, காசி காண்டத்தின் 69வது அத்யாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸம்ஹார பைரவர், பைரவ க்ஷேத்திரத்திலிருந்து வந்திருப்பதாகவும், தன்னை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழிபடும் அன்பர்களின் பாவங்களை நீக்கக் கூடியவர் என்றும் கூறப்பட்டுள்ளது.

A-1/82, படன் தர்வாஜா, காய் காட் என்ற முகவரியில் அமைந்துள்ளது. இது காசிக்கு வடக்குப்புறத்தில் அமைந்துள்ளது. அன்பர்கள் மச்சோதரி வழியாக ரிக்ஷாவில் செல்லலாம். அல்லது காய் காட் வரை படகில் சென்று, அங்கிருந்து படிகள் ஏறிச்சென்றும் அடையலாம்.

வழிபாட்டு முறைகள்

கோயில் காலை 5.00 மணி முதல் 11.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 9.30 மணி வரையிலும் திறந்திருக்கிறது. நேரங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை. அன்பர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று வழிபடலாம்.

உன்மத்த பைரவர்

பஞ்ச க்ரோஷ மார்க்கத்தில், தியோரா என்ற கிராமத்தில், வாராணசியிலிருந்து பத்து கிலோமீட்டர் தொலைவில் உன்மத்த பைரவர் வீற்றிருக்கிறார்.

வழிபாட்டு முறைகள்

கோயில் நாள் முழுவதும் திறந்திருக்கிறது.

யூ ட்யூப் (YOU TUBE) காணொளிகள்



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கங்கையில் அஸ்தியைக் கரைப்பதன் முக்கியத்துவம்

ஹிந்து மரபுப்படி, ஒரு மனிதர் இறந்துவிட்டால் அவரது உடலை எரித்த சாம்பலும், அஸ்தி எனப்படும் எலும்புத் துண்டுகளும் புண்ணிய நதிகளில் அல்லது கடலில் கரைக்கப்படுகின்றன. அஸ்தியைக் கங்கையில் கரைப்பது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

காசி காண்டத்தின் 28வது அத்யாயத்தின்படி, சிவபெருமான் பார்வதி தேவிக்குக் கங்கையின் சிறப்பை விளக்கிக் கொண்டிருந்தார். வெகு காலத்திற்கு முன்பு, வஹிகன் என்ற பெயருடைய அந்தணன் ஒருவன் இருந்தான். அவனுக்கு உபநயன சடங்கு ஆகி, அவன் பூணூல் தரித்திருந்தபோதும், அந்தணர்கள் செய்ய வேண்டிய எந்தச் சடங்குகளையும் அவன் செய்யவில்லை, எந்த ஒழுக்கத்தையும் அவன் கடைப்பிடிக்கவில்லை. அவன் எந்த ப்ரார்த்தனைகளும் செய்ததில்லை. வேத மந்த்ரங்களை உச்சரிப்பதில் அவனுக்கு ஆர்வம் இல்லை. வேறு ஜாதியைச் சேர்ந்த பெண்ணொருத்தியை அவன் திருமணம் செய்துகொண்டான்.

ஒரு முறை கடுமையான பஞ்சம் நிலவியது. அவன் தன் மனைவியுடன் பசுமையான இடத்தை நோக்கிச் சென்றான். வழியில் ஒரு காட்டைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. அப்பொழுது ஒரு புலியால் அடித்துக் கொல்லப்பட்டான். அவனுடைய இறந்த உடலைக் கண்ட கழுகு ஒன்று அவனது கால் பகுதியை எடுத்துக் கொண்டு பறக்க ஆரம்பித்தது. உடனே, வானத்தில் மற்றொரு கழுகு அதனுடன் சண்டைக்கு வந்தது. சண்டையில் ஒரு சிறிது சதையும், எலும்புத்துண்டும் கீழே விழுந்தது. இரண்டு கழுகுகளும் அப்பொழுது கங்கை நதிக்கு மேலே பறந்துகொண்டிருந்தன. எலும்புத்துண்டு விழுந்த இடம் கங்கை நதியாக இருந்தது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வஹிகன் இறந்த பிறகு, யம தூதர்கள் அவனை யமதர்ம ராஜாவின் முன்னிலையில் கொண்டு நிறுத்தினர். அவன் செய்த தீமைகளையெல்லாம் சித்ரகுப்தர் பட்டியலிட்டார். அவன் செய்த பாவங்களையெல்லாம் காசி காண்டம் விவரமாகக் கூறுகிறது. இறுதியில், ரௌரவம், அந்த தமிச்ரா, கும்பி பாகம், கிருமி போஜனம் முதலிய அனைத்துக் கடுமையான தண்டனைகளையும் யமதர்மராஜா அவனுக்கு விதித்தார்.

அவன் இவ்வாறு தண்டனைகளை அனுபவிக்கத் தொடங்குமுன், கழுகுகள் போட்டுக் கொண்ட சண்டையினால் அவனது எலும்புகள் கங்கை நதியில் விழுந்தன. உடனே பல அப்ஸர ஸ்த்ரீகள் வஹிகனைச் சூழ்ந்து கொண்டனர். அவன் தேவ வடிவெடுத்து, ஸ்வர்க்கத்திற்குச் சென்றான்.

கங்கையில் அஸ்தியைக் கரைப்பதன் முக்கியத்துவத்தை இது உணர்த்துகிறது. இன்று வரை இறந்த உறவினரின் அஸ்தியைப் புனித கங்கையில் கரைப்பதை மக்கள் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

ஹர ஹர மஹாதேவ சம்போ

காசீ விச்வநாத கங்கே

யூ ட்யூப் (YOU TUBE) காணொளிகள்



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சிறப்பு நினைவு வெளியீடு

அமரர் ஸ்ரீமதீ ஜகதாம்பாள்

அமரர் ஸ்ரீமதீ ஜகதாம்பாள் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர், நுங்கம்பாக்கம் ஸ்ரீநாகராஜ ஐயர் அவர்களின் மகள்.

1978 முதல் 1998 வரை காசியில் வாழ்ந்த மிகச் சிறந்த பக்தை. உலகெங்கிலும் இருந்து காசி யாத்திரை மேற்கொண்டு, தரிசனம் செய்ய வரும் அன்பர்களுக்கு பேருதவி புரிந்தவர்.

காசி [illegible]த்தை ஸம்ஸ்க்ருத மொழியிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்பில் உ[illegible]யாக [illegible]வர். உலகெங்கிலும் உள்ள மெய்யன்பர்கள் காசியில் உள்ள பல்வேறு கோ[illegible]கள், தீ[illegible] கங்கை நதியின் புனிதம் ஆகியவற்றை அறிந்துகொள்ள வேண்டும் என்ற [illegible]வாடு [illegible]ர்.

அமரர் [illegible]தாம்பாள் அவர்களின் மகன் ஸ்ரீ பி.எஸ். வெங்கடரமணன் அவர்களும், ம[illegible] ஸ்ரீம[illegible]வி (நூலாசிரியர்) அவர்களும் அவரது புனிதமான கனவை நனவாக்கும் வ[illegible]ல் காசி [illegible]த்தை அடிப்படையாகக் கொண்டு, காசியைக் குறித்த நூல்களை எட்[illegible] மொழி[illegible] வெளியிட்டுள்ளனர்.

காசியின் கோயில்களைக் குறித்து, www.varanasitemples.in என்ற வலைத்தளத்தையும் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். உலகெங்கிலும் 25 லக்ஷத்திற்கும் அதிகமான அன்பர்கள் இதனைப் பார்த்துப் பயன்பெற்றிருக்கிறார்கள்.

காசியில் உள்ள கோவில்களை பற்றி யூ ட்யூபில் காணொளிகள் (You Tube Videos) KASHI TEMPLE WORSHIP என்ற தொடரில் ஆங்கிலத்திலும் தமிழ் மொழியிலும் வெளியிட்டு வருகின்றனர்.

ஸ்ரீபி.எஸ். வெங்கடரமணன் (மகன்)
ஜி-1, ப்ளாக் -1,
வருணா என்க்ளேவ்
எஸ்-2/636, க்ளப் ரோடு, செக்ரோல்
வாராணஸி 221 001
செல் : 09839061178

ஸ்ரீமதீ லலிதா.வி. (மருமகள்)
(நூலாசிரியர்)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Collection, Sholinganallur, Chennai



ஸ்ரீமதி லலிதா.V. ஸ்ரீ P.S. வெங்கடரமணன் அவர்கள் 'காசியின் லிங்கங்கள்' & 'தோஷம் மற்றும் பரிகாரங்கள் காசியிலும் தமிழ் நாட்டிலும்' என்ற இரு புத்தகங்களை பாரத பிரதமர் நரேந்திரமோடி அவர்களுக்கு பரிசாக வழங்கினார்கள் மேலும் வாரணாசியில் ஆன்மிக சுற்றுலாவை மேம்படுத்துவது பற்றியும் கலந்துரையாடினர்கள். ஸ்ரீமதி லலிதா.V. இந்த புத்தகத்தின் ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது.

main. Digitization by Muthulakshmi Research Academy,